T. 3035

TIRUVĀYMOḺI

ĪṬṬU-P-PRAVEŚA SAṄGRAHAM

Edited by

PAṆḌITA, VIDVĀN

B. R. PURUSHOTHAMA NAIDU

Senior Reader in Tamil

UNIVERSITY OF MADRAS.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY,
MADRAS.

1961.

PRICE RS. 5-75

©
Government of Madras.

MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

**Published under the authority
of
The Government of Madras.**

General Editor :
Sri T. Chandrasekharan, M.A., L.T.,
Curator, Government Oriental
Manuscripts Library, Madras.

No. CLXXII

திருவாய்மொழி

ஈட்டுப் பிரவேச ஸங்கிரஹம்

PRINTED AT
RATHNAM PRESS,
MADRAS-1.

INTRODUCTION

The public are perhaps aware of the fact that the Government of Madras have launched upon a scheme of publication of rare manuscripts treasured in two premier institutions of this State, namely, the Madras Government Oriental Manuscripts Library, Madras, and the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore. Financial help has also been extended to Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar, Madras, for similar purpose. Though the publication of rare manuscripts was started as early as 1909 by this library, only 12 works were taken up for publication till 1942. Of these, the printing of three works has not yet been completed.

Only in the year 1949—50 a regular scheme for the publication of manuscripts was prepared and accepted by the Government of Madras under the MADRAS GOVERNMENT ORIENTAL SERIES. This scheme included the manuscripts in all the South Indian Languages in which there are manuscripts in the library. Till now 158 manuscripts in different languages have been printed. Of these, 35 manuscripts are from the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, and three from Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar. In addition, four manuscripts, three from this library and one from Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar, are in the press.

All the manuscripts under the Madras Government Oriental Series were edited by various scholars drawn from different learned institutions. The publication of manuscripts under the Madras Government Oriental Manuscripts Series was resumed in the year 1950—51. All the manuscripts published under this series before 1942 were in Sanskrit. But since 1950—51 the manuscripts in other languages also were included. These are edited by the Curator with the assistance of the Pandits in the respective languages. Till now 60 works have been printed including 51 works since 1951.

The Government of India also have decided upon a programme of printing rare and useful manuscripts in the different languages of India. For this purpose the Ministry of Scientific Research and Cultural Affairs has come forward with grants-in-aid for some of the manuscripts libraries maintained by the State Governments and also for certain reputed private libraries. In the year 1959—60 the Government of Madras in G. O. No. 81859 E6/59—15 Education dated 5th Jannary, 1960 sanctioned the publication of the following seven manuscripts:

1. Tanippādarṟiraṭṭu.
2. Kēraladēs'a Varalāṟu.
3. Kaṭṭabomman Varalāṟu.

4. Kalambakakkottu.
5. Uttara Rāmāyaṇa Nāṭākam.
6. Yāpparumkalam.
7. Palamoḻittiraṭṭu.

Of these, the last one was dropped as it was found to contain a large number of colloquial terms. The printing of the other six manuscripts has been completed in the Madras Government Oriental Manuscripts Series as numbers 55, 56, 67, 68, 69 and 66.

During the year 1960—61 the Government of Madras have sanctioned in Memorandom No. 47522-E6/60-9 Education dated 30—12—60 and in G. O. No. 2749 Education dated 31—12—60, the publication of the following manuscripts.

TAMIL

1. S'ivapurāṇaditōttiramañjari.
2. Tiruvāymoḻi-Iṭṭupravēśa Saṅgraham.
3. Vētālakkathai.
4. Homer's Iliad.
5. Saptariṣi Nāḍi-Kanyā lagnam.
6. Kunṟakkuḍi Kumaran pēril Kīrtanaikal.
7. Divya Prabanda Akarādi.

PERSIAN

8. Tarikh-i-Hafeesullakhani.
9. Bahare-i-Azamzahe.
10. Sawanihat-i-Mumtaz.

SANSKRIT

11. Nyāyaratna Dīpāvali.
12. Nyāyasāra.
13. Stotrārṇavam.
14. Brahmasiddhi.

CATALOGUES

15. Triennial Catalogue of Tamil Mss. Vol. 12.
16. do do do 13.
17. Descriptive Catalogue of Marāṭhi Mss. Vol. 3.

The Government of India will be contributing 50% of the cost for the printing of the above works, which has to be completed by the end of March, 1961. With the exception of Brahmasiddhi in Sanskrit and the Catalogue of the Marāthi manuscripts, the other works may be printed before the end of the financial year. Except the Catalogues and Stotrārṇava in Sanskrit, all the other works have been edited by outside scholars and hence they have been issued under the Madras Government Oriental Series as numbers 166 to 177. Stotrārṇavam in Sanskrit

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

முன்னுரை

வகுளபூஷணபாஸ்கரராய், பிரபந்நஜநகூடஸ்தராய், குரு பீடங்களுக்கெல்லாம் முதல்வருமான நம்மாழ்வார் அருளிச் செய்த பிரபந்தங்கள் நான்கு. அவை திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பனவாம். இவை நான்கும் **தமிழ் மறை** என வழங்கப்பெறும்.

இவற்றுள், சாமவேத சாரமான திருவாய்மொழிக்கு, இராமாநுசருடைய மாணுக்கரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் செய்த ஆறாயிரப்படி வியாக்கியானம் ஒன்றும், பட்டருடைய மாணுக்கரான நஞ்சீயர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படி வியாக்கியானம் ஒன்றும், வாதிகேசரி அழகிய மணவாளச் சீயர் அருளிச்செய்த பன்னீராயிரப்படி வியாக்கியானம் ஒன்றும், நம்பிள்ளையுடைய மாணுக்கர் பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம் ஒன்றும், நம்பிள்ளையுடைய மற்றொரு மாணுக்கரான வடக்குத் திருவீதிப் பிள்ளை எழுதிய ஈடு முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானம் ஒன்றும் ஆக ஐந்து வியாக்கியானங்கள் உள்ளன.

திருவாய்மொழி நூறு திருப் பதிகங்களோடும் ஆயிரத்து நூற்றிரண்டு திருப் பாசுரங்களோடும் கூடியது. இவற்றுள் ஒவ்வொரு திருப் பதிகத்திற்கும் தனித் தனியே அவதாரிகையும், ஒவ்வொரு திருப் பாசுரத்திற்கும் தனித் தனியே அவதாரிகையும், வியாக்கியானமும் அமைந்துள்ளன ஈடு முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானத்தில். அவ் வியாக்கியானத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு திருப்பதிகத்தின் அவதாரிகையை - பிரவேசத்தை - முன்னுரையை மட்டும் சுருக்கி எழுதியுள்ளார் இந்நூலாசிரியர். இதனால் '**ஈட்டின் பிரவேச சங்கிரகம்**' என்று இந்நூலுக்குப் பெயர் நிலவுவதாயிற்று. இந்நூலாசிரியர் பெயர் இப்பொழுது அறிய இயலவில்லை.

ஈடு முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானத்தில் அமைந்த - தோன்றுகிற கருத்துக்களும் தொனிப் பொருள்களும் விசேடப் பொருள்களும் விளங்குமாறு சுருக்கி எழுதுவது மிக மிக அருமை. அவற்றின் அவ் அருமையை இப் 'பிரவேச சங்கிரஹத்தில்' காணலாம்.

மற்றும், திருவாய்மொழியின் திருப் பாசுரங்கள் ஒரு சில வற்றிற்கும் முன்னுள்ள வியாக்கியானத்தைச் சுருக்கி இந் நூலில் எழுதப்பட்டிருக்கின்றது; அதனையும் இதன் ஈற்றில் சேர்த்திருக்கிறேன்.

மிக மிகக் குறுகிய காலத்திற்குள் இந்நூலை வெளியிட நேர்ந்தமையின் பழைய வியாக்கியானத்தை வைத்துக் கொண்டு ஒப்பு நோக்கி முற்றும் திருத்தம் செய்ய இயல வில்லை. இதற்கு ஒரு குறிப்புரை எழுதிச் சேர்த்து வெளியிடல் நலம் எனக் கருதி எழுதப்பட்ட குறிப்புரையும் முற்றும் எழுத முடியாமற் போயிற்று; சுரிபாதியோடு நின்றுவிட்டது.

மேற்கூறிய காரணங்களால் இந்நூலில் - இப் பதிப்பில் குற்றம் குறைகள் இருக்கலாம். பொறுத்தருளுமாறு பெரி யோர்களை வேண்டுகிறேன்.

சென்னை,
4—3—61.

இங்ஙனம்,
B. R. புருஷோத்தமநாயடு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

—:(o):—

திருவாய்மொழி

முதற் பத்து

முதல் திருவாய்மொழி

"உயர்வற வுயர்நலமுடையவன்"

———o———

ஈட்டின் பிரவேச சங்கிரஹம்

முதல் திருவாய்மொழியிலே [1] "உயர்வற உயர்நலம்" என்று துடங்கி [2] "உணர் முழு நலம் மிகுநரையிலன்", [3] "நில னிடை விசும்பிடை உருவினன் அருவினன்," [4] "ஆமவை யாயவையாய் நின்ற அவர்" என்று சொல்லிக்கொண்டு போந்து [5] "கர விசும்பு எரி வளி நீர் நிலமிவைமிசை வரன் நவில் திறல் வலி அளி பொறையாய் நின்ற பரன் என்று தலைக்

1. திருவாய்மொழி, 1. 1: 1. 2. திருவாய்மொழி, 1. 1: 2.
3. திருவாய்மொழி, 1. 1: 3. 4. திருவாய்மொழி, 1. 1: 4.
5. திருவாய்மொழி, 1. 1: 11.

"இவ்வாழ்வார் திருவாய்மொழி பிரபந்தத்தால் செய்ததாயற்ற அர்த்தம் ஏதென்னில், முதல் திருவாய்மொழியிலே "உயர்வற வுயர்நலம் உடையவன்" என்று தொடங்கி "உணர்முழு நலம் மிகுனரை யிலன்", "நிலனிடை விசும்பிடை யுருவினன் அருவினன்", "ஆமவை ஆயவையாய் நின்ற அவர்" என்று சொல்லிக்கொண்டு போந்து "கரவிசும்பு எரி வளி நீர் நிலம் இவை மிசை, வரன் நவில் திறல் வலி அளி பொறையாய் நின்ற, பரன்" என்று தலைக்கட்டுகையாலே நாராயணனே பரதத்துவம் என்கைக்காக நாராயண சப்தார்த்தத்தை அருளிச்செய்தார்" என்பது நம்பிள்ளை ஈடு.

கட்டுகையாலே நாராயணனே பரதத்வமென்கை. [1]சர்வாதிகத்வமும் சமஸ்த கல்யாண குணாத்மகத்வமும் உபய விபூதி நாதத்துவமுமிறே நாராயண சப்தார்த்தம்.

[2]வியாபக மந்திரங்களிலும் இவ் வர்த்தம் அறியலாயிருக்கும். அங்ஙன் அன்றிக்கே இதுவே வாசகமென்று தம் திருவுள்ளத்தில் அறுதியிட்ட ஆகாரம் தோற்ற, [3]"செல்வ நாரணன்", [4]"திருநாரணன்", [5]"நாரணன் முழுவேழ் உலகுக்கும் நாதன்", [6]"காராயின காள நன் மேனியன் நாராயணன்", [7]"திண்ணம் நாரணம்" என்று ஆதரித்துக்கொண்டு போந்து [8]"வாழ் புகழ் நாரணன்" என்று வழிப்போக்கில் வார்த்தையும் இதுவேயாய்த் தலைக்கட்டுகையாலே இதுவே வாசகம் என்கை.

---

1. சர்வாதிகத்வமும் சமஸ்த கல்யாண குணாத்மகத்வமும் உபயவிபூதி நாதத்வமுமிறே நாராயண சப்தார்த்தம்; இதனுடைய சேஷமிறே "ஒன்றும் தேவும்", "திண்ணன் வீடும்" என்பது நம்பிள்ளை ஈடு.

2. அநந்தரத் திருவாய்மொழியிலே இவ்வர்த்தத்துக்கு வாசகமான திருநாமந்தன்னை "வண்புகழ் நாரணன்" என்றருளிச்செய்தார்; வியாபகாந்தரங்களிலும் இவ் வர்த்தத்தை அறியலாயிருக்குமே; அங்ஙன் அன்றிக்கே, இதுவே வாசகமென்று தம் திருவுள்ளத்திலே அறுதியிட்ட ஆகாரம் தோற்ற, "செல்வ நாரணன்", "நாரணன் முழுவேழ் உலகுக்கும் நாதன்", "காராயின காள நன் மேனியன் நாராயணன்", "திண்ணம் நாரணம்" என்று ஆதரித்துக்கொண்டு போந்து "வாழ் புகழ் நாரணன்" என்று வழிப்போக்கில் வார்த்தையும் இதுவேயாய்த் தலைக் கட்டுகையாலே இதுவே வாசகம் என்ற நிர்ப்பந்தத்தை அருளிச்செய்தார்" என்பது நம்பிள்ளை ஈடு.

வியாபக மந்திரங்கள் - விஷ்ணு, வாசுதேவ மந்திரங்கள்.

"பகவந் மந்திரங்கள் தாம் அநேகங்கள்", "அவை தாம் வியாபகங்கள் என்றும் அவ்யாபகங்கள் என்றும் இரண்டு வர்க்கம்", "அவ் வியாபகங்களில் வியாபகங்கள் மூன்றும் ச்ரேஷ்டங்கள்", "இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்திரம் பிரதாநம்" என்பது முமுட்சுப்படி. 8-11. சூத்.

3. திருவாய்மொழி, 1. 10: 8.
4. திருவாய்மொழி, 4. 1: 1.
5. திருவாய்மொழி, 2. 7: 2.
6. திருவாய்மொழி, 9. 3: 1.
7. திருவாய்மொழி, 10. 5: 1.
8. திருவாய்மொழி, 10. 9: 1.

[1] "மலர்மகள் விரும்பும் நம் அரும் பெறல் அடிகள்" என்று துடங்கித் [2] "திருவுடையடிகள்", [3] மைய கண்ணாள் மலர்மேல் உறைவாள் உறை மார்பினன்", [4] "நமக்கும் பூவின் மிசை நங்கைக்கு மின்பன்", [5] "கோலத் திரு மா மகளோடு உன்னைக் கூடதே" என்று சொல்லிக்கொண்டு போந்து, [6] "திருவாணை", [7] "கோலமலர்ப் பாவைக்கு அன்பாகிய என்னன்பு" என்று தலைக்கட்டுகையாலே ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம் என்று சொல்லிற்று, [8] இத்தால் ஆச்ரயண வேளையோடு போக வேளையோடு வாசியற மிதுனமே உத்தேஶ்யம் என்னுமிடம் சொல்லிற்றாயிற்று.

[9] "உடல்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்து" என்று சரீராத்ம பாவத்தைத் தாம் அநுஸந்தித்து, [10] "உம்முயிர் வீடுடையான்" என்று பிறர்க்கு உபதேசித்ததால் பலித்த அநந்யார்ஹசேஷத்வத்தைத் [11] "தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே", [12] "அடியேன் உள்ளான் உடல் உள்ளான்" என்றும் சொல்லி, இது ததீய சேஷத்வ பர்யந்தமானல் ஆயிற்றுத் தச்சேஷத்வ ஸித்தி யென்னுமத்தைப் [13] "பயிலும் சுடரொளி", [14] "நெடுமாற் கடிமை"யிலே பரக்க அருளிச் செய்து, [15] "அடியார்கள் குழாங்களை யுடன்கூடுவது என்று கொலோ" என்று துடங்கி [16] "அடியரோடு இருந்தமை" என்று தலைக்கட்டுகை

---

1. திருவாய்மொழி, 1. 3: 1.

"மலர்மகள் விரும்பும் நம் அரும் பெறல் அடிகள்" என்று தொடங்கி, 'திருவுடையடிகள்' என்றும், 'மைய கண்ணாள் மலர்மேல் உறைவாள் உறை மார்பினன்' என்றும், 'நமக்கும் பூவின் மிசை நங்கைக்கும் இன்பன்' என்றும், 'கோலத் திருமாமகளோடு உன்னைக் கூடாதே' என்றும் சொல்லிக்கொண்டு போந்து 'திருவாணை' என்றும், 'கோலமலர்ப் பாவைக்கு அன்பாகிய என் அன்பே' என்றும் தலைக் கட்டுகையாலே ஸ்ரீமானான நாராயணனே பரதத்துவம் என்றும் அருளிச்செய்தார்" என்பது நம்பிள்ளை ஈடு.

2. திருவாய்மொழி, 1. 3: 8. 3. திருவாய்மொழி, 4. 5: 2.
4. திருவாய்மொழி, 4. 5. 8. 5. திருவாய்மொழி, 6. 9: 3.
6. திருவாய்மொழி, 10. 10: 2. 7. திருவாய்மொழி, 10. 10: 7.

8. "ஆஶ்ரயண வேளையில் 'மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறல் அடிகள்' என்று தொடங்கி, போக வேளையிலே 'கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய என் அன்பே' என்று சொல்லுகையாலே ஆஶ்ரயண வேளையோடு போக வேளையோடு வாசியற ஒரு மிதுநமே உத்தேஶ்யம் என்னுமிடம் சொல்லிற்றாயிற்று" என்பது நம்பிள்ளை ஈடு.

9. திருவாய்மொழி, 1. 1: 7. 10. திருவாய்மொழி, 1. 2: 1.
11. திருவாய்மொழி, 2. 9: 4. 12. திருவாய்மொழி, 8. 8: 2.
13. திருவாய்மொழி, 3. 7: 1. 14. திருவாய்மொழி, 8. 10: 1.
15. திருவாய்மொழி, 2. 3: 10. 16. திருவாய்மொழி, 10. 9: 11.

"'உடன்மிசையுயிர் எனக் கரந்து எங்கும் பரந்துளன்' என்று சரீர ஆத்ம பாவத்தைத் தாம் அநுசந்தித்துப் பிறர்க்கு உபதேசிக்கிறவிடத்திலே

யாலே பாகவத சேஷத்வ பர்யந்தமான பகவத் சேஷத்வமே ஸ்வரூப மென்னுமிடம் சொல்லிற்று.

[1] "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே" என்று துடங்கி, [2] " வழுவிலா வடிமை ", [3] " பணி மானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட ", [4] "முகப்பே கூவிப் பணிகொள்ளாய்" என்று அடிமையே புருஷார்த்தம் என்று நிஷ்கர்ஷித்து, இது தான் சாஸ்திரவிஹிதம் என்றும், ஸ்வரூபப் பிராப்தமென்றும் செய்யுமதல்ல; ராகப் பிராப்த மென்கைக்காக, அடியிலே [5] "நல முடையவன்", [6] " சுவையன் ", [7] " தூயவமுதை " என்று குண விசிஷ்டனுடைய யோக்யதையைச் சொல்லி, [8] " அப்பொழுதைக் கப்பொழுதென்னுராவமுது ", [9] " ஆராவமுதானாய் " என்று போக்யத்தினுடைய நித்யாபூர்வதையைச் சொல்லி, [10] " உகந்து பணிசெய்து உனபாதம் பெற்றேன் " என்று குணநுபவ ஜனித பிரீதி காரித கைங்கர்யமே புருஷார்த்த மென்றுஞ் சொல்லி, இது யாவதாத்ம பாவி என்கைக்காக [11] " ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய் " என்று தலைக்கட்டுகையாலே குணநுபவ ஜநித பிரீதி காரித கைங்கர்யமே புருஷார்த்தமென்று அருளிச் செய்தார்.

'உம்முயிர் வீடுடையானிடை' என்று அந்தச் சரீர ஆத்ம பாவந்தன்னையே உபதேசித்து, இந்தச் சரீர ஆத்ம பாவத்தால் பலிக்கிறது அநந்யார்ஹசேஷத்வம் என்னுமிடத்தை 'தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே' என்றும், 'அடியேன் உள்ளான் உடல் உள்ளான்' என்றும் சொல்லி, இது தச்சேஷத்வத் தளவிலே நிற்பதொன்றல்ல, 'ததீயசேஷத்வபர்யந்தமானுலாயிற்றுத் தச்சேஷத்வ சித்தி என்னுமிடத்தை 'பயிலும் சுடரொளி', 'நெடுமாற் கடிமையிலே' பரக்க அருளிச்செய்து, 'அடியார்கள் குழாங்களை உடன்கூடுவது என்று கொலோ' என்று பிரார்த்தித்து, பிரார்த்தித்தபடியே 'அடியரோடு இருந்தமை' என்று தலைக் கட்டுகையாலே பாகவத சேஷத்வ பரியந்தமான பகவத் சேஷத்வமே ஸ்வரூபம் என்னுமிடம் சொல்லிற்று" என்பது நம்பிள்ளை ஈடு.

1. திருவாய்மொழி, 2. 9: 4.   2. திருவாய்மொழி, 3. 3: 1.
3. திருவாய்மொழி, 4. 8: 2.   4. திருவாய்மொழி, 8. 5: 7.
5. திருவாய்மொழி, 1. 1: 1.   6. திருவாய்மொழி, 1. 9: 1.
7. திருவாய்மொழி, 1. 7: 3.   8. திருவாய்மொழி, 2. 5: 4.
9. திருவாய்மொழி, 10. 10: 5.   10. திருவாய்மொழி, 10. 8: 10.
11. திருவாய்மொழி, 10. 8: 10.

" ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தம் இருக்கும்படி என்? என்னில், 'தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே' என்று தொடங்கி, 'வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்' என்றும், 'பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட' என்றும், 'முகப்பே கூவிப் பணிகொள்ளாய்' என்றும், இப்படிகளாலே அடிமையே புருஷார்த்தம் என்னுமிடத்தை நிர்ணயித்து, இது தான் சாஸ்திர விஹிதமென்று செய்யுமளவல்ல; ஸ்வரூபப் பிராப்தம் என்று

புருஷார்த்தத்துக்கு இடைச்சுவரான விரோதி ஸ்வரூபத்தை [1]"வீடுமின் முற்றவும்"என்று கட்டடங்கவிடச்சொல்லி, அது தன்னையே மேல் மூன்று திருவாய்மொழியாலே விஸ்தரிக்கிறார். அசேவ்ய சேவை தியாஜ்யம் என்றார் [2]"சொன்னால் விரோத"த்திலே; ஐஸ்வர்ய கைவல்யங்கள் தியாஜ்யம் என்றார் [3]"ஒரு நாயக"த்திலே; சரீர சம்பந்த நிபந்தனமாக வரும் பரிக்ரஹங்கள் தியாஜ்யம் என்றார் [4]"கொண்ட பெண்டி"ரில்.

[5] தியாகப் பிரகாரம் இருக்கும்படி எங்ஙனே? என்னில், விஷயங்களில் நின்றும் கடக்க வர்த்திக்கையோ? விஷயங்களை நசிப்பிக்கையோ? என்றால் - இரண்டும் கூடாது. கடக்க

செய்யுமளவல்ல; ராகப் பிராப்தம் என்று சொல்லுகைக்காக அடியிலே 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்று கொண்டு பிராப்யமான குணங்களைச் சொல்லி, 'சுவையன் திருவின் மணாளன்' என்றும், 'தூய அமுதைப் பருகிப் பருகி' என்றும் குணவிசிஷ்ட வஸ்துவினுடைய போக்யதையையும் சொல்லி, 'அப்பொழுதைக் கப்பொழுது என் ஆராவமுதம்' என்றும், 'ஆராவமுதே' என்றும், 'ஆராவமுதானாயே' என்றும் இந்தப் போக்யத்தினுடைய நித்யாபூர்வதையைச் சொல்லி, 'உகந்து பணி செய்து உன பாதம் பெற்றேன்' என்று குணநுபவ ஜநித பிரீதி காரித கைங்கரியமே புருஷார்த்தம் என்னுமிடத்தைச் சொல்லி, இதுதான் யாவதாத்ம பாவியான புருஷார்த்தம் என்கைக்காக 'ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்' என்று தலைக் கட்டுகையாலே பகவத் குணநுபவ ஜநித பிரீதி காரித கைங்கர்யமே புருஷார்த்தம் என்று அருளிச் செய்தார்" என்பது நம்பிள்ளை ஈடு.

1. திருவாய்மொழி, 1. 2: 1. 3. திருவாய்மொழி, 4. 1: 1.
2. திருவாய்மொழி, 3. 9: 1. 4. திருவாய்மொழி, 9. 1: 1.

"இப் புருஷார்த்தத்துக்கு இடைச்சுவரான விரோதி வேஷத்தை இரண்டாந் திருவாய்மொழியிலே 'வீடுமின் முற்றவும்' என்று கட்டடங்கச் சொல்லி, அது தன்னையே மேல் மூன்று திருவாய்மொழியாலே விஸ்தரித்து அருளிச் செய்கிறார்: அவை எவை? என்னில், அசேவசேவை தியாஜ்யம் என்றார், 'சொன்னால் விரோதத்'திலே; ஐஸ்வர்ய கைவல்யங்கள் தியாஜ்யம் என்றார் 'ஒரு நாயகத்'திலே; சரீர சம்பந்தமாக வரும் பரிக்ரஹங்கள் தியாஜ்யம் என்றார் 'கொண்ட பெண்டிரி'லே; அங்ஙனே சொல்லலாமோ? சாஸ்திர சித்தமான ஐஸ்வர்ய கைவல்யங்கள் புருஷார்த்தமாகத் தட்டு என்? என்னில், பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷத்திலே அதிகரித்தவனுக்கு ஐங்கருவி கண்ட இன்பமாகையாலும், தெரிவரிதாய் அளவிறந்து இருந்ததேயாகிலும் பகவத் அநுபவத்தைப் பற்றச் சிற்றின்பமாகையாலும், முமுக்ஷுவுக்கு இவை தியாஜ்யம் என்றார்" என்பது நம்பிள்ளை ஈடு.

5. "தியாகப் பிரகாரம் இருக்கும்படி என்? என்னில், தியாஜ்யம் என்றால் விடுமத்தனை அன்றோ; தியாகப் பிரகாரம் இருக்கும்படி அறிய வேணுமோ? என்னில், - வேணும்; விஷயங்களினின்றும் தான் கடக்க வர்த்

வர்த்திக்க என்றால் லீலாவிபூதிக்கு அவ்வருகே போக வேணும். நசிப்பிக்கை பகவத் விபூதியை அழிக்கையாய்விடும். விஷய சந்நிதி யொழிய நிர்மாநுஷ்யமான காட்டிலே வர்த்திக்கை என்றால், சர்வத்தையும் விட்ட ஆதி பரதனும், சௌபரியும் விஷயப் பிரவணரானார்கள். ஆகையால், தியாகப் பிரகாரம் இவை யல்ல. [1] "நீர் நுமது" என்று அஹங்கார மமகாரங்களை விடுகை தியாகப் பிரகாரம் என்று பிறர்க்கு உபதேசித்தார்; [2] "யானே என்னை" என்று தாமும் அநுஸந்தித்தார். [3]"நிவ்ருத்த ராகஸ்ய" இத்யாதி. இவ்வர்த்தம் ஸ்ரீ ஜனகன் பக்கலிலும் ஸ்ரீ குலசேகரப் பெருமாள் பக்கலிலும் கண்டுகொள்வது.

திக்கவோ? அன்றியே விஷயங்களை நசிப்பித்து வர்த்திக்கவோ? என்றால், - இரண்டும் ஒண்ணாது; கடக்க வர்த்திக்க என்று நினைத்தால் லீலாவிபூதிக்கு அவ்வருகே போகவேணும்; நசிப்பித்து வர்த்திக்கவோ என்றால், பகவத் விபூதியை அழிக்கையாய் விடும்; இரண்டும் ஒழிய விஷய சந்நிதியினின்றும் நிர்மானுஷமான காட்டிலே வர்த்தித்தாலோ என்றால், - சர்வத்தையும் விட்டுக் காட்டிலே இருந்த ஆதி பரதனுக்கு மானின் பக்கல் சங்கம் உண்டாய் ஞான ப்ரம்சம் பிறந்தது; சௌபரி நீருக்குள்ளே முழுகிக் கிடக்கச் செய்தே அங்கே சில மத்ச்ய சஞ்சாரத்தைக் கண்டு விஷயப் பிரவணன் ஆனான்; ஆகையாலே தியாகப் பிரகாரம் இவை அல்ல; ஆனால், ஏதாவது என்னில், 'நீர் நுமது என்றிவை வேர் முதல் மாய்த்து இறை சேர்மின்' என்று தேகத்தில் ஆத்ம புத்தியையும், தேகாநுபந்திகளான பதார்த்தங்களிலே மமதா புத்தியையும் தவிருகை தியாகப் பிரகாரம் என்று பிறர்க்கு உபதேசித்தார்; 'யானே என்னை அறியகிலாதே யானே என்தனதே என்றிருந்தேன்' என்று தாமும் அநுசந்தித்தார்; 'நிவிருத்த ராகஸ்ய க்ருஹம் தபோவநம்' என்று நிவிருத்த ராகனாயிருக்குமவனுக்குத் தான் இருந்த தேசமே தபசுக்கு ஏகாந்த ஸ்தலம் என்றதாயிற்று. இப்படி எங்கே கண்டோம்? என்னில், ஸ்ரீ ஜநகராஜன் பக்கலிலும் ஸ்ரீ குலசேகரப் பெருமாள் பக்கலிலும் கண்டுகொள்வது; ஆகையாலே, புத்தித் தியாகமே தியாகம் என்றபடி" என்பது நம்பிள்ளை ஈடு.

1. திருவாய்மொழி, 1. 2: 3. 2. திருவாய்மொழி, 2. 9: 9.

3. "வநேபி தோஷா: ப்ரவதந்தி ராகிணாம்
க்ருஹேஷு பஞ்சேந்த்ரிய நிக்ரஹஸ்தப:
அகுத்ஸிதே கர்மணிய: ப்ரவர்த்தே
நிவ்ருத்த ராகஸ்ய க்ருஹம் தபோவநம்"

என்பது இதிகாச சமுச்சயம்.

ஆசையுடையவர்களுக்குக் காட்டிலும் பாவங்கள் விசேஷமாக உண்டாகின்றன; வீடுகளில் ஐம்பொறிகளையும் அடக்குவது தவமாக ஆகிறது; யாவன் ஒருவன் பாவம் இல்லாத காரியத்தில் பிரவேசிக்கிறானோ அப்படிப்பட்ட ஆசையில்லாதவனுக்கு வீடும் தவத்திற்குத் தக்க இடமாக இருக்கிறது என்பது இதன் பொருள்.

இவ் விரோதி நிவ்ருத்திக்கும் புருஷார்த்த ஸித்திக்கும் உபாயமான பக்தி பிரபத்திகளில் பிரபத்தியே தமக்கு உபாய மென்னும் ஆகாரம் தோற்ற [1] "ஆறு எனக்கு", [2] "உழலை யென்பில்", [3] "நாமங்களாயிரம்", [4] "நாகணை மிசை நம்பிரான் சரணே சரண்" என்று சொல்லிக் கொடு போந்து [5] "ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலால் இலேன்" என்று தலைக் கட்டுகையாலே தாமும் அநுஸந்தித்துத் [6] "திரு நாரணன் தாள்" என்று பிறர்க்கும் உபதேசித்தார். [7] "பாதமே", "அவையே", "சரணே" என்று அவதரிக்கையாலே உபாய பூர்த்தியை அருளிச்செய்தார்.

[8] இதுக்கு அதிகாரிகள் ஆவார் - "மயர்வற மதிநலம்" என்கிற இடத்தில் எனக்கு என்கைக்குத் தம்மைக் காணாமை யாலே ஆகிஞ்சன்யத்தைப் புரஸ்கரித்து, உபாய நிர்ணய

---

1. திருவாய்மொழி, 5. 7: 10. 2. திருவாய்மொழி. 5. 8: 11.
3. திருவாய்மொழி, 5. 9: 11. 4. திருவாய்மொழி, 5. 10: 11.
5. திருவாய்மொழி, 10. 10: 3. 6. திருவாய்மொழி, 4. 1: 1.

"இவ் விரோதி நிவ்ருத்திக்கும் புருஷார்த்த சித்திக்கும் உபாயம் ஏது? என்னில், திரைவர்ணிக அதிகாரமான பக்தியும் அகிஞ்சநாதிகாரமான பிரபத்தியும் என்று இரண்டிறே வேதாந்த சித்தமான உபாயம்; இதில் பிர பத்தியே உபாயம் என்று தமக்குச் சித்தாந்தம் என்னும் ஆகாரம் தோற்ற உபாய வேஷத்தை அருளிச்செய்தார்; 'நோற்ற நோன்பிலேன்' என்று தொடங்கி 'ஆறு எனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்' என்றும், 'உழலை என்பின் பேய்ச்சி முலையூடு அவளை உயிர் உண்டான், கழல்கள் அவையே சரணாகக் கொண்ட' என்றும், 'நாமங்கள் ஆயிரமுடைய நம்பெரு மான் அடிமேல், சேமம் கொள் தென்குருகூர்ச் சடகோபன்' என்றும், 'நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு' என்றும் சொல்லிக்கொண்டு போந்து 'ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலால் அறிகின்றிலேன்' என்று தலைக் கட் டுகையாலே திருவடிகளே உபாயம் என்று அருளிச்செய்தார்; இத்தைப் பிறர்க்கு உபதேசிக்கிறவிடத்திலும் 'திரு நாரணன் தாள் காலம் பெறச் சிந் தித்து உய்ம்மினோ' என்றார்" என்பது நம்பிள்ளை ஈடு.

7. "'ஆறு எனக்கு நின்பாதமே' என்றும், 'கழல்கள் அவையே' என்றும், 'சரணே சரண் நமக்கு' என்றும் அவதரிக்கையாலே உபாய பூர்த் தியை அருளிச்செய்தார்" என்பது நம்பிள்ளை ஈடு.

8. "இவ் உபாயத்துக்கு அதிகாரிகள் ஆவார் ஆர்? என்னில், 'மயர்வற மதிநலம் அருளினன்' என்ற விடத்தில் எனக்கு அருளினன் என்கைக்குத் தம்மைக் காணாமையாலே ஆகிஞ்சந்யத்தையே புரஸ்கரித்து, உபாய நிர்ணய வேளையிலே 'நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்' என்று திரைவர் ணிகாதிகாரமான உபாயாந்தரங்களில் அநந்வயமுகத்தாலே ஆகிஞ்சந்யத்தைப் பேசி, ஆஸ்ரயண வேளையில் தமக்கு உண்டானது அடங்கப் பகவத் பிரசாத லப்தம் என்கைக்காக 'நீசனேன்' நிறைவொன்றுமிலேன்' என்று கருந்தரை யைப் பேசி, 'ஒப்பிலாத் தீவினையேனை உய்யக்கொண்டு' என்று சாபராத ஜந் துக்களுக்கும் புகுரலாம் என்று தோற்றுகையாலே சர்வாதிகாரம் என்றதா யிற்று" என்பது நம்பிள்ளை ஈடு.

வேளையில் [1] "நோற்ற நோன்பிலேன்" என்று உபாயாந்தரங்களில் அநந்வய முகத்தாலே ஆகிஞ்சன்யத்தைப் பேசி, ஆஸ்ரயண வேளையிலே [2] "புகல் ஒன்றில்லா" வென்று சொல்லி, போக வேளையிலே [3] "நீசனேன் நிறையொன்று மிலேன்" என்று கருந்தரையைக் காட்டி, [4] "ஒப்பிலாத் தீவினையேனை" என்று சாபராத ஜந்துக்களுக்கும் புகுரலாம் என்று தோற்றுகையாலே சர்வரும் அதிகாரி என்றதாயிற்று.

[5] இதின் ஸ்வீகாரம் தானும் அவனாலே என்னு மத்தை [6] "சரணாகத் தந்தொழிந்தாய்", [7] "அதுவுமவன தின்னருளே" என்றார். [8] "சிற்ற வேண்டா" வென்று உபாய ஸௌகர்யத்தை அருளிச்செய்து, இது பக்தி அங்கமன்று ஸ்வதந்திர உபாயம் என்கைக்காக [9] "சரணமாகும்" என்று துடங்கி "வைகுந்தம் கொடுக்கும்" என்று பிராப்தி பர்யந்தமாக முடிய நடத்தும் என்று அருளிச்செய்து, [10] இவ் அதிகாரிக்கு [11] "தொண்டர்க்கமுதுண்ண" என்று திருவாய்மொழி தானே காலக்ஷேபப் பிரகாரம் என்றருளிச் செய்தார். [12] "என்னைத் தீமனங் கெடுத்தாய்" என்று ஜிதேந்த்ரியத்வமனாலே என்றும் "மதிநல

1. திருவாய்மொழி, 5. 7: 1. 2. திருவாய்மொழி 6. 10: 10.
3. திருவாய்மொழி, 3. 3: 4. 4. திருவாய்மொழி, 7. 9: 4.
5. "இந்த ஸ்வீகார சித்தி தானும் அவனாலே என்னுமிடத்தை 'நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்' என்றும், 'அதுவும் அவனது இன்னருளே' என்றும் அருளிச்செய்தார்" என்பது நம்பிள்ளை ஈடு.
6. திருவாய்மொழி, 5. 7: 10. 7. திருவாய்மொழி, 8. 8: 3.
8. 'சிற்றவேண்டா' என்பது, திருவாய்மொழி, 9. 1: 7.
"இவ் உபாயத்தைப் பிறர்க்கு உபதேசிக்கிறவிடத்தில் 'சிற்ற வேண்டா சிந்திப்பேயமையும்' என்று உபாய ஸௌகர்யத்தை அருளிச்செய்து, இது தன்னைச் சப்ரகாரமாக அருளிச்செய்கிற விடத்திலே 'இது பக்தி அங்கமன்று; ஸ்வதந்திர உபாயம்' என்கைக்காக 'சரணமாகும்' என்று தொடங்கி 'மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்' என்று பிராப்திபர்யந்தமாக முடிய நடத்தும் என்று அருளிச்செய்தார்" என்பது நம்பிள்ளை ஈடு.
9. திருவாய்மொழி, 9. 10: 5.
10. "இவ் உபாய அத்யவசாயம் பண்ணியிருக்குமவனுக்குக் காலக்ஷேபப் பிரகாரம் இருக்கும்படி என்? என்னில், 'தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன் மாலைகள் சொன்னேன்' என்று திருவாய்மொழி தானே காலக்ஷேபப் பிரகாரம் என்று அருளிச் செய்தார்" என்பது நம்பிள்ளை ஈடு.
11. திருவாய்மொழி, 9. 4: 9,
12. இங்கே வாக்கியங்கள் பிழைபட்டுக் கிடக்கின்றன; எட்டில் உள்ளவாறே பதிப்பிக்கப்பட்டது.
"பிரதமத்திலே இழியும்போது ஜிதேந்திரியனாய்க் கொண்டு இழிய வேணும் உபாசகனுக்கு; ஜிதேந்திரியத்வமும் உபாய பலம் இவ்வதிகாரிக்கு. எங்ஙனே? என்னில், 'என்னைத் தீமனம் கெடுத்தாய்', மருவித் தொழும் மனமே தந்தாய்' என்று ஜிதேந்திரியத்வமும் அவனாலே என்னு

மருளின்ன்'' என்று பக்தியுமவனாலே என்றும் இதற்கு உய்வு காதல் கடல் புரையவென ஈஸ்வரன் இதுக்கெல்லை அதனில் பெரியவென்னவாவென்றருளிச் செய்...............

———(o)———

இரண்டாந் திருவாய்மொழி (2)
"வீடுமின் முற்றவும்"

பிரவேச சங்கி :—[1] தத்வபரமாயும் உபாசன பரமாயுமிறே மோக்ஷ சாஸ்திரந்தான் இருப்பது. அதில் தத்வ பரமாக சொல்ல வேண்டுவதெல்லாம் சொல்லிற்றுக் கீழ்; இதில் உபாஸன பரமாகச் சொல்ல வேண்டுமவற்றுக்கெல்லாம் ஸங்கிரஹம்.

[2] இத் திருவாய்மொழி தன்னை ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பிரபத்தி பரமாக நிர்வஹித்து,

---

மிடத்தைச் சொல்லி, ஜிதேந்திரியன் ஆனவாறே பகவத் அநுபவத்துக்கு உபகரணமான பக்தியாதியாதிகள் தனக்குத் தானே உண்டாகிறதோ? என்னில், 'மயர்வற மதிநலம் அருளினன்' என்று பக்தி ரூபாபந்ந ஞானத்தையும் தானே தந்தான் என்கையாலே பக்தி உத்பத்தியும் அவனாலே என்னுமிடமும் சொல்லி நின்றது. ஆனால், உத்பந்நையான பக்திக்கு வர்த்தகர் ஆர்? என்னில், 'காதல் கடல் புரைய விளைவித்த காரமர் மேனி நம் கண்ணன்' என்று அவனே வர்த்தகன் என்னுமிடமும் சொல்லி, விருத்திக்கு எல்லை ஏது? என்னில், 'அதனிற் பெரிய என்னவா' என்று தத்துவத்திரயங்களையும் விளாக்குலை கொள்ளும்படி பெருகினபடி சொல்லி, 'என்னவாவறச் சூழ்ந்தாய்' என்று தம் திருவாயாலே அருளிச்செய்கையாலே சரீர சம்பந்தத்தை அறுத்துத் தேச விசேஷத்திலே கொண்டுபோய்ச் சம்ஸ்லேஷித்துத் தலைக்கட்டினான் என்றதாயிற்று'' என்ற நம்பிள்ளை ஈட்டின் வாக்கியங்களை இங்கு நினைத்தல் தகும்.

1. தத்வபரமாயும் உபாசனபரமாயுமிறே மோக்ஷ சாஸ்திரம்தான் இருப்பது; அதில் தத்வபரமாகச் சொல்லவேண்டுவதெல்லாம் சொல்லிற்றுக் கீழில் திருவாய்மொழியிலே; உபாசனபரமாகச் சொல்லவேண்டுமவற்றுக்கெல்லாம் சங்கிரஹமாய் இருக்கிறது இத் திருவாய்மொழி என்பது நம்பிள்ளை ஈடு.

2. இத் திருவாய்மொழி தன்னை ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பிரபத்தி விஷயமாக்கி நிர்வஹித்துக்கொண்டு போந்து, எம்பெருமானாரும் அப்படியே அருளிச்செய்துகொண்டு போந்து, பாஷியம் தலைக்கட்டின பின்பு பக்தி விஷயமாக அருளிச்செய்து கொண்டு பேருவர் என்பது நம்பிள்ளை ஈடு. ஆளவந்தார் ஸ்ரீ நாதமுனியினுடைய திருப்பேரனார். திருமாலையாண்டான்-ஆளவந்தாருடைய மாணாக்கர்;இராமாநுசருடைய ஆசாரியர்கள் ஐவரில் ஒருவர்; இராமாநுசருக்குத் திருவாய்மொழியின் வியாக்கியானத்தை உபதேசித்தவர். எம்பெருமானார்-இராமாநுசர். பாஷியம் தலைக்

2

எம்பெருமானாரும் அப்படியே நிர்வஹித்து, பாஷ்யம் தலைக் கட்டின பின்பு பக்தி பரமாக நிர்வஹிப்பர். இவருடைய பக்தி பிரபத்திகள் விகல்பிக்கலாயிறே இருப்பது. இதுக்கடி "வீடு செய்து - வீடுமின்" என்று விவேகாதி அங்கத்வம் தோற்று கையாலே பக்தி யென்று சங்கிக்க வரும் என்று சாத்ய பக்தி பரமாக வாதல், பிரபத்தியைப் பக்தி சப்தத்தாலே மறைத்தா தல் அருளிச்செய்வர். [1] இவருடைய பிரபத்தி, பக்தி பாரவஸ்யத்தாலே வந்ததாகையாலே காரணகாரியங்களுக்கு அபேதந வியவஹார முண்டாகையாலே.

[2] இவர் தாம் பெற்றது பக்திரூபாபந்ந ஜ்ஞானமா யிருந்தது. தாம் பெற்றதொன்றும் பிறர்க்கு உபதேசிப்ப தொன்றுமாக வொண்ணுதே. அப்போது விப்ரலம்பக கோடியிலே யாவரே. [3] "உபய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய" என்கிற படியே கர்ம ஜ்ஞான சம்ஸ்கிருதாந்த:கரணனுக்குப் பிறக்கு மதிறே பரபக்தி. "மயர்வற மதிநலம் அருளினன்" என்று கர்ம ஜ்ஞான ஸ்தானத்திலே பகவத் பிரசாதமாய், அது அடியாக விளைந்ததிறே இவருடைய பக்தி. [4] இதுதான் வேதாந்த விஹிதையான பக்தியானலோ? என்னில், அபசூத்ராதிகரண

கட்டின பின்பு - பிரஹ்ம சூத்திரத்திற்கு விரிவுரை எழுதிய பிறகு. ஈண்டு 'பக்தி' என்றது, சாத்ய பக்தியை. சாத்யபக்தி - பக்தியே பயனாக இருப்பது; அதாவது, பக்தி வேறு, பக்தியினால் அடையும் பயன் வேறாகக் கொள்ளாமல் பக்தி செய்தலையே பயனாகக் கொள்ளுதல் என்றபடி.

1. ஆழ்வாருடைய பிரபத்தி, பக்தி பாரவஸ்யத்தாலே வந்ததாகையாலே காரிய காரணங்களை ஒற்றுமை நயத்தால் கூறலாம் என்பது கருத்து.

2. "'மயர்வற மதிநலம் அருளினன்' என்று இவர் தாம் பெற்றது பக்தி ரூபாபந்ந ஞானமாயிருந்தது; தாம் பெற்றது ஒன்றும் பிறர்க்கு உபதேசிப்பது ஒன்றுமாக ஒண்ணாதே; அப்போது விப்ரலம்பக கோடியிலே ஆவரே" என்பது நம்பிள்ளை ஈடு.

3. கர்ம ஞானங்கள் அடியாக வன்றோ பக்தி உண்டாகும்; இவர்க்குப் பக்தி வந்த வழி யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உபய' என்று தொடங்கி.

"உபயபரிகர்மித ஸ்வாந்தஸ்ய ஏகாந்தி காத்யந்திக பக்தியோகைக லப்ய:" என்பது ஆத்ம சித்தி. கர்ம ஞானங்கள் இரண்டாலும் தூய்மை செய்யப் பட்ட மனத்தையுடையவனுக்கு உண்டாகும் பக்தி; அந்தப் பக்தியால் அடையத்தக்கவன் இறைவன் என்பது இதன் பொருள்.

4. "இதுதான் வேதாந்த விஹிதையான பக்திதானே யானலோ? என்னில், சர்வேச்வரன் அருள இவர் பெற்றாராகிற ஏற்றம் போம்; அபசூத்ராதி கரண நியாயமும் பிரசங்கிக்கும்; ஆனபின்பு, தாம் பெற்றதையே பிறர்க்கு உபதேசிக்கிறாராக அமையும்" என்பது நம்பிள்ளை ஈடு.

நியாய விரோதம் பிரஸங்கிக்கும். [1]விதுராதிகளைப் போலே என்னில், சர்வேச்வரன் அருள இவர் பெற்றாராகிற ஏற்றம் போம். ஆக, தாம் பெற்ற சாத்ய பக்தியையே பிறர்க்கு உபதேசிக்கிறார்.

[2] கீழ், பரத்துவத்தை யனுபவித்து ஒரு பெரிய திருநாள் போலே யிறே போந்தது. இப்போது நெஞ்சொழிந்து பிறர்க்கு உபதேசிக்கிறபடி எங்ஙனே? தாம் அனுபவித்த விஷயத்தை எல்லை கண்டோ, தாம் அவ் விஷயத்தில் விரக்தராயோ? என்னில், விஷயமோ? என்றால் [3] "தனக்கும் தன் தன்மை யறிவரியான்" என்கிறபடியே அபரிச்சிந்ந விஷயம்; [4] கொள்ளமாளா இன்ப வெள்ளமிறே. இனி, அபிநிவேசமோ? என்றால், [5] "காதல் கடலி"விறே. [6] ஆனால், ஒன்றிலே அபிநிவேசம் பிறந்தால் அவ் விஷயந்தன்னிலே காலாந்தரத்திலே விரக்தி பிறக்கக் காணா நின்றோம். அங்ஙனம் அல்ல; [7] "எப்பொழுதும் நாள் திங்கள்" என்று நித்யா

---

1. 'விதுராதிகளைப் போலே' என்பதனை ஸ்ரீ விதுரர் முதலியோர்களைப் போன்று தம் பிரபாவத்தாலே உபதேசிக்கக் கூடாதோ? என்னில், என்று விரித்து உரைத்துக் கொள்க.

2. "கீழில் திருவாய்மொழியிலே அவனுடைய பரத்வத்தை அநுபவித்து ஒரு பெரிய திருநாள் போலேயிறே போந்தது; இவர் இப்போது நெஞ்சொழிந்திருந்து பிறர்க்கு உபதேசிக்கிறபடி எங்ஙனேதான்? தாம் அநுபவித்த விஷயத்தை எல்லை கண்டோ, அன்றிக்கே, தாம் அவ்விஷயத்தில் விரக்தராயோ? என்னில், விஷயமோ என்றால், 'தனக்கும் தன் தன்மை யறிவரியான்' என்கிறபடியே அபரிச்சிந்ந விஷயம்; கொள்ளமாளா இன்ப வெள்ளமிறே. இனித் தம் அபிநிவேசமோ என்றால், 'காதல் கடலின் மிகப் பெரிதால்' என்றும், 'மண் திணி ஞாலமும் ஏழ் கடலும் நீள் விசும்பும் கழியப் பெரிதால்' என்றும், 'சூழ்ந்ததனிற் பெரிய என் அவா' என்னும்படி பெருகி யிருந்தது" என்பது நம்பிள்ளை ஈடு.

3. திருவாய்மொழி, 8. 4: 6. 4. திருவாய்மொழி, 4. 7: 2.

5. திருவாய்மொழி, 7. 3: 6.

6. "ஆகிலும், ஒருகால் ஒன்றிலே அபிநிவேசம் பிறந்தால் அப்படிப்பட்ட விஷயந்தானே காலாந்தரத்திலே விரக்தி பிறக்கக் காணா நின்றோம்; அப்படியே சிலகாலம் அநுபவித்துப் பின்பு விரக்தி பிறந்ததோ? என்னில், அங்ஙனம் சொல்ல ஒண்ணாது; 'எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டு ஊழி ஊழிதொறும், அப்பொழுதைக் கப்பொழுது என்னாராவமுதம்' என்னும்படி நித்யா பூர்வமாயிருக்கும்" என்பது நம்பிள்ளை ஈடு.

7. திருவாய்மொழி, 2. 5: 4.

பூர்வமாய் இருக்கும். [1]"நீசனேன்", [2] "பெருஞ் செல்வம் நெருப்பாக", [3] "ஓதவல்ல பிராக்கள்" என்கையாலே கியாதி யாதிகளுக்கு அன்று. [4]"வீடுமின்" என்கையாலே "ப்ரப்ரூயாத்" என்று விதி பரதந்திரராய் அன்று.

ஆனால், பின்னை எத்தாலே? என்னில், தாம் அனுபவித்த விஷயம் தனியே அனுபவிக்குமதன்றிருக்கே இருக்கையாலே இனி நமக்குப் போதயந்த:பரஸ்பரத்துக்கு ஆளாவார் ஆர்? என்று சம்ஸாரிகள் பக்கலிலே கண்வைக்க, தாம் பகவத் விஷயத்தில் பிரவணராய் இருக்கிறப் போலே அவர்கள் சப்தாதி விஷயங்களிலே பிரவணராய் இருக்கையாலே இவர்கள் அநர்த்தத்தைப் பரிஹர்த்து அல்லது நிற்கவொண்ணுதா யிருந்தது. ஒருவனுக்கு வைஷ்ணவத்வம் உண்டு இல்லை என்னுமிடம் தானே அறியலாம் என்று [5]ஜீயர்; பிறர் அநர்த்தம் கண்டால் ஐயோ? என்றிருந்தானாகில் நமக்குப் பகவத் சம்பந்தமுண்டு; இத்தனையும் பட்டிடுவானுக்கு என்றிருந்தானாகில் பகவத் சம்பந்தமில்லை என்றிருக்க அடுக்குமென்று.

[6] இவர்கள் சேதனராய் நல்லவை பற்றி, தீயவை கழித்துப் போருகையாலே அவற்றினுடைய ஹேயதையையும் சர்வேச்வரனுடைய உபாதேயதையையும் இவர்களுக்கு அறிவித்தால் இவற்றை விட்டு அவனைப் பற்ற அடுக்கும் என்று

---

1. திருவாய்மொழி, 3. 3 : 4. 2. திருவாய்மொழி, 4. 9 : 4.
3. திருவாய்மொழி, 9. 1 : 11. 4. திருவாய்மொழி, 1. 2 : 1.

'வீடுமின் என்கையாலே' என்றது, "வீடுமின் முற்றவும்" என்று பலரைக் குறித்து உபதேசிக்கையாலே 'ப்ரப்ரூயாத்' என்று ஒரு விதி பரதந்திரராய் அன்று என்றபடி. 'ப்ரப்ரூயாத்' என்ற வாக்கியம் முண்டகோபநிடதம். ஒரு வருடம் குருகுல வாசம் செய்யாத மாணவனுக்குச் சொல்லக் கடவன் அல்லன் என்பது அவ் வாக்கியத்தின் பொருள்.

"இனி ஆசார்யபதம் நிர்வஹிக்கைக்காக அன்று; கியாதி லாப பூஜைகளுக்காக அன்று; 'ப்ரப்ரூயாத்' என்று ஒரு விதி பரதந்திரராய் அன்று; ஆனால், பின்னை எத்தாலே யாவது? என்னில், ஸ்வாநுபவப் பிரஹர்ஷம் இருக்கிறபடி" என்பது நம்பிள்ளை ஈடு.

5. ஜீயர் - நஞ்சீயர். பட்டருடைய மாணுக்கர்; நம்பிள்ளைக்கு ஆசாரியர்.

6. "இவர்களை இவர் மீட்கப் பார்க்கிற வழிதான் என்? என்னில், இவர்கள் சேதனராய் இருந்தார்கள்; சப்தாதி விஷயங்களில் வாசி யறிந்து தீயவை கழித்து, நல்லவை பற்றிப் போருகிறது ஒன்று உண்டாயிருந்தது" என்பது நம்பிள்ளை ஈடு.

[1] சர்வேச்வரனுடைய நன்மையையும், இவர்கள் பற்றின விஷயத்தின் அல்பாஸ்திரத்வாதி தோஷத்தையும், பற்றுமிடத்தில் வரும் அந்தராய பரிஹாரத்தையும், புதிதாகச் செய்யவேண்டுவதொன்றுமில்லை பழைய சம்பந்தத்தை யுணர அமையுமென்றும், அனுசந்திக்கப்படும் மந்திரம் இன்னதென்றும், அவனுடைய பஜநீயதையையும் அருளிச் செய்யா நின்றுகொண்டு இதர விஷய வைராக்ய பூர்வகமாகப் பகவத் பக்தியைப் பண்ணி ஆச்ரயியுங்கோள் என்று பரோபதேசப் பிரவிருத்தராகிறார்.

---o---

மூன்றாந் திருவாய்மொழி (3)
"பத்துடையடியவர்"

பிரவேச சங்கி :—[2]சர்வஸ்மாத் பரன் என்றார். பஜநீயன் என்றார். [3]பஜியுங்கோள் என்று பலகாலும் அருளிச்செய்யா

---

1. இத் திருவாய்மொழியில் வந்துள்ள "எல்லையில் அந்நலம்" என்பதனை நினைத்து 'சர்வேச்வரனுடைய நன்மையையும்' என்றும், "மின்னின் நிலையில" என்றதனை நினைத்து 'இவர்கள் பற்றின விஷயத்தின் அல்பாஸ்திரத்வாதி தோஷத்தை' என்றும், "அது செற்று" என்றதனை நினைத்து 'பற்றுமிடத்தில் வரும் அந்தராய பரிஹாரத்தை' என்றும், "அடங்குக உள்ளே" என்றதனை நினைத்து 'பழைய சம்பந்தத்தை உணர அமையும்' என்றும், "வண்புகழ் நாரணன்" என்றதனை நினைத்து 'அநுசந்திக்கப்படும் மந்திரம் இன்னது' என்றும், "இறைசேர்மின்" என்றதனை நினைத்து 'அவனுடைய பஜநீயதையை' என்றும், "வீடு மின் முற்றவும்" என்றதனை நினைத்து 'இதர விஷய வைராக்கிய பூர்வகமாக' என்றும், "அந் நலம் புல்கு" என்றதனை நினைத்து 'பகவத் பக்தியைப் பண்ணி' என்றும் கூறுகிறார்.

2. "வீடு மின் முற்றவும்" என்ற மேல் திருவாய்மொழியில் 'அவனை வழிபடுங்கோள்' என்று அருளிச்செய்த பின்னர் இத் திருவாய்மொழியில் இறைவனுடைய சௌலப்யத்தை அருளிச்செய்வதற்கு இயைபு யாது? என்ன, அந்த இயைபினைச் சுருக்கமாகக் கூறுகின்றார் 'சர்வஸ்மாத்பரன்' என்றது முதல் 'இரண்டுக்கும் பொதுவாயிறே இருப்பது' என்றது முடிய. சுருங்கக் கூறிய இதனை விரித்துக் கூறுகின்றார் "வீடுசெய்ம்மின், இறைசேர்மின்" என்று தொடங்கி மேல் எல்லாம்.

'சர்வஸ்மாத்பரன்' என்றது "உயர்வற" என்ற முதல் திருவாய்மொழியில். 'பஜநீயன்' என்றது "வீடு மின் முற்றவும்" என்ற இரண்டாந் திருவாய்மொழியில்.

3. இப்படிப் பஜியுங்கோள் என்று பலகாலும் அருளிச்செய்யா நின்றீர்; இது பொருந்தாது; எழுந்திருக்கவுமாட்டாத நொண்டியை யானை

நின்றீர்; இருகை முடவனை 'யானை ஏறு' என்றால் அவனாலே ஏறப்போமோ? சர்வேச்வரனாய் அவாப்த ஸமஸ்த காமனான வனை க்ஷுத்ரனான சம்சாரி சேதனனாலே பெறப் போமோ? என்ன, அவ் வானைதானே அவ் விருகை முடவனுக்கும் ஏற லாம்படி படிந்துகொடுக்குமன்று ஏறத் தட்டில்லையே; அப்ப டியே இச் சம்சாரி சேதனனும் பஜிக்கலாம்படி [1] "பல பிறப் பாய்" என்று அவன் தன்னைத் தாழவிட்டுச் சுலபனாகில் பஜிக்கத் தட்டில்லையே என்கிறார்.

[2] சர்வேச்வரன் அரியன் என்றால் சம்சாரத்தில் ஆள் பற் றாது என்று அவன் எளிமையை உபபாதித்துக்கொண்டு போந் தோம்; அதுதானே இவர்களுக்கு 'இத்தனை எளியனோ?' என்று விலக்குகைக்கு உடலாயிற்று; அவ் வெளிமை ஆதரிக் கைக்கு உடலாயிற்று உமக்கு ஒருவர்க்குமே என்று எம்பா ருக்கு உடையவர். சில தார்மிகர் ஏரி கல்லினால் சிலர் சேற் றிலே அழுந்திப் பட்டுப் போகா நிற்க, விடாயர் அதிலே விடாய் தீர்ந்து போகுமா போலேயும், விளக்கிலே விட்டில்கள் விழுந்து முடியும், சிலர் ஒளியிலே ஜீவிக்குமா போலேயும், [3] அவதாரந்தான் பாக்ய ஹீனர்க்கு சஜாதீயப் பிரதிபத்தி

ஏறு என்றால் அவனாலே ஏறப் போமோ? அப்படியே, சர்வஸ்மாத்பரனாய் அவாப்தசமஸ்தகாமனாய் இருக்கிறவனை இந்த அதி க்ஷுத்திரனான சம்சாரி யால் அடையப் போமோ? என்கிற வினாவினைத் திருவுளத்தே கொண்டு, சம்சாரிகளுக்கும் அடையலாம்படி சர்வஸ்மாத்பரனான அவனே தாழ நின்று எளியனுமாகில் இவனுக்கும் அடைவதற்குத் தட்டு இல்லை என்று அவனுடைய சௌலப்யத்தை அருளிச்செய்கிறார் என்பது கருத்து 'பஜியுங்கோள்' என்று தொடங்கும் வாக்கியத்துக்கு:

1. 'பல பிறப்பாய் ஒளிவரும்' என்றது, இத் திருவாய்மொழியின் இரண்டாம் திருப்பாசுரம்.

2. அவதாரத்தின் அந்த சௌலப்யமே இவர்களுடைய அழிவிற்கும் ஆக்கத்திற்கும் காரணம் என்னுமதற்கு ஓர் ஐதிஹ்யமும் இரண்டு திருஷ்டாந் தங்களும் காட்டுகிறார் 'சர்வேச்வரன்' என்றது முதல் 'ஒளியிலே ஜீவிக்கு மாபோலேயும்' என்றது முடிய. எம்பார் - இராமாநுசருக்கு மாணுக்கரும் திருத் தம்பியாரும் ஆன ஒரு பெரியார். உடையவர் - இராமாநுசர்.

3. இப்படி அவன் எளியவன் ஆனால் எல்லாரும் அவனை வழிபட்டு உய்யாமல் பலர் எதிர்த்துக் கேடு உறுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவதாரந்தான்' என்றது முதல் 'எல்லார்க்கும் பொதுவா யிறே இருப்பது' என்றது முடிய. என்றது, அவர்களுடைய தீவினையும் நல்வினையுமே எதிர்த்துக் கேடு உறுதற்கும் அடைந்து உய்வு பெறுவதற்கும் காரணம் என்றபடி.

பண்ணி அநர்த்தப்பட்டுப் போகவும், அக்ரூர மாலாகாராதிக ளான சில பாக்யாதிகர்க்கு அரியன் எளியனாகப் பெற்றோம் என்று ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கவும், இப்படி இரண்டுக்கும் பொதுவாயிறே இருப்பது. இவனும் [1] "மரதக மணித்தடம்", "வெங்கதிரோன் விளக்கு" இறே.

[2]"வீடு செய்மின்",[3]"இறை சேர்மின்",[4]"புல்கு பற்றற்றே" என்று பஜியுங்கோள் என்று பலகாலும் அருளிச்செய்யா நின்றீர். தர்சன சமான ஆகாரமானால் அல்லது ஜ்ஞானம் பக்தியாகமாட்டாது; பக்தியுண்டானால் அல்லது மோக்ஷம் சித்தியாது; ஆனபின்பு எங்களால் அந்தப் பக்தி செய்து தலைக்கட்டப் போமோ? என்ன, [5] "தஸ்மிந் த்ருஷ்டே பராவரே", [6]"விஶதே ததநந்தரம்" என்று, சில வருத்தத்தோடே தலைக்கட்டும் சாதன பக்தி யன்று இங்குச் சொல்லுகிறது,

---

1. மேலே இறைவனை ஏரியாகவும் விளக்காகவும் கூறியதற்குப் பிரமாணம் காட்டுகிறார். 'மரதக மணித்தடம்' என்றும், 'வெங்கதிரோன் விளக்கு' என்றும். 'மரதக மணித்தடம்' என்பது திருவாய்மொழி, 10. 1 : 8. 'வெங்கதிரோன் விளக்கு' என்றது பெருமாள் திருமொழி, 10 : 1.

2. திருவாய்மொழி, 1. 2 : 1. 3. திருவாய்மொழி, 1. 2 : 3.

4. திருவாய்மொழி, 1. 2 : 4.

"பலகாலும் அவனை பஜியுங்கோள் என்னாநின்றீர்; கண்ணாலே கண்டால் அல்லது பஜிக்க விரகில்லை; பஜித்தால் அல்லது காண விரகில்லை; ஆனபின்பு ஆஶ்ரயிக்கும்படி எங்ஙனே? என்ன" என்பது நம்பிள்ளை ஈடு. என்றது, மேல் திருவாய்மொழியிற் சொன்ன பஜனம் சாதனத்தால் வருகின்ற பரபக்தி என்று நினைத்து மயங்கிக் கேட்கின்றார்கள் என்றபடி.

5. மேல் திருவாய்மொழியிற் கூறியது அத்தகைய சாதன பக்தியை அன்று என்று கூறுகின்றார் 'தஸ்மிந்' என்று தொடங்கி.

பித்யதே ஹ்ருதய க்ரந்திः சித்யந்தே ஸர்வ ஸம்ஶயாः
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே.

என்பது, முண்டகோப நிடதம். இறைவனைப் பரபக்தியால் பார்த்தவளவில் மனத்திலிருக்கின்ற அவா முதலியன அழிகின்றன என்பது இதன் பிண்டப் பொருள்.

6. பக்த்யா மாம் அபிஜாநாதி யாவான் யஶ்சாஸ்மி தத்வதः
ததோமாம் தத்வத: ஜ்ஞாத்வா விஶதே ததநந்தரம்.

என்பது, ஸ்ரீ கீதை, 18 : 55. பரபக்தியால் என்னை உண்மையாக அறிகின்றவன் பிறகு என்னையே அடைகின்றான் என்பது இதன் பிண்டப் பொருள். பரபக்தியாவது - சாஸ்திர மூலமாக அறிந்த பொருளை இப்போதே காண வேண்டும் என்னும் இச்சை.

'ஆசாலேசத்தை' என்றதன்பின் 'ஆனபின்பு அவனை அடைதல் எளிது, அடையுங்கோள்' என்ற வாக்கியத்தைக் கூட்டிக் கொள்க.

காணவேணும் என்னும் ஆசாலேசத்தை. [1] சர்வாதிகன் தாழ நிற்குமன்று நிவாரகர் இல்லை. [2]"பஹூநிமே வ்யதீதாநி" என்கையாலே அவதாரத்தில் பொய்யில்லை ; [3] இச்சை உண்டே ; [4]இது தன்னைத் தானும் அருளிச்செய்தான் [5]"திவ்யம்" என்று. [6] "அஜோபிஸந்" நாம் பிறவா நிற்கச் செய்தே பிறவாமையும் கிடக்கும். தாழ நின்ற நிலையிலே மேன்மையும் கிடக்கும். அப்ராக்ருத சம்ஸ்தானத்தை இதர சஜாதீய மாக்குவோம். இத்தை அறிந்தவர்களுக்கு ஜன்மமில்லை. நானும் பிறந்து அவர்களும் பிறக்கவேணுமோ? ஈரிறை உண்டோ? [7] என்றான்.

---

1. அறப்பெரிய இறைவன் சிறிது ஆசையுடையார்க்கு எளியனாகக் கூடுமோ? என்ன அதற்கு விடை கூறப்படுகின்றது. 'சர்வாதிகன்' என்று தொடங்கி.

2. தேவாதிதேவன் இவ்வுலகத்தில் வந்து அவதரித்தான் என்பது இந்திரஜாலம் அன்றோ? இது பொருந்துவதாமோ? என்ன, அதற்கு விடை கூறப்படுகின்றது 'பஹூநி' என்று தொடங்கி.

பஹூநிமே வ்யதீதாநி ஜந்மாநி தவச அர்ஜுந
தாந்யஹம் வேத ஸர்வாணி நத்வம் வேத்த பரந்தப.

என்பது, ஸ்ரீ கீதை, 4 : 5.

பகைவர்களை அழியச் செய்கின்ற அருச்சுனா! எனக்கும் பல பிறவிகள் கழிந்தன; உனக்கும் பல பிறவிகள் கழிந்தன; ஆயின், அப்பிறவிகள் பலவற்றையும் யான் அறிகின்றேன்; அவற்றை நீ அறியாய் என்பது இதன் பொருள். மேற் சுலோகத்தில் "தவ" என்று திருஷ்டாந்தம் எடுக்கையாலே அவதாரத்தில் புரை இல்லை; சத்தியம் என்றபடி.

3. இவனுடைய பிறவிக்குக் காரணம் கர்மம்; அவனுடைய பிறவிக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை 'இச்சை உண்டே' என்பது.

4. இதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'இது தன்னை' என்று தொடங்கி. இது தன்னை - இவ்வவதாரத்துக் காரணம் இச்சை என்பதனை. "தானும்" என்ற உம்மை மஹரிஷிகளைத் தழுவுகிறது.

5. ஜந்ம கர்மசமே திவ்யம் ஏவம் யோவேத்தி தத்வதஃ
த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந.

என்பது, ஸ்ரீ கீதை, 4 : 9. என்னுடைய பிறவிகளும் பிறவிகளிற் செய்யப்படுகின்ற செயல்களும் தெய்வத்தன்மை வாய்ந்தவை; எவன் ஒருவன் இதனை உண்மையாக அறிகின்றானோ அவன் இச்சரீரத்தை நீங்கினால் வேறு பிறவியை அடைவதில்லை; என்னையே அடைகிறான் என்பது இதன் பொருள்.

6. அஜோபிஸந் நவ்யயாத்மா பூதாநாம் ஈஸ்வரோபிஸந்
ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா.

என்பது, ஸ்ரீ கீதை, 4 : 6. நான் பிறப்பு இல்லாதவனாயினும் அழிவில்லாதவனாயினும் உயிர்களுக்கெல்லாம் தலைவனாயினும் என் இச்சையால் நான் உண்டாகிறேன் என்பது இதன் பிண்டப் பொருள்.

7. 'என்றான்' என்றது, பகவத் கீதையில் நான்காம் அத்தியாயத்தில் அருளிச்செய்தான் என்றபடி.

இராம கிருஷ்ணாதி அவதாரங்களாலே சுலபனும்; ஆன பின்பு ஆச்ரயியுங்கோள் என்று, [1] நீர்மைக்கு எல்லையான கிருஷ்ணாவதாரத்தில் இழிந்து, அது தன்னிலும் பரத்வத்தோடு ஒக்கச் சொல்லலான நிலையைக் கழித்து, நவநீத சௌர்ய விருத்தாந்தத்திலே அகப்பட்டு "எத்திறம்" என்று மோஹிக்கிறார். [2]பரத்துவத்தை அநுசந்தித்துத் தெளிந்து உபதேசித்தார்; ஸௌலப்யத்தை அநுஸந்தித்து மோஹித்தார்.

———: :———

நான்காந் திருவாய்மொழி (4)

——:——

"அஞ்சிறைய மடநாராய்"

பிரவேச சங் :—[3] "அயமபர: காரக நியம:" [4] என்னுமா போலே கீழ்ப் போந்த ரீதியொழிய வேறாய் இருக்கிறது. [5]முற்காலத்தில் அல்பம் விவக்ஷிதனாய் இருப்பான் ஒருவன், வீதராகராயிருப்பார் பரிக்ரஹித்துப் போருவதொன்றாயிருந்தது,

1. பரோபதேசம் செய்யப் புகுந்த இவர் இத் திருவாய்மொழியின் முதல் திருப்பாசுரத்தில் "எத்திறம்" என்று மோஹிப்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நீர்மைக்கு' என்று தொடங்கி.

2. பரத்துவத்தைக் காட்டிலும் சௌலப்யம் ஈடுபடுத்துமோ? என்ன, 'பரத்துவத்தை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "பரத்துவத்தை அநுசந்தித்தார்; தெளிந்திருந்து உபதேசித்தார்; சௌலப்யத்தை அநுசந்தித்தார், 'எத்திறம்' என்று மோஹித்துக் கிடக்கிறார்" என்பது நம்பிள்ளை ஈடு.

3. "பரத்வத்தையும் பஜநீயதையையும் சௌலப்யத்தையும் அநுபவித்து ஹ்ருஷ்டராய்த் தாமாய்ப் பேசினார் கீழ்; இதில் தாமான தன்மை அழிந்து ஒரு பிராட்டி தசையைப் பிராப்தராய், ஹர்ஷத்தாலே சொல்லும் பாசுரம் போய் ஆற்றாமையாலே சொல்லும் பாசுரமாய்ச் செல்லுகிறது" என்ற ஈட்டின் வாக்கியத்தை இங்கே சேர்த்து வாசிக்கவும்.

4. இது மஹா பாஷ்ய வாக்கியம். மேலே சொல்லப் போவது வேறொரு வகையான காரகமாகும் என்பது இவ் வாக்கியத்தின் பொருள். இது, முதல் மூன்று திருவாய்மொழிகளும் ஒரு வகையாகவும் 'அஞ்சிறைய' என்று தொடங்கும் இத்திருவாய்மொழி வேறு வகையாகவும் (அகப்பொருள் சம்பந்தம்) இருப்பதற்குத் திருஷ்டாந்தம்.

5. மேலதற்கே ஓர் ஐதிஹ்யம் காட்டுகிறார் 'முற்காலத்தில்' என்று தொடங்கி.

தத்வபரமாக அடுக்கும் என்று இத் திருவாய்மொழியளவும் வர அதிகரித்து, இத் திருவாய்மொழியளவிலே வந்தவாறே இது காமுக வாக்யமாய் இருந்தது என்று கைவிட்டுப் போனான்; [1] "நிதித்யாஸிதவ்ய:" என்கிற பகவத்காமம் என்று அறிந்திலன் பாக்ய ஹாநியாலே. [2] "அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன்" என்று திருவுலகு அளந்தருளின திருவடிகளை அநுபவிப்பதாக ஒருப்பட்டுக் கட்டிக் கொண்டார்; அது ஒரு கால விசேஷத்திலேயாய்த் தாம் பிற்பாடராய்த் தோற்றுகையாலே, துணுக்கென்று தாமான தன்மை யழிந்து சிநேகத்துக்குப் பள்ள மடையான பிராட்டி தசையைப் ப்ராப்தராய்ப் பேசுகிறார்.

[3] "ஆர்த்தோ வா" என்கிற விஷயத்தை அனுபவித்த இவர்க்குக் கிலேசத்துக்குப் பிரஸங்கம் என்? என்னில், 'ஆமத்தில் சோறு பாதகம்' என்னுமத்தாலே நிதானஜ்ஞரான பிஷக்குக்கள் போஜன நிரோதம் பண்ணுமா போலே, மேல் வரும் அனுபவம் சாத்மிக்கைக்காக நாலடி பேர நின்றான்; [4] "மருத்துவனாய் நின்ற மாமணி வண்ண"னிறே. அநந்தரம் [5] கலங்கினார். [6] "மயர்வற மதிநலம் அருளப் பெற்றவரிறே இப்ப

1. ஆத்மாவா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய: என்பது பிருஹதாரண்ய உப. அந்தப் பரமாத்மாவானவன் கேட்கத் தக்கவன், நினைக்கத்தக்கவன், தியானம் செய்யத்தக்கவன், பார்க்கத்தக்கவன் என்பது இதன் பொருள்.

2. ஆற்றாமையாலே சொல்லும் பாசுரம் யாது? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'அயர்ப்பிலன்' என்று தொடங்கி. இது திருவாய்மொழி, 1. 3: 10.

3. ஆர்த்தோவா யதிவா த்ருப்த: பரேஷாம் ஶரணாகத:
அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா.

என்பது, ஸ்ரீராமா. யுத். 18: 28. சரணம் அடைந்தவன் ஆர்த்தனாயினும் சரி, திருப்தனாயினும் சரி, அவன் காப்பாற்றப் படத் தக்கவன் என்பது இதன் பிண்டப் பொருள். 'அநுபவித்த இவர்க்கு' என்றது, அநுபவித்து அநுபவ விசேஷத்தை ஆசைப்பட்ட இவர்க்கு என்றபடி.

4. ஆயின், இவன் மருத்துவனோ? என்ன, ஆம் என்று அதற்குப் பிரமாணம் காட்டுகிறார். "மருத்துவனாய்" என்று தொடங்கி. இது பெரியாழ்வார் திருமொழி, 5. 3: 6.

5. 'கலங்கினார்' என்றது, கலங்கித் தூது விடுகிறார் என்றபடி.

6. ஞானாதிகரான இவர் கலங்கலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மயர்வற' என்று தொடங்கி. என்றது, பக்தி ரூபாபந்ந ஞானத்தை யுடையவராகையாலே கலங்கினார் என்றபடி.

டிக் கலங்கினர்; [1] அவன் தானே கொடுத்த அறிவும் விச்லேஷத்தில் அகிஞ்சித்கரமாம்படியிறே அவன் வைலக்ஷண்யம்; [2] "தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்" என்று இருந்தவள்தானே வேண்யுத்க்ரதனத்திலே யொருப்பட்டாள். [3] "ஹம்ஸகாரண்ட வாகீர்ணும்", [4] "அஶோக சோகாபநுத" என்றிறே அவர்கள் வார்த்தை.

இவர்க்குப் [5]பிராட்டிமார் தசையான விசேஷம் உண்டாகிறபடி எங்ஙனே? அநந்யார்ஹ சேஷத்துவத்தாலும், அநந்ய

---

1. பக்தி மாத்திரமேயன்றி அவனுடைய அழகும் இப்படிக் கலங்கப் பண்ணும் என்கிறார் 'அவன் தானே' என்று தொடங்கி.

2. இப்படி ஞானதிகராயிருந்து வைத்தும் கலங்கின பேர் உளரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தத்தஸ்ய' என்று தொடங்கி.

ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தநஃ
மாம் நயேத்யதி காகுத்ஸ்த தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்.

என்பது, ஸ்ரீராமா. சுந். 9 : 30. பகைவர்களின் பலத்தை ஒழிப்பவரான பெருமாள் இலங்கையை அம்புகளாலே நெருங்கச் செய்து என்னை அழைத்துக் கொண்டு போவாராகில் அது அவருக்குத் தக்க செயலாம் என்பது இதன் பொருள்.

3. கலங்கிப் பறவைகளைத் தூதுவிட்டமைக்கு இரண்டு திருஷ்டாந்தங்கள் காட்டுகிறார் 'ஹம்ஸ' என்றும், 'அஶோக' என்றும் தொடங்கி.

ஹம்ஸ காரண்டவாகீர்ணாம் வந்தே கோதாவரீம் நதீம்
க்ஷிப்ரம் ராமாய ஶம்ஸ த்வம் ஸீதாம் ஹரதி ராவணஃ.

என்பது, ஸ்ரீராமா. ஆரண், 49 : 32, அன்னங்களும் நீர்க்காகங்களும் பரந்திருக்கிற கோதாவரி நதியை வணங்குகிறேன்; ஏ நதியே! நீ பிராட்டியை இராவணன் கவர்ந்துகொண்டு போகிறான் என்று பெருமாள் பொருட்டு விரைவில் சொல்லுவாயாக என்பது பொருள்.

4. அஶோக ஶோகாபநுத ஶோகோபஹத சேதஸம்
த்வந்நாமாநம் குரு க்ஷிப்ரம் ப்ரியா ஸந்தர்ஶநேந மாம்.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 6 : 17.

துன்பத்தை நீக்குகின்ற அசோகமே! துன்பத்தால் கலங்கின மனத்தையுடைய என்னை என் மனைவியான பிராட்டி இருக்கும் இடத்தை அறிவிப்பதனாலே விரைவில் உன் பெயரைப் போல அசோகனாகச் செய்வாய் என்பது இதன் பொருள்.

5. பகவானைப் பிரிவதனால் உளவாகும் காரியங்கள் பிராட்டியாருடைய தர்மங்கள் அன்றோ? அது இவர்க்குக் கூடும்படி என்? என்னும் ஆக்ஷேபத்தை அநுவதித்துப் பரிஹரிக்கிறார் 'பிராட்டிமார்' என்று தொடங்கி.

"அநந்யார்ஹசேஷத்வத்தாலும் அநந்ய சரணத்வத்தாலும், அந்வயத்தில் தரித்து வியதிரேகத்தில் தரியாதொழிகையாலும், ததேகபோகராகையாலும், அவன் நிர்வாஹகனாக இத்தலை நிர்வாஹ்யமாகையாலும், பிராட்டிமார் தசை உண்டாகத் தட்டில்லை. ஆனால், பிராட்டி தானாகப் பேசுவான் என்? என்னில், தாமரை திருவடிகட்குப் போலியாக இருக்க, 'வையங்கொண்ட தடம் தாமரை' என்று தாமரையாகவே திருவடிகளைப் பேசுகிறாப்போலே, இங்கும் பிராட்டியாகப் பேசுகிறது; முற்றுவமை இருக்கிறபடி" என்பது நம்பிள்ளை ஈடு.

சரணத்வத்தாலும், அந்வயத்தில் தரித்தும் வியதிரேதத்தில் தரியாமையாலும், ததேக போகராகையாலும், ததேக நிர்வாஹ்யராகையாலும் பிராட்டி தானுகப் பேசுகை "வையங்கொண்ட தடந்தாமரை" என்கிறபடியே முற்றுவமையாலே. [1] இராஜரிஷி பிரஹ்மரிஷியான பின்பு க்ஷத்ரியத்துவம் பின்னூட்டிற்றில்லை; அதுபோலே இவர்க்கு பும்ஸ்த்வம் பின்னூட்டாது. [2] இவர்க்கு ஸ்த்ரீத்வம் கூடினபடி என்? எதிர்த்தலையில் பும்ஸ்த்வத்தை அழித்துப் பெண்ணுடை யுடுத்தும்படியிறே அவனுடைய புருஷோத்தமத்வம் இருப்பது. "பாஞ்சால்யா:" என்று பிராக்ருத சரீரம் அவஸ்தாந்தரத்தை உண்டாக்கினுல் [3] "பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்கிற அப்ராக்ருதமான வடிவு அழிக்கச் சொல்ல வேண்டாவிறே. [4] "ஸ்த்ரீ ப்ராயம்", [5] "ஸ்வாமித்வாத்மத்வ" இத்யாதி.

---

1. ஆயினும், இவர் ஆடவர் ஆகையாலே ஆண் தன்மை பின் வாராதோ! என்ன, 'இராஜரிஷி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார். இராஜரிஷி - விஸ்வாமித்திர முனிவர்.

2. நன்று; இவர்க்குப் பெண் தன்மை சித்தமானுலன்றோ அவற்றிலே விசேஷமான பிராட்டி தசை கூடுவது? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'இவர்க்கு' என்று தொடங்கி.

பாஞ்சால்யா: பத்மபத்ராக்ஷ்யா: ஸ்நாயந்த்யா: ஜகனம்கனம்
யாஸ் ஸ்த்ரியோ த்ருஷ்டவத்யஸ்தா: பும்பாவம் மநஸாயயு:

என்பது: பாரதம். பாஞ்சால தேசத்து அரசன் புத்திரியும் தாமரை போன்ற கண்களை யுடையவளுமான திரௌபதி நீராடுகின்ற காலத்தில் அவளுடைய உறுப்புக்களைக் கண்ட பெண்கள் மனத்தாலே ஆண் தன்மையை அடைந்தார்கள் என்பது இதன் பிண்டப் பொருள்.

3. ஆடவர்களுடைய கண்களையும் மனத்தினையும் கவர்கின்ற - ஸ்ரீராம பிரான் என்பது.

4. ஸ ஏவ வாஸுதேவோ ஸௌ ஸாக்ஷாத் புருஷ உச்யதே
ஸ்த்ரீ ப்ராயம் இதரத் ஸர்வம் ஜகத் ப்ரம்ஹ புரஸ்ஸரம்.

வாசுதேவன் ஒருவனே புருஷன் ஆவான்! இந்த உலகத்திலுள்ள மற்ற எல்லாப் பொருள்களும் அவனுக்கு முன்னே பெண்களுக்குச் சமம் என்பது இதன் பொருள்.

5. ஸ்வாமித்வ ஆத்மத்வ ஶேஷித்வ பும்ஸ்த்வாத்யா: ஸ்வாமிநோகுணா:
ஸ்வேப்யோ தாஸத்வ காயத்வ ஶேஷத்வ ஸ்த்ரீத்வ தாயின:.

இறைவன் ஸ்வாமியாயும், ஆத்மாவாயும், சேஷியாயும், புருஷோத்தமனுயும் இருக்கும் தன்மையால், உயிர்கள் தாசனும் தன்மையையும் சரீரமாகும் தன்மையையும் சேஷமாகும் தன்மையையும் பெண்ணும் தன்மையையும் அடைகிறார்கள் என்பது இதன் பொருள்.

[1] பிரிந்தார் இரங்குவது நெய்தல் நிலத்திலே யாகையாலே பிராட்டி தானும் தன் பரிகரமுமாக லீலோத்யானத்தில் புறப்பட்டாளாய்த் தோழிமார் பூக்கொய்கையிலே அந்யபரைகளாக, நாயகனும் தன்னேராயிரம் பிள்ளைகளும் தானுமாக வேட்டைக்காகப் புறப்பட்டுவர ஏவுண்ட மிருகம் இவனை இந்த உத்யானத்திலே தனியே கொடுவந்து மூட்டி, அது மறைய, தைவ யோகத்தாலே இருவர்க்கும் சம்ச்லேஷம் பிரவ்ருத்தமாய், தைவம் பிரிக்கப் பிரிந்து, இரண்டு தலையையும் அழித்தாகிலும் கிட்டவேணுமென்னும் ஆற்றாமை பிறந்து, தம் பரிசரத்தில் உள்ளார் [2]"எம்மின் முன் அவனுக்கு மாய்வர்" என்கிறபடியே தளர்ந்து, கால்நடை தந்து போவார் இல்லாமையாலே பரிசரத்திலே வர்த்திக்கிற திரியக்குகளை இவை வார்த்தை சொல்லமாட்டா என்றும் அறியாதே, பக்ஷபாதம் பற்றாசாக, இராவணன் மாயையால் வரும் அதிசங்கையும் இல்லாமையாலே கண்ணால் கண்டவற்றைப் பார்த்து, [3]அவன் தன் மேன்மையாலே இத் தலையில் தண்மையைப் பாராதே கலந்து, பின்பு தோஷ தரிசனம் பண்ணி அநாதரித்தான்; தோஷ தரிசனம் பண்ணுமளவே யன்று, தமக்கு [4]அபராதஸஹத்வம் என்றொரு குணமுண்டு; அத்தை அறிவிக்க வரும் என்று அந்த அபராத சஹத்வம் பற்றாசாகத் தூது விடுகிறாள். [5]சக்கரவர்த்தித் திருமகன் அவதரித்த பின்பு வானர ஜாதி வீறு பெற்றாற் போலே ஆழ்வார் திருவவதரித்த பின்பு திரியக் ஜாதி வீறு பெற்றது என்று பட்டர்.

———(0)———

1. அந்தப்புரத்தில் இருக்கும் இப் பெண்ணிற்குத் தூது விடுதற்கு அங்குப் பறவைகள் உண்டோ ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிரிந்தார்' என்று தொடங்கி.

2. 'எம்மின் முன்' என்பது, திருவாய்மொழி, 9. 9 : 5.

3. தூது விடுகைக்குப் பற்றாசுதான் யாது ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் தன்' என்று தொடங்கி.

4. 'அபராத ஸஹத்வம்' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்னும் திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி.

5. "சக்கரவர்த்தித் திருமகன் திருவவதரித்த பின்பு வானரசாதி வீறு பெற்றாற்போலே காணும், ஆழ்வார்கள் திருவவதரித்துத் திர்யக்சாதி வீறு பெற்றபடி என்று பட்டர் அருளிச்செய்வர்" என்பது நம்பிள்ளை ஈடு.

ஐந்தாந் திருவாய்மொழி (5)

"வளவேழுலகு"

பிரவேச சங்கி:—[1] சர்வஸ்மாத்பரன் ஆகையாலே ஆச்ரயிப்பார்க்கு ஒரு குறையில்லை என்றார்; அந்த ஆச்ரயணம் தான் புருஷோத்தமனை ஆச்ரயிக்கிறதாகையாலே பலவியாப்தம் என்றார்; பஜிப்பார்க்குத் தான் அவதரித்துச் சுலபனாகையாலே பஜிக்கத் தட்டில்லை என்றார்; அபராத சஹன் என்றார்; அயோக்யதானுசந்தானம் பண்ணி அகலுவாரையும் தன் செல்லாமையைக் காட்டிப் பொருந்த விட்டுக் கொள்ளும் சீலவான் என்கிறார் இதில். [2] தூது விட்டது பிரேம காரியம், அகலப் பார்க்கிறது ஜ்ஞான காரியம். [3] தூதப் பிரேஷண வியாஜத்தாலே தம்முடைய ஆற்றாமை யறிவித்த அனந்தரம் 'இவரை இங்ஙனே [4]நோவுபட விட்டோமாகாதே' என்று பிற்பாட்டுக்கு நொந்து, ஆனைக்கு உதவ வந்து தோற்றினாற் போலே அரைகுலையத் தலைகுலைய வந்து தோற்ற, [5] அவன் வைலக்ஷண்யத்தையும் தம் ஸ்வரூபத்தையும் கண்டு,

---

1. முதல் திருவாய்மொழி தொடங்கி இயைபு அருளிச்செய்கிறார் 'சர்வஸ்மாத்பரன்' என்று தொடங்கி. 'ஒரு குறை இல்லை' என்றது, முதல் திருவாய்மொழியில் "தொழுது எழு என் மனனே" என்றதில் "எழு" என்ற பதத்திலே நோக்கு. இரண்டாம் திருவாய்மொழியில் "பற்றிலன் ஈசனும் முற்றவும்" என்றதனை நோக்கிப் 'புருஷோத்தமனை' என்றும், "ஆக்கை விடும்பொழுது எண்ணே" என்றதனை நோக்கிப் 'பலவியாப்தம்" என்றும் அருளிச்செய்கிறார். 'பஜிக்கத்தட்டு இல்லை' என்றது, மூன்றாம் திருவாய்மொழியில். 'அபராதசகன்' என்றது, நான்காம் திருவாய்மொழியில் "என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்றதனை நோக்கி. 'சீலவான் என்கிறார் இதில்' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "திசைகள் எல்லாம் திருவடியால் தாயோன்" என்றதனை நோக்கி.

2. மேல் திருவாய்மொழியில் மிக்க காதலையுடையவராய்த் தூது விட்டவர் இப்போது அகலுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தூதுவிட்டது' என்று தொடங்கி.

3. மேலே சுருங்கக் கூறிய இயைபினை விரித்து அருளிச்செய்கிறார் 'தூதப்பிரேஷணவியாஜத்தாலே' என்று தொடங்கி.

4 'நோவுபடவிட்டோமாகாதே' என்று தொடங்கும் வாக்கியத்திற்கு நோக்கு, இத் திருவாய்மொழியில் வருகின்ற "அளவியன்ற ஏழுலகத்தவர்" என்ற திருப்பாசுரம்.

5. "வானோர் இறையை அருவினையேன்" என்ற திருப்பாசுரப் பகுதியை நோக்கி 'அவன் வைலக்ஷண்யத்தையும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

தார்மிகர் வைத்த தண்ணீர்ப் பந்தலை அழிப்பாரைப் போலேயும் ஊருணியிலே கள்ளியை வெட்டி எறிவாரைப் போலேயும் அமிருதத்தில் நஞ்சைக் கலப்பாரைப் போலேயும் நித்யசூரிகளுக்கு அநுபாவ்யமான வஸ்துவை நாம் புக்கு அழிக்கையாவது என் என்று அகன்றார். அகன்றால் ஜீவிக்க வல்லரோ? என்னில், அகன்றால் முடியுமத்தனை. [1]சேஷிக்கு அதிசயத்தை விளைக்கத் தேடுவார் தந்தாம் விநாசம் பாரார்களிறே. [2]பெருமாளுக்கும் தேவ தூதனுக்கும் மந்திரம் பிரவிருத்தமாக, தூர்வாசன் என்னை உள்ளே புகவிட வேணும் என்ன, இவனைத் தகைந்து பெருமாளுக்கு அவத்யத்தை விளைப்பதில் நாம் அகன்று முடிய அமையும் என்று பார்த்து அவனைப் புகவிட்டு, [3]"யதி ப்ரீதி: மஹாராஜ" என்று விடைகொண்டார் இளைய பெருமாள்; [4]"நகல் வத்யைவ" என்று ஜீவிக்கையாகிற விநாசத்தை இசைந்தாள் பிராட்டி; அப்படியே இவரும் [5]அகலப்புக, ஆழ்வீர் நீர் நமக்கு அவத்யம் வரும் என்றன்றே அகலப் பார்ப்பது; நீர் அகலவே நாம் அதிக்ருதாதிகாரமாய் நமக்கு ஆள் பற்றாது; இப்படித் தண்ணியராக

1. நன்று, இப்படித் தமக்கு அழிவினைத் தாமே தேடிக் கொள்வார் உளரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சேஷிக்கு' என்று தொடங்கி.

2. இதற்கு அநுஷ்டானம் காட்டுகிறார் 'பெருமாளுக்கும்' என்று தொடங்கி. பெருமாள் - ஸ்ரீராமபிரான். தேவதூதன் - பிரமனுடைய தூதனான யமன்.

3, யதி ப்ரீதிர் மஹாராஜ யதி அநுக்ராஹ்யதா மயி
ஜஹி மாம் நிர்விஸங்க: த்வம் ப்ரதிஜ்ஞாம் அநுபாலய:

என்பது, ஸ்ரீராமா. உத்தர. 106 : 4. மஹாராஜனே! என்னிடத்தில் தம்பி என்ற அருள் இருக்குமாகில், அடியவன் என்னும் எண்ணத்தால் அருள் செய்யத்தக்க தன்மை இருக்குமாகில், யாதொரு சங்கையும் இல்லாமல் என்னை விட்டுவிடும்; செய்த சூளுறவைக் காப்பாற்றும் என்பது இதன் பொருள்.

4. நகல் வத்யைவ ஸௌமித்ரே ஜீவிதம் ஜாஹ்நவீஜலே
த்ய ஜேயம் ராகவம் வம்ஸே பர்த்து: மா பரிஹாஸ்யதி.

என்பது, ஸ்ரீராமா. உத்தர. 48 : 8. இலக்குமணரே! என் நாயகரான இராமபிரானுடைய வம்சத்தில் சந்தானம் இல்லாமல் இருக்க ஒண்ணாது என்று எண்ணி என்னுயிரை இக்கங்கையில் இப்பொழுதே விடாமல் இருக்கிறேன் என்பது இதன் பொருள். என்றது, நான் உயிரை விட்டால் பெருமாளை உலகம் பழிக்கும்; பெருமாளுக்குப் பழியினை உண்டுபண்ணலாகாது என்று நான் பிழைத்திருக்கிறேன் என்றபடி. இங்குப் பிழைத்திருத்தல் பிராட்டிக்கு அழிவு.

5. இத் திருவாய்மொழியில் வருகின்ற "அடியேன் சிறிய ஞானத்தன்" என்ற திருப்பாசுரத்தை நோக்கி 'அகலம் புக' என்கிறார்.

நினைத்திருக்கிற நீர் நம்மைக் கிட்டவே சர்வாதிகாரம் என்று தோற்றும்; ஆனபின்பு, நீர் அகலுமது காணும் நமக்கு அத்வயம்; நமக்கு ஆகாதார் இல்லை என்னுமிடம் பண்டே அடிபட்டுக் காணும் கிடப்பது என்று “திருவடியால் தாயோன்” என்று ‘குணாகுண நிரூபணம் பண்ணாதே எல்லார் தலையிலும் காலை வைத்தோம் கண்டீரே’ என்று திருவுலகு அளந்த சௌலப்யத்தைக் காட்ட, இவரும் ‘ஆகில், கிட்டுவோம்’ என்று பாரா, ‘ஒரு குணாதிக்யமேயோ வேண்டுவது?’ [1] “ஸதி தர்மிணி” என்கிறபடியே நம்மால் வரும் குணமும் அவனுக்கு வேண்டா என்று அகலப்புக, உம்மால் வரும் குணாதிக்யத்தை யன்றோ வேண்டாதது? உம்மால் வரும் நான் வேண்டுமோ? வேண்டாவோ? நீர் அயோக்யர் என்று அகலுமதிலும் சம்ஸ்லேஷிக்கிறது திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி நமக்குத் தாரகம் காணும்; நீர் அகலில் திருவாய்ப்பாடியில் வெண்ணெய் விலக்கினார் புக்கலோகம் புகுவீர்; நீர் அகலுமது நமக்கு சத்தாஹாநி என்று [2] “மித்ர பாவேன” என்று அவன் பக்கல் உள்ளது போட்கனாகவுமாம்; நாம் அவனை விடில் உளோமாகோம் என்று சேர்த்துக் கொண்டாற் போலவும், ‘பந்துவதம் பண்ணி ஜீவியேன்’ என்ற அருச்சுனனைக் [3] “கரிஷ்யே வசனம் தவ” என்னப் பண்ணினாற் போலவும் சம்ச்லேஷித்துத் தலைக் கட்டினான் என்கிறார்.

—:—

1. ஸதி தர்மிணி தர்மாஸசிந் - தர்மி - பொருள் இருந்தால் தர்மங்கள் - குணங்கள் ஆராயப்படுகின்றன.

2. ஆழ்வாரை இசைவித்தமைக்கு இரண்டு திருஷ்டாந்தம் காட்டுகிறார், ‘மித்ரபாவேந’ என்று தொடங்கியும், ‘கரிஷ்யே வசனம் தவ’ என்று தொடங்கியும்.

மித்ர பாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத் அகர்ஹிதம்.

என்பது, ஸ்ரீராமா. யுத். 18 : 3. மித்திரபாவத்தோடு வந்த இவனை எவ்வகையிலும் விடமாட்டேன்; அவனுக்குக் குற்றம் இருந்தாலும் இருக்கட்டும்; இந்த விபீஷண அங்கீகாரம் பெரியவர்களால் நிந்திக்கப்படமாட்டாது என்பது இதன் பொருள்.

“ஸ்திதோஸ்மி நதஸந்தேஹஃ கரிஷ்யே வசநம் தவ”

என்பது பகவத் கீதை, 18 : 73. சந்தேகங்களும் நீங்கி நிலைபெற்றவனாக இருக்கிறேன்; போர்புரிய வேண்டும் என்னும் உன்னுடைய வார்த்தையை இப்போதே நிறைவேற்றுகிறேன் என்பது இதன் பொருள்.

3. இத் திருவாய்மொழியில் வருகின்ற “சார்ந்த இருவல்வினைகளும்” என்ற திருப்பாசுரத்தை உட்கொண்டு ‘சம்ஸ்லேஷித்துத் தலைக் கட்டினான்’ என்கிறார்.

ஆரூந் திருவாய்மொழி (6)

— :: —

"பரிவதில் ஈசனே"

[1]கீழில் அயோக்யன் என்று அகன்ற இவரைப் பொருந்த விட்ட இதுக்குப் பிரயோஜனம் பரிமாற்றமிறே. [2]க்ஷுத்ரனாய், க்ஷுத்ர உபகரணனாய் இருக்கிற இவன் நேர்கொடு நேர் ஆச்ரயித்துத் தலைக்கட்ட வொண்ணாதபடி [3]"மதுவார் தண்ணந் துழாயான்" என்று அவாப்த சமஸ்த காமனாகையாலும் இவன் இட்டது கொண்டு திருப்தனாக வேண்டாதபடி பூர்ணன் ஆகையாலும் இவ்விரண்டுக்கும் அடியாக [4]ச்ரிபதியாய் இருக்கையாலும் ஆச்ரயிக்கை என்று பொருள் இல்லையீ! என்ன, [5]இப்படிகள் அடைய ஆச்ரயணத்துக் குறுப்பு; இவன் தன் ஸ்வரூப லாபத்துக்கு உறுப்பாகக் கிஞ்சித்கரிக்குமதனைத் தன் பேறாக நினைத்திருக்கும்; [6]இதுக்கு மேல்பட வேறொன்று தேட

---

1. "முதல் திருவாய்மொழியிலே, அவன் சர்வஸ்மாத்பரனாய் இருக்கிற படியைத் தாம் அநுபவித்தார், இரண்டாந் திருவாய்மொழியிலே, இப்படிப் பரனானவனைப் பஜியுங்கோள் என்கிறார்; அநந்தரம், பஜநத்துக்கு உறுப்பாக அவனுடைய சௌலப்யத்தை அருளிச்செய்தார்; அதுக்கு உறுப்பாக அவனுடைய அபராத சகத்வத்தை அருளிச்செய்தார்; அதுக்கு உறுப்பாகச் சீலவான் என்றார்; இவை எல்லாம் உண்டானாலும் பசை இல்லையீறே, பரிமாற்றத்திலே அருமை தட்டிருக்குமாகில்; அது வேண்டா ஸ்வாராதன் என்றார் கீழில் திருவாய்மொழியிலே; அயோக்யன் என்று அகன்ற இவரைப் பொருந்த விட்டுக் கொண்ட இதுக்கு ஒரு பிரயோஜனம் கண்டிலோமீ! பொருந்த விட்டுக் கொள்கிறதுதான் ஒரு பரிமாற்றத்துக்கிறே" என்பது நம்பிள்ளை ஈடு.

2. மேல் திருவாய்மொழியில், இவன் தன்மையாலே ஆச்ரயணம் கூடாது என்று சொல்லி, அவன் தன்மையாலும் ஆச்ரயிக்க முடியாது என்று சங்கிக்கிறார் 'க்ஷுத்ரனாய்' என்று தொடங்கி.

3. "மதுவார் தண்ணம் துழாயான், முதுவேத முதல்வனுக்கு" என்பது, இத் திருவாய்மொழியில் இரண்டாவது திருப்பாசுரம். இங்கு, 'மதுவார் தண்ணந் துழாயான்' என்பதனால் அவாப்த சகஸ்தகாமத்வமும், 'முதுவேத முதல்வன்' என்பதனால் பரிபூர்ணத்வமும் தோன்றுகிறது.

4. இத் திருவாய்மொழியில் வருகின்ற "திருமகளார் தனிக் கேள்வன்" என்ற திருப்பாசுரத்தை நோக்கி 'ஸ்ரீயப்பதியாய்' என்கிறார்.

5. 'இப் படிகள் அடைய' என்றது, மேற்கூறிய அவாப்த சமஸ்த காமத்வம், பரிபூர்ணத்வம், ஸ்ரீரிய:பதித்வங்களை.

6. இதுக்கு - கிஞ்சித்காரத்துக்கு; அடிமை செய்வதற்கு.

வேண்டாதபடி எல்லாம் கைப்புகுந்திருப்பான் ஒருவன் ஆகை யாலும், இவன் இட்டது கொண்டு திருப்தனாக வேண்டாதபடி பரிபூர்ணனாய் இருக்கையாலே இவன் பக்கல் பெற்றது கொண்டு முகங் காட்டுகைக்கு உடலாயிருக்கையாலும், [1]ச்ரிய: பதியாகையாலே ஸுசீலனாகையாலும் இதர சமாச்ரயணம் போல் [2]அருமைப் பட்டிராது. [3]"வழி நின்ற வல்வினை"யென்று இதில் இழியவே விரோதிகள் அடைய நசிக்கும்; "அமுதிலு மாற்ற" என்று ஆச்ரயணம் போக ரூபமாயிருக்கும்; "புகை பூவே" என்று வருந்தி ஒன்று தேடவேண்டாதே பெற்றது அமையும்; பகவத் சமாச்ரயணமாகையாலே [4]பிரத்யவாய பிர ஸங்கமில்லை; [5]திரவிய கால அதிகாரி நியதியில்லை; ஆகை யாலே ஸ்வாராதனன் என்கிறார். [6]"த்வதங்க்ரிம்", "பத்ரம்", "யா: க்ரியா:".

———0———

1. 'ச்ரிய: பதியாகையாலே' என்றது, அவளுடைய சம்பந்தம் அவளுடைய குழந்தைகளிடத்தில் வைக்கும் சௌசீல்யத்துக்குக் காரணம் என்றபடி.

2. "புரிவதுவும் புகை பூவே" என்றதனை நோக்கி 'அருமைப்பட் டிராது' என்கிறார்.

3. இது, இத் திருவாய்மொழியில் எட்டாம் திருப்பாசுரம்.

4. 'பிரத்யவாய பிரசங்கமில்லை' என்றது, பகவானைப் பற்றுகிற பற்று ஆகையாலே வணங்கு முறைகளில் சிறிது பிறழினும் கேடு வருவதற்கு இடன் இல்லை என்றபடி.

5. இத் திருவாய்மொழியில் வருகின்ற முதல் இரண்டு திருப்பாசுரங் களை நோக்கித் 'திரவிய அதிகாரி நியதி இல்லை' என்கிறார்.

6. இறைவனை அடைதல் எளிது என்பதற்குக் காட்டப்படும் வேறு பிரமாணங்கள்: 'த்வதங்க்ரிம்' என்பதும், 'பத்ரம்' என்பதும், 'யா: க்ரியா:' என்பதும்.

த்வதங்க்ரி முத்திச்ய கதாபி கேநசித்
யதா ததா வாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி:
ததைவ முஷ்ணாதி அசுபாநி அசேஷத:
சுபாநி புஷ்ணாதி நஜாது ஹீயதே.

என்பது, தோத்திர ரத்நம், 28.

உன் திருவடியைக் குறித்து எப்பொழுதாவது எவனாவது எவ்வித மாகவாவது ஒருமுறை செய்யப்பட்ட அஞ்சலியானது அப்பொழுதே பாவங் களை அடியோடு போக்கிவிடுகின்றது; நன்மைகளை வளரச் செய்கிறது; ஒருபோதும் குறை இல்லை என்பது இதன் பொருள்.

பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோமே பக்த்யா ப்ரயச்சதி
ததஹம் பக்த்யுபஹ்ருதம் அஸ்நாமி ப்ரயதாத்மந:

என்பது, பகவத் கீதை, 9 : 26.

பச்சிலை மலர் பழம் தண்ணீர் ஆகிய இவற்றை எவன் ஒருவன் என் பொருட்டு பக்தியோடு நிவேதனம் செய்கிறானோ, தூய மனத்தை யுடைய

ஏழாந் திருவாய்மொழி (7)

—:—

" பிறவித் துயர் "

ப்ரவேச சங்கி :— கீழ் ஸ்வாராதனன் என்றார்; அதில் சொன்ன ஆச்ரயணம்தான் [1]போகரூபமாயிருக்கும் என்கிறார் இதில். [2]இதுக்கு இட்டுப் பிறவாத சர்வேச்வரனும் ஆசைப் படும்படியிறே இது இருப்பது. [3]அச்ரத்த தாநா: புருஷா: - விச்வாச பூர்வக த்வரா ரஹிதர். "அஸ்ய தர்மஸ்ய" என் கிறான் தனக்கும் இனிதாயிருக்கையாலே. பரந்தப - விரோதி வர்க்கத்தை உதர வல்லாய் நீ யன்றோ. அப்ராப்ய மாம் நிவர்த் தந்தே - செய்த குற்றங்களடையப் பொறுத்துத் தங்களை நல் வழி போக்கும் என்னை விட்டு, விநாசத்தை விளைப்பதான சம் ஸாரத்தை விரும்பி அவ்வழியே போவர்கள். [4]இதுதான் இருந் தபடி பாராய் என்கிறான். [5]'ப்ரத்யக்ஷா வகமம்' - [6]'நமாம்ஸ

அவனாலே பக்தியோடு கொடுக்கப்பட்ட அதனை நான் உண்கிறேன் என்பது இதன் பொருள்.

யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யு: ஏகாந்த கதபுத்தய:
தாஸ் ஸர்வாஸ் ஸிரஸா தேவ: ப்ரதி க்ருஷ்ணாதி வைஸ்வயம்.

என்பது, மோக்ஷதர்மம், 171 : 63.

அவனையல்லது வேறு ஒன்றில் செல்லாத மனத்தை யுடையவர்களாலே எந்தக் காரியங்கள் நல்ல மனத்துடன் செய்யப்படுகின்றனவோ, அவற்றை எல்லாம், காவாலே கொள்ளப் பிறந்த இறைவன், தானாகவே தன் தலையாலே ஏற்றுக் கொள்ளுகிறான் என்பது இதன் பொருள்.

1. இத் திருவாய்மொழியில் வருகின்ற "தூய அமுதை" என்ற திருப் பாசுரப் பகுதியை நோக்கிப் 'போகரூபமாய் இருக்கும் என்கிறார் இதில்' என்கிறார்.

2. போக ரூபத்தின் முடிவின் எல்லையைக் காட்டுகிறார் 'இதுக்கு இட்டுப் பிறவாத' என்று தொடங்கி.

3. அவனும் ஆசைப்படும்படி போகரூபமாய் இருக்குமென்னுமதனை ஸ்ரீ கீதையில் அருளிச்செய்த வார்த்தை மூலமாக விவரிக்கிறார் 'அச்ரத்த தாநா:' என்று தொடங்கி.

அச்ரத்த தாநா: புருஷா: தர்மஸ்ய அஸ்ய பரந்தப
அப்ராப்யமாம் நிவர்த்தந்தே ம்ருத்யு ஸம்சார வர்த்மநி.

என்பது, பகவத்கீதை. 9 : 3. இதற்குப் பொருள் மேலே கூறப்பட்டிருக்கிறது.

4. 'இதுதான்' என்றது, "அஸ்யதர்மஸ்ய" என்று மேலே கூறிய தனைச் சுட்டுகிறது.

5. ராஜ வித்யா ராஜகுஹ்யம் பவித்ரமிதம் உத்தமம்
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்த்தும் அவ்யயம்.

என்பது, பகவத்கீதை, 9 : 2.

இதற்குப் பொருள் மேலே கூறப்பட்டிருக்கிறது.

6. ந மாம்ஸ சக்ஷுஷா: அபிவீக்ஷதே தம் - ஊனக் கண்களையுடையவன் அவனைப் பார்க்கிறான் இல்லை.

சக்ஷுஃ' என்கிற நான் பிரத்யக்ஷ பூதனானவன். தர்ம்யம் - நம்மைக் காண்கை ஒரு தலையானால் அதர்மமானாலும் மேல் விழ வேணும்; இது அங்ஙன் அன்று; ஸுசுகம் கர்த்தும் - ஸ்மர்த்தவ்ய விஷய சாரஸ்யத்தாலே [1] தானும் போகரூபமாயிருக்கும். அவ்யயம் - கோலின பலங்களைக் கொடுக்கச் செய்தேயும் ஒன்றும் செய்யப் பெறாதாரைப் போலே [2]"ருணம் ப்ரவ்ருத்தம்" என்று நெஞ்சிலே கிடக்கையாலே தான் முதல் அழியாதே கிடக்கும். [3]மோக்ஷ தசையிலும் அனுபவம் இனிதாகிறதும் அவனைப் பற்றி வருகையாலேயிறே. அப்படியே ஆச்ரயணமும் அவனைப் பற்றி வருகையாலே சாதன சமயமே பிடித்து இனிதாய் இருக்கும் என்கிறார்.

———(o)———

எட்டாந் திருவாய்மொழி (8)

———o———

"ஓடும் புள்ளேறி"

பிரவேச சங்கி:—[4]நிரதிசய போக்யன் என்றார் கீழ். இதில் அவனுடைய [5]ஆர்ஜவ குணம் சொல்லுகிறது. இப்படி நிரதி

1. தானும் - அந்த ஆஶ்ரயணம் தானும்

2. கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணாமாம் தூரவாஸிநம்
ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாத் நாப ஸர்பதி.

என்பது, பாரதம் உத்யோ. 58 : 22. திரௌபதியானவள் நீண்ட தூரத்தில் இருக்கிற என்னைக் கோவிந்தா என்று கூப்பிட்டு அழுதாள் என்பது யாதொன்று உண்டு; அது, வட்டிக்கு வட்டி ஏறின கடன் போலே என்னுடைய மனத்தினின்றும் நீங்கவில்லை என்பது பொருள்.

3. இனியதாக இருப்பது அநுபவதசையில் அன்றோ, ஆஶ்ரயண தசையில் இனியதாக இருத்தல் ஒண்ணுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மோக்ஷதசையிலும்' என்று தொடங்கி.

4. மேல் திருவாய்மொழியில் எல்லை இல்லாத இனியன் என்றார்; அப்படி இனியனான தன்னை அநுபவிப்பிக்கும்போது அநுபவிக்கின்றவர்கள் அளவிலே தன்னை அமைத்து அநுபவிப்பான் என்கிறார் இத் திருவாய்மொழியில் என்பது இயைபு. அனுபவிக்கின்றவர்கள் அளவிலே தன்னை அமைத்து அனுபவிப்பிக்கும் குணத்திற்குத்தான் ஆர்ஜவ குணம் என்று பெயர். இந்த ஆர்ஜவ குணத்தை விளக்குவதுதான் 'இப்படி' என்று தொடங்கும் வாக்கியம்.

5. இத் திருவாய்மொழியில் வருகின்ற "புள்ளேறி ஓடும்", "தண் துழாய் சூடும்", "நீர்புரை வண்ணன்" என்ற திருப்பாசுரப் பகுதிகளை நோக்கி ஆர்ஜவகுணம் சொல்லுகிறது என்கிறார்.

சய போக்யனை தன்னை அனுபவிப்பிக்குமிடத்தில் நீர் ஏறு மேடுகளிலே விரகாலே நீர் ஏற்றுமாறு போலே, நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்டிராதே பல வகைப்பட்ட சேதநரோடு தான் பரிமாறுமிடத்தில், அவர்கள் போன வழியே தனக்கு வழியாம்படி தன்னை அவர்களுக்குப் பாங்காக அமைக்கை. "நீர் புரைவண்ண"னிறே. [1] "குணவான்" என்று சௌசீல்ய குணம் சொல்லச் செய்தே "ருஜு:" என்று ஆர்ஜவத்தைப் பிரிய அருளிச்செய்தாரிறே. சௌசீல்யமாவது இப்படித் தன்னைத் தாழவிட்டால், 'சிறியாரளவில் நம்மைத் தாழவிட்டோமே! என்று தன் திருவுள்ளத்திலுமின்றிக்கே யிருக்கை என்று [2]பட்டர். "கண்ணுவான்", "ஓடும்புள்","சீர் கற்பன்" இத்யாதியைப் பற்ற [3]ஈச்வரத்வமும், தல்லக்ஷணமும், பாடுகையும் சொல்லுகிற தென்பாருமுண்டு.

———o———

1. "வளவேழ் உலகின்" என்ற திருப்பதிகத்தில் சௌசீல்ய குணத்தை அருளிச்செய்தார்; இத் திருவாய்மொழியில் ஆர்ஜவகுணத்தை அருளிச்செய்கிறார்; இவ்விரண்டிற்கும் வேற்றுமை உண்டோ? என்ன, உண்டு என்பதற்கு ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸ்ரீ சூக்தியினின்றும் மேற்கோள் காட்டுகிறார் 'குணவான்' என்று தொடங்கி. 'அருளிச்செய்தாரிறே' என்றது, ஸ்ரீ ஆளவந்தாரை.

"வசீ வதாந்ய: குணவாந் ருஜு: சுசி:
ம்ருது: தயாளு: மதுர: ஸ்திர: ஸம:
க்ருதீ க்ருதஜ்ஞஸ்த்வமஸி ஸ்வபாவத:
ஸமஸ்த கல்யாண குணாம்ருதோ ததி:

என்பது, தோத்திர ரத்நம், 18.

2. 'பட்டர்' என்றது, இத் திருவாய்மொழியானது ஆர்ஜவ குணத்தை அருளிச்செய்கிறது என்று பட்டர் அருளிச் செய்வர் என்றபடி.

3. இத் திருவாய்மொழில் வருகின்ற "கண்ணுவான்" என்பன போன்ற திருப்பாசுரங்களை நோக்கி 'ஈச்வரத்வம்' என்றும், "ஓடும்புள்" என்பன போன்ற திருப்பாசுரங்களை நோக்கித் 'தல்லக்ஷணம்' என்றும், "சீற்கற்பன்" என்பனபோன்ற திருப்பாசுரங்களை நோக்கிப் 'பாடுகை' என்றும் கூறுகிறார். ஈச்வரத்வம் - இறைமைத் தன்மை. தல்லக்ஷணம் - அவனுடைய இலக்கணங்கள். "இத் திருவாய்மொழிதான், சர்வேச்வரனுடைய ஐச்வர்யத்தைச் சொல்லுகிறது என்பாருமுண்டு; அன்றிக்கே, ஈச்வரத்வ லக்ஷணம் சொல்லுகிறது என்பாருமுண்டு; அன்றிக்கே, 'பாடி இளைப்பிலம்' என்றார், அப்படியே பாடி அநுபவிக்கிறார் என்பாருமுண்டு. ஆர்ஜவகுணம் சொல்லுகிறது என்று பட்டர் அருளிச்செய்யும்படி" என்பது நம்பிள்ளை ஈடு.

ஒன்பதாம் திருவாய்மொழி (9)

"இவையும் அவையும்"

பிரவேச சங்கி :—[1]சர்வேச்வரனாய் ச்ரிய:பதியாய்ப் பரம ரசிகனாய் இருக்கிறவன் இவர் பக்தியிலே துவக்குண்டு இவரோடு ஏகரசனாய்க் கலக்க வேணும் என்று நினைத்து, [2]அர்ஜுனன் விபூதி சிரவணத்தாலே விபூதிமானை தன்னைக் காண வேணும் என்று அபேக்ஷிக்க "திவ்யம் ததாமி" என்று திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து வைச்வரூப்யத்தைக் காட்டினாற் போலே, இவர் தன்னை அனுபவிக்கைக் கீடான [3]விடாயைப் பிறப்பித்து "அருகலிலாய" என்கிறபடியே [4]நித்யவிபூதியில் உள்ளாரோடு பரிமாறும் பரிமாற்றம் எல்லாம் இவர் ஒருவருடனே பரிமாறுகிறானாய், அது தன்னைக் கடலை மடுத்தாற் போலன்றிக்கே, [5]பொறுக்கப் பொறுக்கப் பரிமாற, [6]ஸர்வாவயவங்களாலும் யதாமநோரதம் அனுபவிக்கிறார்.

—o—

1, இத் திருவாய்மொழியில் வருகின்ற "இவையும் அவையும்", "திருவின் மணாளன்", "சுவையன்" என்பன போன்றவைகளை நோக்கிச் 'சர்வேச்வரனாய் ச்ரிய:பதியாய்ப் பரமரசிகனாய்' என்கிறார்.

2. இத் திருவாய்மொழியில் செய்கிற சர்வாங்க சம்ஸ்லேஷத்தை மேல் திருவாய்மொழிகளிலே செய்யாமைக்குரிய காரணத்தைத் திருஷ்டாந்தத்தோடு கூறுகிறார் 'அர்ச்சுனன்' என்று தொடங்கி.

ந து மாம் ஶக்யஸே த்ருஷ்டும் அநேநைவ ஸ்வ சக்ஷுஷா
திவ்யம் ததாமி தே சக்ஷு: பஶ்யமே யோகமைஶ்வரம்.

என்பது, பகவத் கீதை, 11 : 8. அளவுக்குட்பட்ட பொருள்களைப் பார்க்கிற இந்த ஊனக் கண்களாலே உலகமே உருவகமாக இருக்கிற என்னைப் பார்ப்பதற்கு ஆற்றலையுடையன் அல்லை; உனக்கு ஞானக்கண்ணைக் கொடுக்கிறேன்; என்னுடைய விபூதி யோகத்தைப் பார் என்பது இதன் பொருள்.

3. விடாயைப் பிறப்பித்து - பக்திரூபாபந்ந ஞானத்தைத் தெளிவாக்கி.

4. 'நித்யவிபூதியில் உள்ளாரோடு பரிமாறும் பரிமாற்றமெல்லாம்' என்றது, பிராட்டிமாரோடு பரிமாறுவது, மஹிஷிகளான முறையாலே; திருவடியோடு பரிமாறுவது, வாஹநமான முறையாலே; திருவனந்தாழ்வானோடு பரிமாறுவது, படுக்கையான முறையாலே; இப்படி அவர்களோடு ஒரோ முறையாலே பரிமாறும் பரிமாற்றம் எல்லாம் என்றபடி.

5. "சூழல் உள்ளான்" என்று தொடங்கிச் சொன்னதற்குக் கருத்து, 'பொறுக்கப் பொறுக்க' என்றது.

6. "ஒக்கலையான்", "நெற்றியுளான்", "உச்சியுளான்" என்பன போன்றவைகளை நோக்கிச் 'சர்வாவயவங்களாலும்' என்கிறார்.

பத்தாந் திருவாய்மொழி (10)

"பொருமா நீள்படை"

பிரவேச சங்கி :—[1]கீழ்ப் பிறந்த சர்வாங்க சம்ச்லேஷத் தாலே பரீதராகிறார் என்று முன்புள்ளார். பட்டர் "உச்சி யுள்ளே நிற்கும்" என்ற இதுக்கு மேல்பட ஏற்றமில்லை யென்னும்படி பேறு கனத்திருந்தது; இதுக்கு ஈடாய் இருப்பதோர் நன்மை தம் தலையில் இல்லையாயிருந்தது; இத்தலையில் உண்டானாலும் அத்வேஷ ஆபிமுக்யமிறே. அது சாதனமாகாது; இத் தலையில் பரமபக்தி பர்யந்தமாகப் பிறந்தாலும் பேற்றின் கனத்தைப் பார்த்தால் இது ஒன்றாகத் தோற்றாது;[2]"வரவாறு ஒன்றில்லையால்". இவன் நல்வழி போகவேணும் என்று உபகரணங்களைக் கொடுத்து விடுகையாலே இந் நன்மைக்கும் அடி அவனாய் இருக்கும். இனி புத்த்யாதி சகல பதார்த்தங்களுக்கும் தானே நிர்வாஹகன் ஆகையாலே அத்வேஷம் தொடங்கி பரிகணனை நடுவாக, பரம பக்தி பர்யந்தமாகத் தானே பிறப்பித்து, நித்யசூரிகள் பெறும் பேற்றை நிர்ஹேதுகமாகத் தந்தான் என்று நிர்ஹேதுகத்வ அனுசந்தாந பூர்வகமாக [3]நிர்வ்ருதராகிறாரென்று.[4]

—: (o) :—

1. இத் திருவாய்மொழிக்கு இரண்டு வகையான நிர்வாகங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, முன்புள்ள முதலிகள் நிர்வாஹம். மற்றொன்று பட்டர் நிர்வாஹம். இத் திருவாய்மொழியில் வருகின்ற "கருமாணிக்கம் என் கண்ணுளதாகுமே" என்றதனை நோக்கி மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு அருளிச்செய்கின்றார்கள் முன்புள்ள முதலிகள். மேல் திருவாய்மொழியில் பிறந்த சர்வாங்க சம்ஸ்லேஷத்துக்கு இத் திருவாய்மொழியில் காரணம் யாதாயினும் கூறியதுண்டோ என்று பார்த்து, ஒரு காரணத்தையும் காணாமையாலே 'ஒருவித காரணமும் இல்லாமலே சர்வாங்க சம்ஸ்லேஷத்தை நமக்குக் கிருபை செய்தானே' என்று மகிழ்கிறார் என்று இயைபு அருளிச் செய்வர் பட்டர். பட்டர் நிர்வாகம், "ஓர் எண்தானும் இன்றியே" என்ற திருப்பாசுரத்திலே நோக்கு.

2. பெரிய திருவந்தாதி, 56.

3. 'நிர்வ்ருதர் ஆகிறார்' என்றது, "என் கண்ணுளதாகும்" "கண்டாயே நெஞ்சே" என்பன போன்ற திருப்பாசுரங்களை நோக்கி.

4. 'என்று' அருளிச்செய்வர் பட்டர் என முடிக்க.

இரண்டாம் பத்து

முதல் திருவாய்மொழி (11)

"வாயும் திரையுகளும்"

பிரவேச சங்கி :—[1] "மணியை வானவர் கண்ணனைத் தன்னதோரணியை" என்று ஸௌலப்யத்தையும் மேன்மையையும் வடிவழகையும் சொல்லிற்று. இவை ஓரொன்றே போருமிறே மேல் விழுகைக்கு; இம் மூன்றும் குறைவற்ற பகவத் விலக்ஷண விஷயமானல் அனுபவியாதிருக்கப் போகாதிறே; இவ்விஷயத்தை இப்போதே அனுபவிக்க வேணுமென்று பாஹ்ய ஸம்ச்லேஷ அபேக்ஷை பிறந்தது; பிறந்தபோதே அனுபவிக்கப் பெருமையாலே பிறந்த அவஸாத அதிசயத்தை, எம்பெருமானேடே கலந்து பிரிந்து நோவுபடுகிருள் ஒரு பிராட்டி ஆற்ருமை கைகொடுக்க லீலோத்யானத்திலே புறப்பட்டு, அங்கே வர்த்திக்கிற நாரை முதலானவற்றிற்கு வெளுத்திருக்கை முதலானவை நியத ஸ்வபாவம் என்று அறியாதே அவையுமெல்லாம் தம்மைப் போலே பகவத் அலாபத்தாலே நோவு படுகிறனவாகக் கொண்டு, [3] "ஸீதேம்ருத:" என்னுமா போலே துக்கிகளாய் இருப்பார் ஸமதுக்கிகள் கழுத்

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்கிருர் 'மணியை' என்று தொடங்கி. இது, மேல் திருவாய்மொழியில் பதினேராவது திருப்பாசுரம். "மணியை" என்றதனல் ஸௌலப்யம்; "வானவர் கண்ணனை" என்றதனல் மேன்மை; "தன்னதோர் அணியை" என்றதனல் வடிவழகு.

2. "நாரையாகில் வெளுத்திருக்கையும், அன்றிலாகில் வாயலகு நெகிழ்த்தவாறே கதறுகையும், கடலாகில் எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி கூப்பிடுகையும், காற்ருகில் சததகதியாய்த்திரிகையும், மேகமாகில் நீராய் இற்றிற்று விழுகையும், சந்திரனுகில் தேய்வது வளர்வதாகக் கடவது என்றும், தமஸ்ஸாகில் பதார்த்த தர்ஸனம் பண்ணவொட்டாதென்றும், கழியாகில் அலைவாய் முகமாய் ஏறுவது வடிவதாகக் கடிவது என்றும், விளக்காகில் இற்றிற்று எரியக்கடவது என்றும், இவற்றுக்கு இவை நியதஸ்வபாவம் என்றறியாதே, இவையெல்லாம் தம்மைப்போலே பகவத் விஸ்லேஷத்தாலே வியசநப்படுகிறனவாகக் கொண்டு, அவற்றுக்குமாகத் தாம் அநுசோகிக்கிருர்" என்பது நம்பிள்ளை ஈடு.

3. "ஸீதே ம்ருத: தேஶ்வஶுர: பித்ராஹீந: அஸி லக்ஷ்மண" என்பது. ஸ்ரீராமா, அயோத். 102 : 4. சீதையே! உன்னுடைய மாமனர் இறந்தார், இலக்குமண! நீ தமப்பன் இல்லாதவனக இருக்கிருய் என்பது இதன் பொருள்.

தைக் கட்டிக்கொண்டு ஆற்றாமைக்குப் போக்கு விட்டுத் தரிக்குமா போலே கண்ணால் கண்ட பதார்த்தங்களெல்லாவற்றோடும் நீ பட்டதோ நான் பட்டதோ என்று கூப்பிடுகிறார்.[1] "அபிவ்ருக்ஷா: பரிம்லாநா:"[2] "கபளாந் நாகா:" என்று சேதநாசேதந விபாகமற நோவு படுத்தவற்றாயிறே இவள் பிரிந்த விஷயந்தான் இருப்பது.

[3] இத் திருவாய்மொழியில் இவர்க்கு இளைய பெருமாளில் வியாவ்ருத்தி சொல்லுகிறது. அவர் மத்ஸ்யத்துக்கு ஜலம் தாரகமாக அறுதியிட்டார். இவர் அந்த மத்ஸ்யத்தோடு ஜலத்தோடு வாசியறப் பகவத் குணங்களே தாரகமென்கிறார்.

---

1. மக்களுக்கு அன்றோ இத்தகைய கலக்கம் வருவது; அஃறிணைப் பொருள்களுக்கு இத்தகைய கலக்கம் உண்டோ? என்ன, அதற்கு விடை கூறப்படுகின்றது 'அபிவ்ருக்ஷா:' என்று தொடங்கி.

2. விஷயேதே மஹாராஜ ராம வ்யஸந கர்ஸிதா
அபிவ்ருக்ஷா: பரிம்லாநா: ஸபுஷ்பாங்குர கோரகா:

என்பது, ஸ்ரீராமா. அயோத். 59: 4. சக்கரவர்த்தியே! உம்முடைய தேசத்தில் மரங்களும் ஸ்ரீராமபிரானுடைய பிரிவால் பீடிக்கப்பட்ட சோகத்தையுடையன வாய் மலர் மொட்டு இவைகளோடு மிகவும் வாடிக் கருகி உலர்ந்தன என்பது இதன் பொருள்.

3. வ்ய ஸ்ருஜந் கபளாந் நாகா: காவோ வத்ஸாந் நபாயயந்
புத்ரம் ப்ரதஜம் லப்த்வா ஜநநீ நாப்ய நந்தத.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 41 : 10. யானைகளும் உணவாகிய கவளங்களை உட்கொள்ளவில்லை; பசுக்களும் கன்றுகளுக்குப் பாலைக் கொடுக்கவில்லை; பெற்றெடுத்த தாய்மார்களும் தங்கள் முதல் பிள்ளைகளிடத்தில் விருப்பத்தை செலுத்தவில்லை என்பது இதன் பிண்டப் பொருள்.

4. இத் திருவாய்மொழிக்குச் சுவாபதேசப்பொருள், இத் 'திருவாய்மொழியில்' என்று தொடங்கும் வாக்கியத்தின் பொருள்.

நச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ
முஹூர்த்தம் அபிஜீவாவோ ஜலாந் மத்ஸ்யாவிவ உத்ருதௌ.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 53 : 31. உம்மை விட்டுப் பிரிந்த பிராட்டியும் நானும் பிழைக்க மாட்டோம்; தண்ணீரினின்றும் எடுக்கப்பட்ட மீன்களைப் போன்று சிறிது நேரமே பிழைத்திருப்போம் என்பது இதன் பிண்டப் பொருள்.

[1]"அஞ்சிறைய மடநாரை"யிலும் இதில் ஆற்றாமை விஞ்சி யிருக்கும். அதில் [2]"பெருநிலங் கடந்த நல்லடிப் போது" என்று அவதாரத்திலே அனுபவிக்கக் கோலிப் பெறாததாகை யாலே 'அது ஒரு கால விசேஷத்திலே, நாம் பிற்பாடரா னோம்' என்று ஆற்றலாம். இதில் [3]"நம்பியைத் தென் குறுங் குடி நின்ற" என்று அவதாரத்தில் பிற்பாடர்க்கு இழக்க வொண்ணாதபடி முகங் கொடுக்கைக்கு நிற்கிற உகந்தருளின நிலங்களிலே அனுபவிக்க ஆசைப்பட்டுப் பெறாமையால் வந்த ஆற்றாமை யாகையாலே இது கனத்திருக்கும். ஆகையாலே, அங்குத் தூது விட க்ஷமரானார். இங்குத் தூது விட்டவையும் நோவுபடுகிறனவாக அவற்றுக்குமாகத் தாம் நோவுபடுகிறார். [4]அநுபவிக்கிற இவர் படியாலும் இதில் ஆற்றாமை கனத்திருக் கும். [5]"பத்துடையடியவர்"க்கு முன்பு அவ் விஷயத்தை யனுப வித்துப் பிரிந்த அளவால் உள்ள ஆற்றாமையிறே அதில் உள் ளது. "அஞ்சிறைய மடநாரை"க்குப் பின்பு இவ்வளவும் வர அனுபவித்துப் பிரிந்த பிரிவாகையாலே ஆற்றாமை மிகவும் கனத்திருக்கும் இதில். [6]பயிலப் பயிலவிறே இனிதாயிருப்பது இவ் விஷயம்.

———: :———

---

1. "அஞ்சிறைய மடநாராய்" என்ற திருவாய்மொழியிலும் இத் திருவாய்மொழியிலும் பிரிவுத் துன்பம் ஒத்திருக்க, அங்கு நாரை முதலானவை தூது விடும்படி களித்து வாழ்வதாகவும், இங்குத் தூதுவிட ஒண்ணாதபடி நோவுபடுகின்றனவாகவும் கூறுவதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அஞ்சிறைய மட நாரை' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 1. 4 : 1.

2. திருவாய்மொழி, 1. 3 : 10.

3. திருவாய்மொழி, 1. 10 : 9.

4. விஷயசுபாவ மாத்திரத்தாலன்றி அநுபவிக்கும் தம்முடைய சுபா வத்தாலும் ஆற்றாமை அதிகம் என்கிறார் 'அநுபவிக்கிற' என்று தொடங்கி.

5. திருவாய்மொழி, 1. 3 : 1.

6. பலகாலம் பயிலுதல் இழப்பதற்கன்றோ உறுப்பாக இருக்கும்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'பயிலப் பயில' என்று தொடங்கி.

"கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றும்
குருத்தின் கரும்பு தின்றற்றே" (நாலடி - 211.)

என்ற பகுதி இங்கு ஒப்பு நோக்கத்தகும்.

இரண்டாந் திருவாய்மொழி (12)

——:——

"திண்ணன் வீடு"

பிரவேச சங்கதி:—[1]கடல் வெதும்பினால் விளாவ நீரில்லை யென்னுமா போலே ஆற்றாமையோடே முடிந்துபோமித்தனை என்றிருந்தவர், அவன் வந்து முகங்காட்டினவாறே ஆற்றாமை புக்க இடங் கண்டிலர்; இதுக்கு அடி என்? என்று பார்த்தார். இதர விஷயங்களினுடைய லாபாலாபங்கள் அளவு அல்லாத விஷய வைலக்ஷண்யமாயிருந்தது. இது தனக்கு அடி, சமஸ்த கல்யாணகுணாத்மக னுகையாலேயா யிருந்தது; இதுக்கடி, சர்வேஸ்வரனுகையாயிருந்தது. ஆக, இங்ஙனே பிராசங்கிகமாகப் பிரஸ்துதமான [2]ஈச்வரத்வத்தை அருளிச் செய்கிறார்.

கீழ் [3]"மூவா முதல்வா" என்ற காரணத்வத்தைச் சொல்லுகிறார் என்று பிள்ளான். இது [4]முதலிலும் சொல்லிற்றில்லையோ? என்ன, ஒருகால் சொன்னேம் என்று கைவாங்கி

---

1. "கீழில் திருவாய்மொழியில் இவர்க்குப் பிறந்த ஆற்றாமை பேச்சுக்கு நிலமன்றிறே; கடல் வெதும்பினால் விளாவ நீர் இல்லை என்னுமா போலே" என்பது நம்பிள்ளை ஈடு. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இரண்டு வகையில் இயைபு கூறப்படுகிறது: ஒன்று இடைப் பிற வரலால் வந்த இயைபு; மற்றொன்று நேர் இயைபு. 'கடல் வெதும்பினால்' என்றது முதல்'ஈச்வரத்வத்தை அருளிச்செய்கிறார்'என்றது முடிய இடைப்பிறவரலால் வந்த இயைபு. பிள்ளான் நிர்வாகம், நேர் இயைபு. பிள்ளான் - திருக்குருகைப்பிரான் பிள்ளான்; இவர் திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி வியாக்கியானம் செய்தவர்; இராமாநுசருடைய சிஷ்யர். 'இதுக்கு அடி' என்றது, அவன் பிரிந்தபோது முடிந்துபோமித்தனை என்றிருக்கையும், வந்து முகம் காட்டினால் ஆற்றாமை தெரியாமையுமாகிற இதற்குக் காரணம் என்? என்றபடி.

2. 'ஈச்வரத்வத்தை அருளிச்செய்கிறார்' என்னும் இவ்விடத்தில், பிறர் துக்கம் பொறாதவர் ஆகையாலே, தேவதாந்தர பரத்வ புத்தியாலே கேடுறுகின்ற மக்களுக்கு அந்தத் தேவதாந்தர பரத்வ புத்தியை ஒழிப்பதற்காகப் பகவானுடைய பரத்வத்தை உபதேசிப்போம் என்று பார்த்து அதனை அருளிச்செய்கிறார் என்ற இன்னோரன்ன வாக்கியங்களைச் சேர்த்துக் கொள்க.

3. திருவாய்மொழி, 2. 1: 10.

4. 'முதலிலும் சொல்லிற்றில்லையோ' என்றது, "உயர்வற உயர்நலமுடையவன்" என்ற முதல் திருவாய்மொழியிலும் இந்தப் பரத்துவத்தைப் பற்றிப் பேசவில்லையோ? எனின் என்றபடி.

இருக்கிறவரல்லர் இவர். ஒருகால் சொல்லிற்றென்று கைவாங்க லாம் விஷயம் அன்று அது; [1] பகவத் விஷயத்தில் புநருக்தி தோஷாயவாகாது. [2] ஒரு குணத்தையே எல்லாக் காலமும் அநுபவிக்க வல்லார் ஒருவர் இவர். ஒரு குணந்தன்னையே இதுக்கு முன்பு அநுபவித்த குணமென்று தோற்றாதபடி க்ஷணந்தோறும் புதுமை பிறப்பித்து அநுபவிப்பிக்க வல்லா னொருவன் அவன். [3] பயிலா நிற்கச் செய்தேயிறே "பண்டிவ ரைக் கண்டறிவ தெவ்வூரில்" என்றது. ஆகையிறே ஏக விஷ யமே நித்ய பிராப்யமாகிறது. [4]"எப்பொழுதும் நாள் திங்கள்" இத்யாதி. [5] ஆனாலும் வாசி உண்டு. அங்கு ஸ்வாநுபவம்; இங்கு உபதேசம். அங்கு அந்வயத்தாலே; இங்கு [6] அந்வய வியதிரேகங்களாலே. அங்குச் சுருதிச் சாயை; இங்கு இதி ஹாஸ புராணப் பிரகிரியை. அங்கு பரத்வே பரத்வம்; இங்கு அவதாரே பரத்வம்.

———:———

1. மூன்றாவது சமாதானம், 'பகவத் விஷயத்தில்' என்று தொடங்குவது.

2. மேலே கூறிய இரண்டு சமாதானத்தையும் முறையே விவரிக்கிறார் 'ஒரு குணத்தையே' என்று தொடங்கி.

3. அப்படிக் கணம் தோறும் புதியதாக இருக்குமோ? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'பயிலாநிற்கச் செய்தே' என்று தொடங்கி. 'பண்டி வரை' என்பது, பெரிய திருமொழி, 8. 1 : 9.

4. திருவாய்மொழி, 2. 5 : 4.

5. ஆனாலும் - இறைமைத் தன்மையைச் சொன்னாலும். வாசி உண்டு - விசேடம் உண்டு. அந்த விசேஷம் நான்கு வகையாகக் காட்டப்படுகின்றது 'அங்கு' என்று தொடங்கும் நான்கு வாக்கியங்களாலே. அங்கு - "உயர்வற உயர்நலம்" என்ற முதல் திருவாய்மொழியிலே.

6. 'அந்வய வியதிரேகங்கள்' என்றது, இத் திருவாய்மொழியிலே வருகின்ற "நம் கண்ணன் கண் அல்லது இல்லையோர் கண்ணே" என்ற திருப்பாசுரப் பகுதியை நோக்கி. 'சுருதிச்சாயை' என்றது, சாமாநாதி கரண்யம். 'இதிகாசப் புராணப் பிரகிரியை' என்றது, வையதிகரண்யம்; இத் திருவாய்மொழியில் வருகின்ற "மா பாவம் விட அரற்குப் பிச்சை பெய் கோபால கோளரியேறு அன்றியே" என்பன போன்ற திருப் பாசுரங்களை நோக்கி. 'பரத்வத்திலே பரத்வம்' என்றது, "அயர்வறும் அமரர்கள் அதி பதி" என்பதனை நோக்கி. 'அவதாரே பரத்வம்' என்றது, "நம் கண்ணன்" என்பது போன்றவைகளை நோக்கி.

மூன்றுந் திருவாய்மொழி (13)

—:—

"வாயும் திரை"

பிரவேச சங்கி:—[1]"வாயுந் திரையுக"ளில் ஆர்த்தி தீர வந்து சம்ச்லேஷித்த சம்ஸ்லேஷம் சொல்லுகிறது இதில். [2]பரத்வம் பிராஸங்கிகம். [3]தாம் பெற்ற பேற்றின் கனத்தைப் பார்த்தார். அது தம்மடியாக வந்ததாகிலிறே அளவுபட்டிருப்பது. சர்வேச்வரன் அடியாக வந்ததாகையாலே கனத்திருந்தது. தாம் அனுபவித்த அனுபவத்துக்குள்ளே [4]எல்லா ரசங்களும் உண்டாய், [5]சமாதிக வர்ஜிதமுமாய் [6]"ராமஸ்து ஸீதயா" என்

---

1. "வாயும் திரை" என்ற முதல் திருவாய்மொழியோடே இத் திருவாய்மொழிக்கு இயைபு அருளிச்செய்கிறார் 'வாயும் திரையுகளில்' என்று தொடங்கி. இதில் - இத் திருவாய்மொழியில்.

2. நடுவே உள்ள இரண்டாம் திருவாய்மொழியான "திண்ணன் வீடு" என்ற திருப்பதிகம் யாங்ஙனம் வந்தது என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'பரத்வம் பிராசங்கிகம்' என்று. "வாயும் திரையுகளில் ஆர்த்தி தீர வந்து சம்ஸ்லேஷித்த சம்ஸ்லேஷத்தைச் சொல்லுகிறது - இத் திருவாய்மொழியில். நடுவு பிராசங்கிகமாகப் பிரஸித்தமான இத்தனை ஈச்வரத்வம்" என்பது நம்பிள்ளை ஈடு.

3. மேலே சுருங்கக் கூறிய இயைபினை விரிக்கிறார் 'தாம் பெற்ற' என்று தொடங்கி.

4. 'எல்லா ரசங்களும்' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "தன்னுள்ளே கலந்தொழிந்தோம், தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்தே" என்ற திருப்பாசுரப் பகுதியை நோக்கி.

5. 'சமாதிகவர்ஜிதமுமாய்' என்றது, "ஒத்தார் மிக்காரை இலையாய மா மாயா" என்றதனை நோக்கி.

6. ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் விஜஹார பஹூன் ருதூந்
மநஸ்வீ தத்கத: தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித:

என்பது ஸ்ரீராமா. பால. 77 : 26.

இச் சுலோகத்திற்கு நம்பிள்ளை அருளிச்செய்த பொருள்: ராமஸ்து - பெருமாளும் பிராட்டியும் ஏக தத்வம் என்னலாம்படி கலந்த கலவியைச் சொல்லுகிறது. 'பித்ரு ஸுஸ்ருஷபரரானார், தர்மங்களைப் பிரவர்த்திப்பித்தார், தேவ சமாராதனம் பண்ணினார்' என்றுயிற்றுச் சொல்லிக் கொண்டு போந்தது; இப்படிப் போந்த இவர் இப்போது 'வாத்ஸ்யாயனம் கற்றுக் காம தந்த்ரமேயோ நடத்திப் போந்தது?' என்னும்படி வேறு பட்டார்: ஸீதயா ஸார்த்தம் - பரமபதத்தில் செவ்வியோடே வந்தவளும் பிற்பாடையாம்படி

னும்படி யிருந்தது.[1] இதுக்கு உசாத் துணையாவார் சம்ஸாரத்தில் இல்லாமையாலே [2]அவன் தன்னோடு ஒக்கப் பிராப்யருமாய்ப் பகவதனுபவத்துக்குத் தேசிகராயிருக்கிற நித்ய ஸூரிகள் திரளிலே போய்ப் போதயந்த: பரஸ்பரம் பண்ணி அனுபவிப்பது எப்போதோ? என்னும் [3]அநவாப்தியோடே தலைக்கட்டுகிறார்.

[4] "வாயுந் திரையு"களில் ஆற்றாமைக்கு திர்யக்குகளையும் அறிவில்லாத அசேதனங்களையும் சேர்த்தார். இங்கு சம்ச்லேஷத்தால் வந்த பிரீதிக்கு அறிவு நைஸர்க்கிகமான நித்ய ஸூரிகளைத் தேடுகிறார்.

———(0)———

போகஸ்ரோதஸ்ஸிலே முற்பாடரானர். விஜஹார - இப்படிப் பரிமாறச் செய்தேயும் போக உபோத்காதத்துக்கு அவ்வருகு பட்டிலர். பஹூந் ருதூந் - 'பஹூந் ஸம்வத்ஸராந்' என்னாதே ஒழிந்தது அவ்வோ கால விசேஷங்களுக்கு அடுத்த போக உபகரணங்களைக் கொண்டு புஜித்தார் என்னுமிடம் தோற்றுகைக்காக. மநஸ்வீ - சம்ஸ்லேஷத்தில் பிராட்டி கோலின அளவுக்கு அவ் வருகுபட்டுப் பரிமாறினர். தத்கத: - தஸ்யாம் கத: - ஜாதி குணங்கள் திரவியத்துக்குப் பிரகாரமாய்ப் பிரிக்க ஒண்ணாதபடியா யிருக்குமா போலே பிரிக்க ஒண்ணாதபடி ஒரு நீராகக் கலந்தபடி. தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித: - இவர் உயர்த்தியை அறிந்திருப்பாள் ஒருத்தியாகையாலே 'அப் பெரியவன் இப்படித் தாழ விடுவதே' என்று அச் செயலிலே தன் நெஞ்சு துவக்கப்பட்டு 'அது அது' என்று கிடக்குமாயிற்று. அப்படியாயிற்று இங்குக் கலந்த கலவி தான் என்பது.

1. இதுக்கு - இப்படிப்பட்ட இன்பத்துக்கு. "களிப்பும் கவர்வும் அற்று" என்ற திருப்பாசுரத்தை நோக்கி இது எழுதுகின்றார்.

2. நித்தியசூரிகள் உசாத்துணையாவார் என்கைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'அவன் தன்னோடு' என்று தொடங்கி.

3. "அளிக்கின்ற மாயப்பிரான் அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவது என்று கொலோ?" என்ற திருப்பாசுரப் பகுதியை நோக்கி 'அநவாப்தியோடே தலைக்கட்டுகிறார்' என்கிறார்.

4. "வாயும் திரையுகளும்" என்ற திருப்பதிகத்தில் ஆற்றாமையால் வந்த கலக்கத்துக்குச் சேர அறிவில்லாத பறவை முதலானவைகளைக் கூட்டிக் கொண்டார். இங்குச் சம்ஸ்லேஷ முகத்தால் வந்த தெளிவிற்குச் சேர இயற்கையிலே அறிவுடைய நித்திய சூரிகளைத் தேடுகிறார் என்றபடி.

நான்காந் திருவாய்மொழி (14)

— :: —

"ஆடி ஆடி"

ப்ரவேச ஸங்கி:—[1] கீழ் "பருகிக் களித்தேனே" என்று ஹ்ருஷ்டராய், அது தன்னை நித்ய ஸூரிகள் திரளிலே போய் அனுபவிக்கக் கோலி, நினைத்தபோதே அது பெறுமையாலே பிராட்டி தசையைப் பிராப்தராய் "அஞ்சிறைய மடநாரை"யில் போலே தூது விடவும், "வாயும் திரையுக"ளில் போலே கண்ணால் கண்டவை யடைய அலாபத்தாலே நோவுபடுகிறன வாக அனுசந்திக்கவும் அக்ஷமராய், [2] தம் தசையைத் தாம் வாய்விட்டுப் பேசவும் மாட்டாதே பார்ஶ்வஸ்தர் அறிவிக்கும் படியாய், [3] "ஸ்திதி கமனாதிகளிலே ஒரு நியதியின்றிக்கே நோவு படுகிற பெண்பிள்ளை தசையை அனுசந்தித்த திருத் தாயார், [4] இராமகிருஷ்ணாதி அவதாரங்களைப் பண்ணி ஆர்த்தரானார்

---

1. கீழில் திருவாய்மொழியிலே 'பருகிக் களித்தேனே' என்று ஹ்ருஷ்டராய், 'அது தன்னைப் பாகவதர்களோடே உசாவித் தரிக்கவேணும்' என்று பாரித்து, அதுக்கு இவ்விபூதியில் ஆள் இல்லாமையாலே, நித்ய விபூதியிலே நித்ய சூரிகள் திரளிலே, போய்ப் புக்குப் போதயந்தஃ பரஸ்பரம் பண்ணி அநுபவிக்கக் கோலி நினைத்தபோதே அத்திரளிலே போய்ப்புக்கு அநுப விக்கப் பெறுமையாலே மிகவும் அவசந்நராய், தம்முடைய தசையை ஸ்வகீய ரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் எம்பெருமானுக்கு அறிவிக்கிறபடியை அந்யாப தேசத்தாலே பேசுகிறார் என்பது நம்பிள்ளை ஈடு.

மேல் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் இயைபு அரு ளிச் செய்கிறார் 'கீழ் பருகிக்களித்தேனே' என்று தொடங்கி. 'பருகிக் களித் தேனே' என்றது, திருவாய்மொழி, 2. 3 : 9.

2. 'தம் தசையைத் தாம் வாய்விட்டுப் பேசவும் மாட்டாதே பார்ஶ் வஸ்தர் அறிவிக்கவேண்டும்படியாய்' என்றது, அருகில் உள்ளார் வார்த்தையும் தம்முடைய வார்த்தையேயாயிருக்க, அருகில் உள்ளார் வார்த்தை ஆயின வாறு யாங்ஙனம்? எனின், இறைவன் ஆழ்வார்க்குத் தம்முடைய நிலையைத் தாம் அறிவிக்கமாட்டாதபடி பிறந்த துன்பமிகுதியைக் கண்டு, இவர் தரிக் கைக்காக, இவர் அருகில் இருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் இவர் நிலையைத் தனக்கு அறிவித்ததாக இவர்க்கு ஒரு புத்திவிசேடத்தைப் பிறப்பிக்க, அதனாலே தரிப்பு உண்டாய் அவர்கள் பாசுரத்தாலே தாம் பேசுகிறார் என்பது கருத்து.

3. "ஆடிஆடி" என்ற திருப்பாசுரத்திலே நோக்காக 'ஸ்திதி கமநாதி களில்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

4. "இலங்கை செற்றீர்", "வாணன் ஆயிரம் தோள் துணித்தீர்" என்பனவற்றை நோக்கி 'இராமகிருஷ்ணாதி அவதாரங்கள்' என்கிறார்.

ஆர்த்தியெல்லாம் பரிஹரிக்கக் கடவ நீர் உம்மை ஆசைப்பட்ட இவள் நோவுபடப் பார்த்திருப்பதே என்று[1] எல்லாவளவிலும் அவனை யிட்டுப் பரிஹரித்துக் கொள்ளும் குடியாகையாலே அவன் திருவடிகளிலே பொகட்டு இவள் இடையாட்டத்தில் நீர் [2] என் செய்ய நினைத்திருந்தீர் என்று கேட்கிற பாசுரத்தாலே ஸ்வதசையைப் பேசுகிறார்.

[3]காசை இழந்தவனுக்கும் பொன்னை இழந்தவனுக்கும் ரத்னத்தை இழந்தவனுக்கும் ஒத்திராதிறே கிலேசம். [4]அவதாரத்திலே "பெருநிலங் கடந்த நல்லடிப் போதை" ஆசைப்பட்டு அது கிடையாமையால் வந்த ஆற்றாமை "அஞ்சிறை"யில்; "நம்பியைத் தென்குறுங்குடி நின்ற" என்று அர்ச்சாவதாரத்தை அனுபவிக்க ஆசைப்பட்டு அது கிடையாமையால் வந்த ஆற்றாமை "வாயுந்திரையுக"ளில். அவன் தனக்கும் பிராணபூதரான நித்யசூரிகளை யாசைப்பட்டுக் கிடையாமையாலே வந்த வாற்றாமை யாகையாலே, "அஞ்சிறைய மட நாரை"யிலும், "வாயுந்திரையுக"ளிலும் இது விஞ்சியிருக்கும். [5]ஆகில், அவனைக் கூப்பிடுவான் என்? எனில், [6] எங்கேனும் பறியுண்டார் ராஜாவின் பேர் சொல்லிக் கூப்பிடுமாபோலே

1. 'பார்த்திருப்பதே' என்று அவனைப் பார்த்துச் சொல்லுகிறது என்? தான் பரிகாரம் செய்ய ஒண்ணாதோ? என்ன, 'எல்லாவளவிலும்' என்று தொடங்கி அதற்கு விடை கூறப்படுகிறது.

2. 'என்செய்ய நினைத்திருந்தீர்' என்றது, "நமது இட்டமென் கொல் இவ்வேழைக்கே" என்பதுபோன்ற திருப்பாசுரங்களை நோக்கி.

3. "அஞ்சிறையமடநாராய்", "வாயும் திரையுகளும்" என்ற திருவாய்மொழிகளைக் காட்டிலும் இத்திருவாய்மொழியில் துக்கம் மிகுந்திருப்பதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'காசை' என்று தொடங்கி. 'காசு' என்றது அவதாரங்களை. 'பொன்' என்றது அர்ச்சாவதாரத்தை. 'இரத்தினம்' என்றது நித்திய சூரிகளை. "காசினை மணியை" என்றும், "செம்பொனே திகழும்" என்றும், "செழுமாமணிகள் சேரும்" என்றும் வருவன நோக்குக.

4. மேலே கூறியதனை விளக்குகிறார் 'அவதாரத்திலே' என்று தொடங்கி.

5. 'ஆகில் அவனைக் கூப்பிடுவான் என்? என்னில்' என்றது, நித்திய சூரிகள் திரளிலே போய்ப் புக்கு அநுபவிக்கப் பெறாமையாலே நோவுபடுகிறதாகில், பின்னை அவர்களைச் சொல்லிக் கூப்பிடாதே "நரசிங்கா", "இலங்கை செற்றவனே" என்று அவனைச் சொல்லிக் கூப்பிடுவான் என்? என்னில், என்றபடி. "எங்கேனும் ஒரு காட்டிலே ரத்நங்கள் பறி உண்டாலும், நாட்டிலே ராஜாவின் வாசலிலே அவன் பேர் சொல்லியிறே கூப்பிடுவது" என்பது நம்பிள்ளை ஈடு.

அவர்களோட்டை சம்ச்லேஷத்துக்குக் கடவன் இவன் ஆகை யாலே இவன் பேர் சொல்லிக் கூப்பிடுகிறார்.

[1]பகவத்விச்லேஷத்தில் உள்புக நின்றாலிறே பாகவத விச்லேஷந்தான் தெரிவது. பாகவத விச்லேஷ வியஸனம் தெரிவது பாகவத சம்ச்லேஷம் பெறாமையால் வந்த இழவு, பெற்ற பகவத் சம்ச்லேஷமும் இழந்து பிரார்த்திக்க வேண்டும்படியானாலிறே.[2]"கதாந்வஹம் குலமேஷ்யாமி"-ஸ்ரீபரதாழ்வானோடும் சத்ருக்னாழ்வானோடும் கூடப்பெறாத கிழிக் குறையாலே கூட நிற்கிற இளையபெருமாளோடும் [3] கூடிற்றாய்த் தோற்றிற்றில்லை பெருமாளுக்கு. [4] "குஹேன ஸஹித:" இப்படியேயிறே [5]அவன் தனக்கும் இவர்கள் அந்வய வியதிரேகங்களிலே இருப்பது.

———o———

1. மேலதற்கே வேறும் ஒரு வகையில் சமாதானம் அருளிச்செய்கிறார் 'பகவத் விச்லேஷத்தில்' என்று தொடங்கி. அதனை விவரிக்கிறார் 'பாகவத விச்லேஷவியசனம்' என்று தொடங்கி. என்றது, பாகவதர்களைப் பிரிந்ததனால் ஆய துன்பம் தெரிவது, பெற்ற பகவானுடைய சம்ஸ்லேஷமும் நீங்கி, அதுவும் பிரார்த்திக்க வேண்டும்படி உட்புக நின்றாலேயாம்; இல்லையாகில், பாகவதவிஸ்லேஷம் ஆகாது; ஆகையாலே, இவர் பாகவத சம்ஸ்லேஷத்திலே உட்புக நின்றவர் ஆகையாலே, அது இவர்க்குப் பகவத்விஸ்லேஷபர்யந்தமாய், அவனை அடியே பிடித்துப் பிரார்த்தித்துக் கூப்பிடுகிறார் என்றபடி.

2. அப்படி, பெற்றது பெறாததாகத் தோற்றுமோ? என்ன, தோற்றும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'கதாந்வஹம்' என்று தொடங்கி.

கதாந்வஹம் ஸமேஷ்யாமி பரதேந மஹாத்மநா
ஶத்ருக்நேந ச வீரேண த்வயா ச ரகுநந்தந.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 16 : 10. ஏ இலக்குமணா! நான் மஹாத்மாவான பரதனோடும் சூரனான சத்ருக்னனோடும் உன்னோடும் எப்பொழுது சேர்வேன் என்பது இதன்பொருள்.

3. 'கூடிற்றாய்த் தோற்றிற்றில்லை' என்றது, கூடியிருக்கச் செய்தேயும் கூடிற்றாய்த் தோன்றிற்றில்லை என்றபடி. 'கிழிக்குறைவாலே' என்றது, திருஷ்டாந்தம். அதாவது, உலோபிக்குப் பணப்பையில் சில குறைந்தால், மீதியிருக்கும் பணம் இருப்பதாகவே தோன்றாது; அதுபோல என்றபடி.

4. அன்வயத்தில் (சேர்ந்து இருக்கும்போது) கூடினதாகத் தோற்றும் என்பதற்குப்பிரமாணம்,'குஹேந ஸஹித'என்பது."குஹேந ஸஹிதோ ராமோ லக்ஷ்மணேந ச ஸீதயா" என்பது, ஸ்ரீராமா. பால. 1 : 30. பெருமாள் குகனோடு கூடினதால் இலக்குமணனோடும் சீதையோடும் கூடினவரானார் என்பது இதன்பொருள்.

5. அவன் தனக்கும் - இறைவனுக்கும். "கூடப்போன இளையபெருமாளோடும் பிராட்டியாரோடும் கூடிற்றாய்த் தோற்றிற்று ஸ்ரீ குகப்பெருமாளோடு கூடினபின்பிறே" என்பது நம்பிள்ளை ஈடு. அவனுக்கும் இப்படியானால் இவர்க்குச் சொல்லவேண்டாவே என்பது கருத்து.

ஐந்தாம் திருவாய்மொழி (15)

———o———

" அந்தாமத்தன்பு "

பிரவேச ஸங்கி:—[1] "கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே" என்னுமாபோலேயிறே "ஆடியாடி"யில் ஆழ்வார்க்குப் பிறந்த வியஸனம். [2] அதெல்லாம் ஆறும்படி [3] "அதந்த்ரித" இத்யாதிப்படியே பெரிய துவரையோடே [4] "ஸ்ரக் பூஷாம்பரம்" என்று ஆயுத ஆபரணங்களை அக்ரம

---

1. " கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே " என்பது விஷ்ணுதர்மம்; கஜேந்திராழ்வான் கரையில் இழுக்க, முதலையானது தண்ணீரில் இழுக்கிறது என்பது இதன்பொருள். என்றது, பிரிவுத் துன்பம் முடிக்கத்தேட, ஈசையானது முடிய ஒட்டாமல் ஜீவிப்பிக்க, இப்படியே ஆழ்வாருடைய காலம் செல்ல என்றபடி.

2. ஸ்ரீ கஜேந்திராழ்வானுக்குத் துன்பம் நீங்கும்படி தோன்றின பிரகாரத்தை விரிவாக அருளிச்செய்யா நின்றுகொண்டு, அப்படியே இவர்க்குப் பிறந்த துன்பமெல்லாம் நீங்கும்படி தோன்றின பிரகாரத்தை அருளிச் செய்கிறார் ' அதெல்லா மாறும்படி' என்று தொடங்கி.

3. அதந்த்ரித சமூபதி ப்ரஹிதஹஸ்தம் அஸ்வீக்ருத
ப்ரணீத மணிபாதுகம் கிமிசாகுலாந்தப்புரம்
அவாஹந பரிஷ்க்ரியம் பதகராஜமாரோஹத:
கரிப்ரவரப்ரும்ஹிதே பகவத: த்வராயைநம:

என்பது ஸ்ரீ ரங்கராஜஸ்தவம், உத். ஸ்ரீ கஜேந்திராழ்வானுடைய அடங்கிய ஒலியைக் கேட்ட அளவில், சேனை முதலியாரால் கொடுக்கப்பட்ட கைலாகையை ஏற்றுக்கொள்ளாமலும், அழுக்கில்லாமல் துடைக்கப்பட்ட இரத்தினமயமான பாதுகையைத் திருவடிகளில் தரியாமலும், இது என்ன? என்று பெரிய பிராட்டியார் முதலானவர்கள் ஆகுலப்படும்படியாகவும், வாகனத்திற்கு வேண்டிய அலங்காரங்கள் இல்லாத பறவைகட்கு அரசனை பெரிய திருவடியின்மேல் ஏறுகின்ற பகவானுடைய வேகத்திற்கு வணக்கம் என்பது இதன்பொருள்.

4. ஸ்ரீரங்கேசய சரணம் மமாஸி
ஸ்ரக் பூஷாம்பர மயதாயதம் ததாந:
வாத்யா வ்யாலோலத் கமல தடாக தாண்டவேந
திங்மாமித் யநுகஜகர்ஜ மாஜகந்த.

என்பது ஸ்ரீரங்கராஜஸ்தவம் உத். 59.

ஸ்ரீ ரங்கநாதரே! நீ கஜேந்திராழ்வானுடைய கூக்குரல் செவிப்பட்டவுடனே கெட்டேன் கெட்டேன் என்று இழவுக்கு நொந்து, மாலை ஆபரணம் திருப்பரிவட்டம் என்னுமிவற்றை அடைவுகெட அணிந்துகொண்டவராய், பெருங்காற்றினால் அலைக்கப்பட்டதொரு தாமரைத் தடாகத்தின் தன்மையையுடையவராய் எழுந்தருளினீர்; அத்தகைய ஆச்ரிதபக்ஷபாதியான நீர் அடியேனுக்குப் புகலிடம் என்பது இதன்பொருள்.

மாகத் தரித்துக்கொண்டு அரைகுலையத் தலைகுலைய வந்து "க்ராஹ க்ரஸ்தம்" என்று யானையை ஒரு கையாலும் முதலையை யொருகையாலும் எடுத்துக் கரையிலே யேற்றி, [1]"க்ராஹம் சக்ரேண மாதவ:" என்று பிரஜை வாயிலே முலையை வைத்துக் கிரந்தியை சிகித்சிப்பாரைப்போலே பெரியபிராட்டியாரும் தானுமாக [2] இரண்டுக்கும் நலிவு வாராமே திருவாழியாலே விடுவித்து, சாத்தின திருப்பரியட்டத்தலையாலே புண் வாயை வேதுகொண்டு திருக்கையாலே குளிர பரிசித்து நின்றாற்போலே, இவரும் [3]"வலங்கொள் புள்ளுயர்த்தாய்" என்று கூப்பிட்ட ஆர்த்தநாதம் செவிப்பட்டு, 'அழகிதாக நாம் ஜகந்நிர்வஹணம் பண்ணினோம் நாம் ஆரானோம்' என்று பிற்பாட்டுக்கு லஜ்ஜா பயங்களாலே விஹ்வலனாய், [4]ஒப்பனை, திவ்யாயுதங்களோடே சேர்ந்த சேர்த்தி, இவையெல்லாவற்றோடும் [5] வந்து சம்ச்லேஷித்து [6] ஹ்ருஷ்டனாய் விஸ்மிதனாய் கிருதக்ருத்யனாய் இருக்கிற இருப்பை அனுபவித்து அவ்வனுபவ ஜனித ஹர்ஷ பிரகர்ஷத்தாலே தாம் பெற்ற பேற்றைப் பேசுகிறார்.

———(௦)———

---

1. "ஸ்தலஸ்தம் தாரய மாஸ க்ராஹம் சக்ரேண மாதவ:" என்பது பிரமாணம்.

திருமாலானவர் திருவாழியாலே தரையில் இருக்கிற முதலையைப் பிளந்தார் என்பது இதன்பொருள்.

2. 'இரண்டுக்கும் நலிவு வாராமே' என்ற இடத்தில் 'இரண்டுக்கும் நலிவு வாராமே' என்றதனோடு முதலைக்கே நலிவு வரும்படி என்பதனைச் சேர்த்துக் கொள்க.

3. திருவாய்மொழி, 2. 4: 4,

4. இத் திருவாய்மொழியில் வருகின்ற "பல பலவே ஆபரணம்", "ஆழிநூல் ஆரம்" என்பன போன்றவைகளை நோக்கி 'ஒப்பனை' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

5. "என்னுள் கலந்தவன்" என்ற திருப்பாசுரப் பகுதியை நோக்கி 'வந்து சம்ஸ்லேஷித்து' என்கிறார்.

6. "மரதகக் குன்றம் ஒக்கும்", "ஆராவமுதமாய்" என்பன போன்ற திருப்பாசுரப் பகுதிகளை நோக்கி 'ஹ்ருஷ்டனாய்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

ஆறுந் திருவாய்மொழி (16)

"வைகுந்தா"

பிரவேச சங்கி :—[1]"ஆடியாடி"யில் ஆர்த்தி தீரச் சம்ச்லேஷத்தால் பிறந்த ஹர்ஷம் அவனுக்கு என்னுமிடம் சொல்லுகிறது இதில். பிரணயி பிரீத்யநுஸந்தானம் என்று ஆளவந்தார். [2]"ஊனில் வாழுயிரில்" அவனை யநுபவித்து அவன் பக்கல் ஆழ்வார்க்கு உண்டான பிரேமம் அவன் அளவிலே பர்யவஸியாதே "அடியார்கள் குழாங்களை" என்று ததீயரளவும் சென்றாற்போலே, இதில் சர்வேச்வரன் ஆழ்வார் பக்கல் பண்ணின பிரேமம் இவர் ஒருவரளவின்றிக்கே சம்பந்த சம்பந்திகளளவும் வெள்ளமிடும்படி ஆழ்வார் பக்கல் எம்பெருமானுக்கு உண்டான பிரீதி சொல்லுகிறது. [3] இரண்டு தலைக்கும் ரஸம் அதிசயித்தால் சம்பந்த சம்பந்திகளளவும் செல்லுமிறே. [4] உபய விபூதியுக்தனாய் சமஸ்த கல்யாண

---

1. 'என்று ஆளவந்தார்' என்பது முடிய, இத்திருவாய்மொழிக்கு ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்யும் இயைபு. இவர் நிர்வாஹம் இத் திருவாய்மொழியில் வருகின்ற "வைகுந்தா - உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே" என்ற பாசுரப் பகுதியை நோக்கியது.

"ஆடியாடியில் ஆர்த்திதீர வந்து சம்ஸ்லேஷித்தபடி சொல்லிற்று அந்தாமத் தன்பு; அந்தச் சம்ஸ்லேஷத்தால் பிறந்த பிரீதி அவனது என்னுமிடம் சொல்லுகிறது இத் திருவாய்மொழி. 'பிரணயி பிரீதி அநுசந்தானம் காண் இது' என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி: - ஆழ்வார் விஷயமாக ஈச்வரனுக்கு உண்டான பிரீதி சொல்லுகிறது இதில்" என்பது நம்பிள்ளை ஈடு.

2. 'ஊனில் வாழ் உயிரில்' என்றது முதல் 'பிரீதி சொல்லுகிறது' என்றது முடிய மற்றைய முதலிகள் நிர்வாஹம். அவர்கள் கூறும் நிர்வாஹம், "செடியார் நோய்கள் எல்லாம் துரந்து எமர் கீழ்மேல் எழு பிறப்பும், விடியா வெந்நரகத்து என்றும் சேர்தல் மாறினரே" என்ற திருப் பாசுரப் பகுதியை நோக்கியது.

3. சம்பந்திகளளவும் இப்படி அன்பு செல்லுவதற்குக் காரணம் கூறப்படுகிறது 'இரண்டு தலைக்கும்' என்று தொடங்கி.

4. ஆளவந்தார் நிர்வாஹத்தை விவரணம் செய்கிறார் 'உபய விபூதியுக்தனாய்' என்று தொடங்கி. இது, இத் திருவாய்மொழி பத்துத் திருப்பாசுரங்களினுடைய கருத்து.

குணாத்மகனாய் சர்வப் பிரகாரப் பரிபூர்ணனான தன் படிகள் ஒன்றும் குறையாதபடி இவரோடே சம்ச்லேஷித்தது தன் பேறு என்னுமிடம் தோற்ற ஹ்ருஷ்டனாய், அனாதிகாலம் எதிர் சூழல்புக்குத் திரிந்து இவரை ஒருபடி பிராபிக்கப் பெற்றோமே! [1]இவர் தாம் இனி நம்மை விடில் செய்வது என்? என அதி சங்கை பண்ணி, அவன் அலமாக்கிறபடியைக் கண்டு, [2]'நீ இங்ஙனே படவேண்டா' என்று அவன் அதிசங்கையைப் பரிஹரித்து அவனை யுளன் ஆக்குகிறார். [3]"வைதேஹி ரமஸே கச்சித் சித்ரகூடே மயா ஸஹ மைதிலி"-உன்னையறிந்தாயே, நம்மையறிந்தாயே, கலக்கிற தேசம் அறிந்தாயே, என்றாரிறே பெருமாள்.

——— 0 ———

ஏழாந் திருவாய்மொழி (17)

—·—:—·—

"கேசவன்தமர்"

பிரவேச சங்கி :—[4]"ஆடியாடி"யில் "வாடி வாடும்" என்கையாலே ஒரு நீர்ச்சாவியாய் வாடினபடி. "அந்தாமத்தன்"

---

1. 'இவர் தாம் இனி நம்மை விடில் செய்வது என்? என்று அதிசங்கை பண்ணி' என்றது, மேல் திருவாய்மொழியில் "ஆராவமுதமாய் அல்லாவியுள் கலந்த, காரார் கருமுகில்" என்றும், "என் முடிவு காணாதே என்னுள் கலந்தானை" என்றும் இவர் சொன்னார்; ஆதலால், மீண்டும் "வளவேழுலகு" தலை எடுப்பின் என் செய்வது என்று ஐயம் கொண்டான் என்றபடி.

2. 'நீ இங்ஙனே படவேண்டா என்று அதிசங்கையைப் பரிஹரித்து' என்றது, இத் திருவாய்மொழியில் "உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே" என்றும், "உன்னை எங்ஙனம் விடுகேன்" என்றும் வருகின்ற பாசுரங்களை நோக்கி.

3. சம்ஸ்லேஷத்தின் மிகுதிக்கும், அதனாலே அதிசங்கை கொண்டதற்கும் திருஷ்டாந்தம் 'வைதேஹி' என்று தொடங்குவது.

வைதேஹி ரமஸே கச்சித் சித்ரகூடே மயா ஸஹ
பஶ்யந்தீ விவிதாந் பாவாந் மநோ வாக் காய ஸம்யதா.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 94 : 18. வைதேகீ! நீ முக்கரணங்களையும் ஒருப்படுத்தினவளாய் பலவிதமான பொருள்களைப் பார்த்துக் கொண்டு என்னோடு கூடச் சித்திர கூடத்தில் களிக்கிறாயா? என்பது இதன் பொருள்.

4. "ஆடியாடியில் 'வாடிவாடும்' என்கையாலே, ஒரு நீர்ச்சாவியாய் வாடினபடி சொல்லிற்று; அந்த ஒரு நீர்ச்சாவியானது தீரக் காரார் கருமுகில் கலந்து வர்ஷித்தபடி சொல்லிற்று - அந்தாமத் தன்பில்; அப்படி வர்ஷித்த படியாலே 'ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன்' என்று வெள்ள மிட்டுப் பெருகினபடி சொல்லிற்று - வைகுந்தாமணி வண்ணனில்; 'எமர் கீழ்மேல் எழுபிறப்பும் மாசதிர் இது பெற்று' என்கையாலே அவ்வெள்ளம் இருகரையும் புரண்டபடி சொல்லுகிறது - கேசவன்தமரில்" என்பது நம்பிள்ளை ஈடு.

பில் அது தீரக் காரார் கருமுகில் வர்ஷித்தபடி. "வைகுந்தா மணிவண்ண"னில், "ஈறிலின்பத் திருவெள்ளம்" என்று வெள்ளமிட்டபடி. "கேசவன் தம"ரில், 'எமர்கீழ்மேல்' என்று வெள்ளம் கரைபுரண்டபடி சொல்லுகிறது.

[1] சர்வேச்ரன் ஆழ்வாரோடு சம்ச்லேஷித்ததால் பிறந்த பிரீதி தம்மொருவர் அளவன்றிக்கே [2] தம்மோடு சம்பந்தமுடையாரளவும் பெருகி வருகிற படியைக் கண்டு, 'இவன் நம்பக்கல் பண்ணின பக்ஷபாதாதிசயமிறே' என்று இனியராய், இப்படி விஷயீகரிக்கைக்கு அடியான குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருத் துவாதச நாமத்தாலே அவனைப் பேசி அனுபவிக்கிறார்.

[3] சர்வேச்ரன் ஒருவனை விஷயீகரித்தால் அது அவனளவில் நில்லாது. [4] "மரணாந்தாநி". மஹாராஜர்க்குச் சத்ருவென்று வாலியை நிரஸித்து மஹாராஜர் கண்ணீர் பொறுக்கமாட்

1. மேலே கூறியதனை விவரிக்கிறார் 'சர்வேச்வரன்' என்று தொடங்கி.

2. இத் திருவாய்மொழியின் முதல் திருப்பாசுரத்தை நினைத்துத் 'தம்மோடு சம்பந்தமுடையாரளவும்' என்கிறார்.

3. ஆழ்வாரை அங்கீகரித்தால் அவருடைய சம்பந்தி சம்பந்திகள் அளவும் அங்கீகரிப்பான் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'சர்வேச்வரன்' என்று தொடங்கி.

4. பகவான் ஒருவனை அங்கீகரித்தால் அவ்வங்கீகாரம் சம்பந்தி சம்பந்திகள் அளவும் செல்லும் என்பதற்கு நான்கு உதாரணம் காட்டுகிறார் 'மரணாந்தாநி' என்று தொடங்கி.

மரணாந்தாநி வைராணி நிர்வ்ருத்தம் நஃ ப்ரயோஜனம்
க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரா மமாபி ஏஷ யதா தவ.

என்பது, ஸ்ரீராமா. யுத். 114: 101. "மரணாந்தாநி வைராணி - ருஷிகள் குடியிருப்பை அழித்து, மைதிலியைப் பிரித்து, நம் உயிர்நிலையிலே நலிந்தாற்போலே ஸ்ரீ ஜடாயு மஹாராஜரை நலிந்து, இவையெல்லாம் செய்யமாட்டானே இவன் இனி. நிர்வ்ருத்தம் ந ப்ரயோஜனம் - இவன் ஜீவிக்கிற நாளிலே 'நாம் செய்யும் நன்மை இவன் விலக்காதொழிவது காண்' என்றிருந்தோம்; அது அந்நாளில் செய்யப் பெற்றிலோம்; நாம் தேடியிருந்தது முந்துற முன்னம் சித்திக்கப் பெற்றோமிறே. க்ரியதாம் அஸ்ய ஸம்ஸ்காரா - இவன் நாம் செய்யும் நன்மை விலக்காதானான அளவு பிறந்த இன்றும் இழக்கவேண்டுமோ? வேண்டுவன செய்யப் பாரும். மம அபி ஏஷ யதா தவ - நீர் இராய்த்தீராகில் குடல் தொடக்குடையாரிலே ஒருவன் செய்யுமித்தனையன்றோ? நாம் இவனுக்கு வேண்டுவன செய்ய, நீர் பின்னைக் கடக்க நில்லீர் என்றாரிறே. ஸ்ரீ விபீஷணாழ்வான் பக்கல் ஓரம் ராவணனளவும் சென்றதிறே" என்பது நம்பிள்ளை ஈடு.

டாமை [1] "ஸஞ்ஜாத பாஷ்ப:" என்று தாமும் கண்ணீர் விழ விட்டார். [2] "தர்மே மநஶ்ச". [3] கண்டாகர்ணன் பக்கல் பண்ணின விஷயீகாரம் அவன் தம்பியளவும் சென்றதிறே. எம்பார் இத் திருவாய்மொழி யருளிச்செய்யப்புக்கால் நான் [4] வைஷ்ணவனானேன் என்றருளிச்செய்வாராம். [5] ஆழ்வாருடைய நெடுமாற்கடிமையும், எம்பெருமானுடைய நெடுமாற்கடிமையும் என இரண்டாயிற்று நெடுமாற்கடிமை; அதில் எம்பெருமானுடைய நெடுமாற்கடிமை இத்திருவாய்மொழி.

———o———

---

1. இத்யேவம் ஆர்த்தஸ்ய ரகுப்ரவீர:
ஶ்ருத்வா வசோ வாலிஜகந்யஜஸ்ய
ஸஞ்ஜாத பாஷ்ப: பரவீரஹந்தா
ராமோ முஹூர்த்தம் விமநா பபூவ.

என்பது, ஸ்ரீ ராமா. கிஷ். 23 : 24. இவ்விதமாக வருந்துகிற சுக்கிரீவனுடைய வார்த்தையைக் கேட்டு வீரர்களை அழிப்பவரும் இரகு குலத்தில் அவதரித்தவருமான ஸ்ரீராமபிரான் கண்ணீரோடு கூடினவராய் ஒரு முகூர்த்த காலம் மனம் கலங்கினர் என்பது இதன் பொருள்.

2. தர்மே மநஶ்ச தேபத்ர ஸர்வகாலம் பவிஷ்யதி
யுஷ்மத் ஸந்ததி ஜாதாநாம் தீர்க்கமாயு: பவிஷ்யதி.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 19 : 27. மங்களகுணமுள்ள மாலாகாரரே! உம்முடைய மனமும் எக்காலமும் தர்மத்தில் செல்லப் போகிறது, உம்முடைய குலத்தில் பிறந்தவர்களுக்கு நீண்ட வயது உண்டாகப் போகிறது என்பது இதன் பொருள். இது, கிருஷ்ணாவதாரத்தில்.

3. "ஸ்ரீ கண்டா கர்ணன் பக்கல் பண்ணின விஷயீகாரம் அவன் தம்பியளவும் சென்று, 'நீ அவனுக்கு நல்லையாகில் அவன் முன்னாகப் போ' என்று அருளிச்செய்தாரிறே" என்பது நம்பிள்ளை ஈடு. இதுவும் கிருஷ்ணாவதாரத்தில்.

4. அருளிச்செய்வதற்குக் காரணம், திருத் துவாதச நாமங்களும் வைஷ்ணவத்வ சிந்நமாகையாலே அந்தத் துவாதச நாமங்களும் சொல்லப்பட்டிருக்கிற இத் திருவாய்மொழியைக் கற்பவர்களுக்கு வைஷ்ணவத்வம் சித்திக்கிறதாகையாலே என்பதாம். துவாதச நாமங்கள் வருமாறு:- கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், ஸ்ரீதரன், இருடிகேசன், பத்மநாபன், தாமோதரன்.

5. சம்பந்தி சம்பந்திகள் அளவும் அங்கீகரிப்பதனை ரசோக்தியாகக் கூறுகிறார் 'ஆழ்வாருடைய' என்று தொடங்கி. 'நெடுமாற்கடிமை' என்பதனால் கூறப்படுவது, அடியார்க்கு அடிமையை. 'நெடுமாற்கடிமை' என்பது எட்டாம் பத்தில் பத்தாம் திருவாய்மொழி. இந்த நெடுமாற்கடிமை, ஆழ்வார்க்குச் சொரூபத்தோடு கூடியது. எம்பெருமானுக்கு வியாமோகத்தால் வந்தது.

எட்டாந் திருவாய்மொழி (18)

— :: —

" அணைவதரவணை "

பிரவேச சங்கி:—[1]சர்வேச்வரன் ஆழ்வார்க்கு [2]அத்வேஷத்தையும் ஆபிமுக்யத்தையும் ருசியையும் பிறப்பித்து, [3]இவர் விடிலும் தான் விடாதே விரும்பி, [4]இதுதான் இவர் தம்மள வன்றிக்கே தம்மோடு சம்பந்தமுடையாரளவும் பெருகிக் கரை புரளுகிற படியை அனுசந்தித்து, 'சர்வேச்வரன் ஸ்வபாவம் இதுவானபின்பு நாம் பெற்ற பேறு எல்லாரும் பெறும்படி பண்ணுவோம்' என்று, சம்ஸாரிகளை அடையப் பார்த்து, அவர்களுக்கு [5]மோக்ஷப் பரதத்வத்தை அருளிச்செய்ய, அது கேட்ட பின்பும் அவர்கள் பழைய நிலையில் நின்றும் குலை

---

1. சர்வேச்வரன் தம் பக்கல் பண்ணின வியாமோஹம் தம் ஒருவர் அளவிலுமன்றிக்கே, தம்மோடு சம்பந்த முடையாரளவிலும் வெள்ளமிட்ட படியைச் சொன்னார் கீழ்: இத் திருவாய்மொழியில், 'நம்மோட்டை சம்பந்தமே ஏதுவாக அவன் இப்படி விஷயீகரிப்பானான பின்பு சம்சாரிகளுக்கும் நம் மோட்டை ஒரு சம்பந்தத்தை உண்டாக்கி அவன் கிருபைக்கு விஷயமாக்கு வோம்' என்று, அவர்களுக்கு மோக்ஷப்ரதத்வத்தை அருளிச்செய்கிறார். இத் திருவாய்மொழி தன்னை, 'ஈச்வரத்வம் சொல்லுகிறது' என்று நிர்வஹிப் பாரும் உண்டு; 'மோக்ஷப்ரதத்வம் சொல்லுகிறது' என்று பட்டர் அருளிச் செய்யும்படி. இவைதாம் ஒன்றை ஒன்று விட்டிராது, ஈச்வரனாயிற்று மோக்ஷப்ரதனுமவன்; மோக்ஷப்ரதனும்போது ஈச்வரனாகவேணும். இது தன்னிற் செய்கிறது என்? என்னில்," என்ற வாக்கியங்கள் நம்பிள்ளை ஈடு.

2. 'அத்வேஷத்தைப் பிறப்பித்து' என்றது, "என்னைத் தீமனம் கெடுத்தாய்" என்றதனை நோக்கி. 'ஆபி முக்யத்தைப் பிறப்பித்து' என்றது, "மருவித் தொழுமனமே தந்தாய் வல்லைகாண் என் வாமனனே" என்றதனை நோக்கி. 'ருசியைப் பிறப்பித்து' என்றது, "அறியாக் காலத்துள்ளே அடிமைக் கண் அன்பு செய்வித்து" என்பது போன்றவைகளை நினைத்து.

3. 'இவர் விடிலும் தான் விடாதே' என்றது, யான் ஒட்டி என்னுள் இருத்துவம் என்றிலன்" என்பது போன்றவைகளை நினைத்து.

4. "முடியாதது என் எனக்கேல் இனி", கேசவன்தமர் கீழ் மேல் எமர்", "கோவிந்தன் குடக் கூத்தன்" என்பனபோன்ற திருப் பாசுரங்களை நினைத்து 'இதுதான்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

5. இத் திருவாய்மொழியில் "பிணவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே" என்று வருகின்றதனை நோக்கி 'மோக்ஷப் பரதத்துவத்தை அருளிச்செய்ய' என்கிறார்.

யாதே [1]மால்யவான் துடக்கமானுர் ராவணனுக்குச் சொன்ன ஹிதம் போலேயாக, நாம் நம் அனுபவத்தைவிட்டு இவர்களோடு துவக்கு உண்கிறதுக்குப் பிரயோஜனம் என்? என்று வழிபறிக்கும் நிலத்தில் தம் கைப்பொருள் கொண்டு தப்பினுர் ஹ்ருஷ்டராமா போலே முந்துறமுன்னம் 'நாம் இவர்களைப் போல் ஆகாதொழியப் பெற்றோமே' என்று [2]ஸ்வ லாபத்தை அனுஸந்தித்து இனியராகிறுர். [3]இதில் ஈச்வரத்வம் சொல்லுகிறது என்பாருமுண்டு.

——:——

ஒன்பதாம் திருவாய்மொழி (19)

"எம்மா வீடு"

பிரவேச சங்கி :—[4] "நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்" என்று இவர் பிராப்யமாகச் சொன்ன மோக்ஷத்தை எம்பெருமான் கொடுப்பானுகப் பாரிக்க, அத்தைக் கண்டு தேவர் எனக்கு மோக்ஷம் தந்தருளப் பார்த்ததாகில் இங்ஙனே யாக வேணும். [5]முக்தனுய் நிரதிசய சுகத்தை அனுபவிக்கவுமாம்,

1. 'மால்யவான் தொடக்கமானுர்' என்றது, மாரீசன், ஸ்ரீ விபீஷணுழ்வான் என்னும் இவர்களை.

2. 'ஸ்வலாபத்தை அநுசந்தித்து' என்றது, "வேர் முதலாய் வித்தாய்ப் பரந்து தனிநின்ற, கார்முகில்போல் வண்ணன் என் கண்ணனை நான் கண்டேனே" என்றதனை நோக்கி.

3. "இருவர் அவர் முதலும் தானே", "தீர்த்தன் உலகளந்த சேவடிமேல்" என்பன போன்ற திருப்பாசுரப் பகுதிகளை நோக்கி 'ஈச்வரத்வம் சொல்லுகிறது என்பாரும் உண்டு' என்கிறுர்.

4. "மேலே, அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ? என்று இவர் தாமும் விரும்பி, 'நலமந்தமில்லது ஓர் நாடு புகுவீர்' என்று பிறர்க்கும் இவர் உபதேசிக்கையாலே, இவர்க்கு மோக்ஷம் பெறுவதில் விருப்பம் இருக்கிறது என்று பார்த்து" என்ற வாக்கியங்களை முன்னே கூட்டிக்கொண்டு இந்த அவதாரிகையைத் தொடங்குக. 'நலம் அந்த மில்லது' என்பது திருவாய்மொழி, 2. 8 : 4.

"எம் மா வீட்டுத் திறமும் செப்பம்", "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே" என்பன போன்ற திருப்பாசுரங்களை நோக்கி இவ்வவதாரிகை கூறப்படுகிறது.

6. "சிறப்பில் வீடு" என்ற திருப்பாசுரத்தை நோக்கி 'முக்தனுய்' என்று தொடங்கி அருளிச்செய்கிறுர்.

[1]ஆத்மப்ராப்தி, ஆத்மநாசம், நரகமென்ற இவற்றில் எனக்கு ஒரு நிர்பந்தமில்லை; உனக்காக வருமன்று இவையித்தனையும் வரவமையும், எனக்காக வருமன்று இத்தனையும் வேண்டா; ஆனபின்பு [2]"தனக்கேயாக என்னைக் கொள்ளுமீதே" என்று உனக்கே யாம்படி தரவேணுமென்று அவனைப் பிரார்த்திக்கிறார்.

[3]ஆனால் இத்தனை நாள் நிஷ்கர்ஷியாது ஒழிவான் என்? என்னில், அவன் மேன்மேலென குணநுபவத்தைப் பண்ணி வைக்கையாலே அவஸரம் பெற்றிலர். இவனுக்கு இந்த வியாமோஹம் முடிய அனுர்த்தியா நின்றது, நாமிவனை மீட்டாகிலும் பிராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுவோமென்று அவனை 'நீ நில்' என்று நிறுத்தி நிஷ்கர்ஷிக்கிறார்.

[4]எம்பார் இத்திருவாய்மொழி யருளிச்செய்யப்புக்கால் இருந்தவர்களைப் போகவிட்டுக் கதவு அடைத்து குஹ்யமாக வருளிச் செய்வர். பிரஸித்தமான இத்தை நிஷ்கர்ஷிப்பான்

---

1. "சிறப்பில்வீடு" என்று சிறப்பித்தவதனால் கேவலம் வீடும் உண்டு என்று கொண்டு 'ஆத்மபிராப்தி' என்கிறார். "எய்தற்க" என்றதனால் பலித்த பொருளை நோக்கி 'ஆத்மநாசம்' என்கிறார். ஆத்மநாசம் - சம்சாரம்.

2. திருவாய்மொழி, 2. 9 : 4.

3. "ஆனால் இதுதான் பின்னை இத்தனைநாள் நிஷ்கர்ஷியாதொழிவான் என்? என்னில், அவன் மேன்மேலென குணநுபவம் பண்ணுவிக்கையாலே அதற்குக் காலம் போந்த தித்தனை அல்லது இது நிஷ்கர்ஷிக்க அவசரம் பெற்றிலர். ஆனாலும் இப்போதும் குணநுபவமே அன்றோ பண்ணுகிறது என்னில், அது அப்படியே; அவன் தன் பக்கலிலே மேன்மேலெனப் பண்ணுகிற விருப்பத்தைக் கண்டு, 'இவனுக்கு இவ்வியாமோஹம் முடிய அநுவர்த்திப்பதொன்றாயிருந்தது; நாம் இவனை மீட்டாகிலும் நம்முடைய பிராப்யத்தை நிஷ்கரிப்போம்' என்று பார்த்து, 'நீ இங்ஙனே நில்' என்று அவனை நிறுத்திவைத்துப் பிராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுகிறார்" என்பது நம்பிள்ளை ஈடு.

4. இது மிக மிக இரகசியமானது என்பதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'எம்பார்' என்று தொடங்கி.

'பிரசித்தமான இத்தை நிஷ்கரிப்பான் என்?' என்றதற்குக் கருத்து, திருமந்திரத்திலே நடுப்பதத்தாலே சொல்லப்படுகின்ற பாரதந்திரியத்திற்குத் தகுதியாக மலர் சந்தனம் முதலியவைகளைப் போன்று அவனே தன் பேறாக விநியோகம் கொள்வதாயன்றோ இருப்பது, இப்போது இவர் நிஷ்கரிக்கவேண்டிய அம்சம் யாது என்பது.

என்? என்னில், சர்வேச்வரன் இவ்வாத்மாவுக்குச் சேஷியாய் இவனும் சேஷபூதனாய் அவன் உபாயபாவமும் நித்யமாய் இருக்கச்செய்தே [1]இவன் ஸ்வீகரிக்க வேண்டுகையாலும், அவன் [2]நினைத்தபோது நினைத்தபடி விநியோகம் கொள்ளும் ஸ்வதந்திரன் ஆகையாலும் நிஷ்கர்ஷித்தே பெறவேணும். ஆகையால் [3]உத்தர வாக்கியத்திலும் இவ்வர்த்தம் நிஷ்கர்ஷிக்கப்பட்டது,

இப்பரிமாற்றம் லோகத்தில் காணுமதல்ல; இவ்வாழ்வார் பக்கலிலும்[4]பரதாழ்வான் இளையபெருமாள் பக்கலிலும் காணுமித்தனை. "விலலாப".

---

1. 'இவன் ஸ்வீகரிக்க வேண்டுகையாலும்' என்றது, சர்வ முக்தி பிரசங்க பரிஹாரார்த்தமாக இவன் ஸ்வீகரிக்கவேண்டுகையாலும் என்றபடி. ஸ்வீகரித்தல் - புகல் ஒன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன் என்றாற்போல்வது.

2. 'நினைத்தபோது நினைத்தபடி விநியோகம்கொள்ளும் ஸ்வதந்திரன்' என்றது, ஐஸ்வர்யாதிகளையாவது, தன் பயன் கருதிச் செய்யப்படும் கைங்கர்யத்தையாதல் கொடுத்து விநியோகம் கொள்வான் ஒருவன் ஆகையாலே என்றபடி.

3. பேறு இப்படிப்பட்டது என்பதற்குப் பிரமாணம் யாது? என்ன, 'உத்தவாக்கியத்திலும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, துவயம் என்னும் மந்திரரத்நத்திலே பின் வாக்கியத்தில் "நமஸ்ஸாலே உனக்கே நாம் ஆட்செய்வோம் என்னும்படியாகவேணும்" என்று பிராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுகின்றதே என்றபடி.

4. 'பரதாழ்வான் பக்கலிலும் இளையபெருமாள் பக்கலிலும் காணுமித்தனை' என்றதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'விலலாப' என்றும், 'குருஷ்வ' என்றும் தொடங்கி.

"விலலாப ஸபாமத்யே ஜகர்ஹே ச புரோஹிதம்"
"ராஜ்யம்ச அஹம்ச ராமஸ்ய தர்மம் வக்து மிஹார்ஹதி
கதம் தஶரதாஜ் ஜாதோபவேத் ராஜ்யாபஹாரகஃ"

என்பன, ஸ்ரீராமா. அயோத். 82 : 10-11.

இதற்கு நம்பிள்ளை அருளிச்செய்த பொருள் வருமாறு :-"விலலாப ஸபாமத்யே - கைகேயி 'ராஜன்' என்ற சொல் பொறுக்கமாட்டாமே திரளிலே வந்து கூப்பிட்டானிறே. ஒரு திரளாக இருந்து என்னுடைய சேஷத்வத்தை அபஹரிப்பதே! ஜகர்ஹேச - சந்தியாவந்தனத்திற்குப் பிற்பாடரை சிஷ்டகர்ஹை பண்ணுவாரைப்போலே கர்ஹித்தான். புரோஹிதம் - அழகியதாக இக் குடிக்கு முன்னோடி இதம் பார்த்தாய். ஸபாமத்யே புரோஹிதம் ஜகர்ஹே- 'நியமாதிக்ரமம் ரஹஸி போதயேத்' என்ற நிலையும் பார்த்திலன். ராஜ்யஞ்ச அஹஞ்ச ராமஸ்ய - ஒருவனுக்கு இரண்டு வஸ்து சேஷமானால் ஒன்றை ஒன்று நிர்வஹிக்குமோ? ஆனால், ராஜ்யம் தான் என்னை ஆண்டாலோ? தர்மம் வக்தும் இஹார்ஹதி-பெருமாள் காடேறப் போனார், சக்கரவர்த்தி துஞ்சினான், நாடு அராஜகமாகக் கிடக்க ஒண்ணாது; நின்றாரில் பிரதானர் தலையிலே

[1]"குருஷ்வ"-அந்வயத்தாலே தரிக்கக் கடவ வஸ்துவை வ்யதிரேகித்து நிற்கச் செல்லுகையாவது அழிக்கையிறே. [2]"ஏவ முக்தஸ்து" [3]"பரவாநஸ்மி". உம்முடைய அஸ்மிதைபோல் அன்று காணும் என்னுடைய அஸ்மிதை. இந்தப் பாரதந்திரியத்தையிறே இவ்வாழ்வார் அபேக்ஷிக்கிறது. 'இதுதான் ஒருவன் பேக்ஷிக்குமதல்ல, அபேக்ஷியாமையாலே நாம் கொடுத்துப் போருமதல்ல; ஆகையால் அவ்வழி புல்லெழுந்து போயிற்றுக் காணும்' என்று அவன் அனுதரித்திருக்க; புருஷன் அர்த்

முடியை வைக்கவேணும் என்று பார்த்தாயித்தனை போக்கி, இதுக்கு விஷயபூதனை என்னைப் பார்த்து வார்த்தை சொல்லிற்றில்லை. தஸ்ரதாஜ் ஜாதோ பவேத் ராஜ்யாபஹாரக:- அவர் பொகட்டுப்போன ராஜ்யத்தை அபஹரித்து, அவரைப் பிரிந்த அநந்தரத்திலே முடிந்தவன் வயிற்றிலே பிறந்தேனும்படி எங்ஙனே நான்?" என்பது.

1. குருஷ்வம் மாம் அநுசரம் வைதர்ம்யம் நேய வித்யதே
க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி தவசஅர்த்த: ப்ரசல்பதே.
என்பது, ஸ்ரீராமா. அயோத். 31 : 22.

அடியவனை என்னை உன்னோடு சஞ்சரிக்கின்றவனுகச் செய்தருள வேண்டும்; என்னை அழைத்துப் போவதில் தர்ம விரோதம் இல்லை, தேவரீருக்கே பயன் சித்திக்கிறது; நான் தேவரீருக்குக் கைங்கர்யத்தைச் செய்து அந்தக் கைங்கர்ய பலத்தை அடைந்தவனுக ஆகப் போகிறேன் என்பது இதன் பொருள்.

2. ஏவ முக்தஸ்து ராமேண லக்ஷ்மண: ஸம்யதாஞ்சலி:
ஸீதா ஸமக்ஷம் காகுத்ஸ்தம் இதம் வசநம் அப்ரவீத்.
என்பது, ஸ்ரீராமா. ஆரண். 15 : 6.

"'நீரும் நிழலும் வாய்த்திருப்பதொரு பிரதேசத்தைப் பார்த்துப் பர்ணசாலையைச் சமையும்' என்ன, 'நம் தலையிலே ஸ்வாதந்த்ர்யத்தை வைத்தபோதே பெருமாள் நம்மைக் கைவிட்டார். ஏவ முக்தஸ்து ராமேண -'இதுக்கு முன்பெல்லாம் நம் குறையாலே இழந்தோம்' என்றிருந்தோம்; இவர் தாமே நம் ஸ்வரூபம் அழியக்காரியம் பார்த்தார், இனி, 'நம்ஸ்வரூபம்' என்று ஒன்று உண்டோ? என்று வேறு பட்டார். லக்ஷ்மண:-பாரதந்திரியத்தை நிரூபகமாகவுடையவர். ஸம்யதாஞ்ஜலி:-நாம் நம் ஸ்வரூபத்தை அழித்துக்கொண்ட அன்று நோக்குகை யன்றிக்கே, சேஷிதானே அழித்த அன்றும் ஸ்வரூபத்தைத் தரவற்றாயிற்று அஞ்ஜலி. சர்வாபிமத சாதனமாயிற்று. ஸீதா ஸமக்ஷம் - பண்ணின அஞ்சலிக்கு அந்யபரதை பாவிக்க ஒண்ணுதவள் சந்நிதியிலே. காகுத்ஸ்தம் - பிராட்டி சந்நிதியும் மிகையாம்படியான குடியிற் பிறப்பையுடையவரை. இதம் வசநம் அப்ரவீத் - 'இவ்வார்த்தையைச் சொல்லுவானே' என்று கொண்டாடுகிருன் ருஷி" என்பது மேற் சுலோகத்துக்கு நம்பிள்ளை கூறிய வியாக்கியானம்.

3. பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷ ஶதம் ஸ்திதே
ஸ்வயந்து ருசிரே தேஶே க்ரியதாமிதி மாம்வத.
என்பது, ஸ்ரீராமா. ஆரண். 15 : 7.

ககுத்த வம்சத்தில் பிறந்தவரே! தேவரீர் இருக்கும் காலமெல்லாம் நானும் பரதந்திரனுகவே இருக்கிறேன்; ஆதலால், தேவரீரே இன்னஇடத்

திக்க வருமதிறே புருஷார்த்தமாவது; இவ்வளவும் செய்ய வேணுமென்று இவர் அபேக்ஷிக்க, [1]அவனும் தலைகுலுக்கப் பெற்றாராய்த் தலைக்கட்டுகிறது.

——— :: ———

பத்தாந் திருவாய்மொழி (20)

"கிளரொளி இளமை"

ப்ரவேச ஸங்கதி :— [2]நிஷ்கர்ஷித்த ப்ராப்யம்பெறுகைக்குத் திருமலையை ஆச்ரயிக்கிறார்.

——— :: ———

தில் பர்ணசாலையைக் கட்டுக என்று என்னை நியமித்தருள வேண்டும் என்பது இதன் பொருள். தேவரீர் ஸ்வதந்திரர்; நான் என்றென்றும் பரதந்திரன் என்னும் இப் பொருளையே 'உம்முடைய அஸ்மிதை போல் அன்று காணும் என்னுடைய அஸ்மிதை' என்ற வாக்கியத்தால் காட்டுகிறார்.

1. இத் திருவாய்மொழியில் வருகின்ற "விடலில் சக்கரத்தண்ணலை மேவல், விடலில் வண்குருகூர்ச் சடகோபன்" என்றதனை நோக்கி 'அவனும் தலை குலுக்கப் பெற்றாராய்' என்கிறார்.

2. "கீழ் எம் மா வீட்டிலே நிஷ்கரித்த பிராப்யம் பெறுகைக்குத் திருமலையை ஆச்ரயிக்கிறார் என்று ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி." என்பது நம்பிள்ளை ஈடு. "தளர்வில ராகில் சார்வது சதிரே", "பதியது வேத்தி எழுவது பயனே" என்பன போன்று இத் திருவாய்மொழியில் வருகின்ற திருப்பாசுரங்களை நினைத்து இவ் வவதாரிகை கூறப்படுகிறது.

மூன்றாம் பத்து

முதல் திருவாய்மொழி

— (o) —

"முடிச் சோதியாய்" (21)

பிரவேச சங்கி :—[1] "மருளில் வண்குருகூர் வண்சடகோபன்" என்று அவன் கல்யாணகுண விஷயமாக அஜ்ஞானம் இல்லை என்றார் கீழ். இது கவி விஷயந்தன்னில் ஒரு அஜ்ஞானம் அனுவர்த்திக்கிறபடி சொல்லுகிறது. கீழ்ச் சொன்ன அஜ்ஞானத்துக்கடி கர்மம். இதுக்கடி விஷய வைலக்ஷண்யம். [2] நித்யஸூரிகளுக்குமுள்ளது ஒன்றிறே இது. "ஆங்கார வாரம்". [3] இது ஸ்வரூபமுள்ளதனையும் அனுவர்த்திக்கையாலே

---

1. "பொருள் என்றிவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல், மருள் இல் வண் குருகூர் வண்சடகோபன்' என்று அவன் கல்யாணகுண விஷயமாக அஜ்ஞானம் இல்லை என்றார் கீழில் திருவாய்மொழியில்: அந்த குணாதிக விஷயந்தன்னில் ஓர் அஜ்ஞானம் அநுவர்த்திக்கிறபடி சொல்லுகிறார் இதில்'' என்பது நம்பிள்ளை ஈடு.

மேல் திருவாய்மொழியில் கூறிய பொருளை அநுவதித்துக் கொண்டு இத் திருவாய்மொழியின் முதற் பாசுரத்தோடே ரசோக்தியாக இயைபு அருளிச்செய்கிறார் 'மருளில்' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 2. 10 : 11.

2. அஜ்ஞானம் தியாஜ்யம் அன்றோ? என்ன, அதற்கு விடையும் பிரமாணமும் கூறப்படுகின்றது 'நித்திய சூரிகளுக்கும்' என்று தொடங்கி.

ஆங்கார வாரமது கேட்டு அழல் உமிழும்
பூங்கார் அரவணையான் பொன்மேனி - யாம்காண
வல்லமே யல்லமே? மாமலரான் வார்சடையான்
வல்லரே யல்லரே வாழ்த்து. நான்முகன் திருவந். 10.

பகவானுடைய சௌந்தர்யம் சௌகுமார்யங்கள் காரணமாக வருகின்ற இந்த அஜ்ஞானம் நித்யசூரிகளுக்கும் உண்டு என்பதற்கு இது பிரமாணம்.

3. இதனைத் தியாஜ்யம் என்று சொல்லித் தவிர்க்கிறோம் என்றாலும் தவிராது என்கிறார் 'இது ஸ்வரூபமுள்ளதனையும்' என்று தொடங்கி.

ஸ்வரூபானுபந்தி. [1] திருமலையை யனுபவித்துக்கொண்டு வர விஸ்மிதராகிறார்.

—— :: ——

இரண்டாந் திருவாய்மொழி (22)

"முந்நீர் ஞாலம்"

பிரவேச சங்கதி:—[2]பர வியூஹாதிகளில் அன்றிக்கே திருமலையிலே அனுபவிக்க இழிந்தவர் மேல்மேலென அனுபவிக்குமதொழிய இப்படி நோவுபடுகைக்கு ஹேது, பர வியூஹாதிகளோடு அர்ச்சாவதாரத்தோடு வாசியற எங்குமொக்க

1. மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் நேரே இயைபு 'திருமலையை' என்று தொடங்கும் வாக்கியம்.

"திருமலையை அநுபவித்துக்கொண்டு வாராநிற்கச்செய்தே, 'வட மாமலை உச்சியை' என்னுமாபோலே திருமலையில் ஏகதேசம் என்னலாம்படியாய், கல்பகதரு பஹுசாகமாகப் பணைத்துப் பூத்தாற் போலே நிற்கிற அழகருடைய சௌந்தர்யத்தை அநுபவித்தார். வேதங்களோடு வைதிக புருஷர்களோடு பிரஹ்ம ருத்திராதிகளோடு வாசியற ஸ்வயத்நத்தால் காணும் அன்று காண ஒண்ணுதபடியாய் இருக்கிற இருப்பையும், தானே கொடுவந்து காட்டுமன்று ஜன்ம விருத்தாதிகளால் குறைய நின்றார்க்கும் காணலாயிருக்கிற இருப்பையும் அநுசந்தித்து விஸ்மிதராகிறார்" என்பது நம்பிள்ளை ஈடு.

2. "பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கச் செய்தே, சீராமப்பிள்ளை 'இவர் பரத்துவாநுபவத்தை ஆசைப்பட்டு, அது ஒரு தேச விசேஷத்திலே போனால் அநுபவிக்குமதாய் நோவுபடுகிறாரல்லர்; அவதாரங்களில் ஆசைப்பட்டு, 'பிற்பாடரானோம்' என்று நோவுபடுகிறாரல்லர்; உகந்தருளின நிலங்களிலேயாய், அது தன்னிலும் திருமலையிலேயாகில் அநுபவிக்க இழிந்தது, பின்னை மேன்மேலென அநுபவிக்குமதொழிய இவர் இழந்து நோவுபடுகைக்குக் காரணம் என்? என்று கேட்க" என்ற நம்பிள்ளை ஈட்டு வாக்கியங்களை முன்னே சேர்த்துக் கொள்க.

மேல் திருவாய்மொழியிலே அழகருடைய அழகினை அநுசந்தித்தவர் மேன்மேலென அநுபவியாமல் இத் திருவாய்மொழியில் துக்கிப்பது என்? என்பது கேள்வி. அழகருடைய அழகு அளவிட முடியாத தாகையாலே, அளவிற்குட்படுத்தி அநுபவிக்கமாட்டாமல் இதற்குக் காரணம் கரணங்களின் குறைவு என்று சோகிக்கிறார் என்பது அதற்குப் பட்டர் அருளிச்செய்யும் விடை.

பூர்ணமாயிருக்கையாலே. [1]குறைந்து தோற்றுகிற இடம் பிரதிபக்தாக்களுடைய பிரதிபத்தி தோஷத்தாலே. [2]கடலருகே போகா நின்றால் கண்ணால் முகக்கலா மளவிறே காண்பது; அப்படியே அழகருடைய ஸௌந்தர்யாதிகளை அனுபவிக்கப் புக்கவிடத்தில் விளாக்குலை கொண்டு அனுபவிக்கலா யிருந்த தில்லை; [3]பெருவிடாய்ப்பட்டவன், சேர்ந்த குளிர்ந்த தண்ணீர் ஸந்நிஹிதமா யிருக்க, ஆஸ்யம் பீஹிதமானால் துடிக்குமா போல விஷயமும் ஸந்நிஹிதமாய் விடாயும் மிக்கு இருக்கச் செய்தே, அபரிச்சின்ன விஷயமாகையாலே பரிச்சேதித்து அனுபவிக்கவொண்ணா தொழிய, [4]'இது விஷய தௌர்ஜன்யத்தாலே வந்தது' என்று அறியமாட்டாதே, தம்முடையகரண சங்கோசத்தாலே வந்தது என்று பார்த்து, அவன் முதலிலே இத்தைக் கழித்துத் தன்னை யனுபவிக்கைக்காக [5]ஜகத் சிருஷ்டியைப்பண்ணி, சிருஷ்டமான ஜகத்திலே [6]தான் வந்து அவதரித்தும், அதுக்கு மேலே எங்கணும் [7]அந்தர்யாமியாய் நின்று சத்தாதிகளை நிர்வஹித்தும், இப்படி அவன் பண்ணின

---

1. ஆனால் நம்மைப் போன்றவர்களுக்கு 'எங்கும் ஒக்க பூர்ணமாகத் தோற்றவில்லையே? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'குறைந்து' என்று தொடங்கி.

2. ஆனால், நோவுபடுகைக்குக் காரணம் என்? என்ன, அழகருடைய அழகு அளவிடமுடியாத தாகையாலே அளவிற்குட்படுத்தி அநுபவிக்க முடியாமல், 'இதற்குக் காரணம் கரணங்களின் குறைவன்றோ' என்று சோகிக்கிறார் என்று திருஷ்டாந்த மூலமாக விடை கூறுகிறார் 'கடலருகே' என்று தொடங்கி.

3. அப்படி அநுபவிக்க முடியாவிட்டால் அவனை விட்டுவிடலாகாதோ? என்ன, அவனை அநுபவிக்கவேண்டும் என்னும் ஆசையாலே விடமாட்டுகின்றிலர் என்பதனை ஒரு திருஷ்டாந்த மூலம் கூறுகிறார் 'பெருவிடாய்ப் பட்டவன்' என்று தொடங்கி. பிஹிதமானால் - வியாதியால் பீடிக்கப்பட்டால்.

4. ஆயின், இச் சரீர சம்பந்தத்தை அறுத்துத் தந்தருள வேண்டும் என்று பிரார்த்திப்பான் என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'இது விஷய தௌர்ஜன்யம்' என்று தொடங்கி. தௌர்ஜன்யம் - வைலக்ஷண்யம். இத்தை - சரீர சம்பந்தத்தை.

5. 'ஜகத் சிருஷ்டியைப் பண்ணி' என்றது, "முந்நீர் ஞாலம் படைத்த எம் முகில் வண்ணனே" என்றதனை நோக்கி.

6. "வன்மா வையம் அளந்த எம் வாமனா" என்றதனை நோக்கித் 'தான் வந்து அவதரித்தும்' என்கிறார்.

7. "என்றும், ஏழ்ச்சிக் கேடின்றி எங்கணும் நிறைந்த எந்தாய்" என்றதனை நோக்கி 'அந்தர்யாமியாய் நின்று' என்கிறார்.

உபகாரங்களை யெல்லாம் நான் [1] அசத்கல்பம் ஆக்கினேன்; இனி, அவனைக் கிட்டுகை என்று ஒரு பொருள் உண்டோ? என்று இவர் [2] சோகிக்க, [3] கரண சங்கோசமில்லாதாரும் நம்மை யனுபவிக்குமிடத்தில் இப்படியே காணும் படுவதென்று இவர் இழவைப் பரிஹரிக்கக்கோலி, நீர் நினைத்த வகைகளெல்லாம் பரிமாறுகைக்கிடாக வடக்குத் திருமலையிலே வந்து நின்றோம், நீர் அங்கே வந்து அனுபவியும் என்று அங்கு நின்ற நிலையைக் காட்டிட, சமாஹிதர் ஆகிறார்.[4]

[5] தெற்குத் திருமலையிலே அனுபவிக்கக் கோலிப் பெறாது நோவுபட்டவரை வடக்குத் திருமலையிலே நிற்கிற நிலையைக் காட்டிச் சமாதானம் பண்ணினபடி எங்ஙனே? என்னில், [6] முலைவேண்டி யழுத பிரஜைக்கு ஏதேனுமொரு முலை கொடுத்துப் பரிஹரிக்கு மித்தனையிறே. இன்னமுலை வேணும் என்றால், அது தரவேண்டாவோ? என்றால், இவர் [7] வழி திகைத் தலமருகையாலே அது வேண்டா; 'அதுவே வேணும்; அது

1. 'அசத்கல்பமாக்கினேன்' என்றது, "அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன்" என்றதனை நோக்கி.

2. "உலகமெல்லாம், தாவிய அம்மானை எங்கினித் தலைப்பெய்வனே" என்றதனை நோக்கிச் 'சோகிக்க' என்கிறார். இதற்குப் பின்னர் "நீர் கரண சங்கோசத்தால் வந்தது என்று சோகிக்க வேண்டா" என்னும் ஒரு வாக்கியத்தைச் சேர்த்துக் கொள்க.

3. "ஒழிவில் காலமெல்லாம்" என்ற மேல் திருவாய்மொழியை நோக்கிச் சமாதானம் செய்யும் பிரகாரத்தைக் காட்டுகிறார் 'கரண சங்கோசம்' என்று தொடங்கி. கரண சங்கோசம் இல்லாதார் - நித்தியசூரிகள். இந்த வாக்கியம், மேல் திருவாய்மொழியில் "வானவர் வானவர் கோனொடும், சிந்து பூ மகிழும் திருவேங்கடம்" என்ற திருப்பாசுரத்தை நோக்கியது.

4. இத் திருவாய்மொழியில் வருகின்ற "என் கண்ணனைக் கண்டு கொண்டு, நிலைப்பெற்று என் நெஞ்சம் பெற்றது நீடுயிரே" என்ற திருப் பாசுரத்தை நோக்கிச் 'சமாஹிதராகிறார்' என்கிறார்.

5. பொதுவானதொரு சங்கையை அநுவதிக்கிறார் 'தெற்குத் திருமலையிலே' என்று தொடங்கி.

6. இந்தப் பொதுவான சங்கைக்கு மூன்று வகையில் விடை கூறுகிறார் 'முலைவேண்டி' என்று தொடங்கி. இங்கே,

"தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும்
என்னு மிவையே முலையா வடிவமைந்த"

என்னும் அடிகளை நினைவு கூர்க: (பெரிய திருமடல்)

7. 'வழி திகைத்தலமருகின்றேன்' என்பது திருவாய்மொழி.

வன்று இது' என்கிற தெளிவு இல்லையாயிற்று; வடமலை நிலை யனுபவிக்கலாம்படி யிருக்கையாலே.[1] இனித்தான், ஒரு வஸ்து தான் ஒருபோது தாரகமாய் அதுதானே மற்றொருபோது [2]பாதகம் ஆகாநின்றதிறே; அது இவர்க்குத் தெரியாது. குணவிஷ்காரத்தாலே தரிப்பிக்கிற ஈச்வரனுக்குத் தெரியும். மேலும், [3] ஆரியர்கள் இகழ்ந்த மிலேச்ச பூமியிலுள்ளார்க்கு முகங் கொடுக்கிற நீர்மையிறே அங்கு. கானமும் வானரமும் வேடுமானவற்றுக்கு முகங்கொடுக்கும் நீர்மையிறே இங்கு.

———(0)———

மூன்றாந் திருவாய்மொழி (23)

——:——

"ஒழிவில் காலம்"

ப்ரவேச சங்கி:—[4] "நிலைப்பெற்றென்னெஞ்சம் பெற்றது நீடுயிரே" என்று தம் ஸ்வரூபம் பெற்றவாறே, ஸ்வரூபானுரூபமான அடிமை செய்யவேணும் என்று பாரிக்கிறார். [5]பிரக்ருதி சம்பந்தத்தால் வந்த கரண சங்கோசத்தை அநுஸந்தித்து நினைத்தவகைகளெல்லாம் பரிமாறப் பெறுமை

1. இரண்டாவது சமாதானம், 'இனித்தான்' என்று தொடங்குவது.

2. 'பாதகம் ஆகாநின்றதிறே' என்றது, அப்படியே, தெற்குத் திருமலையில் நிலை அளவிடமுடியாததாகையாலே பாதகமாய், வடக்குத் திருமலையில் நிலை கண்டு கொண்டு அநுபவிக்கலாம்படி இருக்கையாலே அந் நிலையைக் காட்டி அநுபவிப்பிக்கிறான் என்றபடி. "ஆமத்தில் பாதகமான சோறுதானே அது கழிந்தவாறே தாரகமாகாநின்றதிறே; 'இவர்க்கு இன்னது இன்ன போது தாரகமாம்: இன்னது இன்னபோது பாதகமாம்' என்று தெரியாது; குணவிஷ்காரத்தாலே தரிப்பித்துக் கொண்டு போருகிற ஈச்வரனுக்கும் இவருக்கும் தெரியுமத்தனை இதுதான்" என்பது நம்பிள்ளை ஈடு.

3. மூன்றாவது சமாதானம், 'ஆரியர்கள் இகழ்ந்த' என்று தொடங்குவது. 'அங்கு' என்றது, அழகர் மலையை. 'இங்கு' என்றது, திருவேங்கடத்தை. என்றது, அழகர் திருமலையைக் காட்டிலும் திருவேங்கடத்தில் சௌசீல்யம் என்ற குணம் மிக்கு இருக்கையால், அதனைக் காட்டி அநுபவிப்பிக்கிறான் என்பது கருத்து.

4. 'நிலைப்பெற்று' என்றது முதல் 'பாரிக்கிறார்' என்றது முடிய, மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் உள்ள இயைபினைச் சுருங்கக் கூறுவது. 'நிலைப்பெற்று' என்பது, 2. 2: 11.

5. மேலே சுருங்கக் கூறிய இயைபினை விவரிக்கிறார் 'பிரகிருதி' என்று தொடங்கி.

யாலே நொந்து, அவன் முதலிலே தன்னை அனுபவிக்கைக்கு உறுப்பாக அனேக உபாயங்களைப் பார்த்து வைத்தான்; அவை யடையத் தப்பின எனக்கு அவனைக் கிட்டி அனு பவிக்கை என்று ஒரு பொருள் உண்டோ? இழந்தேனே அன்றோ? என்று நைராச்யத்தோடே முடியப் புக, ஆழ்வீர்! உம்மை இவ்வுடம்போடே அடிமை கொள்ளுகைக்காக வடக்குத் திருமலையிலே வந்து நின்றோம்; இனித்தான், [1]உமக்கு இவ்வுடம்பு நம்மோட்டை அனுபவத்துக்கு விரோதியு மன்று; நீர் கரண சங்கோசத்தாலே நோவுபடுகிறீராகில் முத லிலே [2]இது இல்லாதாரும் நம்மை அநுபவிக்கும்போது படும் பாடு இது காணும்; அவர்களும் வந்து அனுபவிக்கிற இடம் காணும் [3]இவ்விடம்; ஆனபின்பு, இவ்வுடம்போடே நீர் நினைத்த வகைகளெல்லாம் பரிமாறி அனுபவியும் என்று சமாதானம்பண்ண, [4]சமாஹிதராய், [5]தர்மி ஒன்றாகையாலே விஷயம் எங்கு மொக்க [6]"அந்தமில்" பூர்ணமான பின்பு, ஒரு தேச விசேஷத்திலே செய்யக்கடவ அடிமைகளெல்லாம் இந் நிலத்திலே செய்யலாம்படி குறையற்றிருந்ததாகில், [7]இவ் வுடம்பும் நமக்குப் பாங்காயிருந்ததாகில், இனித்தான் அங்குப்

---

1. 'உமக்கு - விரோதியும் அன்று' என்றது, "முடியானே" என்ற திருவாய்மொழியிற் கூறிய கரணங்களை யுடையவராகையாலே விரோதியும் அன்று என்றபடி.

2. 'இதில்லாதாரும்' என்றது, நித்தியசூரிகளை. "வானவர் வானவர் கோனொடும், சிந்து பூ மகிழும் திருவேங்கடம்" என்றதனை நோக்கி இது கூறப்படுகிறது.

3. 'இவ்விடம்' என்றது, திருமலையை.

4. 'சமாஹிதராய்' என்றது, மேல் திருவாய்மொழியில் உள்ள "நிலைப் பெற்று என்னெஞ்சம் பெற்றது நீடுயிர்" என்ற திருப்பாசுரத்தை நோக்கி.

5. கைங்கர்யம் செய்வதற்கு பூர்ணனை பரமபதநாதனைக வேண் டாவோ? என்ன, 'தர்மி' என்று தொடங்கி அதற்கு விடை கூறப்படுகிறது.

6. 'அந்த மில் பூர்ணமான பின்பு' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "அந்தமில் புகழ்க் கார் எழில் அண்ணலே" என்ற திருப்பாசுரத் தின்படியே அர்ச்சாவதாரம் எல்லாக் கல்யாண குணங்களும் நிறைந்திருப்பத னாலே என்றபடி.

7. 'இவ்வுடம்பும் நமக்குப் பாங்காய் இருந்ததாகில்' என்றது, விரோதி யாகையன்றிக்கே அடிமை செய்கைக்குப் பாங்காய் இருந்ததாகில் என்றபடி.

போனலும் [1] "ஶோஸ்நுதே ஸர்வான் காமான்" என்று குணனுபவமிறே பண்ணுவது; அந்த சீலாதிகுணங்கள் தாம் ஸ்புடமாயிருக்கிறதும் இங்கேயாகில், அங்குள்ளாரும் இங்கே வந்து அடிமை செய்வார்களாகில், நாம் இங்கே அடிமை செய்வோம் என்று பார்த்து, பசியும் உண்டாய் கையிலே சோறும் உண்டாயிருக்கிறவன் [2] "தெண்ணிறை","மொய்த்த" நீரும் நிழலும் கண்டால் உண்ணப் பாரிக்குமா போலே [3] அடிமை செய்யப் பாரிக்கிருர்.

[4] அடிமை செய்ய ஒருப்படுவார்க்கு எல்லாம் உள்ளதொன் ருயிற்று பாரித்துக்கொண்டு இழிகை. [5] "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்றிறே இளையபெருமாள்படி. [6] போஜன பர ஞய் இருக்குமவன் ஊண் அத்யாயம் படிக்குமாபோலே இவ ருடைய மநோரதம்.

——:——

1. "ஸ: அஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா" என்பது, ஆனந்தவல்லி. அவன் எல்லாக் கல்யாண குணங்களையும் முற்றறிவினஞன பரமாத்மாவோடு அநுபவிக்கிருன் என்பது இதன் பொருள்.

2. "தெண்ணிறை", "மொய்த்த" என்றது, 'நீரும் நிழலும் கண்டால்' என்பதற்கு எடுத்துக் காட்டப்படும் திருஷ்டாந்தம். "தெண்ணிறைச் சுனை நீர்த் திருவேங்கடம்", "மொய்த்த சோலை மொய் பூந்தடம் தாழ்வரே" என்பன இத் திருவாய்மொழியில் வரும் திருப்பாசுரப் பகுதிகள். 'தெண்ணிறை' என்பதனை நீருக்கும், 'மொய்த்த' என்பதனை நிழலுக்கும் கொள்க.

3. 'அடிமை செய்யப் பாரிக்கிருர்' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "ஒழிவில் காலம் எல்லாம்" என்ற முதல் திருப்பாசுரத்தை நோக்கி.

4. அடிமை செய்யப் பாரிப்பான் என்? அடிமை செய்யலாகாதோ? என்ன? அதற்கு விடை கூறப்படுகிறது 'அடிமை செய்ய' என்று தொடங்கி.

5. இங்ஙனம் பாரித்துக் கொண்டு இழிதலை எங்கே கண்டோம்? என்ன, 'அஹம்' என்று தொடங்கி அதற்கு விடை கூறப்படுகிறது.

"அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஶ்ச தே"
என்பது, ஸ்ரீராமா. அயோத். 58: 31.

நான், விழித்துக்கொண்டும் உறங்கிக்கொண்டும் இருக்கிற எல்லா நிலைகளிலும் அடிமை செய்வேன் என்பது இதன் பொருள்.

6. உலக வழக்கிலே உள்ளதொரு திருஷ்டாந்தம் காட்டுகிருர் 'போஜன பரஞய்' என்று தொடங்கி. "போஜனபரஞய் இருக்குமவன் ஊண் அத்தியாயம் படிக்குமாபோலே இருப்பதொன்ருயிற்று, இவருடைய கைங்கர்ய மஞோரதம்" என்பது ஈடு.

நான்காந் திருவாய்மொழி (24)

—:—

"புகழும் நல்லொருவன்"

பிரவேச சங்கி :—[1] "ஒழிவில் காலமெல்லாம்" என்று இவர் பாரிப்புக் கிடாகப் போரும்படி அவன் சர்வாத்ம பாவத்தைக் காட்டினான். [2]இருவரும் இலையகலப்படுக்குமத்தனை போக்கி அவனும் அடிமை கொள்ளமாட்டான், இவரும் அடிமை செய்யமாட்டார். [3] "நசேச்சதி" என்கிறபடியே இத்தலையில் பெற்றது கொண்டு திருப்தனாய்ப் [4] "புணையுங்கண்ணியெனதுடைய வாசகம் செய் மாலையே" என்று இவர் உத்தி மாத்ரத்தையே எல்லா அடிமையுமாகக் கொள்ளும் ஸ்வபாவனிறே அவன். இவ்ரதுதானே [5] ஆராதகாதலிறே. அக்காதலால் குணங்களை அனுசந்தித்துக் [6] "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலு"மவர் இவர்; [7]ஆகையாலே வாசிகமாக அடிமை செய்கிறார்.

---

1. மேல் திருவாய்மொழியிற் கூறிய பொருளையும் அநுவதித்துக் கொண்டு இத் திருவாய்மொழிக்கு இயைபு அருளிச்செய்கிறார் "ஒழிவில் காலம்" என்று தொடங்கி. 'காட்டினான்' என்றதன்பின் 'அங்ஙனம் காட்டிய சர்வாத்ம பாவத்தை அநுசந்தித்து வாசிகமான அடிமை செய்கிறார் இத் திருவாய்மொழியில்' என்ற வாக்கியங்களைக் கூட்டிக் கொள்க.

2. "வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்" என்று பாரித்துவைத்து, வாக்கு அடிமை செய்வான் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'இருவரும்' என்று தொடங்கி.

3. "இருவரும் மாட்டாமைக்குக் காரணம் யாது? என்ன, 'நச இச்சதி' என்று தொடங்கி அதற்கு விடை கூறப்படுகிறது.

"அந்யத் குஶல ஸம்ப்ரஶ்நாத் நச இச்சதி ஜநார்தநஃ

என்பது, பாரதம் உத்யோகபர். 87 : 13. குசலப் பிரச்நமான அன்பினைத் தவிர வேறொன்றையும் கண்ணபிரான் விரும்புவதில்லை என்பது இதன் பொருள்.

4. திருவாய்மொழி, 4. 3 : 2.

5. திருவாய்மொழி, 2. 1 : 11.

6. பெரிய திருவந்தாதி, 34.

7. என்றது, இவர் பக்தி பாரவஶ்யத்தாலே எல்லா அடிமைகளும் செய்யமாட்டாமையாலும், அவனும் வாசிகமான அடிமையையே எல்லா அடிமையுமாகக் கொள்ளும் தன்மையனாகையாலும், பாரித்தபடியே இவரும் செய்து முடிக்கமாட்டார்; அவனும் கொள்ளமாட்டான் என்றபடி.

[1]அவன் ஸ்வரூபத்தோடு குணத்தோடு விபூதியோடு வாசி யற எல்லாம் தத்பிரகாரதயா உத்தேச்யமாய், [2]அவை தம்மை வையதிகரண்யேன அன்றிக்கே, மாணிக்கத்தையும் முத்தை யும் வைரத்தையும் ஒரு ஆரத்திலே சேர்த்து அனுபவிப் பாரைப்போலே இவற்றையடைய அவன் பக்கலிலே சேர்த்து அனுபவிக்கிறார்.

[3]யத்வா, குணங்களுக்கு பிருதக் ஸ்திதி உபலம்பாதிகள் இல்லாதாப் போலே விபூதிக்கும் அவனை ஒழியப் பிருதக் ஸ்தித்யாதிகள் இல்லையிறே. [4]முக்தனுக்கு "நோபஜனம் ஸ்மரன்" என்று நிற்கச்செய்தே "ஸர்வம் ஹ பஸ்ய: பஸ்யதி" ததீயத்வேன உத்தேச்ய மாகா நின்றதிறே சம்ஸாரம். [5]இங்கே இருக்கச் செய்தே கர்மநிபந்தனமான ஆகாரம் ஸ்ம்ருதி

1, போக்யமான அவன் சொரூபத்தோடே இழிந்ததான இவ் வுலகப் பொருள்களைச் சேர்த்து அநுபவிக்கிறது என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அவன் ஸ்வரூபத்தோடு' என்று தொடங்கி.

2. அவற்றை வெவ்வேறாகப் பிரித்துத் தனித்தனியே அநுபவிக்காமல் சாமானாதி கரண்யத்தாலே அவனோடே சேர்த்து ஒற்றுமைப்படுத்தி அநுப விப்பது என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அவை தம்மை' என்று தொடங்கி. என்றது, மாணிக்கம் முதலானவற்றின் சேர்த்தியைப் போன்று, அவன் பக்கலிலே சேர்த்தால் மிக்க இனிமை பிறத்தலால் சேர்த்து அநுப விக்கிறார் என்றபடி.

3. இறைவனோடு உலகப் பொருள்களைச் சேர்த்து அநுபவிப்பதற்கு மேலே கூறிய காரணங்களை யன்றிக்கே, வேறும் ஒரு வகையில் விடை கூறுகிறார் 'யத்வா' என்று தொடங்கி. யத்வா - அன்றிக்கே. குணங்களுக் குப் பிரித்து ஸ்திதியாதல் உபலம்பமாதல் இல்லாதாப்போலே, விபூதிக்கும் அவனை ஒழிய ஸ்திதியாதல் உபலம்பமாதல் இல்லாதபடியும்" என்பது ஈடு.

4. தியாச்சியமான இவ்வுலகப் பொருள்கள் இறைவனுடைய சொரூபம் முதலியன போன்று உத்தேஸ்யமாகைக்குக் காரணம் என்? இவ் வுலகம் அவன் உடைமை என்னும் ஆகாரத்தால் அநுபவித்த பேர் உளரோ? என்ன, 'முக்தனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை கூறப்படுகிறது.

"நோபஜநம் ஸ்மரந் இதம் ஸரீரம்"

என்பது, சாந்தோக்யம். முக்தன் இந்தச் சரீரத்தை நினையாமலே நான்கு பக்கங்களும் சஞ்சரிக்கிறான் என்பது இதன் பொருள்.

'ஸர்வம்' என்று தொடங்குவது உபநிடத வாக்கியம். எல்லாவற்றையும் ஞானியானவன் பார்க்கிறான் என்பது இதன் பொருள்.

5. முமுக்ஷுவான இவர்க்கு முக்தர்படி கூடுமோ? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'இங்கே இருக்கச் செய்தே' என்று தொடங்கி.

விஷயம் ஆகாகபடி பாகம் பிறந்தால் ததீயமாயே தோற்றும். ஈச்வர விபூதியாயிருக்கச் செய்தே [1]“எண்ணாத மானிடத்தை எண்ணாத போதெல்லாம் இனியவாறே”, [2] “திருவில்லாத் தேவரை” என்று சிலரைச் சொல்லி, [3]“பேராளன் பேரோதும் பெரியோரை ஒருகாலும் பிரிகிலேனே” என்று சிலரைச் சொல்லும்படியிறே முமுக்ஷுத்வ ஜ்ஞானம் பிறந்தால் இருக்கும்படி. [4]முக்தத்துவம் பிராப்தி சமயத்தில்எல்லாமொக்க அனுபாவ்யமாம். [6]இவர்க்கு இரண்டுபடியும் உண்டிறே; மயர்வறமதிநல மருளுகையாலே. [7]மஹாவாதத்தில் பலோபாதானம் பண்ணுவாரைப்போலே அத்தைச் சொல்லுவேனோ? இத்தைச் சொல்லுவேனோ? என்று அலமாக்கிறார்.

———:———

ஐந்தாந் திருவாய்மொழி (25)

— :: —

“மொய்ம்மாம் பூம்பொழில்”

பிரவேச சங்கி :—“புகழு நல் ஒருவ”னில் பகவத் அனுபவத்தால் வந்த ஹர்ஷபிரகர்ஷத்தாலே களித்து, அது இல்லாதாரை நிந்தித்து உடையாரைக் கொண்டாடுகிறார்

---

1. ‘எண்ணாத மானிடத்தை’ என்பது, பெரிய திருமொழி, 11. 6: 7.

2. ‘திருவிலாத் தேவரை’ என்பது, நான்முகன் திருவந்தாதி, 53.

3. பெரிய திருமொழி, 7. 4: 4.

4. “பிராப்தி சமயத்தில் வந்தால் இவ்வாசியின்றிக்கே எல்லாமொக்க அநுபாவ்யமாகா நின்றதிறே” என்பது ஈடு.

5. ‘சொல்லும்படியிறே’ என்ற வாக்கியத்துக்குக் கருத்து, எல்லாம் உத்தேசியமானால் இங்ஙனம் சொல்லுதல்பொருந்துமோ? எனின், முமுக்ஷுத்வ ஞானம் பிறந்தால் இங்ஙனம் சொல்லும்படியாக இருக்கும் என்பது.

6. “இவர்க்கு அவன் குணங்களோடு விபூதியோடு வாசியற அநுபாவ்யமாம்படியிறே மயர்வற மதிநலம் அருளிற்று; கர்ம நிபந்தனமான ஸ்மிருதி பின்னாடாதபடியிறே இவர்க்கு ஈஶ்வரன் வெளிச் சிறப்புப் பண்ணிக் கொடுத்தது” என்பது ஈடு.

7. இத் திருவாய்மொழியில் “என்கோ, என்கோ” என்கிறவருடைய திருவுள்ளக் கருத்தினை அருளிச்செய்கிறார் ‘மஹா வாதத்தில்’ என்று தொடங்கி. மஹா வாதம் = பெருங்காற்று.

இதில். [1]இவர்க்கு "முந்நீர் ஞாலத்"தில் பிரக்ருதி சம்பந்தத்தையும் விஷயப் பிராவண்யத்தையும் அநுசந்தித்துச் சோகித்த சோகம் சிலர்க்கு நிலமாகிலிறே, இவர்க்கு இதில் பிறந்த ஹர்ஷம் சிலர்க்கு நிலமாவது. இவரும் பகவத் அநுபவம் பண்ணுகிறாராகில், நாமும் இவ்விஷயத்தில் கைவைத்தோமாகில் இவர்க்கு இங்ஙன் இருப்பான் என்? நமக்கு இங்ஙன் இராது ஒழிவான் என்? என்னில், நாமாகிறோம் கண்டார்க்கு ஒளிக்க வேண்டுமவையாய், சாஸ்திரங்களெல்லாம் ஒருமுகம் செய்து நிஷேதிக்குமவையாய், முதல்தன்னிலே கிடையாதவையாய், கிடைத்தாலும் நிலையில்லாதவையாய் அனந்தரத்திலே நரகத்தில் மூட்டி அநர்த்தத்தை விளைக்கக் கடவனவான இதர விஷயங்களினுடைய லாபாலாபங்களிலே ஹர்ஷசோகங்களே [2] ஆயிற்று அறிவது.

வீதராகராய் சாத்விகாக்ரேசரரான இவர்க்கு [3]"அநவஸாதாநுத்தர்ஷேப்ய:" என்று சாஸ்திரங்கள் ஆகாதென்று நிஷேதித்த சோகஹர்ஷங்கள் உண்டானபடி எங்ஙனே? எனின், இவரது, சாஸ்த்ரங்களிலே நிஷேதித்த சோக ஹர்ஷங்கள் அன்று; [4]பகவத்அநுபவ ஜநித ஹர்ஷமும் தத்அலாபத்தால் சோகமும். [5]'காமம் ஆகாது' என்று நிஷேதியாநிற்கச்

1. இத் திருவாய்மொழியில் ஓடுகிற களிப்புக்கு எல்லை யாது? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'இவர்க்கு' என்று தொடங்கி. 'முந்நீர் ஞாலத்தில்' என்றது, முன்னீர் ஞாலம் என்ற திருவாய்மொழியில் என்றபடி.

2. 'ஆயிற்று அறிவது' என்றதன்பின், இவ் வாழ்வாராகிறார் பகவத் விஷய லாபாலாபங்களிலே பிறக்கும் மகிழ்ச்சியும் சோகமும் ஒழிய மற்றொன்று அறியாதே "நின்னலால் இலேன்" என்னும்படியான ஆராத காதலையுடையவராகையாலே இவர்க்கு இங்ஙனம் இருக்கக்கூடும் என்னும் வாக்கியங்களைச் சேர்த்துப் பொருள் முடிவு காண்க. காணவே, இந்த இதர விஷயங்களின் ஆசையே பகவத் விஷய லாபாலாபங்களில் பிறக்கும் மகிழ்ச்சியும் சோகமும் இல்லாமைக்குக் காரணம் என்று மேற்கூறிய சங்கைக்கு விடை இறுத்துக் கோடல் தகும்.

3. "அநவஸாதாநுத்தர்ஷேப்ய:"

துக்கப்படாமையும் மகிழ்ச்சி கொள்ளாமையும் என்பது இதன் பொருள்.

4. 'சமஸ்த கல்யாண குணாத்மகனை சர்வேச்வரனை அநுபவித்து அவ்வநுபவ ஜநித பிரீதியாயிற்று இவர்க்கு ஹர்ஷமாகிறது; இப்படி வகுத்த விஷயத்தை அநாதிகாலம் இழந்து இதர விஷயப் பிரவணராய் அநர்த்தப் படுவோமே? என்னுமதாயிற்று சோகம்" என்பது ஈடு.

5. பகவத் விஷயத்தைப்பற்றி வந்தவையேயானாலும் களிப்பும் சோகமும் தியாச்சியம் அன்றோ? எனின், அதற்கு விடை கூறுகிறார் 'காமம்' என்று தொடங்கி. "நிதித்யாஸி தவ்ய:" இதற்குப் பொருள் மேலே காண்க. என்றது, காமம் ஆகாது என்று விலக்கி யிருக்கவும் 'நிதித்யாஸி தவ்ய:'

செய்தேயும் "நிதித்யாஸிதவ்ய:" என்று விதித்ததிறே பகவத் காமத்தை.

[1]முக்தரும் பகவத் அநுபவத்தாலே "அஹமந்நம்" என்று களிப்பர். "ஸர்வ ஸம்சய நிர்முக்தோ நாரத.........தர்ம வித்" என்கிறபடியே நாரதனும் பகவத் ஸந்நிதியிலே ஆடுவது பாடுவதாகா நிற்பன். விரக்தரில் தலைவனை திருவடியும் பிராட்டியைக் கண்ட ஹர்ஷத்தாலே [2]"அஹமாவாரயிஷ்யாமி" என்றான். மஹாராஜர்க்குத் தம்முடைய காவல் காடு அழிந்தது என்று அறிவிக்க, நம்மோடு பண்ணின சமயம் தப்பினால் தீக்ஷ்ணதண்டர் என்று அறியச்செய்தேயும் இவர்கள் இப்படிச் செய்யும்போது [3]"நைஷா மக்ருத க்ருத்யானும்" என்று பிராட்டியைத் திருவடி தொழுதார்களாக வேணும் என்று அப்போது பிறந்த ஷர்ஷத்தாலே

என்று விதிக்கையாலே பகவத் காமம் உத்தேசியமானது போன்று, இதர விஷயங்களைப்பற்றி வரும் களிப்பும் சோகமும் தியாச்சியமானாலும் பகவத் விஷயத்தைப்பற்றி வரும் களிப்பும் சோகமும் உத்தேசியம் என்றபடி.

1. பகவத் விஷயத்தில் உண்டாகும் ஹர்ஷம் தியாச்சியம் அன்று என்பதற்கு அநுஷ்டானம் காட்டுகிறார் 'முக்தரும்' என்று தொடங்கி.

அஹமந்நம் அஹமந்நம் அஹமந்நம்
அஹமந்நாதஃ அஹமந்நாதஃ அஹமந்நாதஃ

என்பது, தைத்திரீய உபநிடதம்.

நான் பரமாத்மாவிற்கு இனியன்; நான் இனியனாகிய பரமாத்மாவினை அநுபவிக்கிறவன் என்பது இதன் பொருள்.

"ஆவித்யத் அஜிநம் ஹ்ருஷ்டோ பவிஷ்யத் பூத ஜல்பகஃ"
ஸர்வ ஸம்ஶய நிர்முக்தோ நாரதஃ ஸர்வதர்மவித்"

என்பது, பாரதம் ராஜசூயம்.

இறந்தகாலம் எதிர்காலங்களில் நடந்தன நடப்பனவற்றைச் சொல்லுகின்றவரும் ஒன்றிலும் ஐயம் இல்லாதவரும் எல்லாத் தர்மங்களை அறிந்தவருமான நாரதர் மகிழ்ச்சியடைந்தவராய் மரவுரியை உதறினர் என்பது இதன் பொருள்.

2. இஷ்டம் மது வநம் ஹ்யேதத் பக்ஷயிஷ்யத வாநராஃ
அஹம் ஆவாரயிஷ்யாமி யுஷ்மாகம் பரிபந்திநஃ

என்பது, ஸ்ரீராமா. சுந். 62 : 1.

ஏ வானரர்களே! பிரியமான இந்த மதுவனத்தை உண்ணுங்கோள்; நான் உங்களுடைய விரோதிகளைத் தடுக்கிறேன் என்பது இதன் பொருள்.

3. "நைஷாம் அக்ருத க்ருத்யாநாம் ஈத்ருஶஃ ஸ்யாத் உபக்ரமஃ"

என்பது, ஸ்ரீராமா. சுந். 63 : 15.

காரியங்களைச் செய்யாத இவ் வாநரர்களுக்கு இப்படிப்பட்ட செயல் உண்டாகமாட்டாது என்பது இதன் பொருள்.

[1]" ததः ஶ்ருத்வா நிநாதம் தம் கபீனும் கபிஸத்தம: ।
ஆயதாஞ்சித லாங்கூல: ஸோபவத் ஹ்ருஷ்ட மானஸ: ॥"

என்று வாலானது ருச்யமூக பர்வதத்தில் கொடுமுடியிலே அறைந்ததாயிற்று. [2]நடுவே காவல்காடு என்று ஒன்று உண்டாயிற்று ராஜபுத்ரர்களுடைய ஜீவனத்ருஷ்டத்தாலே. அன்றாகில், முதலிகளுடைய ஹர்ஷம் ராஜபுத்ரர்களுடைய முதுகோடே போம் என்று பட்டர். [3]அல்பம் வெற்றிலைச்சாறு மிடற்றுக்குக் கீழே இழிந்தவன் தன்னைத் தான் அறிகிலன்; [4]"உள்கலந்தார்க்கு ஓரமுதா"ய், [5]"அமுதிலும் ஆற்ற இனிய"னாய், [6]"எனக்கே தன்னைத் தந்த கற்பகம் இன்னமுதம்" என்று தாமே முற்றூட்டாகப் புஜித்த இவர்க்கு ஹர்ஷம் உண்டாகச் சொல்லவேண்டாவிறே.

ஆறாந் திருவாய்மொழி

"செய்யதாமரை"

பிரவேச சங்கி:—[7]இனித் தாமே விழுவாரைத் தடிகொண்டு அடிக்குமாப்போலே இவர்கள் பண்டே அநர்த்தப் படாநிற்க,

---

1. ததः ச்ருத்வா நிநாதம் தம் கபீநாம் கபி ஸத்தம:
ஆயதாஞ்சித லாங்கூல: ஸோபவத் ஹ்ருஷ்ட மாநஸ:

என்பது, ஸ்ரீராமா. சுந். 64 : 34. வானரர்களுடைய ஆரவாரத்தைக் கேட்ட சுக்கிரீவன் நீண்ட வாலையுடையவனும் மனமகிழ்ச்சியுடையவனும் ஆனான் என்பது இதன் பொருள்.

2. வானரர்களுடைய மகிழ்ச்சியின் மிகுதியைப் பற்றிப் பட்டருடைய ரசோக்தி, 'நடுவே' என்று தொடங்குவது. காவல் காடு - மதுவனம். ராஜ புத்திரர்கள் - இராம லக்ஷ்மணர்கள். முதலிகள் - வானர வீரர்கள்.

3. இப்படிப்பட்ட மிக்க மகிழ்ச்சி கூடுமோ? என்ன, கூடும் என்று கிம்புனர் நியாயத்தாலே பலிப்பிக்கிறார் 'அல்பம்' என்று தொடங்கி.

4. திருவாய்மொழி, 1. 6 : 5. 5. திருவாய்மொழி, 1. 6 : 6.

6. திருவாய்மொழி, 2. 7 : 11.

7. மேல்திருவாய்மொழியிலே நிந்திக்கப்பட்டவர்களான சம்சாரிகளுக்கு இத் திருவாய்மொழியால் உபதேசிப்பதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இனித் தாமே' என்று தொடங்கி.

நாம் இவர்களைக் கைவிடவொண்ணாது என்று பார்த்து, [1]ராவணன் பிராட்டிபக்கல் ஜனனி என்னும் பிரதிபத்தி இன்றிக்கே திருமுன்பே சிலவற்றை ஜல்பிக்கப்புக்கவாறே, "த்வம் நீச ஶஶவத்" என்று நிந்தித்து வைத்து, இவனுக்கு நல் வார்த்தை சொல்வார் இன்றிக்கே ஒழிவதே! என்று வெறுத்து, அவன் தனக்கு [2]"மித்ர மௌபயிகம்" என்று ஹிதம் அருளிச்செய்தாற்போலே, [3]கீழில் தாம் இகழ்ந்த சேதனர் பகவத் குணஞானம் இல்லாமையாலும் அவனுடைய ஸௌலப்ய ஞானம் இல்லாமையாலும் இழக்கிறார்கள் என்று பார்த்து, நீங்கள் அவன் அரியன் என்று கைவாங்கவேண்டா

1. இப்படிப் பிரதிகூலர்களைப் பார்த்து இப்படி உபதேசித்த பேர் உளரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இராவணன்' என்று தொடங்கி.

யதா த்ருப்தஶ்ச மாதங்கஶ் ஶஶஶ்ச ஸஹிதோ வநே
ததா த்விரதவத் ராமஸ்த்வம் நீச ஶஶவத் ஸ்ம்ருதஃ

ஸ்ரீராமா. சுந். 22: 16. காட்டில் மதித்திருக்கிற யானையும் முயலும் எப்படியோ அப்படியே: ஸ்ரீராமபிரான் யானைபோல் எண்ணப்படுகிறார்; நீ சிறிய முயலைப்போன்று எண்ணப்படுகிறாய் என்பது இதன் பொருள்.

2. மித்ரம் ஔபயிகம் கர்த்தும் ராம: ஸ்தாநம் பரீப்ஸதா
வதம்சா நிச்சதா கோரம் த்வயா அஸௌ புருஷர்ஷப:

என்பது, ஸ்ரீராமா. சுந். 21: 19. (மித்ரம் ஔபயிகம் கர்த்தும் ராம: - 'பெருமாளை நீ சரணம் புகு' என்றால் அப்பையல் அது தனக்கு எளிவரவாக நினைத்திருக்குமே, அதற்காகத் தோழமை கொள் என்கிறாள்; தங்களைச் சரணம் புக்காரை, தங்களிற் காட்டில் குறைய நினைத்திருப்பதில்லையே இவர்கள்; 'மித்ர பாவேந' என்றும், 'மித்ரம் ஔபயிகம்' என்றுமிறே இருவர் படியும். ஸ்தாநம் பரீப்ஸதா - வழியடிப் பார்க்கும் தரையிலே கால் பாவி நின்று வழியடிக்க வேணுமே; உனக்கு ஓர் இருப்பிடம் வேண்டியிருந்ததாகிலும் அவரைப் பற்றவேணுங்காண்; எளிமையாக எதிரிகாலிலே குனிந்து இவ்விருப்பு இருப்பதில் பட்டுப்போக அமையும் என்று இருந்தாயோ? வதஞ்சாநிச்சதா கோரம் - அப்படி உன்னை நற்கொலைப்பட விடுவரோ? உன்னை வைத்து உன் முன்னே உன் சந்தான ஜாதரை இம்சித்துப் பின்னை உன்னைச் சித்ரவதம் பண்ணுகையாகிற இவ் வதத்தை இச்சித்திலேயாகிலும் அவரைப் பற்றவேணுங்காண். த்வயா - உன் நிலை இருந்தபடியால் விசேஷித்து உனக்கு அவரைப் பற்றவேணும். அஸௌ - உருவெளிப் பாட்டாலே முன்னிலையாயிருக்குமிறே இவளுக்கு: அவனுக்கும் தானே மாயாமிருகத்தின் பின்னே போகிறபோது கண்ட காட்சியாலே அச்சத்தாலே எப்போதும் முன்னிலையாயிருப்பரிறே. புருஷர்ஷப:- நான் பண்ணின அபராதத்துக்கு என்னை அவர் கைக் கொள்ளுவரோ? என்றிருக்க வேண்டா; இவற்ஸற ஒன்றாக நினைத்திரார்காண்; அவர் புருஷோத்தமர்காண் என்பது மேற் சுலோகத்திற்கு நம்பிள்ளை அருளிச்செய்த பேருரை.

3. அந்தச் சம்சாரிகளுக்கு இவர் நலத்தை அருளிச்செய்யும் பிரகாரத்தைக் கூறுகிறார் 'கீழில் தாம்' என்று தொடங்கி. பகவத்குண ஞானம் - பகவானுடைய பரத்துவ ஞானம்.

அவன் ஆச்ரிதசுலபன் என்று [1]"பத்துடையடிவ"ரில் சௌலப்யம் பரத்வம் என்னும்படியான அர்ச்சாவதார பர்யந்தமான சௌலப்ய காஷ்டையை உபதேசிக்கிருர்.

[2]"அர்ச்ய:", [3]"ஸ்ம்ருதம் ஸங்கல்பநாமயம்"-பரமபதத்தில் அஸாதாரண விக்ரஹத்தோடு இருக்கும், விபவத்தில் தன்னை இதரசஜாதீயமாக்கும்; இங்கு அங்ஙன் அன்றிக்கே ஆச்ரிதன் உகந்தது ஏதேனும் ஒரு திரவியத்தைத் திருமேனியாகக் கோலினல் அதிலே அசாதாரண விக்ரஹத்தில் பண்ணக் கடவ அபிமானத்தைப்பண்ணி, இவ்வழியாலே முகம் கொடுக்கும்படியாயிறே இந்நிலை இருப்பது.

[4]ஸ்வவ்யதிரிக்த சமஸ்த வஸ்துக்களினுடைய ஸ்வரூப ஸ்தித்யாதிகள் ஸ்வாதீனமாம்படியிருக்கிறவன், தன்னுடைய

---

1. "பத்துடையடியவர்" என்ற திருவாய்மொழியிற் கூறியது அவதாரத்தின் சௌலப்யம். இங்குக் கூறுவது அர்ச்சாவதாரத்தின் சௌலப்யம். அதிலும், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீடுகளிலே தாம் தாம் விரும்பியதொரு திரவியத்தால் செய்யப்பட்டுப் பூசித்துக்கொண்டு வரும் அர்ச்சாவதாரத்தின் சௌலப்பத்தை இங்கு அருளிச் செய்கிருர் என்க.

2. அதற்குப் பிரமாணம் காட்டுகிருர் 'அர்ச்ய!' என்று. "அர்ச்ய: ஸர்வஸஹிஷ்ணு: அர்ச்சகபராதீந அகிலாத்மஸ்திதி:" என்பது ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்.

அர்ச்ய :— சம்சாரிகளுக்கும் அர்ச்சிக்கலாம்படி அர்ச்யனுயிருக்கும்: சம்சாரிகளாகில் அர்ச்சிக்கிருர்; அவர்கள் அபராதமே அன்ருே பண்ணுவது? என்னில், ஸர்வஸஹிஷ்ணு :- அவற்றை அடையப் பொறுத்துக்கொண்டிருக்கும். ஆனுலும், நினைவு இரண்டாய் இருந்ததே! என்னில், அர்ச்சக பராதீநாகிலாத்ம ஸ்திதி: 'நமக்கு ஒரு நினைவும்அவர்களுக்கு ஒரு நினைவுமாகில்அன்ருே சேராச் சேர்த்தியாவது' என்று அவர்களுக்கு ஈடாகத் தன்னை அமைத்து நிற்கும்" என்பது நம் பிள்ளை பேருரை.

3. "பாபம் ஹரதியத் பும்ஸாம் ஸ்ம்ருதம் ஸங்கல்பநாமயம்" என்பது ஸ்ரீ விஷ்ணுபுரா. 5:17.

தன்னுடைய சங்கல்பத்துக்குத் தகுதியாக நினைக்கப்படுகின்ற பரம்பொருளான விஷ்ணுவின் திருமுகமானது பாவங்களைப் போக்குகிறது என்பது இதன் பொருள். இங்குச் 'சங்கல்பநாமயம்' என்ற சொற்ருெடர் பரத்வம் முதலிய நிலைகளைக் கூறுவதாகக் கொள்ள ஒண்ணுதோ! அர்ச்சாவதாரத்தைக் கூறுகிறது என்று கோடற்கு நியாமகம் யாது? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'பரமபதத்தில்' என்று தொடங்கி. என்றது, அவ்வோ இடங்களில் ஆச்ரிதசங்கல்பம் இட்ட வழக்காக இருக்கும்; ஆகாரம் இல்லை; அவ்வாகாரம் உள்ளது அர்ச்சாவதாரத்திலே ஆகையாலே இதுவே அர்ச்சாவதார விக்கிரகத்தைச் சொல்லுகிறது என்கைக்கு நியாமகம் என்றபடி.

4. பின்னையும் சில பிரமாணங்களை உட்கொண்டு அர்ச்சாவதார வைபவத்தைக் கூறுகிருர் 'ஸ்வவ்யதிரிக்த' என்று தொடங்கி.

ஸ்வரூப ஸ்தித்யாதிகள் ஆச்ரித ஆதீனமாம்படி கிருஹ க்ஷேத்ராதிகளோ பாதி கூறு கொள்ளலாம்படி நின்று, இவனுக்கு ருசி பிறந்தபோது மற்றோரிடத்திலே போகவேண்டாதே அங்கே அனுபவிக்கலாம்படியும், சரீரசம்பந்தம் அற்று ஒரு தேச விசேஷத்திலே போய் ஒரு சரீரத்தைப்பெற்றுச் செய்யக்கடவ அடிமைகளை இதர விஷயப் பிராவண்யத்துக்கு உறுப்பான இவ்வுடம்போடே செய்யலாம்படியாய், இவன் அந்யபரனை அன்றும் தான் இவன் கைபார்த்திருந்து இவன் பசித்தபோது புஜிக்கும் திரவ்யத்தை அமுதுசெய்ய என்று அபேக்ஷித்தால்அத்தைத் திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி விரும்பக்கடவனாய், இப்படித் தன்னை அமைத்துக்கொடு நிற்கிற இடமிறே அர்ச்சாவதாரம்.

உபாயங்களில் பிரபத்திபோலே சௌலப்யங்களில் அர்ச்சாவதார சௌலப்யம். [1]ஜநநிக்கும் ஸ்த்ரீ சாமாந்யம் ஒத்திருக்கச் செய்தே பண்ணுகிற உபகாரங்களை பிரத்யக்ஷிக்கையாலும், "மாத்ருதேவோ பவ" என்று சாஸ்த்ரம் சொல்லுகையாலுமிறே கௌரவிக்கிறது. அப்படியே பிராமாணிகனானவனுக்கு ஆச்ரயணீய ஸ்தலம் அர்ச்சாவதாரம் போக்கி இல்லை என்று இவ்வளவான சௌலப்ய காஷ்டையை உபதேசிக்கிறார்.

அஸாதாரண விக்ரஹத்தை நாம் ஆதரிக்கிறதும் அவன் பரிக்ரஹித்த தென்றிறே. அவ்வோபாதி இதுவும். அவன் திருமேனி தானும் [2] "பக்தானா"மிறே. அது கார்யகரமாமிடத்தேயிறே உறைக்க இருப்பது.

———(o)———

ஏழாந் திருவாய்மொழி

— :: —

" பயிலும் சுடரொளி "

பிரவேசசங்கி:—[3]அர்ச்சாவதார சௌலப்யத்தை அருளிச்செய்யச் செய்தேயும் நெஞ்சில் நெகிழ்ச்சியின்றிக்கே இருக்கிற

1. தான் உகந்த பொருளைத் திருமேனியாகக் கொண்டு சந்நிதி பண்ணின இடத்தில் கௌரவ எண்ணம் வருமோ? என்ன, பிரமாணத்தை நம்பினவனுக்கு வரும் என்னு மதனைத் திருஷ்டாந்தத்தோடு காட்டுகிறார் 'ஜநநிக்கும்' என்று தொடங்கி, ஜநநி—தாய்.

2. இந்தச் சுலோகத்தை மேலே காண்க.

3. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு அருளிச் செய்கிறார் 'அர்ச்சாவதார சௌலப்யத்தை' என்று தொடங்கி.

சம்ஸாரிகள் ஸ்வபாவத்தைக் காண்கையாலும், அன்று "தேர் கடவிய பெருமான் கனைகழல் காண்பது என்றுகொல் கண்கள்" என்று காணப்பெறுமையாலும் உண்டான கிலேசங்கள் தீர அவன் தனக்கு [1]"நிழலுமடிதாறுமா"ன ஸ்ரீ வைஷ்ணவர்களை ஆதரிக்கிறார் இதில்.

[2]"தனக்கே யாக" வென்றார் கீழ். இங்கு பாகவத சேஷத்வம் உத்தேச்யம் என்கிறார். ஆகில், பிராப்யம் இரண்டோ பின்னை? என்னில், "தனக்கே யாக" வென்கிறதுக்குள்ளே இது இருக்கும். [3]பகவத் சேஷத்வத்தின் எல்லையிறே பாகவத சேஷத்வம். [4]நமக்கு ஞாதவ்யமான அர்த்தங்களில் திருமந்திரத்தில் சொல்லாத தொன்றில்லை. அத்தை அறியும் திருமங்கையாழ்வாரும் அதுக்கு அர்த்தமாக [5]"உற்றதும் உன்னடியார்க்கு அடிமை"என்று அருளிச் செய்தார். [6] திருமந்திரத்துக்கு அர்த்தம் இவனுடைய அநந்யார்ஹ சேஷத்வமிறே. அதாவது, ததீயர்க்குக் கிரய விக்ரயார்ஹனும் படியிருக்கை. [7]"தத்பக்தி நிக்னமனஸாம்" [8]"எந்தம்மை விற்க

---

1. பெரிய திருவந்தாதி, 31.

2. "எம் மா வீட்டி"லே, பிராப்ய நிஷ்கர்ஷம் பண்ணினார், 'தனக்கேயாக என்னைக் கொள்ளுமீதே' என்று. இங்கே பாகவத சேஷத்வம் உத்தேசியம் என்னாநின்றார். பிராப்யம் இரண்டாயிருக்கிறதோ பின்னை? என்னில், அன்று; 'தனக்கேயாக என்னைக் கொள்ளும் ஈதே' என்கிற அதனுள்ளே இருக்கிறது இதுவும்; பகவத் சேஷத்வத்தின் எல்லையாகிறது பாகவத சேஷத்வத்தளவும் வருகையிறே" என்பது நம்பிள்ளை ஈடு.

3. அதனுள்ளேயாயிருக்கும் பிரகாரத்தைக் காட்டுகிறார் 'பகவத்சேஷத்வத்தின்' என்று தொடங்கி.

4. பகவத்சேஷத்வமே உத்தேசியம் என்பதற்குப் பிரமாணம் உண்டோ? என்ன, 'நமக்கு' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார். அத்தை - பகவத் சேஷத்வத்தை. அதுக்கு - திருமந்திரத்திற்கு.

5. பெரிய திருமொழி, 8. 10: 3.

6. திருமந்திரத்தில் பகவத் சேஷத்வம் ஒழியப் பாகவத சேஷத்வம் சொல்லும்படி என்? என்ன, 'திருமந்திரத்துக்கு' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார். அதாவது - அநந்யார்ஹ சேஷத்வமாவது.

7. அடியார்கட்குக் கிரய விக்ரய அர்ஹம் என்கைக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'தத்பக்திஃ' என்றும் 'எந்தம்மை' என்றும்.

"தத்பக்தி நிக்நமநஸாம் க்ரய விக்ரயார்ஹஃ"

என்பது பிரமாணம். அந்தப் பகவானுடைய பக்தியில் ஈடுபட்ட மனத்தையுடைய ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குக் கிரய விக்ரயங்களுக்குத் தகுந்தவராய் என்பது இதன் பொருள்.

8. பெரியாழ்வார் திருமொழி, 4. 4: 10.

வும்". [1]பிதாவுக்கு ஒரு க்ஷேத்ரம் ஸ்வம் ஆனல் அது புத்ர னுக்குக் கிரய விக்ரயார்ஹமாம்படி இராத அன்று பிதாவி னுடைய ஸ்வத்திலே கொத்தையாமிறே. [2]"தத்பக்தைர்வா" என்கிற இடத்தில் 'வா' என்கிறது [3]அவதாரணத்திலேயாய் உத்தேச்யந்தானே இங்கே சித்திக்கிலும் சித்திக்குங்காண் என்று எம்பெருமானர். [4]ப்ராப்யத்தில் சரமாவதியிறே இது.

[5]"கச்சதா"-பெருமாள் பித்ருவசன பரிபாலனம் பண்ணி நேரே சாமாந்ய தர்மத்தை அனுஷ்டித்தார். இதுதான்

---

1. மேலே பிரமாணம் காட்டி அதனை விளக்குகிருர் 'பிதாவுக்கு' என்று தொடங்கி. ஸ்வம் - சொத்து.

2. பாகவத சேஷத்துவத்திற்கு வேறும் ஒரு பிரமாணம் காட்டுகிருர் 'தத் பக்தைர்வா' என்று.

"ஸம்ஸாரவிஷ விருக்ஷஸ்ய...... தத் பக்தைர்வா ஸமாகமஃ"

என்பது, பிரமாணம். சம்சாரமாகிற விஷ விருக்ஷத்திற்கு அமிர்தத்துக்குச் சமானமான இரண்டு பழங்கள் உண்டு; அவை ஒரே காலத்தில் கிருஷ்ண னிடத்தில் பக்தியும் அவன் அடியார்களிடத்திலேயே எப்பொழுதும் கூடி யிருத்தலுமாம் என்பது இதன் பொருள்.

3. 'அவதாரணத்திலே யாக்கி' என்றது, தேற்றப் பொருள் ஆக்கி என்றபடி. 'உத்தேசியம் தானே இங்கே சித்திக்கும் காண்' என்றது, பாகவத சேஷத்வமாகிற உத்தேசியம் தானே 'பாகவதர்களிடத்திலேயே' என்ற தேற்றேகாரத்தால் சித்திக்கும் என்றபடி.

4. "ப்ராப்யத்தில் பிரதமாவதி, பகவத் சேஷத்வத்தளவிலே நிற்கை; சரமாவதி, பாகவத சேஷத்வத் தளவிலே வருகை" என்பது நம்பிள்ளை ஈடு.

5. மேலே பிரமாணங்களையும் விளக்கத்தையும் காட்டி அநுஷ்டான மும் காட்டுகிருர் 'கச்சதா' என்று.

கச்சதா மாதுலகுலம் பரதேந ததாநகஃ
ஶத்ருக்நோ நித்ய ஶத்ருக்நோ நீதஃ ப்ரீதி புரஸ்கிருதஃ

என்பது, ஸ்ரீராமா. அயோத். 1 : 1.

இச் சுலோகத்திற்கு நம்பிள்ளை அருளிச்செய்த பொருள் வருமாறு: மாதுலகுலம் கச்சதா பரதேந நீத: — மாதுலகுலம் உத்தேசியமாகப் போனுன் அவன்; அவன்தான் உத்தேசியமாகப் போனுன் இவன்: யுதாஜித்து அழைத்தது ஸ்ரீ பரதாழ்வானையிறே. கச்சதா - இவ் வர்த்தமாந நிர்த் தேசத்தால் பூர்வ க்ஷணத்திலும் தன் நெஞ்சிலும் இல்லை; பெருமாளுக்கு விண்ணப்பம் செய்தமையும் இல்லை; சக்கரவர்த்தியைக் கேள்வி கொண் டமையும் இல்லை என்கை. பரதேந - பெருமாளும் போகட்டுப் போய், இளைய பெருமாளும் அவரை அநுவர்த்தித்துப் போய், சக்கரவர்த்தியும் துஞ்சி, ஸ்ரீ சத்ருக்நாழ்வானும் தன்னையல்லது அறியாதே இருக்க, பெருமாள தான ராஜ்யத்தைப் பரித்துக் கொண்டிருக்கையாலே பரதன் என்கிறது; ததா - தானும் ராஜ புத்ரனுய், நாளும் வேறுபட்டிருந்தால் பிரித்துத் தனக்குப் பொருந்தும் முகூர்த்தத்திலே போகப் பிராப்தமிறே; அது செய்யாதே, அவன் புறப்பட்டதே தனக்கு முகூர்த்தமாகப் போனுன். அநக: - அப் படை வீட்டில் அல்லாதாரெல்லாம் பாப மிஶ்ர ஜீவனம் போலே காணும்.

ப்ராப்த விஷயத்திலே செய்யக்கடவதென்னு மத்தை அநுஷ்டித்தார் இளையபெருமாள். அது செய்யுமிடத்தில் "குருஷ்வ" என்று நிர்ப்பந்திக்கை யன்றிக்கே அவன் உகந்த அடிமை செய்யக் கடவதென்னுமிடத்தை ஸ்ரீ பரதாழ்வான் அநுஷ்டித்தான். அதுதான் பாகவத சேஷத்வ பர்யந்தமாயிருக்கு மென்னுமிடத்தை ஸ்ரீ சத்ருக்னாழ்வான் அனுஷ்டித்தான்; அவன்படி சொல்லுகிறது இச்சுலோகம். [1]"அநந்யா:" என்கிற நிலை இவர்களுக்கு உண்டானால் இவர்களை அனுவர்த்திக்கிறது அவர்களை அநுவர்த்தித்த தாமிறே. ஒரு சேதனனுக்கு ஒரு சேதனன் உத்தேச்யனாகையாவது ஓட்டை ஓடத்தோடு ஒழுக லோடமிறே.

———:———

அதாவது ராம பக்தி கலந்திருக்குமே. ஶத்ருக்நஃ - பிறந்தபோதே 'எதிரிகள் மண்ணுண்ணும்படி வளரும்' என்று தோற்றிருக்கையாலே இப்படித் திருநாமம் சாத்தினான் வசிஷ்டன். நித்ய ஶத்ருக்நஃ - பாஹ்ய சத்ருக்களை வெல்லுகையன்றிக்கே ஆந்தர சத்துருக்களான இந்திரியங்களை வென்றிருக்கும். அநகஃ - இதற்கும், நித்ய சத்ருக்நஃ என்கிற அதற்கும் வாசி என்? என்னில், பாவனத்தில் ஸ்ரீ பரதாழ்வானை ஒவ்வார் பெருமாள் என்கிறது, அநக: என்கிற இத்தால்; நித்ய சத்ருக்நஃ என்கிறஇத்தால், போக்யதைக்கு ஸ்ரீ பரதாழ்வானை ஒவ்வார் பெருமாள் என்கிறது. நீத: - ஒரு குற்றுடை வாள் சாயை உள்ளிட்டவையோபாதியாய்ப் போனான். ப்ரீதி புரஸ்கர: - 'தமையன் பின்னே தம்பி போகக் கடவன்' என்னும் முறையாலே தேவை போலே இருக்குமோ? என்னில், அங்ஙன் அன்று; 'படை வீட்டிலே இருந்தால் ஒருவன் சோற்றைப் பகுந்து உண்ணுமாபோலே படை வீடாகப் பெருமாளுக்கு அடிமை செய்வர்கள்; ஏகாந்த ஸ்தலத்திலே நமக்கு எல்லா அடிமையும் செய்யலாம்' என்று இளைய பெருமாள் காடேறப் போனாற் போலே, இவனும் 'நமக்கு எல்லா அடிமையும் செய்யலாம்' என்கிற ப்ரீதி பிடர் தள்ளப் போனான்" என்பது.

1. நன்று; அவனையே பற்றினால் என்? இவர்களையும் பற்ற வேண்டுமோ? என்ன, 'அநந்யா:' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார்.

> அநந்யா: சிந்தயந்த: மாம் யே ஜநா: பர்யுபாஸதே
> தேஷாம் நித்யாபி யுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்.

என்பது, ஸ்ரீ கீதை, 9:

எந்தப் பெரியோர்கள், என்னைத் தவிர வேறு பயனை இச்சிக்காமல் என்னையே சிந்திக்கின்றார்கள்; இடைவிடாமல் தியானிக்கிறார்கள்; என்னை அடையவேண்டும் என்று கருதிக் கொண்டிருக்கிற அவர்களுடைய நலன்களை நான் வஹிக்கிறேன் என்பது இதன் பொருள்.

எட்டாந் திருவாய்மொழி (28)

—:—

" முடியானே "

பிரவேச சங்கி:— [1]"அன்று தேர்கடவிய பெருமான் கனை கழல் காண்பதென்று கொல் கண்கள்" என்று காணவேணும் என்று விடாய்த்த இவர் காணப்பெறுமையாலும், "நிழலுமடி தாறு"மான [2]பாகவத சம்ச்லேஷம் ஸ்மாரகமாய் அதுக்கு உத்தம்பகமாகையாலும், ஆற்றாமை கரைபுரண்டு, [3]ஒரு இந்திரிய் விருத்தியை மற்றை இந்திரியங்களும், [4]அவையெல்லாவற்றினுடைய விருத்தியைத் தாமும் ஆசைப்பட்டுத் தம்மிலும் விடாய்த்த கரணங்களும், கரணங்களிலும் விடாய்த்த தாமுமாய், க்ஷாமகாலத்தில் பஹுப்ரஜனனவன் தன் பசிக்கும் பிரஜைகள் பசிக்கும் ஆற்றமாட்டாதே அவற்றின் வாயில் சோற்றைத் தான் பறிப்பது, தன் வாயில் சோற்றை அவை பறித்து ஜீவிப்பதாமாப் போலே, தாமும் தம்முடைய கரணக் கிராமங்களும் பெருவிடாய்ப்பட்டு, குணவிஷ்காரத்தால் பரிஹரிக்க வொண்ணுதபடி கேட்டாரடைய நீராகும்படி [5]பெருந்தானத்திலே பெருமிடறு செய்து கூப்பிடுகிறுர்.

---

1. இத் திருவாய்மொழியில் ஆற்றுமையாலே கூப்பிடுகைக்குக் காரணம் யாது ? என்ன, 'அன்று தேர்கடவிய' என்று தொடங்கி அதற்கு விடை கூறு முகத்தால் முன் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு கூறுகிறுர்.

2. 'பாகவத சம்ஸ்லேஷம் ஸ்மாரகமாய் அதுக்கு உத்தம்பகம் ஆகையால்' என்றது, மேல் திருவாய்மொழியில் அடியார்களைக் கூறுமிடத்து அவனுடைய குணங்களிலே ஈடுபட்டவர்கள், சேஷ்டிதங்களிலே ஈடுபட்டவர்கள், வடிவழகிலே ஈடுபட்டவர்கள் என்று அவனையும் கூறிய காரணத்தினுல், வேறு ஒன்றற்காகச் சொன்னுலும் தன்னை ஒழியப் புறம்பு ஒன்றுக்கு ஆளாகாதபடி தன் பக்கல் துவக்கிக் கொள்ளவற்றுயன்றே பகவத் விஷயம் இருப்பது என்றபடி.

3. இத் திருவாய்மொழியில் இரண்டாம் திருப்பாசுர முதல் ஆறும் திருப்பாசுர முடிய உள்ள ஐந்து திருப்பாசுரங்களையும் நோக்கி 'ஒரு இந்திரிய விருத்தியை மற்றை இந்திரியங்களும் ஆசைப்பட்டு' என்கிறுர்.

4. அவற்றிற்கு மேலே உள்ள மூன்று திருப்பாசுரங்களையும் நோக்கி 'அவை எல்லாவற்றினுடைய விருத்தியைத் தாமும் ஆசைப்பட்டு' என்கிறுர்.

5. 'பெருந்தானத்திலே' என்றது, "முடியானேஎ", "தஞ்சனேஎ", "வஞ்சனேஎ", "வானவர் தம் நாயகனேஎ" என்பன போன்ற விளிகளை நோக்கி. தானம் - ஸ்வரம்.

[1]"காத்ரை: ஶோகாபி கர்ஶிதை:"-சிலர் பட்டினி கிடக்கச் சிலர் ஜீவிக்குமோபாதி அணைய ஆசைப்பட்ட இவ்வுடம் போடே முடிந்துபோய், இனி ஒரு சரீர பரிக்ரஹம்பண்ணி அவரை அனுபவிக்க இராமே, ஆசைப்பட்ட இக்கரணங் களைக் கொண்டே நான் அனுபவிக்கும்படி பண்ணித்தர வேணுமென்றுளிறே பிராட்டி. [2]"குஹேந ஸார்த்யம் தத் ரைவ ஸ்திதோஸ்மி திவஸாந் பஹூந்" - குஹப் பெருமாள் ஸ்மாரகராய் அவர் ஸந்நிதியில் ஆற்றாமை மிக்கவிடத்தில் நின்றும் கால் வாங்கமாட்டாதே, பெருமாளைப் பிரிந்த நாள் ஒன்று இரண்டாயிருக்கச் செய்தே "பஹூந்" என்று பிரி வாலே காலம் நெடுகினபடி. "மேகக்குழாங்கள்காள் காட் டேல்மின் நும்முரு என் உயிர்க்கு அது காலன்" என்றுரிறே.

இந்திரியங்களும் சேதன சமாதியாலே விடாய்க்கும்படியா யிற்று பகவத் விஷயத்தில் இவர்க்கு வாசனை. இத்தால் அபி

---

1. கரணங்களும் தாமும் தனித்தனியே விடாய்த்தமைக்குத் திருஷ் டாந்தம் காட்டுகிறுர் "காத்ரைஃ" என்று தொடங்கி.

யதா தம்புருஷ வ்யாக்ரம் காத்ரை: ஶோகாபிகர்ஶிதைஃ
ஸம்ஸ்ப்ருஶேயம் ஸகாமாஹம் ததா குரு தயாம் மயி.

என்பது, ஸ்ரீராமா. சுந். 40 : 3.

2. நினைவை ஊட்டுகின்ற பொருள்களின் அண்மையில் இருக்கும் இருப்பு, விடாய்க்கு உத்தம்பகம் என்பதற்கு, சிம்ஹாவ லோகந நியாயத் தால் ஒரு உதாரணம் காட்டுகிறுர் 'குஹேந' என்று தொடங்கி.

குஹேந ஸார்த்தம் தத்ரைவ ஸ்திதோஸ்மி திவஸாந் பஹூந்
ஆஶயா யதி மாம் ராம: புந: ஶப்தாபயே திதி.

என்பது, ஸ்ரீராமா. அயோத்.

மீண்டும் என்னைக் கூப்பிடுவாரோ என்னும் ஆசையினுல் அங்கேயே குகப்பெருமாளுடனே பல நாட்கள் தங்கியிருந்தேன் என்பது இதன் பொருள். இவ்வர்த்தத்துக்கு ஆழ்வார் ஸ்ரீ சூக்தி, 'மேகக் குழாங்கள்காள்' என்பது. இது, திருவாய்மொழி, 9. 5: 7. "ஸ்ரீ குகப் பெருமாளோடே கூட, பெருமாளைப் பிரிந்த இடத்தில் நின்றும் கால் வாங்கமாட்டாதே நின்றுனுயிற்று சுமந்திரன்; அங்கு நின்றது ஒன்றிரண்டு நாளாக இருக்கச்செய்தே 'பஹூந்' என்னுநின்றதாயிற்று, பிரிவாலே காலம் நெடுகிறபடி. 'ஸ்ரீ குகப் பெருமா ளோடே நிற்க, காலம் நெடுகுவான் என்?' என்று மிளகாழ்வானைக் கேட்க, 'ஸ்மாரக சந்நிதியில் ஆற்றுமை இரட்டிக்குமிறே' என்றருளிச்செய்தாராம்" என்பது நம்பிள்ளை ஈடு.

நிவேசத்தின் மிகுதி சொல்லுகிறது. [1]ஓர் இந்திரிய விருத்தியை மற்றோர் இந்திரியம் ஆசைப்படுகைக்கு அடி, சர்ப்பத்துக்குத் தந்த அவன் நமக்குத் தரத் தட்டு என் என்று இருக்கையாலே. "சக்ஷுः ஶ்ரவா:" இறே. [2]ஒருதேசவிசேஷத்திலே தன்னை அனுபவிப்பார்க்கு இது கொடாநின்றானிறே; தம்மையே ஒக்க அருள்செய்வர் ஆகையாலே. [3]நயனச்ரவண: இறே அவன். தூதுசெய் கண்களிறே.

[4]ஆறு கிண்ணகம் எடுத்தால் பல வாய்த்தலைகளாலும் போகாநிற்கச் செய்தேயும் கடலில் புகும் அம்சம் குறையா தாப்போலே இவருடைய அபிநிவேசம் கரணங்களாகிற வாய்த்தலைகளாலே புகாநிற்கச் செய்தே இவர்க்கு அவன் பக்கல் அபிநிவேசம் குறைவற்றிருக்கும்.

———0———

ஒன்பதாந் திருவாய்மொழி (29)

"சொன்னால் விரோதம்"

பிரவேச சங்கி:—[5]"பருகிக்களித்தேனே" என்று பகவத் அனுபவம் பண்ணிக் களித்து அநந்தரம் "அடியார்கள் குழாங்

1. ஓர் இந்திரியத்தின் செயலை வேறோர் இந்திரியம் ஆசைபடக் கூடுமோ? எனின், பாம்பு கண்ணாலே காண்பதும் செய்து கேட்பதும் செய் கின்றதே அன்றோ? அதுவும் அவன் கொடுத்ததே; அது நமக்குத் தட்டு என் அவன் தந்தால்? என்றபடி. சக்ஷுஶ்ஶ்ரவா - கட்செவி.

2. அடியார்கட்கு அவன் கொடுக்க எங்கே கண்டோம்? என்னில், அதற்கு விடை கூறுகிறார். 'ஒரு தேச விசேஷத்திலே' என்று தொடங்கி. தேச விசேஷம் - பரம பதம். அதற்குப் பிரமாணம் 'தம்மையே ஒக்க' என்பது, இது பெரிய திருமொழி, 11. 3: 5.

3. தனக்கு இருந்தன்றோ கொடுக்கவேண்டும்? இறைவனுக்குக் கரண நியமராஹித்தியம் உண்டோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'நயன ச்ரவண:' என்றும், 'தூது செய்கண்' என்றும். "தூது செய் கண்கள் கொண்டு ஒன்று பேசித் தூமொழி யிசைகள் கொண்டு ஒன்று நோக்கி" என்பது நம்பிள்ளை ஈடு. இது, திருவாய்மொழி, 9. 9: 9.

4. கண்கள் முதலிய உறுப்புக்களும் அறிவுடைப் பொருள்கள் போன்று விடாய்த்தால், தம் காதல் குறையாதோ? என்ன, அதற்கு விடை கூறப்படு கிறது 'ஆறு' என்று தொடங்கி.

5. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு கூறுகிறார் 'பருகிக் களித்தேனே' என்று தொடங்கி. என்றது, மேல் திருவாய்மொழியிலே அப்படி விடாய்த்தவர் அவ்விடாய் தீர்ந்து பரோபதேசம் பண்ணுகிறாரோ? என்கிற சங்கையிலே, அது தீராதிருக்கச் செய்தே சம்சாரிகள் இழவு பொறுக்க மாட்டாமல் பரோபதேசம் செய்கிறார் என்றபடி.

களை உடன்கூடுவது என்று கொலோ” என்று நித்ய ஸூரிகள் திரளிலே புகத் தேடுமாப்போலே, இவ்விழவுக்குக் கூட்டு ஆவார் உண்டோ என்று சம்ஸாரிகளைப் பார்க்க, அவர்கள் பேற்றுக்குக் கூட்டு அல்லாதாப்போலே இழவுக்கும் கூட்டு அன்றிக்கே [1]“அறியார் சமணர்” என்கிறபடியே அநுபபந்நங்களைச் சொல்லுவார் அவர்கள் தாங்களும் சர்வஜ்ஞர் என்னும்படி சப்தாதிகளைப்பற்றி அவற்றைப் பெறுகைக்காகப் பிறரைக் கவிபாடித் திரிகின்றவர்களாய் இருந்தார்கள்.

[2]சமஸ்த கல்யாண குணாத்மகனாய், ஸ்ரீய:பதியாய், அத்யந்த சுந்தரன் ஆகையாலே கவிக்கு விஷயம் போரும்படியாய்க் கவிகேட்பித்துக் கொண்டாடுகைக் கீடாகக் [3]“கேட்டு ஆரார் வானவர்கள்” என்றும், [4]“தொண்டர்க்கு அமுதுண்ண” என்றும் சொல்லப்படும் பரிஜனங்களையுடையனாய், கவிபாடினார்க்கு வழங்குகைக்கு [5]“வேண்டிற்றெல்லாம் தரும்” என்கிறபடியே பரமோதாரனாய், [6]“விண்ணவர் தாதை” என்று அவர்களுக்கு வழங்குகைக்கு உபயவிபூத்யைச்வர்யத்தையுடையனாய், [7]“வல்லதோர் வண்ணம் சொன்னால் அதுவே உனக்காம் வண்ணம்” என்று ஏதேனும் ஒன்றைச் சொன்னாலும் தன்னையே சொல்லிற்றாம்படி சர்வசப்தவாச்யனாய், தேடிப் போகவேண்டாதே [8]“எங்குமுளன் கண்ணன்” என்று சர்வத்ர சந்நிஹிதனா

---

1. அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்
சிறியார் சிவப்பட்டார் செப்பில் - வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை ஏத்தாதார்
ஈனவரே ஆதலால் இன்று.

என்பது நான்முகன் திருவந்தாதி, 6.

மனிதர்களைப் பாடித் துதிசெய்து ஜீவனம்பண்ணும் புலவர்களை நோக்கி இத் திருவாய்மொழியில் உபதேசம் பண்ணுகிறார்; ஏனையோர்க்கெல்லாம் மற்றைத் திருவாய்மொழிகளிலே உபதேசம் செய்திருத்தல் காண்க.

2. இத் திருவாய்மொழியில் வருகின்ற “ஆயபெரும்புகழ் எல்லையிலாதன”, “என் திருமாலுக்கு”, “மணிவண்ணன்” என்ற திருப்பாசுரப் பகுதிகளை நோக்கி, ‘சமஸ்த கல்யாண குணாத்மகனாய், ஸ்ரீய:பதியாய், அத்யந்த சுந்தரனாகையாலே’ என்கிறார்.

3. திருவாய்மொழி, 10. 6 : 11.
4. திருவாய்மொழி, 9. 4 : 9.
5. திருவாய்மொழி, 3. 9. 5.
6. திருவாய்மொழி, 3. 9 : 4.
7. திருவாய்மொழி, 7. 8 : 10.
8. திருவாய்மொழி, 2. 8 : 9.

மாய், சுலபனுமாய், தன்னைக் கவிபாடுகைதானே பிரயோஜனமாய் இருக்கிற சர்வேச்வரனை விட்டு,

[1] "பாரிலோர் பற்றையை" என்றும், மயிரில்லாதானைப் 'பனியிருங்குழலன்' என்றும், இளி கண்ணனைப் 'புண்டரீகாக்ஷன்' என்றும் கூறுமாப்போலே கவிபாடுகைக்கு ஈடான நன்மைகள் ஒன்றுமின்றிக்கே, கவி பாடினால் தான் தருவது ஒன்று இல்லாமையாலே நூறு கற்றையாதல்,

"வார்த்தை பதின்கலம் வழியிலோ ரெண்கலம்
கூட்டில்அறுகலம் கொடுப்பது மூக்கலம்
ஆள்கலம் போக்கிப் பதர்கலம் போக்கி
நான்கலம் பெற்றேன் பிள்ளைகாங் கயர்க்கே"

என்கிறபடியே ஒரு பொய்த்தரவாதலாய், இவன்தான் நெடுநாள் கூடி நெஞ்சு கன்றக் கவிபாடிச் சஹகாரிகளையுங் கூட்டிக்கொண்டு கேட்பிக்கச் செல்லுங்காட்டில் 'அவரே மாண்டார்' என்று எதிரே வரும்படி [2]நிலைநில்லாதாருமாய், ஒரு பிரயோஜனம் பெருதொழிகை யன்றிக்கே, [3] கவிபாட்டுண்கிறவனுக்கு இல்லாத மேன்மைகளை இட்டு 'இருமருங்குந் துய்யான்' என்னுமாறு போலே சொல்ல,

இவனுக்கு உத்பத்தியிலே சில குறைகள் உண்டே, அது தான் இவன் அறியாதிருக்க இது கேட்டார் இவனுடைய தோஷங்களை வெளியிட்டு அவ்வழியாலே அவனுக்கு அவத்யாவஹராய், 'இன்னனைக் கவி பாடினவன் அன்றோ இவன்' என்று தீண்டாதே கடக்கப் போ என்னும்படியாய், பாடினால் பெறுமதுவும் கவிபாடின நாளைக்குப் பணையம் வைத்து வாங்கி ஜீவித்ததுக்குக் கொடுத்து மீட்கவும் போராததாய், க்ஷுத்ரரைக் கவிபாடித் திரிகிறபடியைக் கண்டு, வாளேறு காணத்தேளேறு மாயுமா போலே தம்மிழவு மறந்து பராநர்த்தம் பொறுக்கமாட்டாமல், 'ஆத்மா ஈச்வர சேஷமாயிருக்க,

---

1. திருவாய்மொழி, 3. 9 : 7,

2. இத் திருவாய்மொழியில் வருகின்ற "மன்னு மனிசரை" என்ற திருப்பாசுரத்தை நினைத்து 'நிலை நில்லாதாருமாய்' என்கிறார்.

3. கவி பாட்டுண்கிறவனுக்கு இல்லாத நன்மைகளை இட்டு 'இருமருங்கும் துய்யான்' என்னுமாபோலேயிறே கவி பாடுவது ; ஆனால் வருவது என் ? என்னில், உத்பத்தியிலே சில குறைகள் உண்டாயிருக்குமே இவன் தனக்கு ; மறந்தவற்றையிறே இது கேட்ட நாட்டார் நினைப்பது ; அவன் தோஷங்களை வெளியிட்டு அவ்வழியாலே அவத்யாவஹராய்" என்பது நம்பிள்ளை ஈடு.

அநந்யார்ஹமான உங்களுடைய கரணங்களைக் கொண்டு பிறரைத் துதிக்கை ஈடுஅல்ல' என்று ஹிதம் அருளிச் செய்ய, இராவணனுக்கு விபீஷணாதிகள் சொன்ன ஹிதம்போலே பலியாதொழிய,

'ஹிதம் சொல்லச் செய்தேயும் செவிதாழாத இவர்களோடு ஒத்த பிராப்தியிறே நமக்கு உள்ளது' என்று பார்த்து, இவர்கள் நடுவே இத் தேசத்தில் இத்தேகத்தோடே வர்த்திக்கிற நாம் மூந்துற முன்னம் பகவத் அர்ஹகரணராகப் பெற்றோமிறே என்று வழிபறிக்குமிடத்தில் தன் கைப்பொருள் கொண்டு தப்பிப் போனார் உகக்குமா போலே [1] "உலகம் படைத்தான் கவி" என்று தமக்குண்டான வியாவிருத்தியைப் பேசி உகக்கிறார்.

———(0)———

பத்தாந் திருவாய்மொழி (30)

— (0) —

"சன்மம் பலபல"

பிரவேச சங்கி:—[2] இதர ஸ்தோத்ரத்துக்கு அநர்ஹகரணனான மாத்திரமேயோ, பகவத் ஸ்தோத்ரத்துக்கு அர்ஹகரணனாகவும் பெற்றேன் என்கின்றார்.

——— :: ———

1. திருவாய்மொழி, 3. 9 : 10.

2. "கீழில் திருவாய்மொழியிலே பிறரைக் கவிபாடுகிறவர்களைப் பகவத் விஷயத்தில் மீட்கப் பார்த்து, அவர்கள் மீளாதொழிய, இவர்களைப் போலே யாகாதே நான் மூந்துற முன்னம் இதர ஸ்தோத்ரம் பண்ணுகைக்கு அநர்ஹ கரணனாகப் பெற்றேன் என்கிறார்; இதர ஸ்தோத்ரம் பண்ண அநர்ஹகரணனான மாத்ரமேயோ? பகவத் ஸ்தோத்ரத்துக்கு அர்ஹகர்ணனாகவும் பெற்றேன் என்கிறார் இத் திருவாய்மொழியில்" என்பது நம்பிள்ளை ஈடு.

நான்காம் பத்து

முதல் திருவாய்மொழி (31)

"ஒரு நாயகமாய்"

பிரவேச சங்கி :— [1] உத்தரகண்டார்த்தத்தை அருளிச்செய்தார் கீழ் மூன்று பத்தாலும். மேல் மூன்று பத்தாலே பூர்வகண்டார்த்தத்தை யருளிச்செய்கிறார். [2] கீழ் மூன்று பத்தாலும் சொன்ன புருஷார்த்தத்துக்கு உபாயத்தை அடியிலே அறுதியிடுகிறார். [3] இவ்வடி அறியாதவர்களிறே உபாயாந்தரங்களாகிற விலக்கடியிலே போகிறவர்கள். [4] கீழ் நிரவதிக பிரீதியோடே தாமும் குறைவற்றுப் பற்றினர்குறையும் தீர்க்க

---

1. மேல் போந்த திருவாய்மொழிகளுக்கும் இனிவரும் திருவாய்மொழிகட்கும் பொதுவாக இயைபு கூறுகிறார் 'உத்தர கண்டார்த்தத்தை' என்று தொடங்கி. 'உத்தரகண்டார்த்தம்' என்றது, துவயத்தின் பின் வாக்கியமான "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்றதன் பொருளை என்றபடி. 'பூர்வ கண்டார்த்தம்' என்றது, துவயத்தின் முன் வாக்கியமான "ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே" என்றதன் பொருளை என்றபடி.

நன்று; துவயத்தின் பொருளை அடைவே அருளிச்செய்யாது, பின் வாக்கியத்தின் பொருளை முன்னும், முன் வாக்கியத்தின் பொருளைப் பின்னும் அருளிச்செய்யக் காரணம் யாது? எனின், அநுஷ்டான நிலையில் உபாயம் முற்பட்டுப் பலம் பிற்படும்; அறிவு நிலையில் பலம் முற்பட்டு உபாயம் பிற்படும். துவயம் - அநுஷ்டானம். ஆதலால், அங்கே உபாயம் முன்னும், பலம் பின்னுமாக நிற்கிறது.

2. உத்தரகண்டார்த்தமான பலத்துக்கு உபாயம் யாது? என்ன, 'கீழ் மூன்று' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார். 'அடியிலே' என்பதற்கு, இத் திருவாய்மொழியின் முதலிலே என்றும், திருவடிகளிலே என்றும் இருவகையான பொருள் கொள்க. திருவடி என்ற பொருளில் 'உபாயம்' என்பதற்கு உபாயத்தின் தன்மை என்று பொருள் கொள்க.

3. மற்றையோர் கர்ம ஞான பக்திகளை உபாயமாகக் கொள்ளாநிற்க, இவர் திருவடிகளை உபாயம் என்கிறது என்? என்ன, 'இவ்வடி யறியாதவர்' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார். அடி - திருவடிகள்.

4. மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் இயைபு கூறுகிறார் 'கீழ்' என்று தொடங்கி. கீழ் - இதற்கு முன்னே உள்ள திருவாய்மொழியில்.

வல்லராம்படி இருந்தார். [1]இவர்கள் தாம் சிலரை ஸ்தோத்திரம் பண்ணுகிறது சில பிரயோஜனத்துக்காகவிறே என்று ஐச்வர்ய கைவல்யங்களுடைய அல்பாஸ்திரத்வா புருஷார்த்தத்வாதி தோஷ துஷ்டத்வத்தையையும், சர்வேச்வரனுடைய சமஸ்த கல்யாண குணாத்மகத்வ சர்வாபேக்ஷிதப்ரதத்வங்களையும் சொல்லிப் பகவத் பஜனம் பண்ணப் பாருங்கோள் என்கிறார் இதில்.

[2] தாந்தராய் அனுவர்த்திக்க இவர் ஹிதம் சொல்லுகிறாரல்லர்; [3] பிராட்டியும் விபீஷணாழ்வானும் சொன்ன ஹிதம் போலே இருப்பது ஒன்று இது. "ப்ரதீப்தம் ஶரணம் யதா"

---

1. "வீடுமின் முற்றவும்", "சொன்னால் விரோதம்" என்ற திருவாய்மொழிகளிலும் பரோபதேசம் செய்தார்; இத் திருவாய்மொழியிலும் பரோபதேசம் செய்கிறார்; இவற்றிற்கு வேற்றுமை உண்டோ? எனின், 'உண்டு' என்கிறார்; "வீடுமின் முற்றவும்" என்ற திருவாய்மொழி இதர விஷய வைராக்ய பூர்வகமாகப் பகவத் பத்தியைப் பண்ணுங்கோள் என்பதனைக் கூறுகின்றது. "சொன்னால் விரோதம்" என்ற திருவாய்மொழி, பகவத் அர்ஹமான கரணங்களைக் கொண்டு பிறரைத் துதியாமல் சர்வேச்வரனைத் துதிக்கப் பாருங்கோள் என்று கூறுகிறது. இத் திருவாய்மொழியில் கூறப்படுவது இன்னது என்கிறார் 'இவர்கள் தாம்' என்று தொடங்கி. என்றது, ஐஶ்வர்ய கைவல்யங்களை விரும்பாமல் சர்வேச்வரனைத் துதிக்கப் பாருங்கோள் என்கிறார் என்றபடி.

2. "திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து உய்ம்மின்" என்று பன்மையிலே பலரைக் குறித்து உபதேசிப்பது என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'தாந்தராய்' என்று தொடங்கி. தாந்தராய் - ஐம்பொறிகளையும் அடக்கியவர்களாய். என்றது, மிக்க பேரருளாலே உபதேசிக்கிறார் என்றபடி.

3. மிக்க பேரருளாலே, விமுகர்க்கு நலம் சொன்னதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'பிராட்டியும்' என்று தொடங்கி.

4. விபீஷணாழ்வான் ஹிதம் சொன்ன சுலோகத்தை எடுத்து விவரிக்கிறார் 'ப்ரதீப்தம்' என்று தொடங்கி. பிராட்டி ஹிதம் சொன்ன "மித்ரம் ஔபயிகம்" என்ற சுலோகம் மேலே எடுத்து விவரிக்கப் பட்டுள்ளது.

> பத்தம் காலஸ்ய பாஶேந ஸர்வபூத அபஹாரிணா
> ந நஶ்யந்தம் உபேக்ஷேயம் ப்ரதீப்தம் ஶரணம் யதா.

என்பது, ஸ்ரீராமா. யுத். 16 : 21.

எல்லா உயிர்களையும் கவர்கின்ற காலபாசத்தாலே கட்டுண்டவனும் நாசமடைகிறவனுமான இராவணனை, பற்றி எரிகிற வீட்டைப் போன்று உபேக்ஷை செய்யமாட்டேன் என்பது இதன் பொருள்.

[1]வெந்த கிருஹத்திலே ஒரு கம்பாகிலும் கிடைக்குமோ என்று பிரிக்கப் பார்ப்பாரைப் போலே இது. இவ் "ஒரு நாயகம்" அருளிச்செய்தவர் கிடிகொள் "சூழ்விசும்பு அணிமுகிலும்" அருளிச்செய்தார். இதனை ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருவுள்ளம் பற்றுங்கோள்; அதாவது இதனைப் பிரத்யக்ஷிக்கிறப்போலே சரீரஸமநந்தரம் அதுவும் காணவன்றோ நாம் புகுகிறது; இனி எத்தனைநாள் என்று நம்பிள்ளை.

இரண்டாந் திருவாய்மொழி (32)

"பாலனாய் ஏழுலகுண்டு"

பிரவேச சங்கதி:—[2]"முடியானே"யில், இராமவிரஹத்தில் திருவயோத்யையிலுள்ளார் கூப்பிட்டாற் போலே தாமும் தம்முடைய கரண க்ராமங்களும் பெருவிடாய்பட்டுக் கூப்பிட்டார். இக்கூப்பீட்டைப் புறம்பே அல்லாதார் க்ஷுத்ரப் பிரயோஜனங்களுக்காகக் கூப்பிட, 'இது இவ்விஷயத்திலேயாகப் பெற்றதில்லையே!' என நொந்து அவர்களைத் திருத்தத் திருந்தாமையாலே, நாம் முந்துற முன்னம் இவ்விஷயத்தே கூப்பிடப்பெற்றோமே யென்றுஉகந்தார் "சொன்னால் விரோதத்"தில்; "சன்மம் பலபல"வில் அவ்வளவேயோ பகவத் அர்ஹ கரணனாகவும் பெற்றேன் என்றார்.

"ஒரு நாயகத்தில்" அல்லாதார் தந்தாமுடைய கரணங்களைப் பாழே போக்குகைக்கு அடியான ஐஸ்வர்ய கைவல்யங்களிலே பிரணவராய் அநர்த்தப்படுகிறபடியைக் கண்டு, அவற்

---

1. அவன் தான் காலபாசத்தால் கட்டுண்டவனாக இருக்கும்போது அவனுக்கு உபதேசிப்பது என்? என்ன, 'வெந்த' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார். 'என்று நம்பிள்ளை' என்றது, நம்பிள்ளை அருளிச்செய்வர் என்றபடி.

2. "முடியானே" என்ற திருவாய்மொழியில் ஆற்றாமை தலை எடுத்தது என்கைக்காக அந்த நான்கு திருவாய்மொழிகளிலும் கூறிய பொருளை அநுவதித்துக் கொண்டு, இத் திருவாய்மொழிக்கு இயைபு அருளிச்செய்கிறார் 'முடியானேயில்' என்று தொடங்கி.

றினுடைய அல்ப அஸ்திரத்வாதி தோஷங்களையும், சர்வேஶ்வரன் பிராப்யனு யிருக்கிற படியையும் உபதேசித்து, அவற்றை விட்டு அவனைப் பற்றுங்கோள் என்றார்;

[1]திருவடியைக் கண்ட பீமஸேநன்,

"ஸாகரம் தர்த்தும்உத்யுக்தம் ரூப மப்ரதிமம் மஹத்
த்ரஷ்டுமிச்சாமி தே வீர"

என்று நீ கடல் கடந்த வடிவை நான் இப்போது காணவேணும் என்றானிறே. இவன் சக்திமான் என்று தோற்றுகையாலே. அதுபோலே, இவளும் தேசகால விப்ரக்ருஷ்டமான அவன்படிகளைத் தத்தத்தேச கால விசிஷ்டமாக்கி இப்போதே காணவேணும் என்று ஆசைப்படுகிறாள் இத் திருவாய்மொழியில்.

மூன்றாந் திருவாய்மொழி (33)

"கோவை வாயாள்"

பிரவேச சங்கி :—[2]"கோவை வாயாளி"ல்-எல்லாத் தேசத்திலும் எல்லாக் காலத்திலும் உண்டான அவன் படிகள் எல்லாம் இப்போதே பெற்று அநுபவிக்கவேணும் என்று விடாய்ப்பார் ஒருவரைப் பெறுகையாலே, இவர் சத்தையே தனக்கு எல்லாமாம்படியாயிருக்கிற தம் பிரணயித்வ குணத்தைக் காட்டிக்கொடுக்கக் கண்டு, இவரும் எல்லாம் பெற்றாராய்

---

1. கிடைத்தற்கு அரிய பொருளிலே இப்படி ஆசை வைப்பதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'திருவடியை' என்று தொடங்கி. திருவடி - அநுமான்.

"ஸாகரம் தர்த்தும் உத்யுக்தம் ரூபம் அப்ரதிமம் மஹத்
த்ருஷ்டும் இச்சாமி தே வீர"

என்பது, பாரதம். ஏ வீரனே! கடலைத் தாண்டுதற்கு முயற்சி செய்யப்பட்டதும் ஒப்பில்லாததும் பெரியதுமான உனது சரீரத்தைக் காண விரும்புகிறேன் என்பது இதன் பொருள்.

2. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் நேரே இயைபு அருளிச்செய்கிறார் 'கோவை வாயாளில்' என்று தொடங்கி. 'கோவை வாயாளில்' என்றது, கோவை வாயாள் என்ற திருவாய்மொழியில் என்றபடி.

அநுபவிக்கிறார். [1] சர்வேச்வரனுடைய "பாலனாய் ஏழுலகு" இத்திருவாய்மொழி.

[2] இதுக்கு மூன்றுபடி: அம்புலியம்மானைப் பிடித்துத் தரவேணும் என்று அழுத பிரஜைக்குத் தேங்காயைக் கொடுத்து ஆற்றுமாப்போலே ப்ரணயித்வ குணத்தை யனுபவிப்பித்தான் என்று **எம்பார்**. ஒருவன் ஒன்றை யபேக்ஷித்தால் அவனும் அது செய்வானாகத் தலைதுலுக்கினால் அது பெற்றானாகிறாப்போலே அவனும் அப்படிச் செய்கிறோம் என்ன, கீழில் இழவு மறந்து பெற்றாராகிறார் என்று **திருமலை நம்பி**. [3] பெருமாள் வனத்துக்கு எழுந்தருளும்போது கௌஸல்யையார் ஏகபுத்ரையான நான் உம்மைப் பிரிந்திருக்கமாட்டேன் என்ன, 'ஆச்சி! நீர் சொல்லுகிறவை தர்மஹாநிகிடீர்' என்று ஒரு வார்த்தை யருளிச்செய்ய, இழவை மறந்து மங்களாஸாசனம் பண்ணி மீண்டாள். க்ருஷ்ணன் [4] "மாஶுச:" என்ன, [5] "ஸ்திதோஸ்மி" என்று தரித்தான்.

பட்டர், கால [6] சக்கரத்தான் ஆகையாலே காலோபாதியைக் கழித்து வர்த்தமான காலத்தில்போலே அநுபவ

---

1. 'சர்வேச்வரனுடைய பாலனாய் ஏழுலகு இத்திருவாய்மொழி' என்றது, 'பாலனாய் ஏழுலகு' என்ற மேல் திருவாய்மொழியில் ஆழ்வாருடைய காதல் குணத்தைச் சொன்னது போன்று, இத் திருவாய்மொழியில் ஈச்வரனுடைய காதல் குணத்தைச் சொல்லுகிறது என்றபடி.

2. 'இதற்கு மூன்றுபடி' என்றது, இதற்கு மூன்று விதமாக அருளிச்செய்வர் நம் முதலிகள் என்றபடி. உலகத்தில் ஒருவரை ஒருவர் ஒன்று கேட்டால் அதனை மறக்கச்செய்து வேறு ஒன்றனைக் கொடுப்பது; அன்றிக்கே, அதனையே கொடுக்கிறோம் என்று சொல்லுதல்; அன்றிக்கே, கேட்ட பொருளையே கேட்டவர்கள் கையிலே கொடுத்து விடுவது; ஆக, இம் மூன்று வகையாக நடப்பது இயற்கை. அம் மூன்று பிரகாரத்தையும் அடைவே காட்டுகிறார் 'அம்புலி அம்மானை' என்று தொடங்கி.

3. தலை துலுக்கின மாத்திரத்தில் பெற்றதாமோ? என்ன, அதற்கு இரண்டு திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'பெருமாள்' என்று தொடங்கி. இது, பேச்சின் இனிமை விஸ்வாசத்துக்குக் காரணம் என்பதற்குத் திருஷ்டாந்தம். 'கிருஷ்ணன்' என்று தொடங்கும் வாக்கியம் பிரமாணம் விஸ்வாசத்துக்குக் காரணம் என்பதற்குத் திருஷ்டாந்தம்.

4. ஸ்ரீ கீதை, 18 : 66.   5. ஸ்ரீ கீதை, 18 : 73.

6. 'காலசக்கரத்தான் ஆகையாலே' என்றது, சக்கரம் போன்று சுழன்று வருகின்ற காலத்துக்கு நிர்வாஹகன் என்றபடி. பட்டர் நிர்வாகத்துக்கு நிதானம் "கால சக்கரத்தானுக்கே" என்னும் நான்காவது திருப்பாசுரம்.

யோக்யமாம்படி காலத்தை நடுவில் தடையில்லாதபடி பண்ணிக் கொடுக்க [1]அனுபவிக்கிறார் என்று அருளிச் செய்வர்.

---o---

நான்காந் திருவாய்மொழி (34)

"மண்ணையிருந்து துழாவி"

பிரவேச சங்கி :—[2]"க்வசித் உத்ப்ரமதே வேகாத் க்வசித் விப்ரமதே பலாத்। க்வசித்மத்த இவாபாதி காந்தாந் வேஷண தத்பர:"॥ என்னுமாப்போலே நோவுபட, இவள் தசையை அநுஸந்தித்த திருத்தாயார் இவள்படுகிற பாட்டையும் தான் அது கண்டு பொறுக்கமாட்டாத படியையும் சொல்லித் தான்

---

1. மேல் திருவாய்மொழியில் விரும்பியவாறே இத் திருவாய்மொழியில் அனுபவிக்கிறார் என்பதற்குக் காரணம் வருமாறு: "தோளி சேர் பின்னை" என்றதற்கு, "கோவை வாயாள்" என்ற பாசுரம். "கொம்பு போல்" என்ற திருப்பாசுரத்திற்கு "மதிள் இலங்கை கோவை வீய" என்ற திருப்பாசுரம். "பாலனாய்" என்ற பாசுரத்திற்கு, "கால சக்கரத்தொடு" என்ற பாசுரம். "பாவியல் வேதநன்" என்ற பாசுரத்திற்கு, "குரை கழல்கள் நீட்டி" என்ற திருப்பாசுரம். மற்றைப் பாசுரங்களையும் இங்ஙனே கண்டு கொள்வது.

2. கீழில் திருவாய்மொழியில், அவனுடைய பிரணயித்வ குணத்தை அநுசந்தித்துப் பிச்சேறினார். இவர்க்குக் கீழ்ப் பிறந்த நிரவதிகப் பிரீதியானது இருவருடைய ஆஸ்ரயமும் அழியும் என்னும்படியாயிற்று; அந்த ரசத்தை அரையாறு படுத்திச் சாத்மிப்பிக்கைக்காக அக் கலவியை அல்பம் நெகிழ நின்றான் ஈச்வரன். ஆனாலும், பிரிந்தது அவனை யாகையாலே அது தன் காரியம் செய்தன்றி நில்லாதே; ஆற்றாமை மீதூர்ந்து, தநலுப்தனானவன் கிழிச் சீரையைக் கெடுத்தால் அத்தோடு போலியான முடிகள் எல்லாம் அவிழ்த்து அவிழ்த்துப் பார்க்குமாபோலே,......அவனோடு சத்ருதசபதார்த்தங்களையும் சம்பந்தி பதார்த்தங்களையும் அகப்பட அவனாகக் கொண்டு பிரமித்துக் கிட்டிப் பார்த்து அவன் அன்றிக்கே ஒழிந்தால் மீளவும் மாட்டாதே நோவுபட்டுச் செல்லுகிறது என்பது நம்பிள்ளை ஈடு.

ஸ்ரீராமா. ஆரண் 60: 35. பிராட்டியைத் தேடுவதில் நோக்கமுடைய பெருமாள் ஓரிடத்தில் சுற்றும் முகத்தைத் திரும்பி மேலே பார்க்கிறார்; ஓரிடத்தில் தன் வலிமையால் நான்கு பக்கங்களிலும் சுழலுகிறார்; ஓரிடத்தில் பித்தனைப்போலத் தோற்றுகிறார் என்பது அச் சுலோகத்தின் பொருள்.

[1] கைவாங்குமளவாக, [2] வந்து முகங்காட்டி ஆச்வாசிப்பித்துத் தலைக்கட்டுகிறது.

—:—

ஐந்தாந் திருவாய்மொழி (35)

—:—

"வீற்றிருந்து"

பிரவேச சங்கி :—[3]கீழ் இப்படி விடாய்த்த இவர் "இனி என்ன குறை எழுமையுமே" என்னப் பெறுவதே! [4]"பொய்ந் நின்ற ஞானம்" தொடங்கி கீழெல்லாம் 'மண்ணையிருந்து துழாவி'யில் விடாய்க்குக் கிருஷி பண்ணிபடி. அப்படி விடாய்க்கப்பண்ணின கிருஷியின் பலம் சொல்லுகிறது இதில். [5]பேற்றுக்கு இதுக்கு அவ்வருகு சொல்லலாவது இல்லாமையாலே [6]"சூழ்விசும்பணி முகிலுக்கு" அனந்தரம் இத்திருவாய்மொழியாகப் பெற்றதில்லையே என்று சீயர்.

---

1. 'கைவாங்குமளவாக' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "என்செய்கேன் வல்வினையேனே" என்ற பாசுரப் பகுதியை நோக்கி.

2. 'வந்து முகம் காட்டி ஆச்வாசிப்பித்து' என்றது. "வல்வினை தீர்க்கும் கண்ணனை" என்றதனை நோக்கி.

3. மேல் திருவாய்மொழியிலே உண்டான அளவிற்கு மீறிய அப்ரீதியையும் இத் திருவாய்மொழியில் உண்டாகும் அளவிற்கு மீறிய பிரீதியையும் நினைத்த வியாக்யாதாவின் ஈடுபாடு, 'கீழ் இப்படி' என்று தொடங்கும் வாக்கியம்.

4. "இனி என்ன குறை" என்று ஈடுபடுகிறது என்? "பொய்ந் நின்ற ஞானம்" தொடங்கி இத்துணையும் கலவியும் பிரிவுமாயன்றோ சென்றது? அவற்றைக் காட்டிலும் இவ்விரண்டு திருவாய்மொழிகட்கும் அதிசயம் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'பொய்ந்நின்ற' என்று தொடங்கி.

5. அர்ச்சிராதி மார்க்கம் முதலாகப் பெறவேண்டியிருக்க, இதனையே பலமாகச் சொல்லுகிறது என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'பேற்றுக்கு' என்று தொடங்கி.

6. பேற்றுக்கு, இதற்கு அவ்வருகு சொல்லலாவது இல்லை என்றதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'சூழ்விசும்பணிமுகில்' என்று தொடங்கி. என்றது, இத் திருவாய்மொழியில் உண்டான அநுபவ கைங்கர்யங்கள் அர்ச்சிராதிகதிக்குப் பின்பு பெறத்தக்கன வாகையாலே, அவ் வர்ச்சிராதிகதியைப் பற்றிப் பேசுகின்ற "சூழ்விசும்பணிமுகில்" என்ற திருவாய்மொழிக்குப் பின்னர் இத்திருவாய்மொழி அமையப் பெற்றதில்லையே! என்றபடி. 'சூழ் விசும்பணி முகில்' என்பது, திருவாய்மொழி, 10. 9 : 1.

[1]பெருமாளும் இளையபெருமாளுமான இருப்பிலே பிராட்டிக்குப் பிரிவு விளைய, மஹாராஜரையும் பரிகரத்தையும் கூட்டிக்கொண்டு சென்று விரோதி வர்க்கத்தைக் கிழங்கெடுத்து, அவளோடே கூடினாற்போலே, போலிகண்டு இவர் பிரமித்த இழவெல்லாம் தீரும்படி [2]நித்யவிபூதியும் லீலாவிபூதியும் உடையனாய் இருக்கிற தன்படிகள் ஒன்றும் குறையாதபடி கொண்டு வந்து காட்டிக்கொடுத்து, 'கண்டீரே நாம் இருக்கிறபடி' இந்த ஐஸ்வர்ய மெல்லாம் ஒன்றாய்த் தலைக்கட்டுவது நீர் உம்முடைய வாயாலே [3]ஒரு சொல்லுச் சொன்னால் காணும், என்று [4]இவர் திருக்கையிலே தாளத்தைக் கொடுக்க, அவ்விருப்புக்கு மங்களா சாசனம் பண்ணுகிறார்.

[5]"நின்ற குன்றத்தினை" என்று பிரமித்ததுக்கு "வானமாமலை"யான தன்னைக் காட்டிக்கொடுத்தான்; "நீறு செவ்வேயிடக்காணில் நெடுமாலடியார்" என்றதுக்கு "தூவியம் புள்ளுடையான் அடலாழி யம்மான்" என்கிற நித்திய புருஷர்களைக் காட்டிக்கொடுத்தான்; "செய்யதோர் ஞாயிற்றைக் காட்டிச் சிரீதரன்" என்றதுக்கு "மையகண்ணாள் மலர்மேலுறைவாள் உறைமார்பினன்" என்று தானும் பெரிய பிராட்டியாருமாக இருக்கிற இருப்பைக் காட்டிக் கொடுத்தான்; "திருவுடைமன்னரைக் காணில் திருமால்" என்றதற்கு உபய விபூதியுக்தனான தன் ஐஸ்வர்யத்தைக் காட்டிக்கொடுத்தான்; பிறர் வாயாலே "என் செய்கேன்" என்றத்தைத் தவிர்த்து "இனி என்ன குறை எழுமையும்" என்னப் பண்ணினான்.

——:——

1. மேல் திருவாய்மொழியோடே இயைபு கூறப்படுகிறது 'பெருமாளும்' என்று தொடங்கி.

2. "வீற்றிருந்தேழுலகும்" என்ற பாசுரத்தை நோக்கி 'நித்திய விபூதியும்' என்று தொடங்கிக் கூறுகிறார்.

3. "சொல் மாலைகள் ஏற்ற" என்ற பாசுரப் பகுதியை நோக்கி "ஒரு சொல்லுச் சொன்னால் காணும்" என்கிறார்.

4. "போற்றி" என்றும், "இசைமாலைகள் ஏத்தி" என்றும் வருகின்றவற்றை நோக்கி 'இவர் திருக்கையிலே தாளத்தைக் கொடுக்க' என்கிறார்.

5. மேலே 'போலிகண்டு இவர் பிரமித்த இழவெல்லாம் தீரும்படி' என்றதனை விவரிக்கிறார் 'நின்ற குன்றத்தினை' என்று தொடங்கி.

ஆருந் திருவாய்மொழி (36)

— :: —

" தீர்ப்பாரையாம் "

பிரவேச சங்கி :—[1] கீழில் " வீற்றிருந்தேழுலகா " யிருக்க அனந்தரம் "தீர்ப்பாரை யாமினி" யாயிருக்கிறதிறே. [2]**எம்பார்** கீழ்த் திருவாய்மொழியையும் இத்திருவாய்மொழியையும் அனு சந்தித்து மோர் உள்ளதனையும் சோறேயோ? அதில் நிரவதிக பிரீதியாய்ச் சென்றது; இதில் இப்படி மோஹத்தோடே தலைக்கட்டிற்று; இதுக்கு இருந்து அடைவு சொல்லுவேனே? இதுக்கு அஸங்கதிரேவ ஸங்கதி: என்று அருளிச்செய்தாராம்.

[3] பிரீத்யப்ரீதிகள் " பொய்நின்ற ஞானம் " தொடங்கி "முனியே நான்முக"னளவும் நாலு பிரபந்தங்களிலும் உண்டு. [4]"நசஸீதா த்வயா ஹீநா", [5]"குருஷ்வ" என்று வியதிரேகத்தில் தரியாமைக்கு இளையபெருமாளோடு ஒப்பர்; அவன் பொகட்ட இடத்தே கிடக்கைக்கும் குணாநுஸந்தானத்தாலே ஜீவிக் கைக்கும் பரதாழ்வானோடு ஒப்பர்; எத்தனையேனும் ஆற்றாமை கரைபுரண்டாலும் அத்தலையாலே பேறு என்றிருக்கைக்குப் பிராட்டியோடு ஒப்பர்.

---

1. 'கீழில்' என்று தொடங்கும் வாக்கியம் வியாக்கியாதாவின் ஈடு பாடு. அதாவது, மேல் திருவாய்மொழி எல்லை இல்லாத பிரீதியாய், இத் திருவாய்மொழி எல்லை இல்லாத துக்கமாய் இருக்கிறதே என்றபடி.

2. இதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'எம்பார்' என்று தொடங்கி. அசங் கதிரேவ சங்கதி - சங்கதி இல்லாமையே சங்கதியாகச் சொல்லுவது.

3. இந்தப் பிரீதி அப்ரீதிகள் நான்கு பிரபந்தங்களிலும் இவர்க்கு உண்டு என்கிறார் 'பிரீதிஅப்ரீதிகள்' என்று தொடங்கி.

4. பிராட்டியின்நிலை இவர்க்கு வரக்கூடுமோ? என்ன, பிராட்டியின் நிலை மாத்திரமன்றிக்கே எல்லாருடைய நிலையும் இவர்க்கு உண்டு என்கிறார் 'நசசீதா' என்று தொடங்கி.

"நச ஸீதா த்வயாஹீநா நசாஹம் அபிராகவ
முஹூர்த்தம் அபிஜீவாவோ ஜலாந் மத்ஸ்யாவிவ உத்ருதௌ."

என்பது ஸ்ரீராமா. அயோத். 53 : 31.

உம்மைப் பிரிந்தால் பிராட்டி இல்லாதவள் ஆவாள்; அப்படியே நானும் இல்லாதன் ஆவேன் என்பது இதன் கருத்து.

5. " குருஷ்வ " இதனை மேலே காண்க.

[1]முதல் திருவாய்மொழியில் பரத்வத்தைப் பேசி, அநந்தரம் சௌலப்யத்தை யனுஸந்தித்து மோஹிக்கச் செய்தேயும், "அஞ்சிறை"யில், தூதுவிடவல்லார் ஆனார். "வீற்றிருந்தேழுல"கில், பரத்வத்தை அனுஸந்தித்த அனந்தரம் தாம் மோஹித்து, தம் தசையை அனுஸந்தித்த பந்துவர்க்கமும் மோஹித்து, தேவதாந்தர ஸ்பர்சமுடையார் புகுந்து கலக்கினாலும் உணர்த்தி அறும்படியாயிற்று இதில். பகவானைப் பெறுகின்ற காலத்தில் உணர்த்தியும் பெறாதகாலத்தில் மோஹமுமாகச் செல்லும் இது இவ்வாழ்வார் ஒருவர்க்குமே உள்ளதொன்றாயிற்று. [2] மற்றும் பகவத் விஷயத்தில் கைவைத்திருக்குமவர்களிலும் ஸ்ரீ வசிஷ்டபகவன் புத்ரவியோகத்திலே கடலிலே புகுவது, மலையிலே ஏறி விழுவதானான்; ஸ்ரீ வேதவியாஸ பகவான் சாயாசுகனைக் கொண்டு ஜீவித்தான். பகவல்லாபாலாபம் பேறு இழவாக இருக்கும் இது இவர்க்கேயுள்ளது.

[3] ப்ரஹ்மாஸ்த்ரபத்தரான அன்று அங்குப் போலே உணர்ந்திருந்து நோக்குகைக்கு ஸ்ரீ ஜாம்பவான், மஹாராஜர், திருவடி போல்வாரும் இல்லை இங்கு. [4] "ஶத்ருக்னோநந்தர

---

1. "உயர்வற உயர்நலம்" என்ற திருவாய்மொழியைக் காட்டிலும், "வீற்றிருந்தேழுலகு" என்ற திருவாய்மொழியில் விரிந்த அநுபவம் உண்டு ஆகையாலே, "அஞ்சிறைய" என்ற திருவாய்மொழியைக் காட்டிலும் இத் திருவாய்மொழியில் துக்கம் அதிகரித்தது என்கிறார் 'முதல் திருவாய்மொழியில்' என்று தொடங்கி.

2. 'ஒருவர்க்குமே' என்பது என்? அல்லாதார்க்கும் இது இல்லையோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'மற்றும்' என்று தொடங்கி.

3. மேலே சுருங்கக் கூறியதனை விவரிக்கிறார் 'பிரஹ்மாஸ்திர பத்தரான' என்று தொடங்கி.

4. மேலதற்கே மற்றும் உதாரணம் ஒன்று காட்டுகிறார் 'ததவஸ்தம்' என்று தொடங்கி.

" ததவஸ்தம்து பாதம் ஶத்ருக்ந: அநந்தர ஸ்தித: "
என்பது, ஸ்ரீராமா. அயோத். 87 : 4.

அந்த நிலையோடிருந்த ஸ்ரீ பரதாழ்வான் அருகில் இருந்த ஸ்ரீ சத்ருக்நாழ்வான் என்பது இதன் பொருள்.

ஸ்தித:" என்னுமிதுவும் இல்லையாயிற்று. [1]அஸ்ய ராஜ் குலஸ்யாத்ய த்வததீனம் ஹி ஜீவிதம்-பெருமாள் காடேறப்போனார், சக்கரவர்த்தி துஞ்சினான். இனி நீயேயிறே ராஜ்யத்துக்குக் கடவாய்; உன்னைக் கொண்டன்றோ நாங்கள் ஜீவிக்க இருக்கிறது என்கிறார்கள் அல்லர்; 'உன் முகத்தில் உறுவுதல் காணக்காண உன்னை இழக்கமாட்டார்; அவர் வரவு அணித்து என்றன்றோ நாங்கள் ஜீவிக்கிறது' என்றார்கள் ஆயிற்று.

அப்படியே, இவளைக் கொண்டே ஜீவிக்க இருக்கிறார்கள் ஆகையாலே எல்லாரும் கலங்க, அவ்வளவிலே விறகறிவார், வேரறிவார், மந்திரமறிவார், ஔஷதமறிவார் அடங்கலும் வந்துபுகுர, அவ்வளவிலே தேவதாந்தர ஸ்பர்சமுடையார் 'வைஷ்ணவ கிருஹத்தைத் தூஷிக்க நமக்கு நல்லவளவு' என்று வந்து புகுர, இவள் பந்துவர்க்கம் கலங்கி ஒரு கட்டுவிச்சியை இவள் நோய் எது? நோய்க்கு நிதானம் எது? என்று கேட்டு, அவள் சொல்படியே 'த்ரவ்யம் நிந்த்ய ஸுராதி" என்று நிந்தியமான திரவ்யத்தை இவள் ரக்ஷணத்துக்குப் பரிகரமாகவும் க்ஷுத்ரதேவதை ஆவேசித்ததாகவும் கொண்டு இவள்பக்கல் உண்டான சிநேஹத்தாலே இவள் ஜீவிக்குமாகில் ஏதேனும் ஒரு வழியாகிலும் பரிஹரிக்க அமையும் என்று வழியல்லா வழியிலே இழிந்தார்கள். [2]அப்படிக் கலங்கப் பண்ணுமிறே பிரிவு. [3] "ஸர்வான் தேவான்" இறே.

---

1. தலைவி மோஹித்தால், உறவினர்களும் மோஹிப்பதற்குக் காரணம் என்? எனின், இவளைக் கொண்டே ஜீவிக்க இருக்கிறார்களாகையாலே, அவர்களும் மோஹித்தார்கள் என்று கூற நினைத்து, அதற்குத் திருஷ்டாந்தமும் திருஷ்டாந்த சுலோகத்திற்குப் பொருளும் கூறுகிறார் 'அஸ்யராஜ' என்று தொடங்கி. இது, ஸ்ரீ ராமா. அயோத், 87 : 8.

"த்ரவியம் நிந்த்ய ஸுராதி தைவதம் அதிக்ஷுத்ரம்ச பாஹ்யாகம:
த்ருஷ்டி: தேவலகா: தேசிகஜந:"

என்பது சுலோகம். பூஜைக்குரிய பொருள்கள் நிந்திக்கப்படுகின்ற கள் முதலானவைகள்; தெய்வம் மிகத் தாழ்ந்த தெய்வம்; சாஸ்திரம் வேதங்கட்குப் புறம்பான ஆகமங்கள்; ஆசாரியர்கள் பூசாரிகள் என்பது இதன்பொருள்.

2. இப்படிக் கலங்குகைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அப்படி' என்று தொடங்கி.

3. அப்படிப் பரிவாலே கலங்கினவர்கள் உளரோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'சர்வான்' என்று தொடங்கி.

ஸ்த்ரியோ வ்ருத்தா: தருண்யஶ்ச ஸாயம் ப்ராதஸ் ஸமாஹிதா:
ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யஶஸ்விந:

இளையவர்களும் முதியவர்களுமான பெண்கள் காலையிலும் மாலையிலும் கூடிக்கொண்டு கீர்த்தியையுடைய இராமபிரானுடைய நன்மைக்காக எல்லாத் தேவர்களையும் வணங்குகிறார்கள் என்பது இதன்பொருள்.

இத்தைக் கண்ட உயிர்த்தோழி, இவர்கள் செய்கிற இவை, இவள் அகவாயில் கிடக்கும் சத்தையையும் இழப்பிக்கு மித்தனை; அறிந்தோமாகச் சொல்லில் உன் காவல் சோர் வாலே வந்தது என்பார்கள். நாம் கைவாங்கினோமாகில் இவளை இழக்க வரும். இதுக்குப் போக்கடி என்? என்று விசாரித்து, இவர்களும் ஆராயா நின்றார்கள்; அவ்வோபாதி நாமும் நிரூபணத்திலே இழிந்து இவள் பிரக்ருதியைக் கொண்டு சொன்னோமாகச் சொல்லுவோம் என்று பார்த்து, நீங்கள் இவளுக்கு ஓடுகிற நோவும் அறிந்திலிகோள், நிதானமு மறிந்திலிகோள், பரிஹாரமும் அறிந்திலிகோள், நீங்கள் செய் கிறவை கருமுகமாலையைச் செவ்வி பெறுத்த என்று நெருப் பிலே இடுவாரைப்போலே இவளை இழக்கைக்கு உடலாம். ஆனபின்பு, இக்குடியிலே பழையதாய்ச் செய்து போரும் பரிஹாரத்தைப் பண்ணப் பாருங்கோள்; [1] "அந்தண்ணந் துழாய் கொண்டு சூட்டுமினே" என்றும், "தண்ணந்துழாய்த் தாராயினும் தண்கொம்பதாயினும் நின்ற மண்ணாயினும் கொண்டு வீசுமினே" என்றுமிறே முன்பும் விதித்தது. [2] அங்கு 'நின்ற மண்ணாகிலும் என்றாள்; இங்கு "மாயன் தமர்அடி நீறு" என்கிறாள். இதிறே அடிபடச் செய்துபோந்த பரிஹா ரம். [3] "மாயப்போர் தேர்ப்பாகனார்க்கு" என்று நோயையும், நோய்க்கு நிதானத்தையும், [4] "திருநாமத்தால் தவளப்பொடி" என்று தேவதாந்தர ஸ்பர்ச தத்ஸம்பந்தி ஸ்பர்சத்துக்குப் பரிஹாரத்தையும் சொல்லி அவர்கள் செய்கிறவற்றை விலக்குகிறார்கள்.

[5] இத்தால் இவர்க்கு அஜ்ஞான தசையிலும் தேவதாந்தர ஸ்பர்சமும் ததீயஸ்பர்சமும் சத்தயா பாதகமாய், பகவந்நாம

---

1. பழையதாகச் செய்து போரும் பரிகாரம் யாது? என்ன, 'அந் தண்ணந்துழாய்' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார். 'அந்தண்ணம் துழாய்' என்பது, திருவிருத்தம், 20. 'தண்ணம் துழாய்' என்பது, திரு விருத்தம் 53.

2. 'அங்கு' என்றது, திருவிருத்தத்தில், 'இங்கு' என்றது, இத் திருவாய்மொழியில்.

3. 'மாயப்போர்' என்பது, இத்திருவாய்மொழியில் முதல் திருப் பாசுரம்.

4. 'திருநாமத்தால்' என்பது, இத்திருவாய்மொழியில் 5-ஆம் திருப் பாசுரம்.

5. இத்திருவாய்மொழிக்குச் சுவாபதேசப் பொருள் கூறுகிறார் 'இத்தால்' என்று தொடங்கி. சத்தயா - பொருள்களின் தன்மையால்.

சங்கீர்த்தனமும் பாகவத ஸஹவாஸமும் சத்தயா தாரகமாம்படி இவர்க்குப் பிறந்த வைஷ்ணவத்வம் முறுகினபடி சொல்லுகிறது.

[1] இராவணன் மாயா சிரஸ்ஸைக் காட்டினபோது அல்லாத ஸ்திரீகளைப்போலே சோகித்துக் கண்ணநீர் விழவிட்டாள். [2] இதுக்கு அடி என்? கேட்டபோதே முடிய அன்றோ பிராப்தம்? என்று சீயரைக் கேட்க, அவதாரத்தில் மெய்ப்பாட்டாலே மெய் என்றே சோகித்தாள். ஜ்ஞானமின்றிக்கே ஜீவிக்கைக்கு ஹேது அவருடைய சத்தையாகையாலே உளளாயிருந்தாள். இவ்வர்த்தம் மெய்யேயாகில் சத்தையும் இல்லையாம் என்று அருளிச்செய்தார்.

———(o)———

ஏழாந் திருவாய்மொழி (37)

"சீலமில்லாச் சிறியன்"

பிரவேச சங்கி:— [3] "வர்ஷேண பீஜம் ப்ரதி ஸஞ்ஜஹர்ஷ" - என்று வர்ஷம் விழுந்தால் தன் உணர்த்தியால் அன்றிறே பீஜம் பருவம் செய்கிறது; அப்படியே திருநாமப் பிரசங்கத்திலே உணர்ந்தாரே; 'வண்துவராபதி மன்னனை ஏத்துமின்' என்று அம்ருத சஞ்சீவியான திருநாமப் பிரசங்கமே ஶிஶிர உபசாரமாக உணர்த்தி உண்டாயிற்று; [4] அத்தால் பெற்ற பலம், முன்புத்தை மோஹத்தையும் இழக்கைக்கு

1. அஞ்ஞான தசையிலும் சத்தயா தாரகம் என்பதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'இராவணன்' என்று தொடங்கி.

2. இதற்கு அடி என் - கண்ணநீர் விழவிட்டிருந்த மாத்திரத்திற்குக் காரணம் என்? சீயர் - நஞ்சீயர். 'ஞானம் இன்றிக்கே' என்றது, பெருமாள் உயிரோடு இருக்கிறார் என்ற ஞானம் இன்றிக்கே என்றபடி. 'இவ்வர்த்தம்' என்றது, அவர் முடிவினை.

3. மேல் திருவாய்மொழி மயக்கமாக இருக்க, இந்தத் திருவாய்மொழியில் உணர்த்தி வருகைக்குக் காரணம் யாது? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'வர்ஷேண' என்று தொடங்கி. இது, ஸ்ரீ ராமா. சுந். 29 : 6.

வெயிலாலும் காற்றாலும் அடிபட்டு உலர்ந்த பயிரானது, மழை பெய்தவாறே பச்சை பெற்றுப் பருவம் செய்வதுபோன்று என்பது இதன்பொருள்.

4. பசியன் உண்ணுமாறு போன்று உணர்வு பெற்றால் அநுபவிக்குமத்தனை அன்றோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அத்தால் பெற்ற பலம்' என்று தொடங்கி.

உறுப்பான இத்தனை. [1]மோஹதசையில் அநநுசந்தானத்தாலே கிலேசம் இல்லை; பிறந்த உணர்த்தி பேற்றுக்கு உடல் அல்லாமையாலே கிலேசத்தை விளைக்க, அத்தாலே கூப்பிடுகிறார்.

[2]உறக்கத்தில் பசி பொறுக்கலாம்; உணர்ந்தால் உண்டன்றி நிற்கவொண்ணாதிறே. [3]உணர்ந்த அனந்தரம் பொறுக்க ஒண்ணாதபடி தமக்குப் பிறந்த அலாபகிலேசத்தை அநுசந்தித்து, அவன்[4] ஆபத்துக்கு உதவும் ஸ்வபாவனுமிருக்க, தந்நிதானமறிந்து பரிஹரிக்கவல்லனாய் அதுக்கு ஈடான ப்ராப்தியையுடையனாய்ப் பிரிந்தால் பொறுக்கவொண்ணாதபடியான வடிவழகை யுடையனாய் இருக்க, தமக்கு உதவாமையாலே திருநாட்டிலே இருந்தானாகிலும் அவ்விருப்பு நிலைகுலைந்து வந்து முகம் காட்டும்படி ஆர்த்தியாலே நிரம்பிற்று ஒரு கடல் கையெடுத்துக் கூப்பிட்டாற்போலே கேட்டாரடைய நீராகும்படி [5] கூப்பிடுகிறார். [6]"ஹாராம", "ததாபி."

———(0)———

1. ஆயின், உணர்வுபெற்ற நிலையைக் காட்டிலும் மயங்கியிருக்கும் நிலை நல்லதோ? எனின், அதற்கு விடை கூறுகிறார் 'மோஹதசையில்' என்று தொடங்கி.

2. மயங்கியிருக்கும் நிலையே நல்லது என்பதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'உறக்கத்தில்' என்று தொடங்கி.

3. கூப்பிடும் வகையை விவரிக்கிறார் 'உணர்ந்த அனந்தரம்' என்று தொடங்கி.

4. "ஞாலம் உண்டாய்" என்றதனை நோக்கி 'ஆபத்துக்கு உதவும் ஸ்வபாவனுமிருக்க' என்கிறார். "ஞானமூர்த்தி" என்றதனை நோக்கி 'தந்நிதானம் அறிந்து' என்கிறார். "நாராயணா" என்றதனை நோக்கி 'அதுக்கு ஈடான பிராப்தியுடையனாய்' என்கிறார். "கோலமேனி" என்றதனை நோக்கி 'வடிவழகை யுடையனாய்' என்கிறார்.

5. "வள்ளலேயோ வாமனனேவோ" என்றதனை நோக்கிக் 'கூப்பிடுகிறார்' என்கிறார்.

6. பிரிந்து ஆற்றாமையாலே கூப்பிடுவதற்கு இரண்டு திருஷ்டாந்தம் காட்டுகிறார் "ஹாராம" "ததாபி" என்று.

ஹாராம ஹாலக்ஷ்மண ஹாஸுமித்ரே ஹாராமமாத: ஸஹமே ஜநந்யா
ஏஷா விபத்யாமி அஹம் அல்பபாக்யா மஹார்ணவே நௌரிவ மூடவாதா.
என்பது, ஸ்ரீராமா. சுந். 28 : 8.

என்னுடைய தாயோடுகூட கௌசல்யே! சுமத்திரே! இராமா! இலக்ஷ்மணா! புண்ணியமற்ற நான் பெருங்கடலில் சுழல்காற்றில் அகப்பட்ட ஓடம்போல் ஆபத்தை அடைகிறேன் என்பது இதன்பொருள்.

"ததாபி" என்ற சுலோகத்திற்கு நம்பிள்ளை அருளிச்செய்த பொருள்: ஞூதேந - சொன்னவார்த்தை 'ஆப்தம்' என்று கைக்கொள்ள வேண்டும்படி

எட்டாந் திருவாய்மொழி (38)

—:—

" ஏறாளுமிறையோனும் "

பிரவேச சங்கி :—[1] கீழில் திருவாய்மொழியிலே, கேட்டாரடைய நீராம்படி கூப்பிட்டார்; 'இப்படிக் கூப்பிடச்செய்தேயும் சர்வேஸ்வரன் நமக்கு முகம் தாராதிருந்தது, நம்பக்கல் உபேக்ஷையாலேயாக அடுக்கும்' என்று பார்த்து, [2]பிராப்தனுமாய், சுசீலனுமாய், விரோதி நிரசனசீலனுமாயிருக்கிறவன் 'இது வேண்டா' என்றிருக்குமாகில், எனக்கோதான் இது வேண்டுவது என்று விடப் பார்த்து, [3]'அவனுக்கு வேண்டாத நானும் என்னுடைமையும் வேண்டா எனக்கு' என்று ஆத்மாத்மீயங்களில் நசையற்றபடியை அந்யாபதேசத்தாலே அருளிச் செய்கிறார்.

அந்தரங்கனாவது, சாரதி சொல்வனவெல்லாம் ஆப்தமிறே. சுயுக்தவாதிநா - அது இல்லையேயாகிலும் வார்த்தையைக் கேட்டால் 'இது அப்படியே' என்று நம்பி ஓடுகிற சோகம் தீரும்படி வார்த்தை சொல்லவல்லனாவது. நிவார்யமாணா - இவனாலே இதுவேண்டா என்று தடுக்கப்படா நிற்கச் செய்தேயும், சுகசோக கர்சிதா - இப்படி இவனைப் போரப்பொலியச் சொல்லுங்காட்டில் நீங்காதேயன்றே, இவள் பிரிந்த விஷயத்தில் ஆற்றாமை. நெடுநாள் கூடிப்பெற்ற பிள்ளையைப் பிரிந்தால் ஆற்றப்போகாதிறே. நசைவதேவி விராராம கூஜிநாத் - பிறர் கண்ணீரையும் மாற்றி, இதற்கு முன்பு சோகமும் புதியது உண்ணாதே போந்தவள், கூப்பிடுகிற கூப்பீட்டில் நின்றும் ஓவிற்றிலள். கூப்பிடுகிறபோதுதான் கேட்டார்க்கு அடைய இரக்கம் பிறக்கும்படி குயில் கூவினாற்போலே காணும் கூப்பிடுவது. கூப்பிட்ட பாசுரம், பிரியேதி புத்ரேதிச ராகவேதிச - பிரிந்தால் தரிக்க ஒண்ணாதபடி எனக்கு இனியவரே! உம்மைப் பிரிந்தாருடைய ஆற்றாமைக்கு நிவர்த்தகரானவரே! சர்வரக்ஷகர் குடியிலே பிறந்து பெற்ற தாயை நலியலாமோ! என்று அவள் கூப்பிட்டாற்போலே இவரும் கூப்பிடுகிறார்.

1. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு கூறுகிறார் 'கீழில் திருவாய்மொழியில்' என்று தொடங்கி.

2. இத்திருவாய்மொழியில் வருகின்ற " அடியேனைப் பணிகொண்ட " என்றதனை நோக்கி 'பிராப்தனுமாய்' என்றும், " கூறாளும் தனி உடம்பன் " என்றதனை நோக்கி 'சுசீலனுமாய்' என்றும், " அசுரர்களை நீறாகும்படியாக " என்றதனை நோக்கி 'விரோதி நிரசன சீலனுமாயிருக்கிறவன்' என்றும் கூறுகிறார்.

3. " உயிரினால் குறை இலம் ", " உடம்பினால் குறை இலம் " என்பனபோன்றவற்றை நோக்கி 'அவனுக்கு வேண்டாத நானும் என்னுடைமையும்' என்று தொடங்கிக் கூறுகிறார்.

[1] அவன் விரும்பின வழியாலே காணும் ஆத்மாத்மீயங்களை விரும்பப் பிராப்தியுள்ளது. [2] அங்ஙன் விரும்பாத அன்று பழைய தேஹாத்மாபிமானத்தோபதியாமிறே. "நதேஹம்", நஹிமே" - இருக்கிறது ராக்ஷஸிகள் நடுவே; பிரிகிறது பெருமானை; இவற்றால் என்ன பிரயோஜனம்.

———0———

ஒன்பதாந் திருவாய்மொழி (39)

— (o) —

"நண்ணாதார்"

பிரவேச சங்கி :— [5] தாம் வேண்டா என்றபோதே தவிருமாகக் கொண்டு உடம்பு வேண்டா, உயிர் வேண்டா என்றார்.

---

1. அவன் விரும்பிலனாகில், அதற்காக, தான் தன்னையும் தன் பொருள்களையும் விரும்பாதிருத்தல் கூடுமோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அவன் விரும்பின' என்று தொடங்கி.

2. ஆன்மா இயல்பிலே ஆனந்தமயனாக இருக்க, அவன் விரும்பின வழியாலே விரும்புகிறது என்பது என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அங்ஙன்' என்று தொடங்கி.

3. அவனுக்கு உறுப்பு அல்லாத ஆத்மாவிலும் ஆத்மாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களிலும் இப்படி நசை அற்றவர் உளரோ? என்ன 'நதேஹம்' என்றும், 'நஹிமே' என்றும் தொடங்கி அதற்கு விடை கூறுகிறார்.

நதேஹம் நப்ராணாந் நசஸுக மசேஷாபிலஷிதம்
நசாத்மாநம் நாந்யத் கிமபி தவ ஸேஷத்வ விபவாத்
பஹிர்பூதம் நாத க்ஷணமபி ஸஹே யாது ஸததா
விநாசம் தத்ஸத்யம் மதுமதந விஜ்ஞாபந மிதம்.

என்பது தோத்திர ரத்நம். 57.

உனக்குச் சேஷப்படாத சரீரத்தை ஒரு கணமும் பொறுக்கமாட்டேன், எல்லாரும் விரும்பக்கூடிய சுகத்தையும் சகிக்கமாட்டேன், உயிரையும் சகிக்கமாட்டேன், வேறு எதனையும் சகிக்கமாட்டேன், மேற்கூறியவை யெல்லாம் உனக்குச் சேஷம் இல்லாதபோது அழிந்துபோகக் கடவன என்பது இதன் பொருள்.

4. நஹிமே ஜீவிதேந அர்த்த: நைவ அர்த்த: நசபூஷணை:
வஸந்த்யா: ராக்ஷஸீமத்யே விநாராமம் மஹாரதம்.

என்பது, ஸ்ரீராமா. சுந். 26 : 5,

மஹாரதனான ஸ்ரீ ராமபிரானைப் பிரிந்து அரக்கியர்கள் நடுவில் வசிக்கிற எனக்கு உயிரினால் பயன் இல்லை, பொருள்களாலும் பயன் இல்லை, ஆபரணங்களாலும் ஒரு பயன் இல்லை என்பது இதன்பொருள்.

இச் சுலோகத்தின் கருத்தையே 'இருக்கிறது' என்று தொடங்கிக் கூறுகிறார்.

5. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு கூறுகிறார் 'தாம் வேண்டா' என்று தொடங்கி.

அவை தவிர்ந்தனவில்லை. ஒரொன்றைப் பெறுகைக்கே அன்றிக்கே முடிகைக்கும் உன் தரவு வேணுமாகில் அத்தைத் தந்தருளவேணும் என்கிறார் இதில். [1] இவ்வமங்கள சப்தத்தைத் திருமுன்பே விண்ணப்பம் செய்யவேண்டும்படியாகக் காணும் இவர் சம்ஸாரத்தை வெறுத்தபடி. [2] உன்னைப் பிரிந்து படுகிற கிலேசத்தின் அளவல்ல உன்னையொழியப் புறம்பே பேறும் இழவுமாய் இருக்கிற சம்ஸாரிகள் நடுவே இருக்கிற இருப்பால் படும் கிலேசம்; ஆகையால் "கொடுஉலகம் காட்டேல்" என்று இத்தைத் தவிர்த்து அழைத்தருளவேணும் என்று எம்பார். [3] "உத்பபாத" இத்யாதி.

அங்ஙன் அன்றிக்கே [4] ஆழ்வான் "ஏருளுமிறையோனி"ல் தம்முடைய ஆற்றாமைக்குக் கூட்டு ஆவார் உண்டோ என்று

1. இவர் இறைவன் திருமுன்னர் "சாமாறே பணி கண்டாய்" என்னலாமோ! என்ன, 'இவ்வமங்கள சப்தத்தை' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார்.

2. பகவானைப் பிரிந்து பிரிவாலே நோவுபடுகிற இந்த இடத்திற்கு, உலக யாத்திரையை நினைத்து 'இதனைக் கண்டிராதபடி என்னை அங்கீகரிக்க வேணும்' என்று கூறுகிற இது, பொருந்தாதே? என்ன, இதற்கு இருவகையில் சமாதானம் கூறுகிறார். ஒன்று எம்பார் கூறியது. மற்றொன்று கூரத்தாழ்வான் கூறியது.

3. பகவானிடத்தில் விருப்பம் இல்லாதவர்களோடு சேர்ந்திருத்தல் தகாது என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'உத்பபாத' என்று.

இதிஉக்த: பருஷம் வாக்யம் நியாயவாதீ விபீஷண:
உத்பபாத கதாபாணி: சதுர்பி: ஸசிவை: ஸஹ.

ஸ்ரீராமா. யுத். 16 : 16.

நீதிமானான ஸ்ரீ விபூஷணன் கொடிய வார்த்தைகளைக் கேட்டுக் கதையைக் கையில் கொண்டவனாய் மற்றைய நான்கு அரக்கர்களோடு மேலே எழுந்தான் என்பது இதன்பொருள்.

4. இரண்டாவதாக ஆழ்வான் நிர்வாஹத்தைக் கூறுகிறார் 'ஆழ்வான்' என்று தொடங்கி. ஆழ்வான் நிர்வாஹத்துக்குக் கருத்து, "கண்ணா! கடல் கடைந்தாய்" என்று அவன் குணங்களையும் சொல்லி, "நண்ணாதார் முறுவலிப்ப" என்று சம்சாரிகளுடைய இழவையும் அநுசந்தித்து, "இவை என்ன உலகியற்கை" என்று 'நீ இப்படிக் குணநிகனாக இருக்க இவர்கள் யாத்திரை இருந்தபடி என்?' என்று விண்ணப்பம் செய்ய, அவனும் 'இதனை விட்டு உம்முடைய பலனை நீர் கண்டுகொள்ளும்' என்று அருளிச்செய்ய, 'ஆனால் இவர்களோடு சேர்ந்திருத்தல் தகாத காரியம்; இவர்கள் நடுவில் இராதபடி திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று பிரார்த்திக்கிறார் என்பது. இவர் நிர்வாஹத்தில் "கண்ணா! கடல் கடைந்தாய்" என்பனபோன்ற குண அநுசந்தானங்கள் எல்லாம் பிறர்பொருட்டு எனக் கொள்க. ஆழ்வான் நிர்வாஹத்திலே இவற்றையும் திருத்தி நல்வழி போக்க வேண்டும் என்பது கருத்து. எம்பார் நிர்வாகம் "கொடு உலகம் காட்டாலே" என்றதிலே நோக்கு.

சம்ஸாரிகளைப் பார்க்க, தாம் பகவத்விஷயத்தில் பிரவணராய் இருப்பது போலே, சப்தாதிகளிலே பிரவணராய், அவற்றினுடைய பேறு இழவுகளே லாபாலாபங்களாம்படி இருக்க, அதனைக் கண்டவாறே தம்மிழவை மறந்து, அவர்களை நல்வழி போக்குவோம் என்று பார்த்து, சர்வேச்வரனாய் கிருபாவானாய் இவற்றின் கிலேசம்அறிந்து பரிஹரிக்கைக்கு ஈடான ஜ்ஞான சக்திகளையுடையனாய் இருக்க, இவை இங்ஙனே நோவுபடுகை போருமோ? 'இவற்றைக் கரைமரம் சேர்க்க வேணும்' என்று அவன் திருவடிகளைப் பிடிக்க, நம் குறையல்ல, இவை அசித்தாய் நாம் நினைத்தபடி கார்யம் கொள்ளுகிறோமல்லோமே; அபுநராவ்ருத்தி லக்ஷணமோக்ஷத்தைப் பெறும்போது ருசியாகிலும் வேணுமே; இவற்றுக்கு நம் பக்கல் ருசி பிறக்கைக்கு நாம் [1]பார்த்த வழிகள் அடையத் தப்பினபின்பு நம்மால் செய்யலாவதில்லை; நாம் உம்மோபாதி ஆவதெல்லாம் பார்த்துக் கண்ணநீரோடே கைவாங்கிற்று; நீரும் இத்தை விடும்; என்ன,

பேற்றுக்கு வேண்டுவது இச்சாமாத்ரமான பின்பு இந்த இச்சையையும் நீயே பிறப்பித்துக் கொள்ளுமத்தனையன்றோ என்று [2]உதங்கன், துர்யோதனாதிகள் பக்கல் உண்டான பக்ஷபாதத்தாலே கண்ணனைப் பார்த்து 'உனக்குப் பிராப்தியொத்திருக்க, பாண்டவர்களுக்குப் பக்ஷபதித்து இவர்களை அழியச் செய்தாயே' என்ன, அவர்களை ஆந்தனையும் பொருந்தவிட்டுப் பார்த்தோம்; அவர்கள் 'நாங்கள், பந்துக்கள் ஜீவிக்கில் ஜீவியோம்' என்ன, பின்பன்றோ நாம் அவர்களை யழியச்செய்தது என்ன, 'சர்வநியந்தாவான நீ அவர்களுக்கு இசைவைப் பிறப்பித்துப் பொருந்தவிட்டுக் கொள்ளாவிட்டது என்?' என்று அவன் நிர்ப்பந்தித்தாற்போலே, இவரும் நிர்ப்பந்திக்க, இவர்க்கு சம்ஸாராநுசந்தானத்தால் வந்த கிலேசம் போம்படி [3]"கண்டுகேட்டுற்று" என்று வியாவ்

1. 'பார்த்த வழிகள் அடையத் தப்பின பின்பு' என்றது, படைத்தலையும் அவதாரங்களையும் நோக்கி.

2. இவர் நிர்ப்பந்தித்ததற்கு ஒரு திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'உதங்கன்' என்று தொடங்கி.

3. "கண்டு கேட்டு" என்பது இத்திருவாய்மொழியில் 9-ஆவது திருப்பாசுரம். 'இருக்கிற இருப்பு' என்றது, பரமபதத்திலே இருக்கும் இருப்பினை,

ருத்தமாய் இருக்கிற இருப்பைக் காட்டக் கண்டு கிருதார்த்த ராகிறார் என்று பணிக்கும்.

[1] **ஆழ்வான்** ஓரிடத்தே வழிபோகா நிற்க ஒரு சர்ப்பம் தவளையைப் பிடித்துக் கூப்பிட, இது ஆரறியக் கூப்பிடுகிற தென்று மோஹித்த இவர் பிரக்ருதிக்குச் சேரும் இவர் நிர்வாஹமும்.

பத்தாந் திருவாய்மொழி (40)

— :: —

"ஒன்றும் தேவும்"

பிரவேச சங்கி:—எம்பெருமான் தன் குணங்களாலும் திருத்தவொண்ணாது என்று கைவிட்ட சம்ஸாரிகளைத் தம் [2] கிருபாதிசயத்தாலே பின்னையும் திருத்தப் பார்க்கிறார்; [3]சம்சாரத்தை அடிஅறுக்கவேணும் என்று பார்த்தார்; சம்ஸார பீஜம், [4] இதர தேவதைகள் பக்கல் பரத்வஜ்ஞானமும் பகவத் பரத்வஜ்ஞாநாபாவமுமாக இருந்தது; அது நீங்குவதற்கு உறுப்பாகப் பகவத் பரத்வத்தை உபதேசிக்கிறார் இதில். [5] **எம்பார்** சகல சாஸ்த்ரங்களையும் அதிகரித்து வைத்து, 'பரதத்வம் இன்

---

1. ஆழ்வானுடைய பேரருளைக் குறிக்கின்ற இந்நிர்வாஹம், பரம தயாளுவான ஆழ்வான் தன்மைக்குச் சேரும் என்பதற்கு ஓர் ஐதிஹ்யம் காட்டுகிறார் 'ஆழ்வான்' என்று தொடங்கி.

இவ்விடத்தில் ஆழ்வாருக்கு மூன்றுவிதமான துன்பங்கள் உண்டு என்று கூறுவர் பெரியோர். பிரகிருதி சம்பந்தமான துக்கம் 'முந்நீர் ஞாலம்' என்ற திருவாய்மொழியில்; பகவானைப் பிரிந்ததனால் உண்டான துக்கம் "சீலமில்லா" என்ற திருவாய்மொழியில்; சம்சாரிகள் இழவைக் கண்டு வாடும் துக்கம் இத்திருவாய்மொழியில்.

2. 'தம் கிருபாதிசயத்தாலே' என்றது, "அருள்கொண்டாயிரம் இன் தமிழ் பாடினன், அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்னும்படியான பேரருளாலே என்க.

3. திருத்தும் வகை யாது? என்ன, 'சம்சாரத்தை' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார்.

4. முதல் திருவாய்மொழி தொடங்கிப் பகவானுடைய பரத்துவத்தை அருளிச்செய்திருக்க, மீளவும் இத்திருவாய்மொழியில் பரத்துவத்தை அருளிச் செய்வதற்குக் காரணம் கூறுகிறார் 'இதர தேவதைகள்' என்று தொடங்கி.

5. சாஸ்திரங்கள் அனைத்தும் ஒரு மிடறாகப் பகவானுடைய பரத்துவத்தையும் அவனை உபாசிக்கும் தன்மையையும் கூறாநிற்க, இவர் இப்போது உபதேசிக்கவேண்டுமோ? இவர் உபதேசத்தால் பலித்தது உண்டோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'எம்பார்' என்று தொடங்கி.

13

னது என்று அறுதியிடாதே சேம்புக்குக் கூராச் சிற்றறிவாள் உண்டோ? நமக்கு உபாஸ்யர் அல்லாதார் உண்டோ?' என்று கண்டவிடம் எங்கும் தலைசாய்த்துத் தடுமாறித் திரியா நிற்க, எம்பெருமானுர் தர்சனஸ்த்தரில் எத்தனையேனும் ஜ்ஞானமில்லாத ஸ்திரீ பிராயரும் தேவதாந்தரங்களை அடுப்பிடு கல்லோபாதி நினைத்திருக்கிறது, இவ் "ஒன்றுந்தேவு" இப்பக்ஷத்திலே உண்டாகையாலே என்று அருளிச்செய்வர்.

[1]"த்ருணீக்ருத" இத்யாதி.[2]கார்த்தவீர்யார்ஜுனன் ஆரேனும் பாபசிந்தை பண்ணினல் அவர்கள் முன்னே கையும் வில்லுமாய் நின்று, அவற்றைத் தவிர்த்துப் போந்தான் என்றால் அது உபபந்தம் என்பர்கள். ஒரு க்ஷுத்ர மநுஷ்யனுக்கு இது கூடும் என்றிருக்கிறவர்கள் சர்வசக்தியாய் சர்வாந்தர்யாமியான சர்வேச்வரன் இப்படி வியாபித்து நோக்கும் என்றால் இது அனுபபந்நம் என்பர்கள். 'ஜாதி வியக்தி தோறும் பரிசமாப்ய வர்த்திக்கும் என்றால் அசித்துக்கு இது கூடும் என்றிருப்பார்கள். பரமசேதனனுக்கு இது கூடாது என்று சம்சயிப்பர்கள்.

[3] முதல் திருவாய்மொழியில் "உளன் சுடர்மிகு சுருதியுள்" என்று அவன் காட்டிக்கொடுத்த பரத்வத்தை அனுசந்தித்

---

1. அடுப்பிடு கல்லைப்போன்று நினைத்திருப்பர்கள் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "த்ருணீக்ருத" என்று.

" த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குஶ விபூதய:
ராமாநுஜ பதாம்போஜ ஸமாஶ்ரயண ஶாலிந: "

என்பது பிரமாணம்.

எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகளை அடைந்தவர்கள் பிரமன் முதலாயினருடைய குறைவற்ற செல்வத்தைத் துரும்புக்குச் சமமாக நினைப்பர்கள் என்பது இதன் பொருள்.

2. சகல சாஸ்திரங்களும் கூளமும் பலாப்பிசினும்போலே தேவதாந்தரங்களையும் கலந்து கட்டியாகச் சொல்லுகையாலே பரத்துவம் இன்னது என்று அறியப் போகாது என்று மேலே சொல்லி, வேத சாஸ்திரங்கள் உண்மையை உள்ளவாறு தெரிவித்தாலும் பாவங்களின் மிகுதியாலும் மக்கட்கு நம்பிக்கை உதிக்காது என்கிறார் 'கார்த்த வீரியார்ச்சுனன்' என்று தொடங்கி.

3. 'பகவத் பரத்வத்தை உபதேசிக்கிறார் இதில்' என்று மேலே கூறியதனை விவரிக்கிறார் ' முதல் திருவாய்மொழியில் என்று தொடங்கி.

தார், [1] ஸ்வாநுபவம்தான் பிறர்க்கு உறுப்பாக இருக்கையாலே சேதநராகில் இவ்வளவே அமையுமென்று பார்த்து. பின்பு இதிஹாஸ புராண பிரக்ரியையாலே பரத்வத்தை அருளிச்செய்தார் "திண்ணன் வீட்டில்". அதிலும் அவர்கள் திருந்தாமையாலே அவர்களை உத்தேசித்தே பகவத் பரத்வத்தை உபபாதிப்போம் என்று பார்த்து அதற்கு உறுப்பாக, இதர தேவதைகள்பக்கல் உண்டான பரத்வ சங்கையை அறுத்துக்கொண்டு "நாயகன் அவனே" என்று சுருதிச்சாயையாலும் "கபால நன்மோக்கம்" என்று இதிகாசாதி பிரக்ரியையாலும் பகவத் பரத்வத்தை உபபாதிக்கிறார் இதில்.

[2] முதல் பரத்வே பரத்வம்; திண்ணம் அர்ச்சா பரத்வம்; இதில் "பின்னானார்" என்று அர்ச்சாவதார பரத்வம். [3] இனி இவர் திருத்துகிற வழிதான் என்? என்னில், எல்லார்க்கும் சுகம் அபேக்ஷிதமாயும் துக்கம் அநபேக்ஷிதமாகவுமிருக்க, அபேக்ஷித்த சமயத்தில் சுகம் வராமையாலும் துக்கம் வருகையாலும், இதுக்கு நியாமகம் சேதன சபேக்ஷமான கர்மாபூர்வங்கள் அன்றிக்கே 'இவற்றை எல்லாம் நியமிக்கின்றவனாய் நின்று அனுபவிப்பிக்கிறான் ஒருவன் உளன்' என்று கொள்ளவேண்டியிருந்தது.

இனி அவன் ஸ்வரூபாதிகளை அறியும்படி எங்ஙனே? என்னில், பிரத்யக்ஷாதிகள் அதீந்த்ரியார்த்தத்தில் பிர

---

1. தம் அநுபவத்தின் பொருட்டுப் பரத்துவத்தை அநுசந்தித்தால் பிறர்க்குக் காரியகரமாகுமோ? உபதேசிக்க வேண்டாவோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'ஸ்வாநுபவம் தான்' என்று தொடங்கி.

2. "முதல் திருவாய்மொழியிலே பரத்துவத்திலே பரத்துவத்தை அருளிச்செய்தார்; அது சம்சாரிகளுக்கு எட்டா நிலமாயிருந்தது; அதற்காக அவதாரத்திலே பரத்துவத்தை அருளிச்செய்தார் 'திண்ணன் வீடு' என்ற திருவாய்மொழியில்; அதுவும் பரத்துவத்திலே பரத்துவத்தை ஒத்ததாய்ப் பிற்பாடர்க்கு எட்டிற்று இல்லை; இரண்டும் தேசத்தாலும் காலத்தாலும் கைகழிந்தன. அக் குறைகள் ஒன்றும் இன்றிக்கே 'பின்னானார் வணங்கும் சோதி' என்கிறபடியே பிற்பாடர்க்கும் இழக்கவேண்டாத அர்ச்சாவதாரத்திலே பரத்துவத்தை அருளிச்செய்கிறார் இத் திருவாய்மொழியில்" என்பது நம்பிள்ளை ஈடு.

3. 'எம்பெருமான் திருத்தவொண்ணாது என்று கைவிட்ட சம்சாரிகளை இவர் திருத்தப் பார்க்கிறார்' என்று முன்னர்க் கூறியதைப் பற்றிச் சங்கிக்கிறார் 'இனி இவர்' என்று தொடங்கி.

மாணம் ஆகாமையாலே சதுர்த்தச வித்யாஸ்தான ப்ரதான மாய் விப்ரலம்பாதி தோஷஸம்பாவனு ரஹிதமாய் ஸாத்விக புராண உபப்ரும்ஹிதமான வேதம் கொண்டு அறியவேணும். [1] "அக்னே: ஶிவஸ்ய" இத்யாதிப்படியே சாத்விகங்கள் உபப்ரும்ஹணங்கள். [2] வேதத்துக்கு இத்தோஷம் இல்லையே யாகிலும் சவிபூதிகனுன எம்பெருமானை உபபாதிக்கப் போந்ததாகையாலே "த்ரைகுண்ய விஷயா" என்று அவர் களுடைய குணுகுணமாக ஹிதம் சொல்லிற்றே யாகிலும், [3] "யாவாநர்த்த:" என்று முமுக்ஷு தனக்கு உபாதேயமான அம்சம் பரிக்ராஹ்யம்.

இதில் பூர்வபாகம் ஆராதன ஸ்வரூபத்தையும் உத்தர பாகம் ஆராத்ய ஸ்வரூபத்தையும் சொல்லும். இனி உபாஸ்ய வஸ்துவுக்கு லக்ஷணம் யாது? என்றால் [4] "யதோ வா இமாநி"

---

1. சாத்வீக புராணங்கள் முதலியன இவை என்று விவரிக்கிறுர் 'அக்நே: ஶிவஸ்ய' என்று.

அக்நே: ஶிவஸ்ய மாஹாத்மியம் தாமஸேஷு ப்ரகீர்த்யதே
ராஜஸேஷுச மாஹாத்மியம் ப்ரஹ்மணோ விதுঃ
ஸாத்விகேஷ்வத கல்பேஷு மாஹாத்மியம் அதிகம் ஹரே:

என்பது, மாத்ஸ்ய புராணம்.

தாமச கல்பங்களிலே அக்னி சிவன் இவர்களுடைய மஹாத்மியமானது பரக்கச் சொல்லப்படுகிறது, இராஜச கல்பங்களிலே பிரமனுடைய மஹாத்மியம் அதிகமாகச் சொல்லப்படுகிறது, சாத்துவிக கல்பங்களிலே விஷ்ணுவினுடைய மஹாத்மியம் அதிகமாகச் சொல்லப்படுகிறது என்பது இதன் பொருள்.

2. வேதத்துக்கு மூன்று குணங்களால் வரும் தோஷம் இல்லையே யாகிலும், உபயவிபூதிகளோடு கூடின சர்வேச்வரனைப் பேசவந்த தாகையாலே 'மூன்று குணங்களையுடைய மக்களை விஷயமாக உடையன வேதங்கள்' என்கிற படியே முக்குணங்கட்கும் பற்றுக் கோடாக இருக்கின்ற சேதநரை விஷயமாக வுடையதாய் அவர்களுக்கு ஹிதம் சொல்லப் போந்த தாகையாலே, அவர் களுடைய குணங்கட்குத் தகுதியாக ஹிதம் சொல்லுமது உண்டாயிருக்கும் வேதத்துக்கும் என்பது நம்பிள்ளை ஈடு. 'திரைகுண்ய' என்பது பகவத் கீதை 2 : 46.

3. எல்லா விடங்களிலும் நிறைந்த தண்ணீரில் வேட்கை யுடையவ னுக்கு எத்துணை நீர் பயன்படுகிறதோ, அறிந்த பிராமணனுக்கு எல்லா வேதங் களிலும் அத்துணையே பிரயோஜனப்படுகிறது என்பது இதன் பொருள்.

4. யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி
யத்பிரயந்தி அபிசம்விசந்தி தத்விஜிஜ்ஞா ஸஸ்வ தத்பிரஹ்ம.

என்பது, தைத்திரீய உபநிடதம்.

எதனிடத்திலிருந்து இந்தப் பொருள்கள் உண்டாகின்றனவோ, எதனுல் உண்டான பொருள்கள் பிழைத்திருக்கின்றனவோ, நாசத்தை அடைந்து எதனிடத்தில் லயப்படுகின்றனவோ? அதனைத் தியானம் பண்ணுவாயாக; அதுதான் பரம்பொருள் என்பது இதன் பொருள்.

என்று அல்லாதவைகளுக்கு அத்யேயதை முன்னாக ஜகத் காரண வஸ்துவுக்கு த்யேயதையை விதித்து, [1] "காரணந்து த்யேய:" என்று, அது தன்னை [2] "ஸதேவ" என்று ஸாமாந்ய சப்தத்தாலே சொல்லி, [3] "ப்ரம்ஹா வா" என்றும் [4] "ஆத்மா வா" என்றும் அசாதாரண சப்தங்களாலே சொல்லி, [5] "ஏகோஹவை நாராயண ஆஸீத்" என்று நாராயண சப்த வாச்யனாகச் சொல்லாநின்றது. [6] "நசத் நசஅஸத்" [7] "சம்புராகாச மத்யே த்யேய:" என்றது குணயோகத்தாலே இந்திர பிராணாகாச சப்தங்களோபாதி நாராயணன் பக்கலிலே சேரும். [8] இது யோகரூடியாகையாலே வேறொரு வியக்தியில் சேராது.

"த்ரிசீர்ஷாணம்" என்று சேதந சாதாரண லிங்கங்கள் உண்டாகில் பிரகாரவாசக சப்தம் பிரகாரி பரியந்த ஸ்வார்த்தாபிதானம் பண்ணக் கடவாதாகையாலே அவன்

---

1. இது அதர்வசிகை. காரணப் பொருளே தியானம் செய்தற் குரியது என்பது இதன் பொருள்.

2. "ஸதேவ ஸோம்யேதம் அக்ர ஆஸீத் ஏகமேவம் அத்விதீயம்" இது சாந்தோக்யம். சுவேத கேதுவே இந்த உலகமானது படைப்பதற்கு முன்னே 'சத்' என்று சொல்லக்கூடியதாக இருந்தது என்பது இதன் பொருள்.

3. இந்த உலகமானது படைப்பதற்கு முன்னே பிரஹ்மம் என்ற ஒன்றேயாக இருந்தது என்பது இதன் பொருள். இது, வாஜசநேயம்.

4. இந்த உலகமானது படைப்பதற்கு முன்னே ஆத்மா என்ற ஒன்றேயாக இருந்தது என்பது இதன் பொருள். இது, ஐதரேயம்.

5. ஏகோஹவை நாராயண ஆஸீத் ந பிரஹ்மா
நேஸாநோ நேமேத்யாவா பிருதிவீ ந நக்ஷத்ராணி.

என்பது, மஹோபநிடதம்.

நாராயணன் ஒருவனே இருந்தான்; பிரமனும் இல்லை, சிவனும் இல்லை, வேறு எந்தப் பொருள்களும் இல்லை என்பது இதன் பொருள்.

6. இது, ஶ்வேதாஶ்வதரம். இங்குச் 'சத்' என்றது, நாமரூபங்களோடு கூடின சித்தினை. 'அசத்' என்றது, நாமரூபங்களோடு கூடின அசித்தினை.

7. இது, ஶ்வேதாஶ்வதரம்.

8. 'இது' என்றது நாராயணன் என்னும் பெயரினை. யோகரூடி - காரணவிடுகுறி.

பக்கல் பர்யவஸித்தன்றி நில்லாது. [1] கீழே சர்வேச்வரனை "பூர்ணம் புருஷேண" என்று சொல்லி "ததோ யதுத்தர தரம்" என்றால் புருஷோத்தமன் என்றதாம். "யஸ்மாத் பரம் நாபர மஸ்தி" என்றேதி வைத்து மேல் ஒன்று உண்டாய்ச் சொல்லில் முதலிலே ஓதாதவன் வார்த்தை. [2] "தஸ்மிந் யதந்த:" என்றது குணம் உபாஸ்யம் என்கிறது. இவ்விடத்திலே [3] 'கஸ்த்வம் தத்வவித்' இத்யாதியை யநுஸந்திப்பது.

இனி ஜகத் காரணமாய்க் கொண்டு உபாஸ்யமாவது என்றும் ஒக்க உண்டாகவேணுமிறே. அதில் சம்ஹாரத்தில் [4]'ஏகோஹவை நாராயண ஆஸீத்' என்று அவன் ஒருவனையே உளனாகச் சொல்லி, அல்லாதாரை "நப்ரம்ஹா நேசாந:" என்று அவர்களை இல்லையாகச் சொல்லி, அல்லாதாரில் இவர்களுக்கு உத்கர்ஷம் உண்டோ என்று சங்கியாமைக்கு 'நேமே த்யாவா ப்ருதிவீ' என்றவற்றோடொக்க இவர்களையும் சமானாதிகரித்து, சிருஷ்டியில் [5] 'நன்மைப்புனல் பண்ணி நான்முகனைப் பண்ணி' என்று ஒரு நீராக சமாநாதிகரித்ததிறே.

ஆக, இப்படிகளாலே இதர தேவதைகள் பக்கல் உண்டான பரத்வ சங்கையை அறுத்து, சர்வஸ்மாத்பரனாய் சர்வ

---

1. இனி, "ததோயத் உத்தரதரம்" என்று கொண்டு சொல்லுகிற விடத்தில் செய்வது என்? என்னில், மேலே சர்வேச்வரனைப் 'புருஷன்' என்ற பெயர்க்குரிய பொருளாகச் சொல்லி, அதற்கு மேலே 'உத்தர தரம்' என்னும்போது புருஷோத்தமன் என்பதனைத் தெரிவித்ததாமத்தனை. அங்ஙனம் கோடற்குக் காரணம் என்? எனின், 'எந்தப் பரம்பொருளுக்கு ஒத்ததாயும் மிக்கதாயும் உள்ள பொருள் வேறு ஒன்றும் இல்லை' என்று கூறிவைத்து 'அதற்கு மேலே ஒன்று உண்டு காண்' என்னும்போது அறிவில்லாதவனாகச் சொன்னவனுமத்தனை. முதலிலே ஓதாதவன் வார்த்தையாமத்தனை என்பது நம்பிள்ளை ஈடு.

2. அந்தப் பகவானிடத்தில் உள்ளே யிருக்கிற பொருள் உபாசிக்கத் தக்கது என்பது இதன் பொருள்.

3.

4. இந்த உபநிடத வாக்கியத்தையும் இதற்குப் பொருளையும் மேலே காண்க.

5. 'நன்மைப் புனல் பண்ணி' என்றது, திருவாய்மொழி, 7. 5: 4.

சிருஷ்டர்வாய் சமஸ்த கல்யாண குணாத்மகனாய் சர்வரக்ஷகனாய் சர்வாந்தர்யாமியாய் நாராயண சப்தவாச்யனான சர்வேச்வரன் தன் பெருமைகள் எல்லாவற்றோடும்கூடக் கண்ணுக்கு விஷயமாம்படி திருநகரியிலே வந்து சந்நிஹிதனானன்; அவனை ஆஸ்ரயித்து எல்லாரும் கிருதார்த்தராய்ப் போங்கோள் என்று அருளிச்செய்கிறார்.

—— :: ——

ஐந்தாம் பத்து

முதல் திருவாய்மொழி (41)

"கையார் சக்கரம்"

பிரவேச ஸங்கி :— [1]இரண்டு கிட்டம் தன்னிலே சேரக் கிடந்தால் அதில் ஒன்று பொன்னுய் இருக்குமா போலே சம்ஸாரிகளிலே ஒருவனுய் அநாதிகாலம் புத்திபூர்வகம் சப்தாதி விஷயங்களையே விரும்பித் [2]தன்பக்கல் அஹ்ருதயமான உக்தி மாத்ரமேயாய் இருக்க, புத்திபூர்வக பாபங்களை விஸ்மரித்து, ஞானம் பிறந்தபின்பு பிராமாதிகமாக வந்தவற்றில் அஜ்ஞனுய், [3]பிறரையும் நான் திருத்தும்படி நிர்ஹேதுகமாக விஷயீகரிப்பதே என்று அவன் [4]தமக்குப் பண்ணின உபகாரத்தைச் சொல்லி ஹ்ருஷ்டராகிருர்.

இரண்டாந் திருவாய்மொழி (42)

"பொலிக பொலிக"

பிரவேச ஸங்கி :— [5]"நண்ணுதார் முறுவலிப்ப"விலே, சம்ஸாரிகள் படுகிற கிலேசத்தை அநுசந்தித்து, அதுக்குப் பரி

---

1. "நண்ணுதார் முறுவலிப்பவிலே சம்சாரிகள் படுகிற கிலேசத்தை அநுசந்தித்து, அதுக்குப் பரிஹாரமாக, 'பகவத் பரத்வ ஞானத்தை உண்டாக்குவோம்' என்று பகவத் பரத்வத்தை உபதேசித்தார் கீழ்" என்பது நம்பிள்ளை ஈடு. கிட்டம் - பிச்சாங்கட்டி.

2. "பொய்யேகைம்மை சொல்லி" என்ற திருப்பாசுரப் பகுதியை நோக்கி 'தன் பக்கல்' என்று தொடங்கிக் கூறுகிருர்.

3. 'பிறரையும் நான் திருத்தும்படி' என்றது, "ஒன்றும் தேவும்" என்ற மேல் திருவாய்மொழியை நோக்கி.

4. "மெய்யே பெற்றொழிந்தேன்" என்றதனை நோக்கித் 'தமக்குப் பண்ணின உபகாரத்தை' என்கிருர்.

5. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு கூறுகிருர் 'நண்ணுதார்' என்று தொடங்கி. 'நண்ணுதார் முறுவலிப்பவிலே' என்றது, "நண்ணுதார் முறுவலிப்ப' என்ற திருவாய்மொழியிலே என்றபடி.

ஹாரமாக், "ஒன்றும் தேவிலே" பகவத் பரத்வத்தை உப பாதித்துத் திருத்த, அத்தாலே திருந்திச் சம்சார பரமபதம் விபாகம் அற்று அங்குள்ளாரும் இங்கே வரலாம்படி இருக்கிற இருப்பைக் கண்டு மங்களாசாசனம் பண்ணுகிறார் இத்திரு வாய்மொழியில்.

——::——

மூன்றாந் திருவாய்மொழி (43)

"மாசறு சோதி"

பிரவேச சங்கி :—[1] "மலியும் சுடர்ஒளி மூர்த்தி மாயப் பிரான் கண்ணன் தன்னை" என்று வடிவழகையும் குணங்களையும் சௌலப்யத்தையும் அநுசந்தித்து, இப்படிச் சுலபனுமாய், ஆச்சரியமான குணசேஷ்டிதங்களையுடையனுமாய், அவையில்லையேயாகிலும் விடவொண்ணாத வடிவழகையுமுடையனான இவனை பாஹ்ய சம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து அணைக்கக்கோலிக் கையை நீட்ட, அகப்படாதே கைகழிந்து நிற்க, அத்தாலே கலங்கி மடல் எடுக்கையிலே உபக்ரமிக்கிறார்.

[2] மடல் எடுக்கையாவது போர்சுட்டுப் பொரி கொறிக்கை யோபாதி. இதில், அகார்யகரம், [3] அநீதி செய்யாதே கொள்ளுங்கோள் என்று பிறரைத் திருத்தினவர், 'நீர் செய்கிறவை அநீதி' என்று பிறர் திருத்தவும் திருந்தாதபடியானார். பிறரை பகவத் பிரவணராக்குகிறவர் பிராவண்யம் ஆகாதென்றால் தவிராரிறே.

---

1. மேல், தாம் திருத்தத் திருந்தின ஸ்ரீ வைஷ்ணவர்கட்கு மங்களா சாசனம் செய்த இவர்க்கு, இத் திருவாய்மொழியில் மடல் எடுக்கும்படியான ஆற்றாமை வருகைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'மலியும்' என்று தொடங்கி.

2. மடல் எடுத்தல் என்பது துணிவுள்ள காரியமுமாய், மிகச் சிறிய பலமுமாய் இருக்கும் என்பதனைக் காட்டுகிறார் 'மடல் எடுக்கையாவது' என்று தொடங்கி.

3. 'என்னை அழைத்துக் கொண்டு சேறல் அவருக்குத் தக்கதாம்' என்றிருக்கவேண்டிய இவர் நீதியல்லாத காரியத்தைச் செய்யத் தொடங்குவது என்? என்ன, அதற்கு, சுவாபதேசத்தில் விடை கூறுகிறார் 'அநீதி செய்யாதே' என்று தொடங்கி.

[1]அன்றிக்கே, "ஏரூளும் இறையோ"னில் கிலேசம், மேல் திருவாய்மொழியில்பரஹிதத்துக்குவேண்டுவவெல்லாம்செய்து [2]கையொழிந்தவாறே, பழைய தம் இழவே தலையெடுத்து வழியல்லா வழியிலேயாகிலும் கிட்டும்படியான விடாய் பிறந்து, ஒருவர்க்கு [3]ஒரு விஷயத்தில் சங்கம் உண்டானால் அவ் விஷயம் கிடையாவிட்டால் 'அது இப்போதே பெறவேண்டும்' என்னும்படியான துவரை பிறந்தால், அவ்விஷயம் இருந்த இடங்களிலே புகைசூழ்ந்தாகிலும் புறப்படவித்து முகத்திலே விழிப்பாரைப்போலே அத்தலைக்குப் பழியை விளைத்தாகிலும் [4]முகத்திலே விழிக்கும்படி தமக்குப் பிறந்த தசாவிசேஷத்தை,

எம்பெருமானோடே கலந்து பிரிந்தாள் ஒரு பிராட்டி, ஆற்றாமை மீதூர்ந்திருக்கச் செய்தே இவள் தரித்திருக்கிற இருப்பைக் கண்ட தோழியானவள், இவள் "முன்புத்தை யளவுகள் அன்றிக்கே தேறி இருந்தாள், அவன் வாராதிருக்க இவளுக்கு இத்தனை தேற்றம் உண்டாம்போது சாஹஸத்திலே துணிந்தாளாக வேணும்" என்று பார்த்து, 'நீ செய்ய நினைத்திருக்கிற இது [5]உன் தலைமைக்கும் அவன் தலைமைக்

---

1. வேறு வகையாக இயைபு அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. இந்த இயைபு "ஏரூளுமிறையோனும்" என்ற திருவாய்மொழியிலிருந்து தொடங்குகிறது. என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "நாடி என்னை நாளையம்", "முன் செய்ய மாமை இழந்து" என்பன போன்றனவற்றை நோக்கி, "ஏரூளும் இறையோனும்" என்ற திருவாய்மொழியிலிருந்து இயைபு அருளிச்செய்கிறார் என்றபடி.

2. 'கை ஒழிந்தவாறே' என்றது, திருத்துகிற காரியம் முடிந்த பின்பு என்றபடி. பழைய தம் இழவே - "ஏரூளும் இறையோனும்" என்ற திருவாய்மொழியில் உண்டான இழவே என்றபடி. 'வழியல்லா வழி' என்றது, இறைவனாலே பெறுகை அன்றிக்கே வேறு சாதனங்களைச் செய்தேயாகிலும் பெறுதலைக் குறித்தபடி.

3. மடல் எடுத்தலை வேறும் ஒரு திருஷ்டாந்தம் கொண்டு விளக்குகிறார் 'ஒரு விஷயத்தில்' என்று தொடங்கி.

4. "தூமுறுவல் தொண்டைவாய்ப் பிரானை" என்றதனை நோக்கி 'முகத்திலே விழிக்கும்படி' என்கிறார்.

5. "யாம மடல் ஊர்ந்தும்", "யாம் மடம் இன்றி" என்பனவற்றை நோக்கி 'உன் தலைமைக்கும்' என்கிறார். தலைமை - வைலக்ஷண்யம். "ஆதி மூர்த்தி" என்பதனை நோக்கி 'அவன் தலைமைக்கும்' என்கிறார்.

கும், [1]உன் மதிப்புக்கும் அவன் மதிப்புக்கும்,உன் பிறப்புக்கும் உன் மர்யாதைக்கும் போராது' என்ன, [2] என் ஸ்வரூபத்தை யழித்தாகிலும் அவன் ஸ்வரூபத்தை யழித்து மடல் எடுக்கை தவிரேன் என்று துணிந்த துணிவைத் [3] தோழிக்கு அறிவிக்கிற பாசுரத்தாலே பேசுகிறார்.

இதைக்கண்டு அஞ்சின சர்வேச்வரன் [4] வந்து முகங் காட்டித் தானும் சத்தைபெற்று இவளையும் தரிப்பித்தானாய்த் தலைகட்டுகிறது. [5]இவர் மடலிலே துணிந்தால் கடுகவந்து முகம் காட்டிப் பிழைக்கில் பிழைக்குமித்தனை போக்கி, இல்லையாகில் சத்தை கிடக்க விரகு இல்லையன்றோ அவனுக்கு; [6]ப்ரஹ்மாஸ்த்ரத்துக்குத் தப்ப ஒண்ணாதிறே அவனுக்கு.

[7] அபிமத விஷயத்தைப் பிரிந்து ஆற்றமாட்டாதார், மடல் எடுக்கை என்று தமிழர் சொல்லிப் போருவது ஒன்று றுண்டு. அதாவது [8] 'தூல்யசீலவயோ வ்ருத்தாம்' என்கிற

---

1. "என்னை நிறைகொண்டான்" என்றதனை நோக்கி 'உன் மதிப்புக்கும்' என்கிறார். "குதிரியாய் மடலூர்தும்" என்றதனை நோக்கி 'உன் பிறப்புக்கும்' என்கிறார். "என்னை நிறை கொண்டான்" என்றதனை நோக்கி 'உன் மரியாதைக்கும்' என்கிறார்.

2. "யாம் மடல் ஊர்ந்தும்" என்றதனை நோக்கி 'என் ஸ்வரூபத்தை அழித்தாகிலும்' என்கிறார்.

3. 'தோழிக்கு அறிவிக்க' என்றது, தோழிக்கு அறிவிக்கும் வியாஜத்தாலே ஈச்வரனுக்கு அறிவிக்க என்றபடி.

4. "இரைக்கும் கருங்கடல் வண்ணனை" என்றதனை நோக்கி 'வந்து முகம் காட்டித் தானும் சத்தை பெற்று' என்கிறார்.

5. முகம் காட்டாவிடில், இவளுக்குச் சத்தை இல்லையாவது ஒழிய, அவனுக்குச் சத்தை இல்லையாமோ? என்ன, 'இவர் மடலிலே' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார். பரம காதலனாகையாலே, இவளைத் தரிப்பியாவிடின் அவனுக்கும் சத்தை கிடவாது என்றபடி.

6. விரகு இல்லாமையை விளக்குகிறார் 'பிரஹ்மாஸ்திரத்துக்கு' என்று தொடங்கி. பிரஹ்மாத்திரத்துக்கு - பிரஹ்மாஸ்திரம் போன்று கடக்க முடியாததுக்கு.

7. மடல் எடுத்தல் என்பது புனைந்துரையாகச் சொல்லப்படுவதே அன்றி, சாஸ்திர சித்தமாமோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அபிமத விஷயத்தை' என்று தொடங்கி.

8. "ஒத்த சீலம் வயது ஒழுக்கம் உடையவனை" என்பது, அவ்வடியின் பொருள்.

படியே அவற்றால் குறைவற்றிருப்பவர்களான இருவர், அவர்களில் 'அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி' என்றாற்போலே சொல்லுகிற நாயகலக்ஷணங்கள் நாயகனுமுடையவனாய், நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்றாற்போலே சொல்லுகிற நாயகிலக்ஷணங்கள் நாயகியுமுடையவளாய் இப்படி இரண்டுதலையும் குறைவற்று, இவர்கள் தாமும் ப்ராப்தயௌவனராயுமிருக்க, இவர்களைப் புறம்பே கூட்டுவார் இன்றிக்கேயிருக்க, யாத்ருச்சிகமாக அவனும் வேட்டைக்கு என்று புறப்பட, இவளும் பூக்கொய்கை என்று லீலோத்யானத்திலே புறப்பட, அவ்விடத்திலே தைவயோகத்தாலே இருவர்க்கும் [1]கண்கலவியுண்டாக, சிலர் அடியாக வந்த சம்ச்லேஷம் அல்லாமையாலே பிரிவோடே வியாப்தமாய்ப் பிரிய, குணாதிகர்கள் ஆகையாலே இருவர்க்கும் ஆற்றாமை விஞ்சி ஒருவரை ஒழிய ஒருவர்க்குச் செல்லாமை பிறக்க, இரண்டு தலையையும் அழித்தாகிலும் பெறப் பார்க்கை.

[2]இதன் ஸ்வரூபம் அபிமதவிஷயத்தை ஒரு படத்திலே எழுதி, வைத்த கண் வாங்காதே அத்தைப் பார்த்துக்கொண்டு பனை மடலைக் குதிரையாகக் கொண்டு, போகோபகரணங்கள் அக்னி கல்பமாகத் தோற்ற, ஊணும் உறக்கமும் இன்றிக்கே, உடம்பிலே துளிநீரும் ஏறிட்டுக்கொள்ளாதே, மயிரை விரித்துக்கொண்டு திரியா நின்றால், இத் தர்மஹானியைக் கண்ட க்ஷத்திரியாதிகள், கெட்டேன் 'ஒரு விஷயத்தில் இவனுக்கு இவ்வளவு பாவபந்தம் உண்டாகாதே' என்று அவர்கள் அவனை அத்தலைவியோடு கூட்டக் கூடுதல், இல்லையாகில், இதுவே ஹேதுவாக இரண்டு தலையிலுள்ள [3]பந்துக்களும் கைவிட, அலக்குப்போர் போலே ஒருவர்க்கொருவர் புகலாய் அங்ஙனம் கூடுதல், தோழிமார் கூட்டக் கூடுதல், ஆற்றாமை கூட்டக் கூடுதல் தலைவியானவள் குணாதிகளா

---

1. கண் கலவி - இயற்கைப் புணர்ச்சி.

2. இதன் ஸ்வரூபம் - இந்த மடல் ஊர்தலின் தன்மை.

3. 'பந்துக்களும் கைவிட' என்றது, இவள் எங்கள் வார்த்தைகளைக் கடவாதிருக்க வேண்டியிருக்க, தானாகவே சில செயல்களைச் செய்யாநின்றாள்; இது நம் குடிக்குச் சேராது என்று அவர்கள் கைவிடுதலைக் குறித்தபடி. அலக்குப் போராவது, சேவகர்கள் ஈட்டிகளை ஒன்றோடு ஒன்று எதிர்த்து வைத்தல்.

யிருக்குமாகில் பழிக்கு அஞ்சிக் கூடக் கூடுதல், இவையித்தனை யும் இல்லையாகில் முடிந்து பிழைத்தல் செய்கையாவதொரு சாஹஸவிருத்தி விசேஷம்.

இதுதன்னை, [1]"கடலன்ன காமத்தராயினும்" என்கிற படியே, ஸ்திரீகள் மடலூரக் கடவர்கள் அல்லர்; நாயகன் ஆற்றாமையாலே மடலெடுக்க உலகின்மேல் வைத்துச்சொல்லு வான், பின், நான் வரை பாயப் புகாநின்றேன், மடல் எடுக்கப் புகாநின்றேன் என்று தோழிக்கு வந்து அறிவிப்பான், அறிவித்த பின்னரும் தோழி கூட்டாவிடில் பின்னை அவன் இது செய்யக்கடவன் என்று இங்ஙனே ஒரு மர்யாதை காட்டி னார்கள் தமிழர்கள். இங்குப் பிராட்டிதான் மடல் எடுத்ததாய் இரா நின்றது; இது சேரும்படி என்? என்னில், [2]அவர்கள் ஒரு தலையிலேதான் அத்தை இசைந்தார்களே; அதுக்கு அடியான ஆற்றாமை இரண்டு தலைக்கும் ஒத்தபின்பு ஒரு தலையிலே ஒதுக்குவார் ஆர். இதுக்கு ஒரு வரம்பு கட்டுகை ஆசைக்கு வரம்பு இட்டார்களித்தனை. அவர்கள் பிரேம ஸ்வ பாவம் அறிந்திலர்கள்.

[3]இனி வரம்பழியவாகிலும் முகங் காட்டுவித்துக்கொண்டு தரிக்கவேண்டும்படியான ஒரு விஷயம் புறம்பு இல்லையே.

---

1. கடலன்ன காம முழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்

என்பது, திருக்குறள்.

எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான.

என்பது தொல்காப்பியம்.

2. ஆடவர்கள் மடல் ஊர்வதற்குக் காரணம் எதுவோ, அந்தக் காரணம் பெண்களுக்கும் உண்டு ஆகையாலே, பெண்கள் மடல் ஊரத் தடை இல்லை என்று மறுக்கிறார் 'அவர்கள்' என்று தொடங்கி.

3. ஆயின், பெண் மடல் உலகத்து இல்லையே? எனின், 'வரம்பு' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார். வரம்பாவது, பெண்மைக் குரிய குணங்கள். 'புறம்பு இல்லையே' என்றது, ஈசுவரனை ஒழியப் புறம்பு இல்லை என்றபடி. ஆகையாலே இவள் பகவத் விஷயத்தில் மடல் ஊரத் தட்டு இல்லை என்றபடி.

"மடன்மாப் பெண்டிர் ஏறார் ஏறுவர்
கடவுளர் தலைவராய் வரும் காலே"

என்பது பன்னிருபாட்டியல்.

[1]இவர்தாம் "வளவேழுலகி"ல், நம் பேற்றுக்கு அவ்னோடே கலந்து அவனுக்கு அவத்யத்தை விளைப்பதில் அகன்று முடிந்தாகிலும் அத்தலைக்கு அதிசயத்தைப் பண்ண அமையும் என்றும், "ஏறாளுமிறையோனி"ல், அத்தலைக்கு உறுப்பு அல்லாத ஆத்மாத்மீயங்கள் நசித்துப்போக அமையும் என்றும் சொன்ன சேஷத்வ பாரதந்த்ர்ய ஸ்வரூபத்தோடும் சேராது; வீதராகராய் இருப்பார் செய்து போருவதும் ஒன்று அன்று; ஜ்ஞாநாதிகராயிருப்பார் செய்வதும் ஒன்று அன்று; ஆனால், இது இருந்தபடி என்? என்னில், [2] இதுக்குப் பரிஹாரம் பட்டர். [3]ஜ்ஞானாதிகராயிருப்பார் ஜனக குலத்தில் உள்ளார்க்கு மேல் இல்லையிறே; அதில் பிறந்த பிராட்டி, [4]"யாநசக்யா", [5]"மன்னன் இராமன்பின்" என்கையாலே சிஷ்டாசாரம். [6]இனித்தான் மயர்வற மதி நலமுடைய இவர் அனுஷ்டானந்தானே பிரமாணம். [7]யத்யதாசரதி.

---

1. மேலே மடல் எடுத்தல் அந்யாபதேச சமாதிக்குச் சேராது என்று சங்கித்துப் பரிஹரித்து, ஸ்வாபதேசத்திலும் இது சேராது என்று மூன்று வகையாகச் சங்கித்துப் பரிஹரிக்கிறார் 'இவர்தாம்' என்று தொடங்கி.

2. 'இதுக்குப் பரிஹாரம் பட்டர்' என்றது, பட்டர் திருமடல் வியாக்கியானம் அருளிச்செய்கிறபோது அருளிச்செய்தார் என்றபடி.

3, அவர் அங்கு அருளிச்செய்த சமாதானங்களிற் சிலவற்றை இங்கு எழுதுகிறார், 'ஞானதிகாய்' என்று தொடங்கி. இங்குக் கூறும் விடையை எதிர் நிரல் நிறையாகக் கோடல் வேண்டும்.

4. "யாநசக்யா" என்பது, ஸ்ரீராமா. அயோத். 38 : 8. எந்தப் பிராட்டி முன்பு ஆகாசத்தில் சஞ்சரிக்கின்றவர்களாலும் பார்ப்பதற்கு முடியாதவளோ, அந்தப் பிராட்டியை இப்பொழுது இராஜவீதியில் உள்ள மக்கள் எல்லாரும் பார்க்கின்றார்கள் என்பது இதன் பொருள்.

5. "மன்னன் இராமன்பின் வைதேகி என்றுரைக்கும்
அன்ன நடைய அணங்கு நடந்திலளே"
என்பது பெரிய திருமடல்.

6. இவ் வாழ்வார்க்கு ஒரு சிஷ்டாசாரம் வேண்டுமோ? இவருடைய ஆசாரமே நமக்குப் பிரமாணதமம் அன்றோ என்கிறார் 'இனித்தான்' என்று தொடங்கி.

7. ஞானதிகர் செய்வதுவே நமக்குப் பிரமாணம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "யத்யத் ஆசரதி"என்று. இது, பகவத் கீதை, 3 : 21. பெரியவன் எது எதனைச் செய்கிறானோ அது அதனையே மற்றை மக்களும் செய்கிறார்கள்; அப் பெரியோன் எதனைப் பிரமாணமாகச் செய்கிறானோ அதனையே உலகமும் பின்பற்றுகிறது என்பது இதன் பொருள்.

[1] அப்ராப்த விஷயத்தில் காமத்தை நிஷேதித்து அவை நிலை நில்லாமையாலே "நிதித்யாஸிதவ்ய:" என்று வேதாந்த விஹிதையான பக்தியையிறே இங்குக் காமம் என்கிறது. [2] ஸ்வரூபத்தோடு சேரும் என்கைக்குப் பரிஹாரம்; அங்கு அகன்றதும் அத்தலைக்கு அவத்யத்தை பரிஹரிக்கைக்கு. தன்னை ஆசைப்பட்டார் பெருதே முடிய முகங்காட்டாதே இருந்தான் என்கிற அவத்யத்தைப் பரிஹரிக்கச் செய்கிருர் ஆகையாலே ஸ்வரூபத்தோடு சேரும். அங்கு அகன்றது ஜ்ஞான காரியம். இங்கு மேல்விழுகிறது பக்தி கார்யம். [3] இத்தனை கலங்கப் பண்ணிற்றில்லையாகில் அத்தலையில் வைலக்ஷண்யத்துக்கு நமஸ்காரம். இவர்தாம் இப்படிக் கலங்கிற்றிலராகில் இவருடைய பிரேமத்துக்கு நமஸ்காரம். அவன் அருளியதும் மதிநலமிறே. அவை படுத்துகிற பாடிறே இதெல்லாம்.

[4] இனி சித்தோபாயத்தை ஸ்வீகரித்து அது பலியாவிட்டால் ஸ்வரூபத்தை அந்யதாகரிக்கு மத்தனையிறே. [5] அவன் ஸ்வரூபம் அந்யதாகரித்தால் இத்தலை சொல்லவேண்டாவிறே.

---

1. இரண்டாவதாக 'வீதராகராய் இருப்பார் செய்வதும் ஒன்று அன்று' என்ற சங்கையை அநுவதித்துப் பரிஹரிக்கிருர் 'அப்ராப்த விஷயத்தில்' என்று தொடங்கி. "நிதித்யாஸிதவ்ய:" என்பதற்குப் பொருள் மேலே எழுதப்பட்டுள்ளது.

2. இவர் தம் ஸ்வரூபத்தோடும் சேராது என்பதனை எடுத்துக்கொண்டு அதற்கு ஆறுவகையாகச் சமாதானம் சொல்லுகிருர் 'ஸ்வரூபத்தோடு' என்று தொடங்கி. 'ஸ்வரூபத்தோடு' என்றது, ஈச்வரனுக்கு உயர்வினை விளைக்கக் கூடியதான சொரூபத்தோடு என்றபடி.

3. இப்படி இறைவனுக்குத் தாழ்வினை விளைத்தாகிலும் கிட்டப் பார்க்கிற இது கலக்கத்தாலே அன்ருே, அப்படிக் கலங்குகைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை கூறுகிருர் 'இத்தனை' என்று தொடங்கி.

4. மூன்ருவதான சமாதானத்தைக் கூறுகிருர் 'இனி சித்தோபாயத்தை' என்று தொடங்கி.

5. 'அழைத்துக்கொண்டு செல்லுதல் அவருக்குத் தக்க காரியம்' என்றிராமல், மாறுபட இப்படிச் செய்யலாமோ? என்ன, அதற்கு விடை கூறுகிருர் 'அவன் ஸ்வரூபம்' என்று தொடங்கி, அவன் ஸ்வரூபம் - அவனுடைய காப்பாற்றுகின்ற தன்மை.

[1]இத்தலையில் கர்த்தவ்யமில்லையாகில் அவனுக்கு அசக்தியில்லையாகில் நடுவு விளம்ப ஹேது என்? என்று தோற்றுமிறே. [2]ஆற்றாமை ஆவிஷ்கரித்து அம்பு தொடுக்கவேண்டும் விஷயத்தை யன்றே இவர் பற்றிற்று. [3]இவர் தமக்கு "சாபமாநய" என்கிறவோபாதி மடலெடுக்கக் கடவேன் என்கிற துணிவுக்கு மேல்பட செய்யவேண்டுவது இல்லையாயிற்று; குணாதிக விஷயமாகையாலே அச்சமுறுத்தி முகம் காட்டிக்கொள்ளப் பார்க்கிறார். [4]தம்முடைய சொரூபத்தில் கலக்கம் தொடர்ந்து நிற்கச்செய்தேயும் அவனுடைய குணஞானத்தில் கலக்கம் இன்றிக்கே இருக்கிறது காணும் இவர்க்கு.

[5]"ஏறாளுமிறையோனி"ல், தம்முடைய ஆத்மாத்மீயங்களை முடித்துக்கொள்ளப் பார்த்தவிடத்தில் அவன் உளனாக இவை அழியாமையாலே அத்தலையே பிடித்து அழிப்போம் என்று வேர் பற்றோடே அழிக்கிறார். [6]உண்டாம்போதும் அத்தலையாலே உண்டாய், இல்லையாம்போதும் ஒன்றும் இல்லையாம்படி அன்றோ வஸ்துவின் சொரூபம்தான் இருப்பது.

---

1. அவனுடைய காக்குந்தன்மை இப்போது வேறுபட்டது என்கைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'இத்தலையில்' என்று தொடங்கி.

2. ஆக, மடல் எடுக்கையை உடன்பட்டு அதற்குச் சமாதானத்தைக் கூறினார் இதுகாறும். இனி, இங்ஙனம் சமாதானம் கூறவேண்டுவது, இவர் தாம் மடல் எடுத்தால் அன்றோ "ஊர்ந்தும்" என்கையாலே மடல் எடுக்கவில்லையே என்று உடன்படாமலே நான்காவதான சமாதானத்தைக் கூறுகிறார் 'ஆற்றாமை' என்று தொடங்கி.

3. குணாதிக விஷயமானால் முயற்சி மாத்திரம் போதியதாமோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'இவர் தமக்கு' என்று தொடங்கி.

"சாபமாநய" என்பது, ஸ்ரீராமா. யுத். 21 : 22. இலக்குமணா! வில்லைக் கொண்டு வா, ஆசீ விஷத்துக்கு ஒப்பான பாணங்களைக் கொண்டுவா, கடலை வற்றச் செய்யப்போகிறேன்; வானரவீரர்கள் கால்களால் நடந்து செல்லட்டும் என்பது இதன் பொருள்.

4. மடல் எடுக்கும்படி கலங்குகிற நிலையில் குணாதிகன் என்று குணஞானம் உண்டாகக் கூடுமோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'தம்முடைய' என்று தொடங்கி.

5. மேலே 'இனி ஏறாளும் இறையோனும்' என்று தொடங்கும் வாக்கியத்தால் கூறிய சங்கையை அநுவதித்து அதற்கு விடை கூறுகிறார், 'ஏறாளும்' என்று தொடங்கி. இது, ஐந்தாவது சமாதானம்.

6. அவனை அழித்தால் தம்முடைய சொரூபம் அழியுமோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'உண்டாம் போதும்' என்று தொடங்கி.

[1]"உயிரினால் குறையிலம்" என்றார் அங்கு. இங்கு உயிர்க்கு உயிரினால் குறையிலம் என்கிறார். "ஏறாளுமிறையோனி"ல் அவனுக்குறுப்பல்லாத நானும் என்னுடைமையும் வேண்டா என்றார். இதில் எனக்கு உறுப்பல்லாத அவனும் அவனுடைமையும் வேண்டா என்கிறார்.

[2]இராவணன் மாயா சிரஸ்ஸைக் காட்டினபோது இதர ஸ்திரீகள் அஹ்ருதயமாக அழுமாபோலே தன்னாற்றாமையாலே கூப்பிட்டு, இவ்வார்த்தை கேட்டபோதே முடியாதிருப்பான் என்? என்று பட்டரைச் சிலர் கேட்க, "ஞான அஜ்ஞானங்கள் அன்று ஜீவந நிமித்தம்; அத்தலையில் சத்தையாயிற்று; அதுக்கு அழிவில்லையாகையாலே இருந்தாள்" என்று அருளிச்செய்தார்.

[3]இதற்கு முன்னர் அவனாலே பேறு என்று போந்தாரேயாகிலும் பிராப்யமான கைங்கர்யத்துக்கு பூர்வகாலீனமாய் இருப்பன பரபக்தி பரஜ்ஞான பரமபக்தி யென்று சில உண்டிறே. அவை தவிர ஒண்ணாதிறே. அவை சாதனமும் அல்ல. [4]இனி பக்திமானுக்கும் பக்தி யுண்டு. பிரபந்நனுக்

1. மேலே கூறிய சங்கைக்கு (ஐந்தாவது) வேறு ஒரு வகையிலும் விடை கூறுகிறார் 'உயிரினால்' என்று தொடங்கி. இது ஆறாவது சமாதானம். என்றது, சொரூபத்திற்கு விரோதம் ஆனாலும், ஆற்றாமையின் முறுகுதலாலே சொரூபத்தை மீறி அவனை அழிக்கப் பார்க்கிறார் என்றபடி. இதனால் "ஏறாளும் இறையோனும்" என்ற திருவாய்மொழியைக் காட்டிலும் இங்கு ஆற்றாமை அதிகம் என்றபடி. உயிரினால் - சர்வேச்வரனால்.

2. 'உண்டாம்போதும் அத்தலையாலே உண்டாய்' என்பதற்கு அவன் சத்தை காரணமாக இத் தலையில் சத்தை உண்டாதலை எங்கே கண்டோம்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'இராவணன்' என்று தொடங்கி.

3. இத் திருவாய்மொழியில் 'மடல்' என்கிறது, ஸ்வாபதேசத்தில் பக்தியை அன்றோ, அங்ஙனமிருக்க, அவனையே உபாயமாகப் பற்றியிருக்கிற இவர்க்கு இது உண்டாகலாமோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'இதற்கு முன்னர்' என்று தொடங்கி. என்றது, இவருடைய பக்தி சாதன பக்தியன்று; சாத்ய பக்தி என்றபடி. பரபக்தி - சேர்க்கையால் இன்புறுதலும், பிரிவினால் துன்புறுதலும். பரஞானம் - மிகத் தெளிந்த ஞானம். பரமபக்தி - பிரிவிலே முடியும்படியான நிலையை அடைதல்.

4. இவர் தாம் ஆர்த்தப் பிரபந்நர் ஆகையாலே, பிரபத்தி செய்வதற்கு முன்னேயும் பக்தி உண்டு என்கிறார் 'இனி, பக்திமானுக்கும்' என்று தொடங்கி.

கும் பக்தியுண்டு. ருசியொழியப் பிரபத்தி பண்ணக்கூடாதிறே. [1] அவனுக்கு வைதமாய் வருமது; இவனுக்கு ருசி காரியமாயிருக்கும். அவனுக்குச் சாதனரூபமாயிருக்கும்; இவனுக்கு தேஹ யாத்ராசேஷமாயிருக்கும். அவனுக்குப் பலசிரத்தையில்லாதபோது தவிரலாயிருக்கும்; இவனுக்கு ஸ்வரூபப் பிரயுக்தமாய் வருகையாலே தவிராததாயிருக்கும்.

———0———

நான்காந் திருவாய்மொழி (44)

— (o) —

"ஊரெல்லாம் துஞ்சி"

பிரவேச சங்கி :— [2] "நாடும் இரைக்கவே யாம் மடலூர்ந்தும்" என்று பெரிய துவரையாய்ச் செல்லச் செய்தேயும், [3] மடலூருகைதான் அவனைப் பெறுகையோபாதி தேட்டமாம்படி பலஹாநி மிக்கது; [4] இனித்தான் மடலூரும்போது அபிமத விஷயத்தைப் படத்திலே எழுதவேண்டுமே, அதுக்கு அவகாசம் இல்லாதபடி [5] "ஆழிகொண்டு அன்று இரவி மறைப்ப" என்கிறபடியே [6] ஆதித்யனை மறைத்தானுதல், தைவயோகத்தால் அஸ்தமித்ததாதல் செய்து இராத்திரியாய், அதுதான் சந்தியாமாத்திர மன்றிக்கே சராசரங்கள் அடங்

---

1. பக்தி பிரபக்தி நிஷ்டர்களுடைய பக்தி தார தம்மியத்தை விவரிக்கிறார் 'அவனுக்கு' என்று தொடங்கி.

2. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு கூறுகிறார் 'நாடும்' என்று தொடங்கி.

3. இப்படி மனோவேகம் மிக்கால் பின் மடலூராது ஒழிவான் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'மடல் ஊருகைதான்' என்று தொடங்கி.

4. மடல் ஊராததற்கு வேறு ஒரு காரணம் கூறுகிறார் 'இனித் தான்' என்று தொடங்கி.

5. இது பெரியாழ்வார் திருமொழி, 'நாழிகை கூறிட்டு' என்று தொடங்கும் பாசுரம்.

6. 'ஆதித்யனை மறைத்தானுதல்' என்றது, இவள் மடல் எடுத்தால் தனக்குத் தாழ்வாம் என்று சூரியனை மறைத்தானுதல் என்றபடி,

கும்படி [1] மத்யராத்ரியாய், பழி சொல்லுவாரோடு அநுகூல ராய் ஹிதம் சொல்லி விலக்குவாரோடு வாசிஅற எல்லாம் ஒக்க உறங்குகையாலே உசாத்துணையற்று,

அவ்வளவில், ஆபத்சகாதி அவன் குணங்களை யனுஸந் திக்க, அவைதான் பிரிவில் அனுஸந்திக்கையாலே மிகவும் ஆற்றாமைக்கு உடலாய், வேண்யுத்க்ரதநாதிகளிலே [2] ஒருப் பட்டாரோ பாதி முடிந்து பிழைக்க வேண்டுமளவாய், அது தன்னைப் பெறுகை மடலூருகையோபாதி தேட்டமாய், [3]'விஷ ஸ்ய தாதா' என்னும்படி முடிகை தேட்டமான வளவிலே, [4]'நாம் எல்லாருடைய ரக்ஷணத்துக்கு உறுப்பாகத் திருப்பாற் கடலிலே சாய்ந்தோம், உம்முடைய ரக்ஷணத்திலே உத்யுக்த ராயிருந்தோம், கிரமப்ராப்தி பற்றுமே பதறுகிற இத்தனை' என்று அவன் குணங்களை ஸ்மரிப்பிக்க, அவன் நம்முடைய ரக்ஷணத்திலே உத்யுக்தனுகில் நாம் கிரமப்ராப்தி பற்றுமை பதறுகிறோமித்தனை. நம்மோபாதியுள்ள ரக்ஷணம் நமக்கும் சித்தியாதோ வென்று ரக்ஷிக்கைக்கு உடலான குணங்களை ஆர்த்தராய்க் கூப்பிட்ட பாசுரத்தை, அபிமதநாயகனை ஈச்வரனைப் பிரிந்து ஆற்றாமையாலே இரவு நெடுமைக்கு இரங்கிக்கூப்பிட்ட நாயகி பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

———(o)———

---

1. இத் திருவாய்மொழியில் வருகின்ற "நள்ளிருளாய்" என்றதனை நோக்கி 'மத்யராத்ரியாய்' என்றும், "ஊரெல்லாம் துஞ்சி" என்றதனை நோக்கி 'பழி சொல்லுவாரோடு' என்றும், "அன்னையரும் தோழியரும்" என்றதனை நோக்கி 'அநுகூலராய்' என்று தொடங்கியும், "பார் எல்லாம் உண்ட" என்றதனை நோக்கிப் 'பிரளய ஆபத்திலே' என்று தொடங்கியும் கூறுகிறார்.

2. 'ஒருப்பட்டார்' - சீதாபிராட்டி.

3. பிராட்டி முடியத் தேடியதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "விஷஸ்ய தாதா" என்று தொடங்கி. இது, ஸ்ரீராமா. சுந். 28 : 25.

நான் விஷத்தினாலாவது கூரிய ஆயுதத்தினாலாவது என் உயிரை விட்டு விடுகிறேன், இந்த இராவணன் வீட்டில் அவற்றைக் கொடுப்பான் ஒருவனும் இல்லையே என்பது இதன் பொருள்.

4. "யோகு செய்த பெருமானை" என்றதனை நோக்கி 'நாம் எல்லா ருடைய' என்று தொடங்கிக் கூறுகிறார்.

ஐந்தாந் திருவாய்மொழி (45)

"எங்ஙனேயோ அன்னைமீர்காள்"

பிரவேச சங்கி:—[1]"மாசறு சோதி"யில் "யாமடலூர்ந்தும்" என்று பாரித்தபடியே தலைக்கட்டப் பெறாதபடி இருள் வந்து மூடி நின்றமையாலே, "ஊரெல்லாந் துஞ்சி உலகெல்லாம் நள்ளிருளாய்" மடலூர விஷயம் இல்லாதபடி பழிசொல்லு வாருங்கூட உறங்கிற்று என்றும், "அஞ்சுடர வெய்யோனணி நெடுந்தேர் தோன்றாதால்" என்று ஆதித்யோதயஸூசகங் கூடவில்லை என்றும், "நீயும் பாங்கல்லைகாண் நெஞ்சமே" என்று ஒன்றை ஸ்மரித்துத் தரிக்க விரகு அற்றதென்றும் வெறுத்தாள்.

[2]"மாசறு சோதி"யில் பிராப்யத்வரையாலே உபாயாத்ய வஸாயம் கலங்கினபடி; "ஊரெல்லாம் துஞ்சி"யில் அந்தத் துவரையுங்கூடக் கலங்கினபடி. இதில் 'ரக்ஷகன் அவன்' என்னும் தெளிவும் செல்லாநிற்க, பிராப்ய ருசி நலிகிறபடி.

[3]இக் குறைகளெல்லாம் தீரும்படி போதும் விடியப்பெற்று, "அன்னையரும் தோழியரும்" என்கிற [4]இழவு தீர உகப் பாரும் பொடிவாரும் ஹிதஞ் சொல்லுவாருமாகப் பெற்று,

---

1. மேல் திருவாய்மொழியில் கூறப்பட்ட துக்கமெல்லாம் தீர்ந்தன இத் திருவாய்மொழியில் என்று கூற நினைந்து, மேல் திருவாய்மொழியில் உண்டான துக்கத்திற்குக் காரணங்கள் மூன்று என்கிறார் 'மாசறு சோதி' என்று தொடங்கி 'வெறுத்தாள்' என்றது முடிய. என்றது, பழி சொல்லு வாரும் கூட இல்லாதபடி உறங்குகையாலும், சூரிய உதயத்திற்குச் சூசகமும் இன்றிக்கே இருக்கின்ற இராப்பொழுதின் துன்பமாகையாலும், நெஞ்சு பாங்கு அல்லாமையாலும் வெறுத்தாள் என்று துக்கத்திற்குக் காரணங்கள் மூன்று என்றபடி.

2. மூன்று திருவாய்மொழிகட்கும் சுவாபதேசப் பொருள் கூறுகிறார் 'மாசறு சோதியில்' என்று தொடங்கி.

3. மேல் திருவாய்மொழியில் துக்கத்திற்குக் காரணங்களாகக் கூறப் பட்ட மூன்றும் இத் திருவாய்மொழியில் நீங்கிய விதத்தைக் கூறுகிறார் 'இக் குறைகள் எல்லாம்' என்று தொடங்கி.

4. 'இழவுதீர உகப்பாரும் பொடிவாரும் ஹிதம் சொல்லுவாருமாகப் பெற்று' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "தோழிமார்களும் அன்னையரும் முனிதிர்" என்றதனை நோக்கி. உகப்பார் - உயிர்த்தோழி. பொடிவார் - தாய்மார்கள். ஹிதம் சொல்லுவார் - மற்றைத் தோழிகள்.

[1]அவ்வழியாலே அவர்கள் அவ்விஷயத்திற்கு ஸ்மாரகருமாய், [2]ஆதித்யனும் உதித்துப் பதார்த்த தர்சனம் பண்ணப் பெறுகையாலே வியஸநம் பாலிபாயப் பெற்று, இவ்வளவு ஆச்வாஸமுண்டானவாறே நெஞ்சும் சௌந்தர்யாதிகளைத் தாம் நினைத்தபடியே ஸ்மரித்துத் தரிக்கைக்கு உடலாகை யாலே ஒரு தரிப்பும் உண்டாயிற்று.

[3]இப்படித் தரிப்பும் உண்டாய் அவனை அனுபவிக்கப் பெறுமையாலே ஆற்றாமைக்குடலாய் நோவுபட்டுச் செல்லா நிற்க, உணர்ந்த பந்து வர்க்கமடைய நீ [3]இப்படி இவ்விஷயத்திலே அதிமாத்ரப் பிரவணையாகிற இது [4]உனக்குக் குடிப்பழி, உன் ஸ்திரீத்வத்துக்கும் உன் தலைமைக்கும் அவன் தலைமைக்கும் போராது என்று மீட்கப் பார்க்க, 'இவர்கள் உகந்தருளின நிலங்களில் வாசியறியர்கள்' என்று இருந்தாள் இவள்; நீங்கள், [5]சிலர் காட்டக் கண்டுகொள்ளு அல்லாமையாலே இவ்விஷயத்தை உள்ளபடி அறிந்திலீர்கோள். நான் அங்ஙனன்றிக்கே அவன் மயர்வற மதிநலமருளித் தன்னைக் காட்டக் காண்கையாலே உள்ளபடி கண்டேன்.

ஆகையாலே, நம்பியுடைய [6]வடிவழகிலும் ஆபரணச் சேர்த்தியிலும் வேண்டற்பாட்டிலும் உங்கள் ஹிதவசனத்துக்கு மீளாதபடி அகப்பட்டேன் என்று இங்ஙனே தன்

---

1. ஹிதம் சொல்லி அலைப்பார் உண்டாதல், துக்கத்திற்குக் காரணம் அன்றோ, அதனை அநுகூலமாகச் சொல்லுகிறது என்? என்ன, 'அவ்வழியாலே' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார்.

2. இரண்டாவது மூன்றாவது வெறுப்புக்களும் தீர்ந்தமையைக் காட்டுகிறார் 'ஆதித்யனும்' என்று தொடங்கி. பாலி பாயப் பெறுதல் - பல இடங்களிலும் பரந்து செல்லுதல்.

3. இத் திருவாய்மொழியில் கூறப்படும் பொருளை விவரிக்கிறார் 'இப்படி' என்று தொடங்கி.

4. "நிறைந்த வன் பழி" என்றதனை நோக்கி 'உனக்குக் குடிப்பழி' என்றும், "முன்னின்றாய்" என்றதனை நோக்கி 'உன் ஸ்திரீத்வத்துக்கும்' என்றும், "சிறந்த கீர்த்தி" என்றதனை நோக்கி 'அவன் தலைமைக்கும்' என்றும் தொடங்கிக் கூறுகின்றார்.

5. "என் நெஞ்சினால் நோக்கிக் காணீர்" என்றதனை நோக்கி, 'நீங்கள்' என்றது முதல் 'உள்ளபடி கண்டேன்' என்றது முடிய அருளிச்செய்கிறார்.

6. "நீலமேனி" என்றதனை நோக்கி 'வடிவழகிலும்' என்றும், "பூந்தண்மாலைத் தண்துழாயும்" என்றதனை நோக்கி 'ஒப்பனை அழகிலும்' என்றும், "மின்னு நூலும் குண்டலமும்" என்றதனை நோக்கி 'ஆபரணச் சேர்த்தியிலும்' என்றும், "பொன்முடியும்" என்றதனை நோக்கி "வேண்டற்பாட்டிலும்' என்றும் தொடங்கிக் கூறுகிறார்.

படிகளைச் சொல்லி, [1] ஸ்வயத்னத்தால் காண்பார்க்கு அறிய ஒண்ணாதபடியாகப் பெற்றோமிறே. [2] இவ்வஸ்துதான் உண்டாகப் பெற்றால் நாம் பெற்றபோது பெறுகிறோம். பிறர் அறியாதிருக்கப் பெற்றோமிறே என்று இப்படிப் [3] ப்ரீதி அப்ரீதி சமமாய் உரு வெளிப்பாடாய்ச் செல்லுகிறது.

[4]"ஏழையர் ஆவி"யிலும் உருவெளிபாடாயிருக்கச்செய்தே "இணைக்கூற்றங்கொலோ" என்று பாதகத்வம் உறைத்திருக்கும் அதில்; கீழ்ப் பிறந்த துக்கநிவ்ருத்திக்கு உடலாயிருக்கும் இதில்.

[5] **வசிஷ்ட பகவான்** இக்குடியில் போந்த படிகளைச் சொல்லித் திருவபிஷேகம் பண்ண அமையும் என்ன, பெருமாள் அங்ஙன் செய்வதில்லை என்று முடிய நின்றபடியைக் கண்டவாறே பௌரஜனங்கள் ரக்ஷகனானவன் துடங்கின கார்யத்திலே இப்படி முடிய நின்ற இடம் நம்முடைய ரக்ஷணத்துக்கும் உண்டிறே என்று உகப்பதும் செய்தார்கள்; அத்தாலே நாம் பெற்றதென்? இப்போது பதினாலாண்டு இழந்திருக்க வேண்டா நின்றதே என்று வெறுப்பதும் செய்தார்கள். **திருவடி** பிராட்டியைத் திருவடி தொழுதபோது நமக்குப் பராக்ரமிக்கைக்குக் கைம்முதல் உண்டாகப் பெற்றோ

---

1. "அறிவரியபிரானை" என்றதனை நோக்கி 'ஸ்வயத்னத்தால்' என்று தொடங்கிக் கூறுகிறார்.

2. மேலே கூறிய வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'இவ்வஸ்துதான்' என்று தொடங்கி.

3. போதும் விடிந்து ஹிதம் சொல்லி அலைப்பாரும் உண்டாகப் பெறுகையாலே ஒரு தரிப்பும், அதுதான் நினைத்தவிடியலாகப் பெறாமையாலே ஒரு பிரீதி இன்மையும்; அவனை நினைக்கப் பெறுகையாலே ஒரு பிரீதியும், அதுதான் அநுபவமாகப் பெறாமையாலே ஒரு பிரீதி இன்மையும்; சூரியன் உதித்துப் பொருள்களைப் பார்க்கப் பெறுகையாலே ஒரு பிரீதியும், அதுதான் அவனைக் காணப் பெறாமையாலே ஒரு பிரீதி இன்மையுமாய்ப் பிரீதியும் பிரீதி இன்மையும் சமமாகச் செல்லுகின்றன என்றபடி.

4. இத் திருவாய்மொழியில் வருகின்ற "வந்து எங்கும் நின்றிடுமே" என்பது உருவெளிப்பாடு ஆகையாலே, உருவெளிப்பாட்டினைக் கூறுகின்ற "ஏழையர் ஆவி" என்ற திருவாய்மொழிக்கும் இதற்கும் வேறுபாடு யாது? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'ஏழையராவியிலும்' என்று தொடங்கி.

5. பிரீதியும் பிரீதி இன்மையுமாகிற மாறுபட்ட இரண்டு தர்மங்களுக்கு ஒரே தர்மியில் ஏககாலத்தில் சமாவேசம் கூடுமோ? என்ன, அதற்கு மூன்று உதாரணங்கள் மூலம் விடை கூறி விளக்குகிறார் 'வசிஷ்ட பகவான்' என்று தொடங்கி.

மிறே என்று உகந்தான்; இவள் இருப்பைக் கண்டு வெறுத்தான். **பிராட்டி** திருவடி வார்த்தையைக் கேட்டபின்பு [1]'அம்ருதம் விஷஸம்மிச்ரம்' என்று பெருமாள் என்னைப் பிரிந்த பின்பு 'என்னையல்லது அறியார்' என்று சொன்னது எனக்கு இனிதாயிருந்தது, பிரிவாலே தளர்ந்தார் என்று சொன்னது எனக்கு வெறுப்பாய் இருந்தது என்ருளிறே.

——(0)——

ஆரூந் திருவாய்மொழி (46)

"கடல் ஞாலம்"

பிரவேச சங்கி :—[2] கீழ் பிரீதிஅப்ரீதி சமமாய்ச் செல்லாநிற்க, பாக்யஹாநியாலே அப்ரீதிஅம்சமே தலையெடுத்து, கீழ் உரு வெளிப்பட்டாலே அவனை ஸ்மரித்துத் தரித்த அம்சமும் போய், அவனை அனுகரித்துத் தரிக்கப் பார்த்து, ஒரோ அர்த்தோபந்யாசங்கள் பண்ணுவாரைப் போலே ஜ்ஞான முத்திரையும் தானுமாய், கீதோபநிஷத் ஆசார்யனைப்போலே இருந்தாள். இத்தைக் கண்ட திருத்தாயார் இது ஏதேனும் மணிமந்த்ர ஔஷதாதிகலே வந்த விகாரமோ என்று சங்கித்து, அங்ஙன் ஒரு புடைகள் காணுமையாலே அது அல்ல என்று அறிந்து,[3] தன் கலக்கத்தாலே, அவனை அனுகரிக்கிருள் என்று அறியாதே, [4] வினவ வந்த பந்துக்களைப் பார்த்து அவனேட்டை வசன வியக்தி சாதர்ம்யத்தாலும் ஜ்ஞான முத்ரா நிரீக்ஷணுதிகளாலும் சர்வேச்வரன் ஆவேசித்ததாக நிச்சயித்து, பரதந்த்ரஜன்மத்திலே பிறந்தவள் ஸ்வதந்த்ரன் வார்த்தை சொல்லா நின்ருள் ; ஸ்திரீத்வத்துக்கு எல்லையான

---

1. "அம்ருதம்" என்று தொடங்கும் சுலோகம், ஸ்ரீராமா. சுந். 37: 2. வாநர! பெருமாள் என்னையல்லது அறியார், பிரிவாலே தளர்கிருர் என்று உன்னுலே சொல்லப்பட்ட இரண்டு வார்த்தைகளும், விஷத்தோடு கூடின அமுதம்போல் இருக்கிறது என்பது இதன் பொருள்.

2. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு கூறுகிருர் 'கீழ்' என்று தொடங்கி.

3. அநுகரிக்கிருள் என்று தெளியலாகாதோ? என்ன, அதற்கு விடை கூறுகிருர் 'தன் கலக்கத்தாலே' என்று தொடங்கி.

4. இத் திருவாய்மொழியில் வருகின்ற "உள்ளீர்கட்கு' என்றதனை நோக்கி 'வினவ வந்த பந்துக்களை' என்கிருர்.

இவள் புருஷோத்தமன் சொல்லும் வார்த்தை சொல்லா நின்ருள்; சர்வேச்வரனே நிர்வாஹகன் என்று அறிவுக்கு விஷயம் வியவஸ்திதமாயிருக்க [1] ஸர்வஜ்ஞன் சொல்லும் வார்த்தை சொல்லாநின்ருள் என்று சொல்லுகிருள்.

[2] ஆற்ருமையுண்டாளுல் அனுகரித்துத் தரிக்கக் கடவதிறே. [3] "க்ருஷ்ணோஹமேஷ லலிதம் வ்ரஜாம் யாலோக்யதாம்கதி:"- நான் கிருஷ்ணன், இங்ஙனே நடக்கப்புகா நின்றேன், நடைச் சக்ரவத்துப் பிடிக்கவேண்டும்படியாய் நடக்கப்புகாநின்றேன், கண் படைத்தாரடையக் கண்டு கொள்ளுங்கொள் என்ருளிறே. [4] "துஷ்டகாளிய திஷ்டாத்ர" ஒருத்தி காளியனுய்க் கிடக்க, ஒருத்தி கிருஷ்ணனுய் ஏறி ஆடினுளிறே. [5] பிரதி கூலனுன காளியன் ஆனலாகாதோ, கிருஷ்ணனுகத் தன்னை அனுகரிக்கிற பெண்ணின் கால்பொடி படப்பெறில் என்று இருந்தாள். [6] கிருஷ்ணனுன அவள்தானும் அவளைக் காளியன் என்றே நினைத்துக் கண்ணற்றுத் துகைத்தாளிறே அநுகாரத்தின் மெய்ப்பாட்டாலே. [7] அவர்கள் ஒரு அவதாரத்தை அனுபவிக்கையாலே அங்குள்ள சேஷ்டிதங்களை அநுகரித்தார்கள். இவள் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவள் ஆகை

---

1. 'சர்வஜ்ஞன் சொல்லும் வார்த்தை' என்றது, "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகதஃ பிரபவஃ" என்பது போன்ற வார்த்தைகளை நினைத்து.

2. அநுகரித்துத் தரிக்க வேண்டுமோ? என்ன, அதற்கு விடை கூறுகிருர் 'ஆற்ருமை உண்டானல்' என்று தொடங்கி.

3. அதற்கு உதாரணம் காட்டுகிருர் 'கிருஷ்ணோஹம்' என்று தொடங்கி. இது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 13: 26. 'நான் கிருஷ்ணன்' என்று தொடங்கும் வாக்கியம் இச் சுலோகத்தின் பொருள். 'நடைச் சக்கரவத்துப் பிடிக்கவேண்டும்படியாக' என்றது, நடைச்சக்கரவர்த்தி வந்தான் என்று விருது பிடிக்க வேண்டும்படியாக என்றபடி.

4. "துஷ்டகாளிய" என்பது ஸ்ரீ விஷ்ணு புரா. 5. 13: 27.

5. விரோதியான காளியன் ஆகலாமோ? எனின், அதற்கு விடை கூறுகிருர் 'பிரதி கூலனுன' என்று தொடங்கி.

6. கிருஷ்ணனுகத் தன்னை அநுகரித்த பெண் துகைக்கலாமோ? எனின், அதற்கு விடை கூறுகிருர் 'கிருஷ்ணனுன' என்று தொடங்கி.

7. ஆனல், அவர்களைப் போன்று ஓர் அவதாரத்தை அநுகரியாமல் பரத்துவத்தை இவள் அநுகரித்தது என்? என்ன, அதற்கு விடை கூறுகிருர் 'அவர்கள்' என்று தொடங்கி. இத் திருவாய்மொழியில் வருகின்ற "கூந்தல் மலர் மங்கைக்கும்" என்ற திருப்பாசுரத்தை நோக்கி 'உபய விபூதி யுக்தனை' என்கிருர்.

யாலே உபயவிபூதியுக்தனை அனுகரிக்கிறாள். [1]இங்குக் கால் நடை தாராமையாலே அங்குப்போலே காயிகமான அனுகாரம் அல்ல; வாசிக மாத்ரத்தாலே அனுகரிக்கிறது.

[2] கீழில் திருவாய்மொழியிலே உருவெளிப்பாட்டாலே அனுபவித்தது விக்ரஹ வைலக்ஷண்யமிறே. அதுவேயிறே சுபாச்ரயம். அதுக்குள்ளீடான ஸ்வரூப வைலக்ஷண்யத்தளவும் சென்று, அத்தையே பாவித்து அந்த பாவனுப்ரகர்ஷத்தாலே [3] "தத்பாவ பாவமாபந்ந:" [4] "அஹம் மநுரபவம் ஸூர்யஸ்ச", [5] "மத்தஸ் ஸர்வமஹம் ஸர்வம்" என்றும் அவனாகப் பாவித்தால் அவன் சொல்லும் வார்த்தை சொல்லலாமிறே.

தேஹாத்மாபிமானம் முற்றினால் வேறொன்றுந் தோன்றாதாப்போலே பிரகாரியான அவனளவும் தன்னை அனுசந்தித்த பாவனுப்ரகர்ஷத்தாலே [6] அவன் விபூதி அத்யாயத்தில் சொன்னபடிகளை பிராசுர்யேண பேசுகிறாள்.

[7] அதர்வ ஶிரஸ்ஸிலே ருத்ரன் தன் வைபவத்தைப் பரக்க நின்று பேசினான்; இது தனக்கு அடங்காத ஐஶ்வரியமாய் இருந்தது, இவன் இப்படிப் பேசுகைக்கு அடிஎன்? என்று

---

1. மற்றும் வேறும் ஓர் ஆகாரத்தாலே வேறு பாட்டினைக் காட்டுகிறார் 'இங்கு' என்று தொடங்கி.

2. சுவாபதேசப் பொருளினைக் கூறுகிறார் 'கீழில்' என்று தொடங்கி,

3. "தத்பாவபாவம்" என்றது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 6. 7: 95. சர்வேச்வரனுடைய குணங்களைப் போன்று குணங்களை அடைந்த ஒரு சேதனன் முத்தி நிலையில் அவ் வீச்வரனோடு பேதம் அற்றவனாகிறான் என்பது இதன் பொருள்.

4. "அஹம்மநுரபவம்" என்பது, உபநி. 3: 4. பிரமத்தை அறிந்த வாமதேவ முனிவர் நான் மநுவாக ஆனேன், சூரியனாக ஆனேன் என்று எண்ணினார் என்பது இதன் பொருள்.

5. "மத்தஸ்ஸர்வம்" என்பது ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 19: 85. என்னிடமிருந்து எல்லாப் பொருள்களும் உண்டாயின, அநாதியான என்னிடத்திலேயே எல்லாம் லயம் அடைகின்றன என்பது இதன் பொருள்.

6. 'அவன் விபூதி அத்தியாயத்தில் சொன்னபடிகளை' என்றது, பகவத் கீதையில் பத்தாம் அத்தியாயத்தில் 19-ஆம் சுலோகம் முதல் 40-வது சுலோக முடிய உள்ளனவற்றை நோக்கி.

7. அவனாகப் பாவித்தால் அவன் சொல்லும் வார்த்தையைச் சொல்லலாயிருக்கும் என்பதற்கு மற்றும் ஓர் உதாரணம் காட்டுகிறார் 'அதர்வ சிரசிலே' என்று தொடங்கி.

சுருதி தானே சங்கித்து, [1]"ஸோந்தரா தந்தரம் ப்ராவிஶத்" என்று பரமாத்ம பிரவேசத்தாலே சொன்னான் என்னாநின்ற திறே. அந்தப் பாவம் வந்தால் அப்படியே சொல்லலா யிருக்கும்.

—o—

ஏழாந் திருவாய்மொழி (47)

"நோற்ற நோன்பிலேன்"

பிரவேச சங்கி :—[2]கீழில் திருவாய்மொழியிலே, அநுகரித்துத் தரிக்கப் பார்த்தார். அநுகரித்துத் தரிக்கவேண்டும்படியான கலக்கம் பிறந்த இடத்திலும் வந்து முகம் காட்டிற்றிலன். இதுக்கு அடிஎன்? தன்பக்கல் ஆசாலேசமுடையார்க்குத் தானே வந்து முகம்காட்டி ரக்ஷிக்கக்கடவ சர்வேச்வரன் நம் பக்கல் ஆறியிருக்கைக்கு நிபந்தனம் என்? என்று பார்த்தார்; இனி இங்ஙனேயாமித்தனை; நம்பிரகிருதி ஸ்வபாவத்தாலே தன்னால் அல்லது செல்லாதபடியாயிருப்பது ஓர் ஆற்றாமை உண்டாயிருந்தது; நமக்கு அத்தை ஸ்வரூபம் என்று அறியாதே 'உபாயம்' என்றிருந்தானாகவேணும் என்று பார்த்துத் தங்கையில் ஒன்றும் இல்லாமையை அறிவித்து அவன் திருவடிகளில் சரணம் புகுகிறார்.

—o—

எட்டாந் திருவாய்மொழி (48)

"ஆராவமுதே"

பிரவேச சங்கி :—[3]சிரீவரமங்கல நகரிலே எழுந்தருளியிருக்கிற வானமாமலை திருவடிகளிலே, வேரற்ற மரம்போலே

1. "ஸோந்தரா தந்தரம்" அந்தச் சிவன், தேகம் இந்திரியம் இவற்றைக் காட்டிலும் வேறுபட்ட பரமாத்மாவின் தன்மையை அடைந்தார் என்பது இதன் பொருள்.

2. மேல் திருவாய்மொழியில் அநுகரித்துத் தரிக்கப் பார்த்தவர், இத் திருவாய்மொழியில் "நோற்ற நோன்பிலேன்" என்று கூறுவதற்கு அடியாது? என்ன, அதற்கு விடை கூறு முகத்தால், மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு கூறுகிறார், 'கீழில்' என்று தொடங்கி.

3. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு கூறுகிறார் 'சிரீவரமங்கல நகர்' என்று தொடங்கி,

விழுந்து அநங்யகதிகளாய்க் கொண்டு சரணம்புக்கார்; இவர் அப்படிப் பெரிய ஆர்த்தியோடே சரணம்புகச் செய்தேயும் வந்து முகம் காட்டாதிருக்க, [1]கடலில் அமிழ்ந்துவார் அங்கே ஒரு மிதப்புப் பெற்றுத் தரிக்குமாறுபோலே,[1] "இவ்வளவிலும் வேறு ஒன்றாலே பேறு என்றிருத்தல், மற்றொருவர் வாசலிலே சென்று கூப்பிடுதல் செய்யும் பிரேமத்தைத் தவிர்த்தானிறே" என்று கொண்டு தரித்த இதுதான் திருக்குடந்தையளவும் கால்நடை தந்து போக உடலாயிற்று. [2]என்தான், இங்குத் தம்மபேக்ஷிதம் கிடையாதொழியவும் அங்கு ஏறப் போக வேண்டுவான் என்? என்னில்,

[3]'ஒருகால் பிரபத்தி பண்ணினோம் அது பலித்ததில்லை, என்று நாஸ்திக்யத்தாலே விஸ்வாஸம் குலைந்து ருசியும் நெகிழுமவரன்றே; ஆச்ரிதார்த்தமாக எழுந்தருளியிருக்கிறவன் நம் கார்யம் செய்து தலைக்கட்டாமையில்லை; இன்ன இடங்களிலே இன்ன காலங்களிலே செய்யக்கடவோம் என்று வியவஸ்திதமாயிருக்கும்; ஆனபின்பு இங்குச் செய்யப் பார்த்திலனாகில் மற்றோரிடத்திலே செய்கிறான்; [4]இனித்தான், ஸ்ரீ பரதாழ்வான் பெருமாளை மீட்டுக்கொண்டுவரவேணும் என்று செல்ல, நாம் பதினாலாண்டுங்கழித்தல்லது மீளோம் என்னும் ஸ்வதந்த்ரனுகையாலே நாலுநாள் தாழ்த்ததேயாகிலும் நம் காரியம் செய்யாமை இல்லை என்று பார்த்து, திருக்குடந்தையிலே சென்று புகவே, நம் அபேக்ஷிதங்கள் கிட்டும், நமக்கு ஒரு

---

1. முகம் காட்டாதிருக்க, திருக் குடந்தைக்குச் செல்லத் தரிப்பு உண்டானவாறு யாங்ஙனம்? என்ன, 'கடலில் அமிழ்ந்துவார்' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார். "ஆறு எனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்றதனை நோக்கி 'இவ்வளவிலும்' என்று தொடங்கிக் கூறுகிறார்.

2. 'என்தான்' என்றதற்குக் கருத்து, வஸ்து ஐக்யத்தாலே அங்கிருப்பவனும் இவனேயாக இருக்க, 'இங்கே பலியாதது அங்கே பலிக்கக் கூடுமோ? அதற்குமேல், ஒரே முறை செய்யக் கூடியதான பிரபத்தியும் பயன் அற்று விட்டது என்று விசுவாசம் குறைந்து ருசியும் நெகிழாதோ என்னில்? என்பது.

3. மேலே கூறிய இரண்டு சங்கைகளையும் முறையே பரிகரிக்கிறார் 'ஒருகால்' என்று தொடங்கி.

4. கால வேற்றுமையாலும் காரியம் செய்வான் என்பதற்கு வேறும் ஒரு உதாரணம் காட்டுகிறார் 'இனித்தான்' என்று தொடங்கி:

குறைகளும் இல்லையென்று புக, [1]ஸ்ரீ பரதாழ்வான் ராஜ்யத்துக்கு நிமித்தபூதனானேன் என்னுமத்தால் ஒரு புண்பாடும்; தாயைக்கொண்டு ராஜ்யத்தை வாங்கிப் பெருமாளைக் காடேறப் போகவிட்டான் என்று நாட்டார் சீறுபாறு என்றிருப்பர்கள் என்றத்தால் வந்ததொரு பயத்தையுமுடையனாய் [1]“ஏபிஸ்ச” என்று செல்ல, பெருமாளும் ராஜ்ய தந்த்ரங்களைக் குறைவு படாமே நடத்தா நின்றாயே என்றாற் போலே இவனுக்கு இடமற வார்த்தை கேட்டாற்போலே, இவர் புக்கவிடத்தில் [2]திருக்கண்களை அலரவழித்துக் குளிரநோக்குதல், ‘மாம் அக்ரூரேதிச வக்ஷ்யதி’ என்றாற்போலே திருப்பவளத்தைத் திறந்து ஒரு வார்த்தை அருளிச்செய்தல், தம்மை யணைத்தல் செய்யப்பெறாமையாலே மிகவும் அவஸந்நராய் [3]போக்யதையாலும் சௌந்தர்யாதிகளாலும் போர நொந்து, ஸ்தநந்தய பிரஜை தாயைக் கிட்டி முகம் பெறாவிட்டால் அலமந்து நோவு படுமாப்போலே அவன் சன்னிதியிலே தளர்ந்து கூப்பிட்டு [4]‘இன்னமெத்தனைத் திருவாசல் தட்டித் திரியக் கடவேன் என்னும் ஆர்த்தியோடே தலைக்கட்டுகிறார்.

———:———

1. திருக் குடந்தையிலே போனால் நாம் விரும்பியவை அனைத்தும் கிட்டும் என்ற இவர் பாரித்ததற்கும், அதற்கு அவன் காரியம் செய்யாமைக்கும் உதாரணம் காட்டுகிறார் “ ஸ்ரீ பரதாழ்வான் ” என்று தொடங்கி.

“ ஏபிஸ்ச ஸசிவை ” என்பது, ஸ்ரீராமா. அயோத். 101 : 12.

இந்த மந்திரிமார்களோடும் கூட என்னால் தலையால் வணங்கி யாசிக்கப் பட்ட தேவரீர், பின் பிறந்தவனும் சிஷ்யனும் தாசனுமான அடியேனுக்குக் கிருபை புரிதல் வேண்டும் என்பது இதன் பொருள்.

2. “ ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் கண்டேன் எம்மானே ” என்றதனை நோக்கி “ திருக்கண்களை அலர விழித்தல் ’ என்றது முதல் ‘அணைத்தல் செய்ய ’ என்றது முடியக் கூறுகிறார்.

3. “ ஆராவமுதே ”, “ ஏரார் கோலம் ” “ செந்தாமரைக் கண்ணா ” என்பனவற்றை நோக்கி ‘ போக்யதையாலும் சௌந்தர்யாதிகளாலும் ’ என்கிறார்.

4. “ உனக்காட்பட்டும் இன்னம் உழல்வேனோ ” என்றதனை நோக்கி ‘ இன்னம் எத்தனைத் திருவாசல் தட்டித் திரியக் கடவேன் ’ என்கிறார்.

ஒன்பதாந் திருவாய்மொழி (49)

"மானேய் நோக்கு"

பிரவேச சங்கி :—அநுபவமில்லாதபோது சத்தையில்லாமையாலே சத்தாஸித்யர்த்தம் அநுபவிக்கப் பார்க்கிறார். [1] "மாசறுசோதி"யிலே, மடல் எடுக்கப்புக்கு அவனுக்கு அவத்யம் என்று தவிர்ந்தார்; இங்கு ஆற்றாமை தோற்ற கண்ட திருப்பதிகள் தோறும் நுழையா நின்றார்.. [2] இதுக்கு அடி யாதோ? தெரிகிறதில்லை. அங்கு, அவன் ஸ்வரூபம் பரிஹரித்தார். இங்கு, தம் ஸ்வரூபம் நோக்கப் பார்க்கிறார். [3] அங்கு வடிவிலே யணையவேணும் என்று ஆசைப்பட்டு இவ்வளவும் வர அவ்வடிவிலே அவகாஹித்தபடியாலே ஆற்றாமை முறுகி, [4] "கொம்மை முலைகள் இடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல்" என்கிறபடியே [5] அடிமைசெய்ய ஆசைப்பட்டு அது கிடையாமையாலே பிராட்டி தசையைப் பிராப்தராய்த் திருவல்லவாழ் ஏறப்போக, தோழிமார் ஹிதம் சொல்லி மீட்கப் பார்க்க, [6] அவ்வூரில் திருச்சோலை முதலானவை நீங்கள் மீட்க நினைக்

1. சுவாபதேசத்திலே சங்கித்துப் பரிஹரிக்கிறார் 'மாசறுசோதி' என்று தொடங்கி. 'அவனுக்கு அவத்யம்' என்றது, அவனுடைய ரக்ஷணத்துக்குத் தாழ்வாம் என்றபடி.

2. 'இதுக்கு அடி யாதோ தெரிகிறது இல்லை' என்ற சங்கையை இரண்டு விதமாகப் பரிஹரிக்கிறார் 'அங்கு அவன்' என்று தொடங்கியும், 'அங்கு வடிவிலே' என்று தொடங்கியும். 'ஸ்வரூபம் பரிஹரித்தார்' என்றது, அவனுடைய நிருபாதிக ரக்ஷகத்வத்துக்குத் தம்முடைய முயற்சி விரோதமாகையாலே, தம்முடைய முயற்சியை விட்டார் என்றபடி. 'இங்குத் தம் ஸ்வரூபம் நோக்கப் பார்க்கிறார்' என்றது, அநுபவம் இல்லாதபோது சத்தை கிடவாமையாலே, திருப்பதிகள் தோறும் புக்காகிலும் அவனை அநுபவித்துச் சத்தை நோக்கப் பார்க்கிறார் என்றபடி. இதனால் தம் சத்தையை உண்டாக்கியே அத் தலையை நோக்க வேண்டுகையாலே தம்முடைய சத்தை சித்திக்கும் பொருட்டுத் திருப்பதிகள் தோறும் புக்கு அநுபவிக்கிறார் என்று பரிஹரித்தாராயிற்று.

3. 'அங்கு வடிவிலே அணையவேணும் என்று ஆசைப்பட்டு' என்றது, "மாசறுசோதி என் செய்யவாய் மணிக்குன்றத்தை" என்றதனை நோக்கி.

4. 'கொம்மை' என்பது, நாய்ச்சியார் திருமொழி, 13 : 9.

5. 'அடிமை செய்ய ஆசைப்பட்டு' என்றது "அடி கூடுவது என்றுகொலோ" என்றதனை நோக்கி.

6. இத் திருவாய்மொழியில் வருகின்ற "தேனார் சோலைகள்", "தென்றல் மணம் கமழும்", "பாண் குரல் வண்டு", "பாடு நல் வேத ஒலி", "மண்ணும் விண்ணும் தொழநின்ற" என்ற திருப்பாசுரப் பகுதிகளை நோக்கி 'அவ்வூரில்' என்று தொடங்கிக் கூறுகிறார்.

கிறவோபாதி நீ அங்கே போரு போரு என்று அழையா நின்றது; ஆனபின்பு நீங்கள் சொல்லுகிறவற்றாலே பெற்றது என்? என்று தன்னார்த்தியை அவர்களுக்கு ஆவிஷ்கரித்து அவர்களை அநுநயியாநின்றுகொண்டு திருவல்லவாழிலே போய் நான் நினைத்தபடி பரிமாறவல்லேனே என்று அவர்களுக்குச் சொல்லுகிறாள்.

[1] 'இது நான் அநுபவித்தேன்' என்று சீயர். மேல் நாட்டிலிருந்து பெரிய திருநாளுக்கு உதவவேணும் என்று வர, அசிந்திதமாக ஆறு பெருகிக்கிடக்க, இராத் திருநாள் இங்குண்டான சம்ப்ரமங்கள் செவிப்படுவது, வந்து புகுரப் பெறுதொழிவதாய்க் கொண்டு நோவுபட்டோம் என்று. ஏகத த்வித த்ரிதர்கள் ஶ்வேத த்வீபத்தைச் சென்று கிட்டி, உள்ளுப் புகுருகைக்கு யோக்யதையில்லாமையாலே புறம்பே நின்று, அங்குள்ளார் எம்பெருமானைக் கண்டு படுகிற சம்ப்ரமத்தைக் கேட்பது, கண்ணால் காணப் பெறுதொழிவதாய்க் கிடந்து பட்டாற்போலே நோவுபடுகிறார்.

—— :: ——

பத்தாம் திருவாய்மொழி (50)

— :: —

"பிறந்தவாறும்"

ப்ரவேச சங்கி:—[2] திருவல்லவாழிலே போய்ப்புக்கு அங்கு நிற்கிறவனோடே பரிமாறவேணும் என்று மனோரதித்துக் கொண்டுபோக, கால்நடை தாராமல் நடுவழியிலே விழுந்து கிடந்து கூப்பிட்டார்; இனி, இவ்வளவிலே குணாநுபவம் பண்ணியாகிலும் தரிப்போம் என்று பார்க்க, அதுதானும்

1. அங்குத்தை வியாபாரங்களும் செவிப்படாநிற்கக் கிட்டப்பெறாமல் சமீபத்தில் நின்று நோவுபடுகைக்கு இரண்டு திருஷ்டாந்தங்கள் காட்டுகிறார் 'இது நான்' என்று தொடங்கியும், 'ஏகத த்வித திரிதர்கள்' என்று தொடங்கியும். பெரிய திருநாள் - திருவாய்மொழித் திருநாள். ஏகதத்வித திரிதர்கள் - பிரமனுடைய மானச புத்திரர்கள்.

2. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு கூற நினைத்து, மேல் திருவாய்மொழியில் கூறியதை அநுவாதம் செய்கிறார் 'திருவல்ல வாழிலே' என்று தொடங்கி. 'இனி இவ்வளவில்' என்றது முதல் 'சரணம் புகுகிறார்' என்றது முடியக் கூரத்தாழ்வான் அருளிச்செய்த நிர்வாஹம்.

பேற்றோபாதி அரிதாம்படி சைதல்யத்தை விளைப்பிக்க, சர்வாவஸ்தைகளிலும், உன்னைப் பிரிந்து நின்றாலும் தரித்துநின்று குணாநுபவம் பண்ணவல்லேனாம்படி பண்ணியருளவேணும் என்று அவன் திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

[1]ருஷிகளுக்கு சம்ஸார பயத்தோபாதியும் போருமாயிற்று ஆழ்வார்களுக்கு பகவத் விரஹத்தால் வரும் கிலேசம். அவர்கள் தம் தாம் பேற்றுக்குத் தந்தாம் யத்னம் பண்ணுவார்கள். இவர்கள் அத்தலையாலே பேறுமளவும் அசோக வனிகையில் பிராட்டியைப்போலே துடிப்பார்கள். அவர்களுக்குத் தங்கள் தலையில் சில கிடக்கையாலே விளம்பம் பொறுக்கலாம். இவர்களுக்கு அங்ஙன் ஒன்றில்லாமையாலே கிடந்து அலமாப்பார்கள். [2]"பாவோநாந் யத்ர கச்சதி" என்று திருவடி இராமாவதாரம் ஒன்றிலும் சக்தனாயிருக்குமாப்போலே இவர் எல்லாவவதாரங்களிலும் எல்லாச் சேஷ்டிதங்களிலும் அகப்பட்டிருப்பர்.

[3] அர்ச்சாவதாரத்திலே தம் அபேக்ஷிதம் பெற ஆசைப்பட்டவர் அது கிடையாமையாலே அவதாரங்களிலே போகிறார்; விபவம் உள்ளவிடத்தே சென்றால் சில அபேக்ஷிதம் கிடைக்கும் என்று இருப்பரே. விபவங்களிலே இழந்தார்க்கும் இழவு தீர்க்கிற அர்ச்சாவதாரத்தை விட்டு, பெறலாம் என்று விபவம் உள்ள இடம் தேடிப் போகையாவது என்? எனில், அர்ச்சாவதாரத்தில் அதீந்த்ரியனான தன்னைச் சம்சாரிகளுக்கு விஷயமாக்குகையும் அபேக்ஷிதங்களைக்கொடுக்கையுமொழிய, குளிர நோக்குதல், வினவுதல் செய்யக் கடவதன்றாகச் சங்கல்

---

1. மற்றும் பகவத் விஷயத்தில் கை வைத்திருப்பார் பலரும் உளரே? அவர்கட்கு இவ்வாற்றாமை காண்கின்றிலோமே? என்ன, அதற்கு விடை கூறப்படுகிறது 'ருஷிகளுக்கு' என்று தொடங்கி.

2. இத்திருவாய்மொழியில் கிருஷ்ணாவதாரம் சொல்லாநிற்க, மற்றை அவதாரங்களையும் சொல்லுவான் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'பாவோநாந்யத்ர' என்று தொடங்கி. இது, ஸ்ரீராமா. உத்தர. 40 : 16. சுவாமியே! சிறந்த பிரீதியானது எப்பொழுதும் தேவரீரிடத்திலேயே நிலைத்துவிட்டது, பக்தியும் நியதமாக இருக்கிறது, என் எண்ணமும் வேறிடத்தில் எனக்குச் செல்லவில்லை என்பது இதன்பொருள்.

3. மேல் மூன்று திருவாய்மொழிகளிலும் அர்ச்சாவதாரத்தை அருளிச்செய்தவர், அதனைவிட்டு, இங்கே அவதாரங்களில் வருவான் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அர்ச்சாவதாரத்திலே' என்று தொடங்கி.

பித்து இருக்கையாலே சத்ய சங்கல்பத்வம் குலையும்படி. [1]அதி நிர்ப்பந்தம் பண்ணக் கடவோமல்லோமென்று [2]"ஸம்ஸ்ப்ருஸ்ய யாக்ருஷ்யச ப்ரீத்யா ஸுகாடம் பரிஷஸ்வஜே" என்று கிருஷ்ணுவதாரத்திலே போந்தார் ப்ரத்யாஸத்தியாலே.

[3] இவ்வாழ்வார்கள் கிருஷ்ணுவதாரத்திலே மண்டியிருக்கைக்கு அடி என்? என்று பட்டரைக் கேட்க, ஒருவனுக்கு துக்கம் சிலநாள் கழிந்தால் ஆறியிருக்கலாம், அணித்தானால் ஆறியிருக்கப் போகாது. அப்படியே, இது, அல்லாத அவதாரங்களைப்போல் அன்றிக்கே சமகாலமாகையாலும், 'ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப் பெற்றிலேம், பாவியேம்! பல்லிலே பட்டுத் தெறிப்பதே' என்ற இழவாலே வயிறு எரிதலாலேயாயிருக்கும் என்று அருளிச் செய்தார்.

[4] இனி, ராமாவதாரத்தில் தமப்பன் சம்பராந்தகன், பிள்ளைகள் ஆண்புலிகள், குடி வன்னிய மறுத்திருப்பதொன்று, இவையெல்லாம் மிகையாம்படி குணத்தாலே நாடடைய ஒரு மார்பு எழுத்தாக்கிக்கொண்டிருப்பார்கள்; இங்குத் தமப்பன் சாது விருத்தன், பிறந்தது கம்ஸன் சிறைக்கூடத்தில்; வளர்ந்ததுவும் அவன் அகத்தருகே; எழும் பூண்டுகள் அகப்பட அசுரமயமாயிருக்கும்; ரக்ஷகர் ஓரடி தாழநிற்கில் பாம்பின் வாயிலே விழும் தீம்பன்; இப்படியானால் வயிறு எரியாதே செய்வது என் இவர்கள்? [5]அக்காலத்திலே உணர்ந்து நோக்கப் பெற்றிலர்கள். அவ்விழவுக்கு இன்றிருந்து நோவுபடு

---

1. 'அதிநிர்ப்பந்தம் பண்ணக்கடவோமல்லோம்' என்றது, நிர்ப்பந்தித்தால் செய்வர் என்றபடி.

2. 'ஸம்ஸ்ப்ருஸ்யா' என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 18 : 2. அந்தக் கிருஷ்ணனும் துவஜம் வஜ்ஜிரம் தாமரை என்னும் இந்த ரேகைகளை அடையாளமாகவுடைய கைகளாலே நன்றாகத் தொட்டு இழுத்து அன்போடு ஆலிங்கனம் செய்துகொண்டார் என்பது இதன்பொருள்.

3. அண்மைக்கால மாகையாலே என்றதனைப் பெரியோர்களுடைய வார்த்தைகள் மூலம் விவரிக்கிறார் 'இவ்வாழ்வார்கள்' என்று தொடங்கி. 'பட்டரைக் கேட்க' என்றது, பட்டரை நஞ்சீயர் கேட்க என்றபடி.

4. அண்மைக்கால மாத்திரமன்றிக்கே, பரியவேண்டிய காரணங்கள் வேறுபல இருந்தமையாலும் கிருஷ்ணுவதாரத்திலே போந்தார்கள் என்று கூறுகிறார் 'இனி' என்று தொடங்கி.

5. இவையெல்லாம் முற்காலத்தில் நடந்தனவே அன்றோ, அவற்றிற்கு இப்போது நோவுபடுகிறது என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அக்காலத்திலே' என்று தொடங்கி.

கிறார்கள். [1] அவர்களிலே ஒருவரான இவர் சொல்லுகிறபடியிறே இது 'தெரிந்துணர்வு'' இத்யாதி. [2] "திருநீலமணியார் மேனியொடு என்மனம் சூழவருவார்'' என்று வயிறு பிடித்தாரிறே இவரும்.

[3]அவதாராதிகளை அநுஸந்திக்க வல்லேனும்படி பண்ணியருளவேணும் என்று சரணம் புகுகிறார் என்று **ஆழ்வான்**. பிரிந்து உன் குணங்களால் நோவுபடுகை தவிர்ந்து உன்னைக் கிட்டியநுபவிக்கும்படி பண்ணியருளவேணுமென்று **எம்பார்**. சர்வேஸ்வரன் கிருஷ்ணனாய்த் திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளுகிறான் என்று கேட்டு அங்கேபோய் யதாமநோரதம் அநுபவிக்கலாம் என்று தெற்குத் திருவாசலிலே சென்று புக, இப்போது இங்ஙனே வடக்குத் திருவாசலிலே புறப்பட்டு தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினார் என்னக் கேட்டு விழுந்து கிடந்து கூப்பிடுகிறார் என்று **பிள்ளான்**.

———:;———

1, முன் நடந்தனவற்றைக் குறித்து அப்படி நோவுபட்டார்களோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அவர்களிலே' என்று தொடங்கி.

'தெரிந்துணர்வு ஒன்றின்மையால்'

என்பது, பெரிய திருவந்தாதி, 62.

மாயா மிருகத்தின் பின்னேபோய் இளைத்து மீண்டு எழுந்தருளின போது அடிசுட்டுப் பொறுக்கமாட்டாமையாலே தழைகளை முறித்துப் பொகட்டு அவற்றிலே நின்று ஆறி எழுந்தருளினார் என்று கேட்டு, பாவியேன்! அன்று உதவி அத்திருவடிகளிலே என் தலையை மடுக்கப்பெற்றிலேன், வியர்த்தமே போயிற்றிறே அநாதிகாலம் எல்லாம் என்று நொந்தாரிறே என்பது அப்பாசுரத்திற்கு நம்பிள்ளை கூறும் விரிவுரை.

2. 'திருநீலமணியார்மேனி' என்பது திருவாய்மொழி, 8. 3: 6.

3. இனி இத்திருவாய்மொழிக்குக் கூறப்படும் மூன்றுவகையான நிர்வாகங்களையும் கூற நினைத்து, முந்துற, இத்திருவாய்மொழியிற் கூறப்படும் பொருளை எல்லாம் திரட்டி, ஆழ்வான் நிர்வாஹத்தை அருளிச்செய்கிறார் 'அவதாரங்களை' என்று தொடங்கி.

ஆழ்வான் - கூரத்தாழ்வான். கூரத்தாழ்வான் இங்ஙனம் பணிப்பர் என்றபடி.

17

ஆறாம் பத்து

முதல் திருவாய்மொழி (51)

— :: —

"வைகல் பூங்கழிவாய்"

ப்ரவேச சங்கி :— [1] கீழே "நோற்ற நோன்பு" துடங்கி நாலு பிரயோகம் சரணம் புக்கவிடத்திலும் அபேக்ஷிதம் பெற்றிலர்; அவ்யபிசாரியாய் அவிளம்ப்ய பல பிரதானமான இது பலியாவிட்டது, ஆழ்வாருடைய ஹிதித்தோபாதி ஜகத்தி னுடைய ஹிதத்துக்கும் கடன் ஆகையாலே ஈச்வர புத்தி யாலே தலைக்கட்டிற்றில்லை.

[2] உகந்தருளின திருப்பதிகள் தோறும் தட்டித் திரிந்து அங்குத் தாம் நினைத்தபடி பரிமாறப் பெறுமையால் அவதா ரத்து ஏறப்போக அது காலாந்தரமாகையாலே அது தானே தளர்த்திக்குஉடலாயிற்று. [3] இனி, நித்யசந்நிதியுண்டாய் முகப் பழக்கத்தாலும் குறையற்று சக்தி வைகல்யமும் இன்றிக்கே இருக்கிற இவ்விடமே அமையுமென்று மீண்டார். [4] அந்தக் குணானுஸந்தானம் கால்நடை தாராதபடி ஈடுபடுத்திற்று.

---

1. மேல் திருவாய்மொழிகளிற் கூறிய பொருளோடு இத்திருவாய் மொழியிற் கூறும் பொருளினைத் தொடர்புபடுத்திக் காட்டுகிறார் 'கீழே' என்று தொடங்கி. 'நாலு பிரயோகம்' என்றது, "நோற்றநோன்பு", "ஆராவமுது", "மானேய்நோக்கு", "பிறந்தவாறும்" என்ற நான்கு திருவாய்மொழிகளிலும் சரணம் புக்கதைக் குறித்தபடி. 'ஈச்வர புத்தி யாலே' என்றது இவருடைய பிரபந்தத்தைக் கொண்டு உலகத்தினைத் திருத்தவேண்டும் என்கிற இறைவனுடைய நினைவாலே என்றபடி.

2. 'நோற்ற நோன்பு' என்று தொடங்கி மேலேகூறிய வாக்கியத்தை விவரியா நின்றுகொண்டு இத்திருவாய்மொழிக்குச் சங்கதி கூறுகிறார் 'உகந்தருளின' என்று தொடங்கி. 'தட்டித்திரிந்து' என்றது, 'இந்தச் சரீரத்தோடு இருக்கச்செய்தே, குளிரநோக்கல், அணைத்தல், வினவுதல் செய்ய வேண்டும்' என்று திருப்பதிகள் தோறும் தடுமாறித் திரிந்ததை என்றபடி.

3. "அர்ச்சாவதாரத்திலே மீளுகைக்கு மூன்று காரணங்களைக் கூறு கின்றார் 'இனி' என்று தொடங்கி.

4. ஆயின், தாம் போகாமல் தூதுவிடுவான் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அந்தக் குணாநுசந்தானம்தான்' என்று தொடங்கி. என்றது, 'நித்திய சந்நிதி உண்டாய்' என்று தொடங்கி மேலேகூறிய திருவண் வண்டூரில் எம்பெருமானுடைய குணாநு சந்தானம் என்றபடி.

[1] இவர்க்குப் பிறந்தது கர்மஜ்ஞாநாநுக்ருஹீதையான பக்தி யன்றே ஆறியிருக்கைக்கு; ஒருவன் பிரசாதமடியாக வந்த திறே. இவர் பரிக்ரஹித்த சாதனம்தான் விளம்பசஹ மன்றே. உபாயாந்தரங்களிற் காட்டில் கால்வாசி ஏற்ற முண்டே.

இப்படிப்பட்ட உபாயத்தை ஸ்வீகரித்தவர் ஆறியிருக்க மாட்டாராகையாலும், அத்தலையாலே பேறுமளவும் ஆறி யிருக்கவல்ல பிரக்ருதி அல்லாமையாலும், இனித்தான், அத்தலையில் நின்றும் வந்தார்க்கே வார்த்தை சொல்லிவிட வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் இல்லையே இவளுக்கு; ஆத லால் இராவண சங்கையும் இலாமையால் கண்ணால் கண்டவை யடங்கலும் தூதுவிடுகிறார். [2] பிரஹ்மாஸ்த்ரம் வாய்மடியச் செய்தேயும் இவர் தூதுவிடுகிறது ஞானகார்யமோ, சாபல கார்யமோ? தெரிகிறதில்லை. [3] சுருதியுங்கூட "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்று மீண்ட விஷயத்தை மறுபாடுருவச் சொல்லவல்ல இவர்க்கு அறிவு இல்லை என்னவொண்ணாது; [4] பக்ஷியின் காலிலே விழுகிற இவர்க்கு அறிவுண்டு என்ன வொண்ணாது; ஆனால் என்னுவது? என்னில், ஜ்ஞான கார்ய மான சாபல்யமிறே இது. இதர விஷயங்களில் விரக்தியிறே

---

1. நினைத்த பரிமாற்றம் கிடையாவிட்டால் தூதுவிடவேண்டுமோ? 'தலைவன் செய்தபோது கண்டிருக்கிறோம்' என்று ஆறியிருக்க ஒண்ணாதோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'இவர்க்கு' என்று தொடங்கி.

2. நான்குமுறை பிரபத்தி செய்தும் பெறாதவர், தூதுவிடுகிறது என்? என்ன, 'பிரஹ்மாஸ்திரம்' என்று தொடங்கி அதற்கு விடை கூறுகிறார். பிரஹ்மாஸ்திரம் என்றது, பிரபத்தியை. 'ஞானகாரியமோ, சாபலகார்யமோ தெரிகிறதில்லை' என்றது, 'பிரபத்தி செய்தும் வாராதவன் தூதுவிட்டால் வாரான்' என்ற விவேகம் இன்றிக்கே, மீளவும் தூதுவிடுகையாலே ஞான காரியம் என்று நிச்சயிக்கப்போகாது; அவன் வருகைக்குக் காரணமான குணங் களிலே உண்டான அத்யவசாயம் நெஞ்சிலே கிடக்கையாலே சாபலகார்யம் என்று நிச்சயிக்கப் போகாது என்றபடி.

3. மேற்கூறிய இரண்டும் அன்று; அஞ்ஞானத்தின் காரியம் என் றாலோ? எனின், 'அதுவும் ஒண்ணாது' என்று அதற்கு விடை கூறுகிறார் 'சுருதியும்' என்று தொடங்கி. 'யதோவாசோ' என்பது, தைத்திரிய. 9 : 1. அந்த ஆனந்த குணத்தினின்றும் வேதவாக்குகள் மீண்டன என்பது இதன் பொருள்.

4. ஞானகாரியம் என்ன ஒண்ணாமைக்கு, வேறும் ஒரு காரணம் கூறு கிறார் 'பக்ஷியின்' என்று தொடங்கி.

ஞானத்துக்குப் பிரயோஜனமாகச் சொல்லுகிறது; அதன் பலமாயிறே இவ்விஷயத்தில் சாபலம் இருப்பது. [1]இத்தால் பிராட்டியில் இவர்க்கேற்றம் சொல்லுகிறது. ஒரு ஐந்த்ரவ்யா கரண பண்டிதனையன்றே தூதுவிடுகிறது. [2] அவர் ஒருவரை யும் அநுபவிக்கையால் வந்ததிறே அவளுக்குள்ளது; இரு வரையும் அனுபவிக்கக் கோலுகிற ஏற்றமுண்டிறே இவளுக்கு. விஷயானுகுணமாகவிறே கலக்கமிருப்பது.

தூதுவிடுவார் நாயகன் பக்கலிலே சில குணங்கள் கண் டன்றோ தூதுவிடுவது; என்றது, தம் நாயகன் பக்கலிலே இத் தலையில் ஆர்த்தி அறியுந்தனையும் அறிவும், வருகைக்கீடான நீர்மையும், சக்தியையுடையவராகையுமாகிற சில குணங்கள் வேணுமிறே. அவையெல்லாம் இவ்விஷயத்தில் குறையில்லை. அறிவில் [3]'ஜ்ஞானஸம்பந்ந:' என்று அறிவு கொடுத்த வஸிஷ்டாதிகளுக்கும் உபகரிக்கவல்லவன். நீர்மையில் வந்தால் பகைவர்களிடத்திலும் அன்புள்ளவன்; [4]"ரிபூணுமபி வத் ஸல:", [5]"ஸஞ்ஜாத பாஷ்ப:". சக்தியில் [6]'ரஞ்ஜனீயஸ்ய விக்ரமை:' என்று எதிரிகள் பக்கலிலே கேட்குமித்தனை.

இக்குணங்களையுடையவன் வாராதொழிகைக்கு ஹேது அவ்விடத்தில் ஆர்த்த ரக்ஷணத்தில் ஒருப்பட்டு அஸ்தமிதாந்ய பாவனாய் இத்தலையை மறந்தான். ஆனபின்பு ஆர்த்தியில்

---

1. 'இத்தால்' என்றது, ஐந்திரவியாகர பண்டிதனைத் தூதுவிடாமல் பறவைகளைத் தூதுவிடுகிற இதனால் என்றபடி. ஏற்றம் - அன்பின் மிகுதி.

2. 'அவர் ஒருவரையும்' என்றது, ஸ்ரீ ராமபிரானை. 'இருவரையும்' என்றது, பிராட்டியையும் பெருமானையும். இவளுக்கு - ஆழ்வார் நாயகிக்கு.

3. 'ஞானஸம்பந்ந:' என்பது, ஸ்ரீராமா. பால. 1 : 12.

4. 'ரிபூணுமபி வத்ஸல:' என்பது, ஸ்ரீராமா. அயோத். 26 : 6, பகைவரிடத்திலும் அன்புள்ளவன் என்பது இதன்பொருள்.

5. 'ஸஞ்ஜாதபாஷ்ப:' என்பது, ஸ்ரீராமா. கிஷ். 23 : 24. கண்ண நீரோடு கூடினவர் என்பது இதன்பொருள்.

6. 'ரஞ்ஜனீயஸ்ய' என்பது, ஸ்ரீராமா. யுத்த. 106 : 6. பராக்கிர மத்தாலே மகிழச் செய்கின்றவனுக்கு என்பது இதன்பொருள். 'எதிரிகள் பக்கல் கேட்குமித்தனை' என்றதனை, கம்பராமாயணம் முதற்போர் படலம் 203, 204-ஆம் செய்யுட்களிலும், கும்பகர்ணன் வதைப்படலம் 15 முதல் 31 முடிய உள்ள செய்யுட்களிலும் காணல் தகும். 'எதிரிகள்' என்றது இராவணன் முதலியோரை.

இத்தலையில் மேற்பட்டார் இல்லாமையாலே நம் ஆர்த்தி அறிவிக்க வரும் என்று ஆர்த்தரக்ஷணம் பற்றாசாகத் தூது விடுகிறாள்.

[1] சீயர் உருத்தோறும் பாண்டவர்கள் கார்யத்துக்காகத் தன்னை ஒக்கி அவர்கள் கழுத்தைக் கட்டிக்கொண்டு திரியா நிற்கச் செய்தேயும் அவர்கள்பட்ட வியஸனமெல்லாம் படுகிறார் காணும் இவரும். [2] அவர்கள் தாம் தர்மாபாஸம் உண்டு என்று இருக்கையாலே வியஸனப் பட்டார்கள்; இவர்க்கு அதுவு மின்றிக்கே இருக்க என் செய்யப்படுகிறார் என்று அருளிச் செய்வர். [3] "ஸாஹம் கேஶக்ரஹம் ப்ராப்தா த்வயி ஜீவத்யபி ப்ரபோ" என்றவள் நிலையிறே இவரது. [4] "மஹாத்யாபதி ஸம்ப்ராப்தே" - [5] ஆபாச ரக்ஷகரான பர்த்தாக்களாலும் தன்னாலும் பரிஹரித்துக்கொள்ளவொண்ணாத அவ்வருகுபட்ட ஆபத்திறே. 'பகவாந்' பூர்ணரன்றோ; அபூர்ணர் காரியம் செய்வார். 'ஹரி:' ஜ்ஞானாதிகளால் வந்த பூர்த்தியிலே ஶக்தி யுண்டாயிருக்கச் செய்தே, ஹரி: என்று விசேஷிக்கிறது அல்லாதார்க்கும் இக்குணங்கள் ஒருக்கால் உண்டாகையாலே, இவனுக்கு அங்ஙன் அன்று இது ஸ்வபாவம் என்கைக்காக.

———o———

1. சர்வேச்வரன் இவரிடத்தில் மிகுந்த பிரீதி உள்ளவனாக இருக்கச் செய்தேயும், இவர் இடைவிடாது நோவுபடுகிறபடியை அநுசந்தித்து நஞ்சீயர் ஈடுபட்ட விதத்தைக் கூறுகிறார் 'சீயர்' என்று தொடங்கி. 'தன்னை' என்றது, கண்ணபிரானை.

2. ஆயின், பாண்டவர்களோடு ஒப்பார் ஒருவரோ இவரும்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'அவர்கள்தாம்' என்று தொடங்கி. தர்மாபாசம் - போலிதர்மம்.

3. போலி தர்மங்களைவிட்டு, அவன் கையைப் பார்த்திருக்கச் செய்தேயும், இவர் படுகிற நிலை யாருடைய நிலையைப்போலே இருக்கிறது? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'ஸாஹம்' என்று தொடங்கி. இது பாரதம் உத்யோக பர்வம். ஏ பிரபுவான கிருஷ்ணனே! நீர் ஜீவித்திருக்கும்போதும் அத்தகைய நான் ஒருவனால் மயிர் பிடித்து இழுக்கப்பட்டவளாய், பெரும் துன்பத்தை அடைந்து பாண்டு புத்திரர்கள் இருக்கும் சபையை அடைந்தேனே என்பது இதன்பொருள். என்றவள் - திரௌபதி.

4. திரௌபதி எல்லாவற்றையும் விட்டு 'அவனே ரக்ஷகன்' என்றிருந்தாளோ? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'மஹாத்யாபதி' என்று தொடங்கி. இது பாரதம் உத்யோக பர்வம். பெரிய ஆபத்து நேர்ந்த காலத்தில் பகவானாகிய ஹரி நினைக்கத்தக்கவர் என்பது இதன்பொருள்.

5. சுலோகத்திலே உள்ள 'மஹதி' 'பகவான்' 'ஹரி' என்ற சொற்களுக்குப் பொருள் கூறுகிறார் 'ஆபாசரக்ஷகரான' என்று தொடங்கி. ஆபாசரக்ஷகர் - போலிரக்ஷகர்.

இரண்டாந் திருவாய்மொழி (52)

"மின்னிடை மடவார்"

பிரவேச சங்கி:—இவ்வாழ்வார் சம்சார பயத்தாலும் கைங்கர்ய ருசியாலும் வியதிரேகத்தில் தரியாமையாலும் பிரணயரோஷத்தாலே ஊடுகையாலும் பகவத் விஷயத்தில் கைவைத்தார் எல்லார்படியும் இவருக்கு உண்டு. [2] "இந்நின்ற நீர்மை யினி யாமுறாமை" என்று இது பொருந்தாதபடியாலே முமுக்ஷுக்கள் படியும், [3] "வழுவிலாவடிமை" என்று கைங்கர்யத்தால் அல்லது தேஹயாத்ரை செல்லாமையாலே முக்தர் படியும், [4] "நின்னலால் இலேன்" என்று சத்தாப்ரயுக்தமாயிருக்கையாலே நித்யர் படியும், [5] பிரணயரோஷத்தாலே ஊடுகையாலே பிராட்டிமாரோடு ஒக்கவும் சொல்லலாயிருந்தது. [6] "விஷ்ணுநா ஸத்ருசோ வீர்யே" என்னுமாப்போலே. அல்லாதார் படியடங்கலும் இவருடைய ஓரோ அவஸ்தைக்கு

---

1. மேல் திருவாய்மொழியில் விடுத்த தூதர் சென்று அவனுக்கு அறிவித்து அவனும் வாராதிற்க, வருமளவும் பற்றாமல் ஆற்றாமை முடுகிப் பிரணய ரோஷம் தலையெடுத்து, அதனாலே 'இனி அவன் வந்தாலும் அவனோடு கலப்போம் அல்லோம்' என்று இருக்கிற இவளை, அவனும் வந்து, தன் அழகு முதலியவைகளால் இவளுடைய ஊடலைத் தீர்த்துக் கலந்தபடியைச் சொல்லுகிறது என்று மேல்கூறப்போகிற பொருளை உளத்தே கொண்டு, பிரணய ரோஷத்தால் ஊடுகின்றவர்கள் பிராட்டிமார் அலரோ? ஆழ்வார்க்கு இது கூடுமோ? என்ன, 'இவர்க்கு எல்லார் தன்மைகளும் உண்டு, ஆகையாலே கூடும்' என்கிறார் 'இவ்வாழ்வார்' என்று தொடங்கி. 'எல்லார்' என்றது, முமுக்ஷுக்கள், முத்தர், நித்தியர், பிராட்டிமார் என்னும் இவர்களைக் குறித்தது.

2. முமுக்ஷுக்களுடைய சம்சார பயம் இவர்க்கு உண்டு என்கிறார் 'இந்நின்ற' என்று தொடங்கி. இது திருவிருத்தம், 1.

3. முக்தர்களுடைய கைங்கரிய ருசியும் இவர்க்கு உண்டு என்கிறார் 'வழுவிலா அடிமை' என்று தொடங்கி. இது திருவாய்மொழி, 3. 3 : 1.

4. பிரிவில், நித்திய சூரிகளுடைய தரியாமையும் உண்டு என்கிறார் 'நின்னலால் இலேன்' என்று தொடங்கி. இது திருவாய்மொழி, 2. 3 : 7.

5. பிராட்டிமாருடைய பகவத் பிராவண்யமும் இவர்க்கு உண்டு என்கிறார் 'பிரணயரோஷத்தாலே' என்று தொடங்கி.

6. ஒருவர்க்கே பலருடைய தன்மைகள் உண்டாவதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'விஷ்ணுநா' என்று தொடங்கி. இது, ஸ்ரீராமா. பா. 1 : 18. ஆற்றலில் விஷ்ணுவை ஒத்தவர், பிரியமாகப் பார்க்கப்படுவதில் சந்திரனை ஒத்தவர் என்பது இதன் பொருள்.

ஒப்பாமித்தனே. [1] இதுதான் 'பால்யாத் ப்ரப்ருதி' என்கிற படியே [2] 'அறியாக்காலத்துள்ளே', 'முலையோ முழுமுற்றும்' என்று இவர்க்குப் பருவம் நிரம்புவதற்கு முன்னும் இருக்கிறபடி.

"ஏறாளுமிறையோனி"ல் அவனுக்கு வேண்டாத நானும் என்னுடைமையும் வேண்டா என்றார். "மாசறுசோதி"யில் எனக்கு உறுப்பு அல்லாத அவனும் அவன் விபூதியும் வேண்டா என்று அழிக்கப் பார்த்தார். "பிறந்தவாற்றி"ல் தரித்து குணானுபவம் பண்ணவல்லேனும்படி பண்ண வேணும் என்று சரணம்புக்கார். அப்பெரிய ஆர்த்தியோடேகூடத் தூதுவிட்டார்; அவ்வளவும் பாடாற்றி, விட்ட ஆள் சென்று அவனுக்கு அறிவிக்க, அவனும் இழவாளனாய் ஆனைக்கு உதவ வந்து தோற்றினாற்போலே பதறி நடந்து வாரா நிற்க, அவ்வளவு பற்றாமே கிடந்து துடித்து அலமந்து, இனி இவ்வளவில் நாம் செய்ய அடுப்பது என்? என்று பார்த்து, 'முடிந்து பிழைக்கைக்கு மேற்பட பரிஹாரம் இல்லை' என்று பார்த்து அறுதியிட்டு முடியப் பார்க்க;

அது இவள் சங்கல்பித்த போதாக முடியப் போகாதிறே; அங்ஙன் செய்யலாமன்று இவள் "ஏறாளுமிறையோனி"ல் வேண்டா என்றபோதே போமிறே. இனி, போகத்துக்கு அவன் வரவு வேண்டினவோபாதி முடிவுக்கும் அவன் வரவு வேண்டியிருந்தது; பிரிவில் குணானுஸந்தானம் பண்ணி ஜீவிக்கலாம்; அவன் சந்நிதியில் அவனை ஒழிய அரைக்ஷணம் முகம் மாறி இருக்குமதுக்கு மேல்பட முடிவு இல்லையிறே. அவன் பேர நின்று இத்தலையைப் பண்ணின மிறுக்கடங்கலும், அவன் சன்னிதியிலே தாம் முடிந்து அவனையே நோவுபடுத்தப் பார்க்கிறாள்.

---

1. இங்குக் கூறப்பட்ட தன்மைகள் மற்றை ஆழ்வார்களுக்கும் உண்டே? இவர்க்கு ஏற்றம் என்? என்ன, அதற்கு விடை கூறுகிறார் 'இவைதான்' என்று தொடங்கி. 'பால்யாத் ப்ருப்ருதி' என்பது, ஸ்ரீராமா. பால. 18 : 27. இராமபிரானுகிய தன் தமையனாரிடத்தில் இலக்குமணன் இளமைப்பருவமே தொடங்கி மிக்க அன்புடையவராக இருந்தார் என்பது இதன் பொருள்.

2. "அறியாக்காலம்" என்பது திருவாய்மொழி, 2. 3 : 3. "முலையோ முழுமுற்றும்" என்பது, திருவிருத்தம், 61.

அவன் வரவிலே அல்பம் தாழ்க்க, பிரணய ரோஷம் தலையெடுத்து 'இனி இருந்து ஜீவிக்கும் ஜீவனம் வேண்டா' என்று முடியப்பார்க்கிருளிறே பிரிவு பொறுக்கமாட்டாமை. "ப்ரணயாச் சாபிமாநாச்ச பரிசிக்ஷேப ராகவம்" என்கிற படியே, அவரோடுண்டான சிரபரிசயத்தாலும் கலவியாலும், 'என்னுடையவர் அன்றோ' என்கிற வேண்டற்பாட்டாலும் பெருமாளை மேலிட்டு வார்த்தை சொன்னுள்; "கிம் த்வாமந் யத" ஒருவனுக்கு ஆற்ற ஒரு பெண்டாட்டி யுண்டோ? என்னை ஒருத்தியையும் நோக்கமாட்டாமையே வைத்துப் போகப் போகுகிறது! இதுதன்னை எங்கள் அய்யர் கேட்கில் போர வெறுப்பர்; ஒரு பெண் பெண்டாட்டி ஆணுடை யுடுத்து என் மகளைக் கைப்பிடித்தான் என்றிராதே கடுகக் கொண்டு போகப் பாரும். "ஈர்ஷ்யாரேஷௌ" - இவ்வளவேயோ இவர் தாம் இலக்காகச் சொன்னவையிறே இவை.

இவர் விட்ட ஆளின் முன்பேயும், "குஶலீ யதி", "தர்மாப தேஶாத்" என்னும் இப்புடைகளிலே சொன்னவை அனேக மிறே. இவளும் "மாசறு சோதி" துடங்கி இவ்வளவும் மாட்டாது, இனி அவன் வந்து சம்ச்லேஷித்தாலும் விச்லேஷாந் தமாயல்லது இராது. ஆனபின்பு அவன் வந்து கலந்துபிரிந்த கோள்வாய் பொறுக்க அரிதாயிருக்கும். அநந்தரம் பிரிவாகிற புதுக்கோ முற்றவன் வந்து முதன்மை கொண்டாடுமதில் முகம் பழகின வியசனத்தோடே முடியவமையும் என்று ஆற்றாமை தோற்ற, 'ஹிமஹத நளினீவ' என்னும்படி இருக்க, இவள் தான் இப்படி பாரிக்கைக்கு அவன் வாராநின்றானோ என்னில், வரவுக்கு ஸூசகமான நன்னிமித்தங்கள் அனேகம் உண்டாயிருந்தன. "பக்ஷீச ததா கதாம்."

இனி அவன் அளவு இருந்தபடி பார்த்தால் "ஆர்த் தோவா" என்று இப்படி, களித்து 'சரணம்' என்றாலும் பொறுக்கமாட்டாதவன், "மாசறு சோதி" தொடங்கிப் போர மிறுக்குப்பட்டு நாலு பிரயோகம் சரணம்புக்கு, அவ்வளவிலும் முகம் காட்டாதொழியச் செய்தேயும், தூதுவிட்டு, இப்படி இம் மிறுக்குகள் எல்லாம் பட்டது நம்மை உத்தேசித்திறே என்றிருக்கும். ஆக, நன்னிமித்தங்கள் அனேகங்கள் உண்டாகையாலும், அவன் ஸ்வபாவத்தை விச்வஸித்திருக்கையாலும், இவ்வளவும் வர இவள் முடியாதிருக்கையாலும், இதெல்லாங் கிடக்க நம்முடைய பாக்ய ஹானிதான் அவனை நம்முன்னே

கொடுவந்து நிறுத்தும் என்றிருக்கையாலும், பிரிவு அநிஷ்டமான தசையிலே போக வல்ல நிர்லஜ்ஜன் வரவு அனிஷ்டமான தசையிலே முன்னே வந்து நிற்கவும் வல்லன் என்றிருக்கையாலும், 'இன்னமொரு கால் கலந்து பிரிந்து நம்மை முடிக்கவேணும்' என்றிருக்கையாலும், 'அவன் வரவு தப்பாது' என்று அவன் வரவை நிச்சயித்து, தோழிமாரும் தானும் அவன் வந்தாலும் அவனுக்கு முகங்கொடுத்தல் வார்த்தை சொல்லுதல் செய்யக்கடவோமல்லோம் என்று சங்கல்பித்து, அவன் அறியாததோரிடத்திலே இருக்கவேணும் என்று பார்த்து;

காயாம்பொழிலாய் அதிலே விளையாடு சூழலாய், அதின் நடுவே அதிமனோஹரமாய் இருப்பதொரு மண்டபமாய், அதில் இவர்களெல்லாம் கூடியிருந்து அவனுக்குப் பற்றாசு இல்லாதபடி பூவை தொடக்கமான லீலோபகரணங்களை ஊரழிபூசலில் அரண் உள்ள கோட்டையிலே சரக்கு வாங்குவாரைப்போலே ஓரிடத்தில் திரள வாங்கி, இனி இவர்கள் ஏதேனும் மறந்தவை யுண்டாகில் அவனுக்கு அது பெற்றுச் சத்தை யுண்டாகவேண்டும்படியாய், இப்படி இவர்கள் சமயமிட்டு, வந்தாலும் அவனுக்குப் புகுரவொண்ணாதபடி அநாதரமாகிற கன்மதிளை உரக்கவிட்டு, அவனுடைய ஸர்வஜ்ஞத்வம் கொண்டும் ஸர்வசக்தித்வம் கொண்டும் வியாபரிக்க ஒண்ணாதபடி வியவஸ்தை பண்ணியிருந்து, "கச்சித்ஸுகுமாலீ க்ருஷ்ண:", என்று இப்பிதற்றுத்தான் என்? என்று, "அதவா கிம் ததா லாபை:" என்பாராய், ஆஸுர பிரக்ருதிகளான ஹிரண்யாதிகள் கோஷ்டியில் திருநாமம் சொல்லுகை அஸஹ்யமாமோபாதி இவர்கள் கோஷ்டியிலும் உகவை தலைமண்டையிட்டுத் திருநாமம் சொல்லில் நெஞ்சு சிவிட்கென்னும்படி இருந்தார்கள் இவர்கள்.

இவ்வளவில் அவன் இருந்தபடி என்? என்னில், "வேறு கொண்டு உம்மை யான் இரந்தேன்" என்கிற ஆர்த்தநாதம் செவிப்பட்டது, 'ஸுசிஸ்ரவா:' நல்லது செவிப்படுமவனிறே. இவ்வளவில் ஆறியிருக்குமனன்றே; 'பரமாபதமாபந்ந:' என்று கஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்தநாதம் செவிப்பட்டு 'அதந்த்ரித' என்று அறிவுடையார் ஈடுபடும்படி வந்து தோற்றினாற்போலவும், திரௌபதியைத் துச்சாதநாதிகள் நலிகிறபோது ரக்ஷகரான பர்த்தாக்களை விட்டு "கோவிந்

தேதி யதாக்ரந்தத்" என்று கூப்பிட, அவள், தனக்கு அடுக்கும்படி செய்தாள், நான் அவதரித்தே அவதாரப் பிரயோஜனம் ஒன்றும் பெற்றிலேன் என்று இழவாளனாய், இவள் குழலை முடிப்பித்தும் தர்மபுத்ரன் தலையிலே முடியை வைத்தும் விரோதி வர்க்கத்தைக் கிழங்கெடுத்துப் பொகட்டுத் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளுகிறபோதும் 'நாதிஸ்வஸ்தமநா:' என்று திருவுள்ளம் புண்பட்டாற்போலவும், 'ஶரதல்பகதோ பீஷ்ம:' என்று கொண்டு சரதல்பகரான ஸ்ரீ பீஷ்மருக்கு முற்பாடாய் உதவவேண்டியிருக்கப் பிற்பாடரானேன் என்று நோவுபட்டாற் போலவும், 'தேந தே தமநுவ்ரதா:' என் முற்பாடு கண்டு அநுவர்த்திக்கக் கடவர்கள் முற்பாடராம்படி நாம் பிற்பாடராவதே என்றிருக்குமவனிறே.

இப்படிகளாலே திருவுள்ளம் போர இரங்கி, "ப்ரஸீதந்து பவந்தோ மே' என்று தண்டகாரண்ய வாஸிகளான ரிஷிகளுடைய ஆர்த்திக்கு முற்பாடராகப் பெற்றிலோம் என்ற இழவாலே லஜ்ஜித்து அவர் காலைக்கட்டிப் பொறுப்பித்துக் கொள்ளுமவனிறே; இனி 'வ்யஸநேஷு மநுஷ்யாணாம்' என்று சாமாந்யத்திலே இருக்கும்படி கண்டால் பிரணயினிக்குச் சொல்லவேண்டாவிறே.

நாம் கிட்டிநின்று கையைக் காலைப் பிடிக்கவேண்டும் விஷயம் ஒரு திர்யக்கின் காலிலே விழும்படி நாம் பிற்படுவதே! நமக்கு இனியொரு பும்ஸ்த்வமாவது என்? நாம் அங்கு இனிப் போய்ச் செய்வதென்? இங்கிருந்து செய்வதென்? என்று தடுமாறி இத்தலையோடே கலந்தல்லது தரிக்கமாட்டாதானாய் இவர்கள் இருந்தவிடத்துக்கு அதூரவிப்ரக்ருஷ்டமாக வந்து, பிரணயகோபத்தாலே அணுகவொண்ணாதபடி இருக்கிற இருப்பைக் கண்டு, இத்தலையில் அபிஸந்தியைக் குலைத்து நாம் கூடினோமாம்படி என்? என்று சிந்தித்து, ஸௌந்தர்யங்கொண்டு வெல்லுவோம் என்னில், அது கொண்டு தண்ணீர் வார்ப்பாரில்லையிறே இக் கோஷ்டியில்; 'அஸிதேக்ஷணை'களிறே.

இனி மேன்மையாலே வெல்லப் பார்த்தால் அந்தப்புரத்தை யானைக் காலிலிட்டு புஜிக்கவொண்ணாதே; இனி தாழ்ச்சியே பரிகரம்: அது இத்தலையின் கடாக்ஷம் பெறாதே பிரவர்த்திக்குமன்று நிஷ்ப்ரயோஜனமாமிறே; இனி இத்

தனையும் செய்தால், ஆசையற்றுப் போகைக்குத் திருவடிகள் பேராதே; இசைவின்றிக்கே இருக்க மேல்விழமாட்டானே; இனி, விழுக்காடு பாராதே மேல்விழுமன்று மிருது பிரக்ருதிகளாகையாலே இழக்க வரினும் வருமே; இனி சேர்ந்து குளிர்ந்த தண்ணீர் சன்னிஹிதமாயிருக்க பெருவிடாயனை வன் அழிஞ்சுக் காடேறப் போகானே; அதாவது 'இவன் அல்பம் தாழ்த்தான்' என்று வெறுத்து, 'புகுருவானல்லன் நம் கோஷ்டியில்' என்றிருக்கிற இவர்களைவிட்டு நாட்டாரோடே உறவுபண்ணப் போவான் அன்றே;

'இனி ஒருபடி பொருந்தினோமாம் விரகு என்?' என்று கடல் கடந்த திருவடி பட்டதெல்லாம் பட்டு, "ராஜா தஶரதோ நாம" என்னுமளவன்றே;"ஏவம் பஹு—விதாம்சிந்தாம்" என்று மநோரதித்து 'நம் தலையும் அவர்கள் காலும் கிடந்ததாகில் காலைக் கட்டிப் பொருந்துவித்துக் கொள்கிறோம்' என்று அறுதியிட்டான். தலையான உபாயம் இதிற்காட்டில் இல்லையே; இதுதான் அடியிலே கண்டதொன்றிறே. ஆக, இப்படி அறுதியிட்டு, தன்னிறத்தோடொக்கச் சொல்லலாவதொரு சோலையுள்ளிட்டு அவர்களுக்கும் தோழிமார்க்கும் தெரியாதபடி கிட்டச்சென்று, அவர்களைக் காணப்பெறுதே விடாய்த்தவன் கண்களாரளவும் நின்று விளைநீரடைத்துக் கொண்டு கிருதார்த்தனாய் நின்றான்.

அநந்தரம் ஆலாபாதிகளிலே சிரத்தையுண்டாய் அது பெறுமையாலும் தனக்குத் தாரகமான பூவை கிளி துடக்கமானவற்றினுடைய இனிய பேச்சுக் கேட்கப்பெறுமையாலும் மிகவும் தளர்ந்து, தானும் அவர்களுமானால் அவளிற்காட்டில் தன்பக்கல் பிரேமம் இரட்டித்திறே தோழிமார் இருப்பது; பிரிவிலும் அப்படியே என்றிருந்தான்; அவர்கள் அங்ஙன் அன்றிக்கே அவளில் காட்டில் கோபம் அதிசயித்திருந்தார்கள்; 'ஸப்ராதுஶ்சரணௌ' என்று புருஷகாரம் முன்னாகத் தன்னைப் பற்றினார்க்குத் தன் திருவுள்ளம் இரங்கும்படி தான் அறியுமே; இங்கு அப்படியே அவர்கள் புருஷகாரமாகவும் பெற்றதில்லை; இனி இத்தலையில் இசைவு உண்டானாலும் அவர்கள் இசையாத அன்று அழைக்கவும் போகாதே; 'தத் தமஸ்யாபயம் மயா' என்றாலும், "வத்யதாம்" என்றவர் தம்மையிட்டே "ஆநய" என்ன வேண்டிற்று; இவ்வழியாலும் ஒரு முகம் பெற்றிலன்; "நஜீவேயம்", "க்ஷணேபிதே யத்விர

ஹோதிதுஸ்ஸஹ:'' என்று க்ஷணமாத்ர விச்லேஷமும் பொறுக்கமாட்டாதவன் அவர்கள் ஸந்நிதியில் முகம் பெருமே நின்று பிழைக்கமாட்டானே.

இனி இவன் அணுகுதலாலே இவர்கள் இருந்தவிடம் அடங்கலும் 'சோபயந் தண்டகாரண்யம்' என்று மயில் கழுத்துச் சாயலாய் இவனுடைய நிரந்தர கடாக்ஷபாதத் தாலே புளகித காத்ரைகளாய் அத்தால் உண்டான சைத்யம், இவர்களுடைய பிரணயரோஷத்தால் வந்த கோபாக்னியும் விரஹாக்னியும் இன்றாகில் பொறுக்க அரிதாம்படியாய், கோபம்தான் அவன் ஸந்நிதியிலே மிகைத்து வாரா நிற்கு மிறே, இவ்வோ லக்ஷணங்களைக் கொண்டு இவன் வந்தமையை நிச்சயித்துத் தங்களிலே ஒருமித்து முகம் மாறியிருக்க; இவ னும் அவ்விருப்பைக் கண்டு எதிரிகள் இட்ட மதிளாகிலிறே முறித்துப் புகலாவது, கிட்டப்பெருமையாலும் ஸந்நிதியாலும் ஆற்ருமை கரைபுரண்டு கால் தரைபாவாதே தடுமாறி வருகிற சமயத்திலே, இவனுடைய ஜீவனத்ருஷ்டத்தாலே இவர்கள் மறந்துபோன பந்தும் கழலும் இவன் காலிலே தாக்க, அப் போது இருட்டறைகளிலே தடவிக்கொண்டு வாராநின்ருல் உறியும் வெண்ணெயும் கையிலே தாக்க ஹ்ருஷ்டனுமா போலே பெரிய ஹர்ஷத்தோடே அவற்றை எடுத்துக் கொண்டு, அத்தலையில் பண்ணும் வியாமோஹ மடங்கலும் இதிலே தோற்றும்படி கண்ணிலே ஒத்திக்கொள்வது, தலை யிலே வைத்துக்கொள்வதாய், பிராட்டி திருவாழிமோதிரம் கண்டு பட்டதெல்லாம் பட்டான்.

"க்ருஹீத்வா" என்னும் அப்படியே ஆயிற்று இவனும் இவைபெற்ற பின்பு. சம்சாரி முக்தனுைல் அவனுடைய லீலோபகரணமும் போக உபகரணமும் சமமாகத் தோற்றக் கடவது; ஆகாராந்தரமான ஸ்மிருதி இல்லையே; ததீயத்வா காரத்தாலே நித்ய விபூதியோடொக்கத் தோற்றுமித்தனை; அப்படியே இவர்களுடைய லீலோபகரணமும் போகோப கணமாகத் தோற்றக்கடவது, அவற்றிலே அவன் பண்ணும் வியாமோஹத்தைக் கண்டு, 'நம்மைப் பிரிந்து சத்தையோடே குறியழியாமே இருக்கக் கடவ இவன், இவையெல்லாம் நம்மை உத்தேசித்துச் செய்கிருன் அன்று; நம்மைப் பிரிந்துபோய்ச் சிலரோடே கலந்து, அவர்களையும் பிரிந்து; அவ்வாற்ருமை யோடே இங்குவந்தான்; இவற்றை அவர்களதாகப் பிரமித்

தானித்தனே, நம்பக்கல் வியாமோஹத்தால் செய்கிறனல்லன்' என்று இவர்கள் இருக்க ;

அவனும் தன் அழகாலும் குணங்களாலும் தன் செல்லாமைகளாலும் தாழ்ச்சிகளாலும் அத் தலையில் ஊடலைத் தீர்த்துச் சம்ச்லேஷிக்கிறன் என்கிறர்.

இத் திருவாய்மொழியைப் பூர்வர்கள் பகவத் விஷயத்தில் சாபத்ம்யம் தோற்றச் சொல்றுகை சேஷத்வ லக்ஷணமன்று, "வளவேழுலகிற்"படியே அயோக்யதாநுஸந்தானம் பண்ணுகிறர் என்று நிர்வஹிப்பார்கள். இதனைப் பட்டர் கேட்டு, என் சொன்னர் ஆனர்கள்! இவர்க்குப் பகவத் விஷயத்தில் உண்டான ருசிக்குப் பிரகாசகம் இத்திருவாய்மொழியாயிருக்க இதுக்கு வேறே ஒருவழி தேடுவதே என்று அருளிச்செய்தார். 'ஹநிஷ்யாமி ஸபாந்தவம்' என்று மஹாராஜரோடே பெருமாள் கிலாய்க்கைக்கும் உறவு உண்டாயிற்றிறே. வா என்பாரைக் கிடையாத இச்சம்ஸாரத்திலே போ என்பாரைப் பெறுவதே என்பர் எம்பார்.

எம்பார் பாஹ்ய விஷயங்களிலே ருசியில்லாமையாலே பதார்த்தஜ்ஞானம் இன்றிக்கே ஸ்த்ரீகளுக்கு அசாதாரண சிந்ஹங்கள் எங்ஙனே இருக்கும் என்று கேட்குமவர். இத்திருவாய்மொழி அருளிச் செய்யப்புக்கால் சந்யாசிப் பாட்டுப் பாடத் துடங்கினன் என்பர். பிள்ளையுறங்காவில்லிதாஸர் க்ஷுத்ர விஷயத்தில் நாலுநாள் வாசனைபண்ணினர் போரவிதக்தராய் நின்றர். அவ்வளவல்லவன்றே ஸமஸ்த கல்யாண குணத்மகனேடே நெடுங்காலம் வாஸனைபண்ணினர்க்கு இருக்கும்படி என்று.

பட்டர் சமஸ்த கல்யாண குணத்மகனய் ஸர்வநியந்தாவான ஸர்வேச்வரன் நாலு இடைப்பெண்கள் இருந்தவிடத்தே புக்கல்லது நிற்க மாட்டாத செல்லாமை விளைய, அவர்கள் புகுராதே என்ன, விலங்கிட்டாப்போலே, போகவும் திரியவும்மாட்டாதே தடுமாறு நின்றன் என்கிற சௌசீல்யம் ஆர் அறிந்து கொண்டாட வியாஸாதிகள் எழுதிவைத்தார்கள்; சாஸ்த்ரங்களிலே ஈப்ஸிதவ்யவிபாகம் பண்ணி யொருங்க விடா நிற்க அத்தலை இத்தலையாகச் சொன்னல் இத்தைக் கைக்கொள்வார் இல்லையிறே. இத்தால் "சாது கோட்டியுட் கொள்ளப்படுவர்" என்கிற இது அவனுக்கு ஒத்திருக்கிறபடியைச்

சொல்லுகிறது. 'ஸசாபி' வைஷ்ணவர் திரளிலே ஒருவன் புகுந்தால் துர்மாநத்தாலே மலேயிட்டுஅமுக்கிஞற்போல் இருக்கையன்றிக்கே நீரும் நீரும் கலந்தாற்போலே இவன் புகுந்தமை தெரியாதபடி இருந்தவர்கள் இடங்கொடுத்து அவர்கள் பரிக்ரஹிக்கையிறே....வனுக்கு நன்மையாவது என்று.

——:——

மூன்ருந் திருவாய்மொழி (53)

" நல்குரவும் "

பிரவேச சங்கி :—இப்படித் தாழநின்றவன் சர்வேஶ்வரன் என்று "பிணக்கி யாவையும் யாவரும் பிழையாமல்" என்று பிரஸ்துதமான ஈச்வரத்வத்தை யருளிச்செய்கிருர் என்று **பிள்ளான்.** 'சேரோம்' என்ற தம்+விருத்தவிபூதிகத்வத்தையும் சௌந்தர்யாதிகளேயும் அனுசந்தித்து இப்படி உபகார சீலனுனவன் திருவிண்ணகரிலே சன்னிஹிதனுஞன்; இவனல்லது நமக்குப் பரம பந்துக்கள் இல்லே யென்று அறுதியிட்டு, அவன் திருவடிகளல்லது பற்றில்லே என்கிருர். பொய்ந்நின்ற ஞானம் துடங்கி இவ்வளவும் வர, சேர்த்துக்கொண்டபடி போலல்ல இது, ஒன்ருல் பரிஹரிக்கலாமன்றிறே இது. அகலில் குற்றம், அணுகில் குற்றமாயிருப்பது ஒன்றிறே. ஜாதி சண்டாளனேத் திருத்தப்பார்த்தால் பிராயச்சித்தமுண்டு. பிரணயாபராத சண்டாளர்க்கு அதுவுமில்லேயிறே.

——:——

நான்காந் திருவாய்மொழி (54)

" குரவை ஆய்ச்சியர் "

பிரவேச சங்கி :—இத்திருவாய்மொயில் ஆழ்வார் ஸ்ரீ வால்மீகி பகவாஞேடு ஒப்பர். அவர் ராமாவதாரமல்லது அறியார். அவர் பிரபந்தமும் அப்படியே. இவரும் கிருஷ்ணவதாரமல்லது அறியார். இத்திருவாய்மொழி கிருஷ்ண விருத்தாந்தமொழிய வேருென்றைச் சொல்லாது. திருவடியைப் போலே 'பாவோ நாந்யத்ர கச்சதி' இறே இவரும்.

"சேனையர் வானத்திருக்கும்" என்கிறபடியே கிட்டி நின்று அநுபவிக்கப் பெற்றிலோம் என்ற இழவுதீர, பூமியிலேயாகப் பெற்றது; "தொல்லருள் நல்வினையால் சொலக் கூடுங்கொல்" என்கிற இழவும் தீரத் திருநாமம் சொல்ல வல்லர் ஆனார். "பிறந்தவாற்"றில் இவர்க்கு உண்டான இழவெல்லாம் தீரும்படி ஸ்ரீ பிருந்தாவன விருத்தாந்தத்தைக் காட்டிக் கொடுக்கக் கண்டு அது பூதகாலமாய்த் தோற்றுகையன்றிக்கே சமகாலம் போலே கிட்டிநின்று அநுபவிக்கிறார். "மின்னிடை மடவா"ரில் 'அல்லோம்' என்று அகன்று முடிந்து போகப் புக்க தம்மை 'ஆவோம்' என்னப் பண்ணிச் சேர விட்டுக் கொண்டபடியை அநுசந்தித்து, இப்படி வல்லார் இவன் அல்லது இல்லைகிடீர் என்று தலைக்கட்டுகிறாராயிருக்கிறது. "சன்மம் பல பல" விலும் இப்படி இருப்பதொரு ஹர்ஷம் உண்டே; அதில் இதுக்கு வாசி என்? என்னில், அங்கு, இதர வியாவ்ருத்தி மாத்ரத்தால் உண்டான ஜ்ஞாந லாபத்தால் வந்த ஹர்ஷம். இங்கு, அவன், தன் குணங்களை நேரே இவரை நெருங்கி அநுபவிப்பிக்க அத்தால் வந்த ஹர்ஷம்.

———0———

ஐந்தாந் திருவாய்மொழி (55)

—(o)—

"துவளில் மாமணி"

பிரவேச சங்கி :- கிருஷ்ணாநுபவம் பண்ணாநிற்கச் செய்தே, குடிக்கிற தண்ணீர் விக்கி அது தானே பாரவஶ்யத்தை விளைப்பிக்குமாபோலே, அவ்வநுபவம் தானே ரசாந்தரத்தே மூட்டத் தமக்குப் பிறந்த அவசாதத்தை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். இத் திருவாய்மொழிக்குக் கீழும் மேலும் எம்பெருமானைக் கவி பாடினார்; இதில் தம்படி சொல்லுகிறார். சிம்ஹாவலோகந நியாயத்தாலே "பொய்ந்நின்ற ஞானம்" தொடங்கி இவ்வளவும் வரத் தமக்குப் பிறந்த பிராவண்யாதிசயத்தை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். "இத்திருவாய்மொழி ஆழ்வார் பிரக்ருதி சொல்லுகிறது" என்று நம்முதலிகள் எல்லாரும் போர விரும்பியிருப்பர்கள். பகவத் பிரசாதத்தாலே லப்த ஞானராய் '"யதோ வாசோ நிவர்த்தந்தே" என்கிற விஷ

யத்தை மறுபாடுருவப் பேசின தாமே வேணுமாகாதே தம்படி பேசும் போதும்.

ஸ்ரீ ஜனகராஜன் திருமகள் பிறந்த சமயத்தில் ஜ்யோதிர் வித்துக்களை யழைத்து இவள் ஜீவிக்கும்படிகள் என் என்று கேட்க, இவள் சார்வபௌமனாய் இருப்பான் ஒருவனைக் கைப் பிடிப்பள். இங்ஙனே இருக்கச் செய்தேயும் வனவாஸ ரஸம் அநுபவிக்கக் கடவள் என்றார்கள். அப்படியே இவள் திருத் தாயார் உள்ளிட்டார் இவள் ஜீவிக்கும்படியைக் கேட்க, "எல்லாம் நன்றாய்த் தலைக்கட்டக் கடவது; ஆனாலும், இவளுக்கு ஒரு அபம்ருத்யு உண்டு; அது தப்பினாள் ஆகில் சுகமே ஜீவிப்பள். அதாவது, திருத் தொலைவில்லி மங்கலத்தில் கொடுபுகாதே ஒழியப்பெறில் இவளைக் கிடைக்கும்" என்றார் கள். இவள் ஜீவியாதொழியிலும் திருத்தொலைவில்லை மங்க கலத்தில் கொடுபுகாத குடியன்றே; 'இவள் அங்கே புக்கு முடிய அமையும்' என்று இருப்பார் சிலரிறே. பிராட்டி வனவாஸ ரஸம் அநுபவியாத அன்றிறே, இவள் அங்கே புகா தொழியவல்லளாவது. ஸ்ரீநளர் வார்த்தையை நினைப்பது.

தேஹாத்மாபிமானிகளா யிருப்பார்க்கு எத்தனையேனும் அறிவுண்டானாலும் "ஸ்தூலோஹம், க்ருஶோஹம்" என்கிற நிலை மாற்றப்போகாதாப்போலே இவரையும் சர்வப்ரகாரத் தாலும் உகந்தருளின நிலங்களில் திருஷ்டத்தில் ஐச்வர்யா பர்வம் குறை சொல்லி மீட்கப் போகாது. க்ஷுத்ர விஷயப் பிரவணராயிருப்பார் 'அதர்மம்' என்றாலும் மீளார்களிறே. இங்குக் குணாதிக விஷயமாகையாலே ஒரு குறை சொல்லவும் போகாது. பழியும் உண்டாயிடுக, மதிப்புக் கேடும் வருக, ஆனாலும் அது கண்டு மீளமாட்டாத அத்யவஸாயமிறே இவளது. இங்ஙனே இருக்குமாயின், ஸ்வபாவத்தாலும் தைவ யோகத்தாலும் இவள் பிராவண்யாத்யவஸாயங்களாலும் மீளாத இவளை மீட்கப் பார்க்கிறது என்? என்னில், இவளுடைய அதிமாத்ர பிராவண்யம் சாதகர் கையில் கிடக்கக் காண்கை யாலே 'இவள் சாதனபுத்தியா ப்ரவர்த்திக்கின் செய்வதுஎன்?' என்னும் பயத்தாலே மீட்கப் பார்க்கிறார்கள்; ஸ்வரூப பேதத் துக்கு இசைந்தால் ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்துக்கு இசையவேண்டாவோ என்று காணும் இவள் நினைவு. சேஷிக்கு உபாயபாவம் ஸ்வரூபாநுபந்தியானாற்போலே, சேஷ பூதனுக் கும் பிராவண்யம் ஸ்வரூபாநுபந்தியாகக் கடவதிறே.

இப்பெண்பிள்ளை பிரகிருதி அறியச்செய்தேயும் விழுக்காடு அறியாதே தாய்மார் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக, இவள் 'அரவிந்தலோசன' என்பது, 'தேவபிரான்' என்பது : நீர்மையைச் சொல்லுவது, மேன்மையைச் சொல்லுவது, ஒப்பனைவாசி யறிந்தமை தோற்றச் சொல்லுவதாய் வாய்வெருவ, இவள் நிலை இப்படி இருந்தமையால் இவளைக் கிடையாது என்று தாய்மார் தோழிமார்பாடே சென்று இவள்படி உனக்குத் தெரியாமல் இல்லை; இவளை மீட்கலாம் விரகு சொல்லவேணும் என்ன, தோழி "நீங்களே இவளுக்குப் பிராவண்யத்தை உண்டாக்கி இப்போதாக இவளை மீட்க ஆசைப்படுகிற இத்தால் பிரயோசனம் என்? ஏற்கவே பரிஹரிக்கப்பெற்றது இல்லை. இனி இவள்பக்கல் நசையறுங்கோள்; இவளை நிஷேதிக்கப் பாராதே நீங்களும் சஹகரித்து உஜ்ஜீவிக்கும்படி பண்ணுங்கோள்" என்று தாய்மார் கேட்கத் தோழி சொல்லுகிருள். பகவத் விஷயத்துக்குப் "பழையார், புதியார்" என்றில்லை. தேசிகர் சொல்ல ஆதரமுடையார் கேட்குமித்தனை. "ஆசசக்ஷே".

ஆறாந் திருவாய்மொழி (56)

"மாலுக்கு"

பிரவேச சங்கதி :—கீழ் இவளுக்குப் பிறந்த தசை முற்றி வியசனம் அதிசயிக்கையாலே மோஹங்கதையாய்க் கிடக்க, அதுகண்டு ஆற்ருளாய் இவளுடைய தோழியும் மோஹிக்க, இத்தசையிலும் இவளை ஜீவிப்பிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார், இவளுடைய வலயாதிகள் காணக்காணச் சிதிலமாகிறபடியைக் கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக் கூப்பிடுகிருர்; ஒரு நகர பத்தநாதிகள் வேவப்புக்கால் 'மாடம் முறிந்தது, மாளிகை முறிந்தது' என்பாரைப் போலே. கீழில் திருவாய்மொழியில் அலாபதசையாய் 'கிடையாது' என்ருலும் விடமாட்டாதபடி தம்முடைய மனோவாக்காயங்கள் அவ்விஷயத்திலே பிரவணமானபடி சொல்லிற்று; இதில், அந்த அலாபத்தால் வந்த பாரவஶ்யத்தைச் சொல்லுகிறது. "நெடுமால் என்றே நின்று கூவுமால்"

என்று தன் வியாமோஹத்தைக் காட்டி ஆயிற்று இவளை இப்படிப் பரவசை ஆக்கினான். பெரியவன் தாழ்ச்சி பொறுக்கலாயிராதிறே. "ராகவேண அபயே தத்தே ஸந்நதோ ராவணாநுஜ:" என்று இவள் தறைப்படும்படியிறே அவன் வியாமோஹ மிருப்பது.

——(0)——

ஏழாந் திருவாய்மொழி (57)

———o———

"உண்ணும் சோறு"

பிரவேச சங்கி :—கீழில் திருவாய்மொழியிலே, மோஹித்துக்கிடக்கிற தன் மகளுடைய அவசாதத்தைக் கண்ட திருத்தாயாரானவள், அதுபோயிற்றது, இதுபோயிற்றது என்று அவன் திருநாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டு இவள்தானும் மோஹித்தாள்; திருநாமப் பிரசங்கத்தாலே பெண்பிள்ளை உணர்ந்து எழுந்திருந்து புறப்பட்டுத் திருக்கோளூர் ஏறப் போனாள்; திருத்தாயாரும் வாசனையாலே உணர்ந்து படுக்கையைப் பார்த்தாள்; வெறும்படுக்கையாய்க் கிடந்தது; இனி, இவள் என் வயிற்றிற் பிறப்பாலும் தன் பிரகிருதியாலும் இங்கிருந்த நாள் தேகயாத்திரை இருந்தபடியாலும் இவள் திருக்கோளூர் ஏறப் புறப்பட்டுப் போனாள் என்று அறுதி இடுகிறாள். வலயாதிகள் எல்லாம் இழந்தாளாகில் இவள் தன்னை நமக்கு இழக்கவேண்டாவிறே என்றிருந்தாள், கீழில் திருவாய்மொழியில்; இத்திருவாய்மொழியில் இவள் தன்னை இழந்தோம் என்று கூப்பிடுகிறாள்.

ஆளவந்தார் கோஷ்டியில், "உண்ணுஞ் சோற்"றில் பிராட்டிக்கோ, "கள்வன் கொல்"லிற் பிராட்டிக்கோ அஞ்ச வேண்டுவது? என்ன, இருந்த முதலிகள் இருவராய்ப் போனவர்களுக்கு வயிறு எறியவேணுமோ, தனிவழியே போனவர்க்கன்றோ? என்ன, அங்ஙன் அன்றுகாண்; இருவரும் இருவர்க்கும் ஊமத்தங்காய் ஆகையாலே கடித்ததும் ஊர்ந்ததும் அறியார்கள்; ஆதலால், இருவர்க்கும் அஞ்சவேணும். இவள் அங்கே புக்கல்லது தரியாள் ஆகையாலே இவளுக்கு அஞ்ச வேண்டா என்று அருளிச்செய்தார். "அள்ளல் அம் பூங்கழனி அணியாலி புகுவர் கொலோ" அன்றியே, இலங்காத்வாரத்

திலே புகுவாரோ என்றிறே அங்கே வயிறு பிடிக்கிறது. ஆனாலும் எங்கேனும் போகிலும் இருவராய் அல்லது இராது அங்கு. இங்கே தனியே போனவள் ஆகையாலே என்படுகிறாளோ என்று மிகவும் நொந்து கூப்பிடுகிறாள் இவளுடைய திருத்தாயார்.

"அற்ப சாரங்கள் அவை சுவைத்து அகன்று ஒழிந்தேன்" என்று பகவத் கோஷ்டிக்கு இனி ஆளாகமாட்டார் என்னும்படி சப்தாதி விஷயங்களிலே கைகழிந்த இவர், சம்சாரிகளுக்கு இனி ஆளாகமாட்டார் என்னும்படி "நாட்டாரோடு இயல்வொழிந்து", "கொள்ளமாளா வின்பவெள்ளத்"தைப் புஜிக்கக் கைகழிந்தபடி சொல்லுகிறது. நரகாவஹமான விஷயத்தைப் பற்றிப் பழிக்கு அஞ்சாதே பிறர் அறியாமே போகக்கடவ இவர் ஸ்வரூபாநுரூபமான விஷயத்தைப்பற்றிப் பிறர் அறியாமே போம்படியாய் விழுந்தது. 'என்னுடைமை புக்கவிடத்திலே நானும் புக்கல்லது நின்லேன்' என்கிறாள் திருத்தாயார் ;

"லக்ஷ்மணேன கதாம் கதிம்" "ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய", "புத்ரத்வய விஹீனம் தத்", "நல்லதோர் தாமரைப் பொய்கை" என்று இத்யாதிப்படியே தந் திருமாளிகை கிடக்கிறது. திருத்தாயாரும் இம்மாளிகையைப் பார்த்து வெறுத்து, 'போவதாகத் துணிந்தால் என்னையும் கூட்டிக்கொண்டு போனாலாகாதோ?' தனிவழியே போவதே! நான் கூடப் போகாவிட்டாலும் அவனுடனே கூடப்போகவும் பெறாதொழிவதே! இவள்தான் எங்ஙனே போகிறாளோ! நாடு அடங்க வாழ்வித்துக்கொண்டு போகிறாளோ! அங்கே புக்கால் என்படுகிறாளோ! வழியிலுள்ளார் என் சொல்லுகிறார்களோ! அவ்வூரில் சோலையும் நீர்நிலைகளையும் அவன் குணங்களையும் கண்டு உகக்கிறாளோ! கண்டு சிதிலையாகிறாளோ! இதெல்லாம் தான் அங்கே சென்று புக்காலன்றோ! என்றாற்போலே மநோரதித்துக்கொண்டு, தன்னைப் பார்த்தல் என்னைப் பார்த்தல் செய்யாதே, இத்தை யெல்லாம் கடலிலே கவிழ்த்துப் போவதே! என்று திருத்தாயார் இன்னாதாகிறாள்.

———o———

எட்டாந் திருவாய்மொழி (58)

"பொன்னுலகாளீரோ"

பிரவேச ஸங்கி :—கீழ்த் திருவாய்மொழி இரண்டும் மோஹமும் உணர்த்தியுமாய், இதில் தூதப்ரேஷணமாயிறே இருக்கிறது; மயர்வறமதிநலம் அருளப்பெற்ற இவர்க்கு 'மரணயார்த்த ஸம்பத்தி:' என்னும் மோஹம் இல்லையே; இனி, மோஹமாவது, பாஹ்ய பதார்த்தாநுஸந்தாந க்ஷமர் அன்றிக்கே, விஷயங்களில் நின்றும் மநஸ்ஸு நிவ்ருத்தமாய், அந்த: கரணத்துக்கு அவனே விஷயமாய் அவன் குணங்களையே அநுபவிக்கை: அதாவது, சரீரியானவனே ஞானத்துக்கு விஷயமாய்த் தன்னை மறக்கை.

"அஹம் மநுரபவம்" என்றும், "ஸர்வகத்வாதநந்தஸ்ய" என்றும் சொல்லுகிற நிலைபோலே மாலுக்கு வையத்திலே மோஹம். உணர்த்தியாவது "ப்ரஹ்லாதோஸ்மீதி ஸஸ்மார" என்கிற ஸ்ரீ பிரஹ்லாதனைப் போலே தம்மையும் உணர க்ஷமராய் ஜகத் விருத்தாந்தத்தையும் அநுசந்திக்க க்ஷமராகை. நிர்க்குணமான விஷயத்திலேயன்றே இவர் அவகாஹித்தது; குணாதிக விஷயத்திலேயிறே. அவன் குணங்களில் சேஷித்வத்தை அநுஸந்தித்தால் தத்பிரதி சம்பந்தியான தம்மையும் காணலாமாகையாலே "உண்ணுஞ் சோற்"றில் தம்மைக் கண்டார். "அஞ்சிறை"யில் என்னைப் பார்த்தானத்தனை, தன்னை மறந்தான் என்றார்; இத்தலையில் அபராதம் பாராதே, அத்தலையில் அபராத சஹத்வம் பற்றாசாக, அபராத சஹத்வம் பார்த்து வருவதென்று ஆள்விட்டாள்.

"வைகல் பூங்கழிவா"யில் இருவரையும் அவ்வூரில் போக்யதை மறக்கப் பண்ணிற்று; விசேஷஜ்ஞனாகையாலே ஆர்த்தியை அறிவிக்க வரும் என்று ஆர்த்தரக்ஷணம் பற்றாசாகத் தூதுவிட்டாள். இதில் அவன் வாராமைக்கு அடி பரப்பனாகையாலே என்று பார்த்தாள்; "தன்மன்னு நீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்' என்கிறபடியே அஸாதாரணமன்றிறே வடிவு; ஆச்ரிதரோடு ஏகரஸனாகையிறே என்று பார்த்து ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள் என்று பட்டர். பல

பாட்டுக்களிலும் "இதுவோ தக்கவாறு" என்கையாலே ஆந்ருசம்ஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள் என்று பிள்ளான்.

"ஸமா த்வாதச தத்ராஹம்" என்கிறபடியே பன்னிரண்டு ஆண்டு தண்ணீர்த் துரும்பறக் கலந்து பிரிந்த பிராட்டியைப் போலே, அங்கே புக்கு நெடுங்காலம் அவனை யநுபவித்துப் பிரிந்து தூதுவிடுகிறாள்; என்று பிள்ளான். புறப்பட்டவள் முடியப் போகமாட்டாதே நகர உபவனத்திலே கிடந்து தூதுவிடுகிறாள் என்று பட்டர். "ஜீவந்தீம்" இத்யாதி. பர பரிபவம் பொறாத குடியிலே பிறந்தவர்க்குத் தமக்கு வந்த அவத்யம் பரிஹரிக்கச் சொல்லவேண்டாவிறே, கடலை அணை செய்து இராவணாதிகளை நிரஸித்துத் தாம் வரக்கொள்ள, இத் தலை வெறுந்தறையாய்க் கிடவாமே செய்ய நினைத்தாராகில் ஏற்கவே பரிஹரித்துத் தம் புகழை நோக்கிக்கொள்ளச் சொல்லென்று சொன்னாளிறே; அப்படியே இவளும் தன் தசையை அறிவித்து விடுகிறாளாயிருக்கிறது.

———(o)———

ஒன்பதாந் திருவாய்மொழி (59)

— :: —

"நீராய் நிலனாய்"

ப்ரவேச ஸங்கதி:—"எங்குச் சென்றாகிலும் கண்டு" என்றும், "வானவர்கோனைக் கண்டு" என்றும் தூதுவிட்டார்; அவை போகமாட்டாதபடி தம்முடைய ஆர்த்தநாதத்தாலே அழித்தார்; "மரங்களும் இரங்கும்" என்று அசேதனங்கள் இரங்கா நின்றால் சிறிது சைதன்யமுடைய பக்ஷிகள் அழியச் சொல்லவேண்டாவிறே; "ஊற்றின்கண் நுண்மணல் போல் உருகா நிற்பர் நீராய்" என்றது தூதரை யொழிய அன்றிறே. தம் பரிசரத்தில் கால்நடை தந்துபோவார் இல்லையே; 'அசேதனங்களும்கூட அழிகிற இடத்தில் பரமசேதனனுக்குச் சொல்லவேண்டுமோ? என்று பார்த்து, தம்மிடற்றோசையை இட்டு அழைத்துக்கொள்ளப் பார்க்கிறார். இவ்வார்த்த த்வனி கிடக்க வேறொருவர் போகவேண்டும்படி இருந்ததோ? அவனைக் கலங்காப் பெருநகரத்திலும் தரிக்கவொண்ணாதபடி, திருக்குழலோசையாலே திருவாய்ப்பாடியில் பெண்கள் படும்

பாட்டை என் மிடற்றோசையாலே படுத்துகிறேன் என்று பெருமிடறு செய்து கூப்பிடுகிறார்.

இனித் தூது போவார்க்குக் காலாலேயாதல் சிறகாலே யாதல் போகவேண்டுகையாலே தடையுண்டு; இவர் மிடற்றோசைக்குத் தடை இல்லையிறே; இவர் படுகிற வியசனத்துக்கு ஹேது சொல்லப்போகாது; பிராட்டி சிறை இருந்ததுக்கு ஹேது சொல்லப் போகாதாப்போலே. பிராட்டி சிறையில் பட்ட வியஸனம்போலே இவர் வியஸனமும் பராநுக்ரஹத்துக்கு உடல். அவள் சிறையிருந்தபடியை ஸ்ரீ வால்மீகி பகவான் எழுதிலவத்து இன்று நாடெல்லாம் வாழுகிறாப்போலே இன்று இவர் தாம் வியஸனம் பட்டாரேயாகிலும் இவர் அருளிச்செய்த பிரபந்தம் லோகத்துக்குத் தண்ணீர்ப் பந்தலாயிற்று. இவர் இப்படிக் கூப்பிட, அவனும், 'வாரீர் நம்மை நீர் இங்ஙனே படுத்துகிறதென்? நாம் உம்மைக் கைவிட்டுத் தூரப் போனோமோ? ஏதேனும் ஒன்றைப் பற்றினாலும் அது நம்மைப் பற்றிற்று என்று சொல்லலாம்படியிருக்கிற ஜகதாகாரதையைக் காட்டினோமே' என்ன,

அதில் குறை என்? நீ ஜகத்சரீரனாய் இருக்கிற இந்த ஞானம் எனக்கு இல்லையோ? இந்த ஞானம் தானேயிறே 'அசாதாரண ஆகாரத்தையும் காணவேணும்' என்னப் பண்ணுகிறது; எனக்குப் பிராப்யமானது கிடக்க, அல்லாதவற்றைக் காட்டினால் அப்ரயோஜனம் என்கிறார். அதுவும் உன் ஐச்வர்யத்துக்கு புறம்பு அல்லாமையாலே வேணுமாகில் பிரதிபத்தி பண்ணுகிறேன்; அத்தால் பெற்றது உன்னதானவற்றை 'என்னது' என்கிற பிரமம் நிவ்ருத்தமாகிறது. அது தானேயிறே அஸாதாரணாகாரத்தையும் காணவேணுமென்று பண்ணுகிறது. அர்ஜுனனும் விச்வரூபம் கண்டவநந்தரத்தில் 'தேநைவரூபேண' என்று அஸாதாரண ஆகாரத்தைக் காண வேணும் என்றாற்போலே இங்கும் அஸாதாரண ஆகாரத்தைக் காணவேணும் என்கிறார். இவருடைய ஆர்த்தநாதம்தான் அவனுக்கு உபய விபூதியிலும் குடியிருப்பு அரிதாய்க் காணும் இருக்கிறது.

—— :: ——

பத்தாந் திருவாய்மொழி (60)

"உலகம் உண்ட பெருவாயா"

பிரவேச சங்கி :—பெரிய ஆர்த்தியோடே பரமபதத்திலே கேட்கும்படி கூப்பிடச் செய்தேயும் சர்வரக்ஷகனானவன் வந்து முகம் காட்டாமையாலே மிகவும் அவசந்நரானவர், ஸ்ரீய:பதியாய் அவாப்தசமஸ்தகாமனாய் உபயவிபூதியுக்தனாய் சமஸ்தகல்யாண குணாத்மகனாய் "வைகுண்டேது" என்கிற படியே ஸ்ரீ வைகுண்டத்திலே நித்தியசூரிகளுக்குக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிற சர்வேச்வரன், 'பலரும் நம்மை இழக்க, நாம் நெடுங்கை நீட்டாக இருக்க ஒண்ணாது' என்று பார்த்தருளி ராமகிருஷ்ணாதி அவதாரங்களைப் பண்ணிச் சம காலத்தில் உள்ளார்க்குத் தன் குணசேஷ்டிதங்களைக் காட்டி அநுபவிப்பித்தும், அக்காலத்திலும் பிற்பாடரான சம்சாரி களுக்கும் இழக்கவேண்டாதபடி ருசிஜனகனாய்க் கொண்டு திருமலையிலே நாய்ச்சிமாருடனே கூடி நின்றருளினபடியைக் கண்டு, அதிகாரிநியதி, காலநியதி, அங்கநியதி என்றாற் போலே சொல்லுகிற நிர்ப்பந்தங்கள் ஒன்றும் இன்றிக்கே ஆஶ்ரயிக்கலாம்படி இருக்கிற சௌசீல்யத்தைக் கண்டு, திரு வேங்கடமுடையான் திருவடிகளிலே, பெரிய பிராட்டியார் முன்னிலையாகத் தம்முடைய அநந்யகதித்வத்தை விண்ணப் பம் செய்து சரணம்புக்குத் தம்முடைய அத்யவசாயத்தை அறிவிக்கிறார்.

கீழில் திருவாய்மொழியில் பிராப்யவேஷம் இருக்கும்படி குறைவறச் சொன்னார்; இதில் பிராபகவேஷம் குறைவறச் சொல்லுகிறது. இரண்டிலும் இரண்டும் உண்டானாலும் பிரா தான்யத்தைப் பற்றச் சொல்லுகிறது. கீழில் திருவாய்மொழி திருமந்த்ரம் போலே; இது சரமச்லோகம் போலே. இரண்டும் ஒன்றிலே உண்டிறே என்னில்? அது பிராப்யமே பிராபக மாக்க வல்ல சக்தியோகத்தாலே இரண்டும் ஏக வஸ்துவிலே உண்டானாலும் வரணதசை பிராப்திதசை ஆகிற அவஸ்த்தா பேதத்தைப் பற்றி வரும் இரண்டும் இரண்டாயே இருக்கக் கடவது. கீழ், பலவிடங்களிலும் பிரபத்திபண்ணினார்; அவ் விடங்களிலே 'தர்மிபுக்க இடத்திலே நிருபக தர்மம் புகக் கடவது' என்கிற நியாயத்திலே லக்ஷ்மீசம்பந்தம் சொன்னார்; இங்கே அது தன்னையே வாய்விடுகிறார்.

கீழில் பிரபத்திகள் திருமந்த்ரம் போலே; இது துவயம் போலே. திருமந்திரத்திலும் லக்ஷ்மீ சம்பந்தத்துக்கு வாசக மான சப்தங்கள் உண்டாயிருக்கச்செய்தே, முக்தகண்டமாகச் சொல்லிற்று துவயத்திலேயிறே; அதுபோலே இத்திருவாய் மொழி. "தாவதார்த்தி:".

இப்படிப்பட்ட சரணாகதி பலப் பிரதையாமிடத்தில் சரண்யன் பக்கலிலேயாகவேணும். தான் அதிகாரியாகவேணும். வியதிரிக்த விஷயங்களில் (பரசுராமன்) பண்ணுமிடத்தில் அது தானே ஹேதுவாகக் காணா நின்றோமிறே. "பாலா நாம் மமபுத்ராணும் அபயம்." இங்ஙனே இருக்கச்செய்தே அவ்வோ இடங்களிலேயும் (சிபி கபோதாதிகள்) பலிக்கிற இது இவ்விஷயத்தில் பலிக்கும் என்னுமிடம் கிரும்புநர் நியாய ஸித்தம்.

இனித்தான் அதிகாரியாமிடத்தில் மெய்யே அதிகாரியாக வேணும்; சரணம்புகா, பலித்ததில்லையென்ன, "அஸமர்த்தம் விஜாநாதி' என்பார் ஆகாது. "மயர்வற மதிநலமருளினன்" என்ன, அநந்தரத்திலே கிருபையை உபாயமாக அத்யவஸித்து மடலெடுத்துக் கொண்டு புறப்படுவார் வேணும். பண்ணின பிரபத்திக்குப் பலம் தாழ்த்தது என்ன, வேறே போக்கடி யுடையார்க்குக் காரியமாகாதிறே. 'ஸாகரம் சோஷயிஷ்யாமி' என்று அவன் தாழ்த்ததுவே ஹேதுவாக ஜலதத்துவத்தை யழித்து மற்ற நாலையுங்கொண்டு கார்யம் கொள்ளுகிறோம் என்றாரிறே. "க்ஷமயாஹி". ஒன்பது பாட்டாலும் சரண்யன் படி சொல்லிப் பத்தாம் பாட்டில் சரணம் புகுகிறார்.

——::——

ஏழாம் பத்து

முதல் திருவாய்மொழி (61)

" உண்ணிலாவிய "

பிரவேச சங்கி :—விளம்ப ஹேதுவில்லாத சாதனத்தைப் பரிக்ரஹித்தவன் அது பலபிரதமாந்தனையும் கூப்பிடுமத்தனையிறே. [illegible] பண்ணுகைக்கு வேண்டுவது சம்ஸாரத்தி[illegible] நெஞ்சில் படுகையும், அத்தலையில் வைலக்ஷண்ய ஜ்ஞாநமும், ப்ரபத்தி பண்ணுகைக்கும் மேல் பட[illegible]ல்லையிறே. ஸம்ஸார ஸ்வபாவத்தை அநுஸந்தித்துப் போக்கடி யற்று அவ்வடியைச் சரணம் புக்கவிடத்திலும் 'மாமேவ' என்கிறபடியே தம் அபேக்ஷிதம் கிடையாமையாலே, சரணம்புக்கார் மேலே வேல்காரரை ஏவி ஹிம்ஸிக்கும் ந்ருசம்ஸரோபாதி அவனை நினைத்து, விஷயங்களும் இந்திரியங்களும் நடமாடுகிற சம்ஸாரத்திலே வைத்தபோதே இவற்றுக்கு நம்மை இரையாக்கிப் பொகட நினைத்தானித்தனை.

கொடுத்த அறிவும் கலங்குகைக்குடலாகையாலே 'ததாமி' என்கை தவிர்ந்து, 'க்ஷிபாமி' என்கிற கோடியிலே புக்கோம்; இனி அவன் பரிகரம் கண்டதும் நம்மை அகற்றுகைக்கு உறுப்பாக; அதில், நித்யவிபூதியில் ஓலக்கமிருக்கிறது, நாம் படுகிற நலிவுகண்டு அங்குள்ளாரோடு சிரித்திருக்கைக்கு; லீலா விபூதி நமக்குச் சிறைக்கூடமாக; மதிநல மருளிற்று அல்லாதாரைப் போலே இராமே துடித்து நோவுபடுகைக்கு என்று அறுதியிட்டு, பீதராய், வைப்பனுக வைத்த பிரம்ஹாஸ்த்ரமும் வாய் மடிந்தது என்று கூப்பிடுகிருர். தம் சக்தி கொண்டு பெற இருந்தார் அல்லர்; அவன் அசக்தனுய் இழக்கிருர் அல்லர்; பேற்றுக்கு வேண்டுவது முன்பே செய்து நின்ருர்; இப்படியிருக்கப் பலியாது ஒழிவான் என்? என்னில், 'இவர் குறையாலே வைக்கிலிறே பலித்தது இல்லையாவது; தமக்காக இருக்கிறபின்பு இவர் இங்கே இருந்தால் நல்லது' என்று அவனும் இவரைக் கொண்டு ஒரு காரியம் கொள்ளவிறே எண்ணியிருக்கிறது; அதுவும் ஒழிய, இவருடைய சரமதேஹமாகையாலே இவர் பிரபத்தி பண்ணின இடத்திலும், இவர்

திருமேனியில் தனக்கு உண்டான ப்ராவண்யத்தாலே கார்யம் செய்திலன். ஆகையிறே, "மங்கவொட்டு" என்று அவனைக் கால் கட்டிற்றும். மெய்யான ப்ரேமம் உண்டானால் இங்ஙனல்லதிராதே. இது ப்ரக்ருதியாயிற்றே அவனுக்கு; அவன் தம்மையிட்டுக் கொள்ள இருக்கிற கார்யத்தை இதில் பொருந்துவாரை (திருமழிசைப்பிரான்) இட்டுக் கொண்டாலாகாதோ என்றாயிற்று இவர் நினைத்திருக்கிறது. பண்ணிக்கொடுத்த ஞானலாபம் தரிக்கைக்கு உடல் என்றிருந்தான் அவன்; அதுதானே துவரிக்கைக்கு உடலாயிற்று இவர்க்கு.

க்ரமத்திலே கார்யம் செய்கிறோம் என்றிருந்தான் அவன்; அது தன்னையே கொண்டு நம்மைக் கைவிட நினைத்தான் என்றிருக்கிறார் இவர். நித்யவிபூதியையும் திவ்யமங்கள விக்ரஹத்தையும் ஸாக்ஷாத்கரித்து 'அங்கே போய் அப்படியே அநுபவிக்கவேணும்' என்னும் பதற்றத்தையுடைய இவர்க்கு, 'ஸம்ஸாரம் ததீயமாய் இருப்பதும் ஓர் ஆகாரமுண்டு' என்னும் ததீயத்வஜ்ஞான மாத்ரத்தாலே இங்கே தரித்திருக்கப் போகாதிறே. "யானும் நீ தானாய்த் தெளிதொறும் நன்று மஞ்சுவன் நரகம் நான் அடைதல்" என்றிறே இருப்பது.

"மின்னிடை மடவாரி"ல் ஒரு பிராட்டி தசையைப் ப்ராப்தராய் ப்ரணயரோஷம் தலையெடுத்துச் சொன்னதெல்லாம் பிறர் வாயாலே சொன்னாற்போலே இருக்கையாலே, இதில் தாமான தன்மையிலே நின்று இன்னதாம்படியான தசை பிறந்தது இவர்க்கு. இவர் எல்லாவளவிலும் ஸ்ரீ ஜனகராஜன் திருமகளோடு ஒப்பார் ஒருவராயிற்று. அதாகிறது, ஸ்ரீ ஜநகராஜன் திருமகளைப் போலே அத்தலைக்கு ஒரு குறை சொல்லுவார் அன்றிக்கே, "இவற்றுக்கு அடி நம்முடைய பாபம்" என்றிருப்பார் ஒருவரிறே.

இங்ஙனே இருக்கக்கடவ இவர் அவன் தலையிலே குறையை ஏறிட்டுக் கூப்பிடுகிறாரிறே. இவர் தாம் தம்மால் வந்ததை அவன் தலையிலே ஏறிடுவான் என்? என்னில், ப்ராப்தியை யுணர்ந்தால் இத் தலையாலே வந்தத்தையும் அவன் பக்கலிலே ஏறிடலாயிருக்குமிறே. ப்ரஜை கிணற்றிலே விழுந்தால் 'தாயே தள்ளினாள்' என்னக்கடவதாயிருக்கும்; அதுக்கு அடி, "தாய் கண்ணிலே வெண்ணெயிட்டுப் பார்த்திருந்தாளாகில் இது விழுமோ? இவள் நோக்காமையிறே இது அந்தரப்

பட்டது" என்று கொண்டு அவள் தலையிலே குறை சொல்லக் கடவதாயிருக்கும்.

உதங்கன் கிருஷ்ணன் பக்கலிலே சென்று, 'உனக்கு இரண்டு திறத்தாரோடும் சம்பந்த மொத்திருக்கச் செய்தே பாண்டவர்களை அழியச்செய்யாதே துர்யோதனாதிகளை அழியச் செய்தாய்? இப்படிச் சார்வு செய்யப்போமோ!' என்றாற் போலே சொல்ல, கிருஷ்ணனும் அவர்கள் குறைகளெல்லாம் சொல்லி, அவர்களுக்குத் தர்மருசி இல்லைகாண் என்ன, 'நீ அவர்களுக்கு தர்மருசி யுண்டாக்கிக் கொடாதொழிவான் என்?' என்றானிறே.

"பல நீ காட்டிப் படுப்பாயோ", "இன்னங் கெடுப்பாயோ" என்று இவற்றின் சந்நிதியும் அசஹ்யமாம்படியாய், இனித்தாம் இவர் அறியாதே பகவத்விஷயத்தில் பிரவண மான "முடியானே" யில் கரணங்களையுடைய இவர்க்கு இந்திரியவச்யதை உண்டு என்கை கீழோடு விருத்தம் அன்றோ? என்னில், - அசல் அகம் நெருப்புப் பட்டு வேவா நின்றால் தம் தாம் அகம் பரிஹரியாதிருப்பா ரில்லையிறே; புற்றினருகே பழுதை கிடந்தாலும் சர்ப்பம் என்று பிரமிக்கக் கடவதா யிருக்குமிறே. அங்குத்தைக்கும் இங்குத்தைக்கும் பொது வான உடம்போடே இருக்கிறபடியையும் கண்டார்; நாட்டார் அடைய இந்திரியவச்யராய் நோவுபடுகிற படியையும் கண்டார்; இது நம்மளவும் வரில் செய்வது என்? என்று அஞ்சிக் கூப் பிடுகிறார். 'சாகா ம்ருகா:, ப்ரியம்ஜநமபச்யந்தீம், ராக்ஷஸை: வத்யமாநா நாம் " இத்யாதி - முதலிகளடங்கலும் ராக்ஷசர் வாயிலே கிடந்து பெருமாளைச் சரணம் புக்காற்போலே மனம் ஆளும் ஓரைவரான இந்திரியங்களுக்குப் பயப் பட்டுக் கூப் பிடுகிறார். **பிள்ளை திருநறையூரரையர்** - இப் பாட்டுக்களில் பூர்வார்த்தமடைய புலியின்வாயிலே அகப்பட்ட பிரஜை தாய் முகத்திலே விழித்துக் கொண்டு புலியின் வாயிலே கிடந்து நோவுபடுமா போலே இருக்கிறது என்று பணிப்பர்.

இரண்டாந் திருவாய்மொழி (62)

"கங்குலும் பகலும்"

பிரவேச சங்கி :—"உலகமுண்ட பெருவாய" னிலே "புக லொன்றில்லா வடியேன்" என்று பிரணவார்த்தம். "உண்ணி

லாவிய" வில் "தொண்டர் தொண்ட" ரென்று நமச் சப்தார்த்தம். "கங்குலும் பக" லில் கைங்கர்ய ஹேதுவான பிராவண்யத்தைச் சொல்லுகையாலே நாராயண பதார்த்தம் சொல்லுகிறது. திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம் புக்கார் "உலகமுண்ட பெருவாய" னில். இந்திரியங்களும் விஷயங்களும் நடமாடுகிற சம்சாரத்திலே வைத்து நம்மையகற்றப் பார்த்தான் என்று கூப்பிட்டார் "உண்ணிலாவிய"லில். வியபிசாரமும் வியவதானமும் இன்றிக்கே யிருக்கிற சாதனத்தைப் பரிக்ரஹித்தும் சம்சாரத்தினுடைய தோஷத்தையும் எம்பெருமானுடைய குணோத்கர்ஷத்தையும் அநுசந்தித்து ஆறியிருக்கப் போகாதிறே. இப்படிக் கண்ணழிவற்றது பின்னையும் பலியாதொழிவான் என்? என்னில், அது பலியா நிற்க, கிரமப்ராப்தி பற்றாமை படுகிறாரித்தனை சர்வஜ்ஞனை ஈச்வரன் இவர்க்கு ஓடுகிற தசையை யறிந்து தன்னுடைய சர்வ சக்தித்வம் கொண்டு பரிஹாரம் பண்ணவொண்ணாதபடி இவருடைய மார்த்தவம் இருக்கிறபடி.

பிராட்டியைப் போலே 'தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்' என்று இருக்கமாட்டார், ருசியளவுபடாமையாலே. பகவத் விஷயம் அறியாத சம்ஸாரிகளுக்குக் கூட்டு அல்லர்; விச்லேஷம் அறியாத நித்யஸூரிகளும் இவர்க்குக் கூட்டு அல்லர்; அலாபத்தில் நோவுபடுகைக்கு இவர் ஒருவருமே உளர். பட்டர் இத் திருவாய்மொழி அருளிச்செய்யும் போதெல்லாம், 'ஆழ்வார்க்கு ஓடுகிற தசை அறியாதே அவர் பாவ விருத்தியுமின்றிக்கே யிருக்கிற நாம் என் சொல்லுகிறோம் என்று திருமுடியிலே கைவைத்துக் கொண்டிருப்பர்.

அவனும், 'இவர் நமக்கே பரம் என்னுமிடம் அறிவித்தாராகில், நாமும் இவர் காரியம் செய்யக்கடவதாக அற்றபின்பு செய்து தலைக் கட்டிற்றன்றோ? இவர் அங்குப்போய் அனுபவிக்கிற அநுபவம் இங்கு இருந்தே அநுபவியாநின்றாராகில் 'விரோதி போயிற்றில்லையே' என்று இவர் பண்ணுகிற அதிசங்கையையும் போக்குகிறோம், நாலுநாள் முற்பாடு பிற்பாடன்றோ, இதில் காரியம் என்?' என்றிருந்தான். பிற்பாடு பொறுக்கமாட்டாத இவரை வைக்கப்போருமோ? என்னில், பிரஜைகளைப் பட்டினிவிட்டும் வந்த விருந்தினரைப் பேணுவாரைப் போலே "இவர் நாலுநாள் நோவுபட்டாராகில் படு

கிறார்; இவர் பிரபந்தத்தைக் கொண்டு நாட்டை வாழ்விப் போம்" என்றிருந்தான்.

இவர் ஒரு முஹூர்த்தம் இருக்கை யாவது தன்னாலும் திருந்தாத சம்ஸாரம் திருந்தி வாழும்படியாய் இருந்தது என்ற துக்காக வைத்தான் அவன்; 'இவர், நம்படியறிந்தானல் சக்தி யில் குறையில்லையாகில் இது பொருந்தாத நம்மைக்கொண்டு காரியம் கொள்ளவேணுமோ? இவ் விருப்பில் பொருந்துவார் ஒருவரைத் திருத்திக் காரியம் கொள்ளத் தட்டு என்? என்றிருந் தார். அவனும் 'அது பொருந்தாதாரையே கொண்டு காரியம் கொள்ளவேணும்' என்றிருந்தான். தேசிகரை இட்டுக் காரி யம் கொள்ள வேணுமே. பண்ணின பிரபத்தி சடக்கெனப் பலியாதொழிந்தது, பிரஹ்மாஸ்திரம் வாய் மடிந்த மாத்ரமிறே.

இனித் தான், ஸ்ரீ பரதாழ்வான் மாதுல குலத்தில் நின் றும் வந்து தாயாரை நமஸ்கரிக்க, அவள் 'ராஜந்' என்ற வெம்மை பொறுக்கமாட்டாமைப் பெருமாள் திருவடிகளிலே தன்னுற்றாமை தோற்ற சரணம்புக்குத் தேவர் எழுந்தருள வேணும் என்ன, பெருமாளும் மீளாமைக்கு அநேக ஹேதுக் களைச் சொல்லி, 'பிள்ளாய்! நீ நிர்பந்திக்கக் கடவையல்லை; உன்னை ஸ்வதந்த்ரனுக்கி வார்த்தை சொன்னார் எதிரே, உன் ஸ்வரூபாநுரூபமான பாரதந்த்ர்யத்தைப் பெற்று நீ போ' என்றாற் போலே, இவர் அபேக்ஷித்த தொழிய ஏதேனு மொன்றைக் கொடுத்துப் பொகட்டுப் போக வல்லான் ஒரு ஸ்வதந்த்ரனிறே அவன்.

இவர் தாம் "விண்ணுளார் பெருமானேயோ" என்றும், "முன்பரவை கடைந்து அமுதம் கொண்ட மூர்த்தியோ" என் றும், "பல முதல் படைத்தாய்" என்றும் சொல்லுகிறபடியே பரத்வம் அவதாரம் ஜகத்காரணத்வம் இவற்றைச் சொல்லி யிறே கூப்பிட்டது; அதில் பரத்வம் தேசகால விப்ரகர்ஷ மாகையாலே 'கிட்டப் பெற்றிலோம்' என்று ஆறியிருக்க லாம்; அவதாரம் காலாந்தரமாகையாலே, 'அக் காலத்திலே உதவப் பெற்றிலோம்' என்று ஆறியிருக்கலாம். ஜகத் காரணத்வம் தான் அறிந்து செய்யுமதாகையாலே 'நம்மால் செய்யலாவதில்லை' என்று கொண்டு ஆறியிருக்கலாம்; இவ் விழவுகளெல்லாம் தீரும்படி சதா சந்நிதி பண்ணிக்கொண்டு கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாள் திருவடி

களிலே விழுந்து தம் அபேக்ஷிதம் பெறுவிட்டால் தரிக்கப் போகாதிறே.

விஷயம் அஸந்நிஹிதமாதல், ஜ்ஞானத்திலே கொத்தை யுண்டாதல் செய்யிலிறே தரிக்கலாவது: நீர்மையில் கண்ணழிவு உண்டாயாதல், மேன்மையில் கண்ணழிவுண்டாயாதல் இழக்கிறார் அன்றே. எம்பெருமானிவ+ னார்.

எல்லாவளவிலும் அவனையே பரிஹாரம் கேட்கும் குடியிறே இது. ஆண்டாள் ஒரு நாள் ஆழ்வானுக்கு, "பிள்ளைகள் விவாஹ பிராப்தரானார்கள்; இவ் விடையாட்டம் ஒன்றும் ஆராயாதிருக்கிறதென்?" என்ன, "பகவத் குடும்பத்துக்கு இன்றிருந்து என்னைக் கரையச் சொல்லுகிறாயோ? நாளை நான் வாசித்துச் சமையக் கொள்ள அங்கே வரக் காட்டு" என்ன, பின்பு பட்டரையும் சீராமப் பிள்ளையையும் கொடுத்துப் போகவிட, வாசித்துச் சமைந்து பெருமாள் திருவடிகளிலே நிற்க, ஒன்று சொல்லுவாய்போலே இருந்தாயீ! என்று பெருமாள் திருவுள்ளமாக, இவர்கள் விவாஹப் பிராப்தரானார்கள் என்று நின்றார்கள் என்று விண்ணப்பம் செய்ய, 'எல்லாம் செய்கிறோம்' என்று திருவுள்ளமானார்; பிற்றை நாளே மன்னியைக் கொடுவந்து கொடுத்தார்கள்.

அகளங்க பிரம்ஹராயர் அடைய வளைந்தான் செய்யா நிற்க மதிள் போக்குகைக்காக இளையாழ்வான் அகத்தை வாங்கப்புக, பட்டர் இத்தைக் கேட்டருளி, "வாரீர் பிள்ளாய்! நீர் செய்கிற மதிள் பெருமாளுக்கு ரக்ஷகமென்றிராதேகொள்ளீர்; இங்குக் கிடக்கிற நாலு குடியுங்காணும் பெருமாளுக்கு ரக்ஷை; ஆன பின்பு, நீர் செய்கிறவை யெல்லாம் அழகிது; இவை யெல்லாம் நாம் செய்கிறோம் என்றிராதே, பெருமாள் செய்விக்கிறார் என்று இரும் உமக்கு நல்வழி போக உடலாங்காணும்" என்றருளிச்செய்தார்.

திருந்தாயாரும் சர்வ பரங்களையும் அவர் தலையிலே பொகட்டு, அவருடைய அஶரண்ய சரண்யத்வாதி குணங்களை விண்ணப்பம் செய்யா நின்று கொண்டு, ஒரு கால நியதியாதல், ஒரு தேச நியதியாதல், அதிகாரி நியதியாதல் இன்றிக்கே சர்வ சமாஶ்ரயணீயராய் இருக்கிறபடியை அநுசந்தித்து, தன் பெண் பிள்ளையினுடைய தசையைத் திருவுள்ளத்திலே படுத்துகிறாள் இத்திருவாய்மொழியில்.

மூன்றுந் திருவாய்மொழி (63)

— (ο) —

"வெள்ளைச் சுரிசங்கு"

பிரவேச சங்கி :— இப்படி அவசந்நரான இவர் விடாய்க்கு ஈடாம்படி அணித்தாகத் தென் திருப்பேரையிலே வீற்றிருந்த மகர நெடுங் குழைக்காதனுடைய அபேக்ஷாதாதிகளிலே அபஹ்ருத சிந்தையாய், 'அவன் இருந்த இடத்து ஏறப்போக வேணும்' என்று ஒருப்பட, பழையபடியே தோழிமாரும் தாய்மாரும் அவளைச் சூழப் போந்து 'உனக்கு இத்தனை அதி மாத்ரபிராவண்யம் ஆகாது; நமக்கு இது பழியாய் விளையும்' என்ன, "நீங்கள் சொல்லுகிறவற்றால் பிரயோஜனம் உண்டாக மாட்டாது; நான் அவன் பக்கலிலே அபஹ்ருத சிந்தையானேன்; ஆன பின்பு, நானே போனேனாகாமே நீங்கள் என்னோடு உடன்பட்டு அங்கே கொடுபோய்ச் சேர்க்கப் பாருங்கோள்" என்று தனக்குப் பிறந்த துணிவை அவர்களுக்கு அறிவித்துச் சொல்லுகிறதாய் இருக்கிறது.

பிள்ளான் :— "முகில் வண்ணன் அடியே - இவள் அணுகி அடைந்தனள்" என்கிறதாகையாலே "ஸமா த்வாதச தத்ராஹம்" என்கிறபடியே பெரிய பெருமாளோடே சிரகாலம் உந்மஸ்தக ரஸமான சம்ச்லேஷம் பிரவ்ருத்தமாய், இனி, பிரிந்து கூடாவிடில் இரண்டு தலைக்கும் அழிவு வருமளவாக, இனி எல்லாவளவிலும் ஒரு நீராகக் கலக்கிறது தர்மி இரண்டும் கூடியிறே; ஆகையாலே, பிரியாவிடில் தர்மிலோப பரியந்தமாகப் புக, இவ்வளவில் நாயகன் இரண்டு தலையும் ஜீவிக்கப் பார்ப்பான் ஒருவனாகையாலே பிரிவைப் பிரசங்கிக்க, இவளும் விச்லேஷத்தில் வாசனை இல்லாதவளாகையாலே 'கலவியிலே ஒரு வகையோ' என்று இவள் அநுமதி பண்ண, அவனும் வேட்டை நிமித்தமாகப் புறப்பட, இவளும் திருவணுக்கன் திருவாசல் அளவும் வந்து மீள, எல்லாவளவிலும் பிரிவு தன் காரியம் செய்தன்றி நில்லாதிறே; அநந்தரம் இவள் நோவுபடப் புக, இத்தைக் கண்ட தோழிமாரும் தாய்மாரும் உனக்கு ஓடுகிறது என்? என்று கேட்க, 'ஸ்ரீ ஜனகராஜன் திருமகள் காட்டிலே கூடப்போய் அவன் நின்ற இடம் உலாவின இடங்கள் தோறும் கூட இருந்து அனுபவித்தாற்போலே நானும் அவன் இருந்த இடத்தே போய்ப் புக்கல்லது நில்லேன்'

என்ன, 'உனக்கு இது தலைமைக்குப் போராது, நீ சொல்லு கிறவை வார்த்தை அன்று' என்ன, அவர்களை 'நீங்கள் நிரோதியாதே கொடுபோய் விடுங்கோள், இல்லையாகில் நானே யாகிலும் போகை தவிரேன் என்கிறாள்' என்று.

நமக்கு சப்தாதி விஷயங்களினின்றும் இந்திரியங்களை மீட்க ஒண்ணாதாப்போலேயிறே, இவரைப் பகவத் விஷயத்தி னின்றும் மீட்க ஒண்ணாதபடி. அது கர்மமடியாக வருகிறது; இது பகவத் பிரசாதம் அடியாக வருகிறது. திருத்தாயார் பேச்சாய் வருகிறவை ஆழ்வார்க்குப் பிறந்த தசாவிசேஷம்; தலைமகளாய்ப் பேசுகிறதும் இவர்க்குப் பிறந்ததோர் அவஸ்தா விசேஷம்; அதில் நிஷேதிக்கிற திருத்தாயார் முகத்தாற் சொல்லுகிறது, ஸ்வரூபமான பிராவண்யத்திலே உபாயம் சேரின் செய்வது என்? என்னுமதுக்குச் சொல்லுகிறது; பெண்பிள்ளை கருத்தாற் சொல்லுகிறது, உபாயம் அவனே யாகில் பிராவண்யம் ஸ்வரூபமாமித்தனையன்றோ என்று. ஆக, இவ்விரண்டு அர்த்தத்தையும் இரண்டு முகத்தாலே ஆழ்வார் தாம் அநுசந்தித்தபடியைச் சொல்லுகிறது.

———0———

நான்காந் திருவாய்மொழி (64)

——:——

"ஆழி எழ"

பிரவேச சங்கி:—கீழ் இவர்க்குப் பிறந்த அவஸாதம் ஒன்றுகொடுத்து மாற்றுதல், ஒருவரால் பரிஹரித்தல் செய்யும தொன்றன்றிறே; "இனி இவர்க்குச் செய்யலாவது என்?" என்று பார்த்தருளி ஒன்று கொடுக்கலாவது இதுக்குமேல் இல்லையிறே என்று பார்த்து, கீழ் இவர்க்குப் பிறந்த வியசனம் தீர, எம்பெருமான் தன்னுடைய விஜய பரம்பரைகளைப் பத்தும் பத்தாகக் காட்டிக்கொடுக்கக் கண்டு அநுபவித்து ஹ்ருஷ்டராகிறார்.

அவனுக்குறுப்பாமன்று தாமும் வேண்டி, அவனுக்கு உறுப்பாகாதவன்று தாமும் வேண்டா என்றிருக்கும் "வள வேழுலகில்" ஆழ்வாரிறே; இவர்தாம் தம்மை அழியமாறியும் அத்தலைக்கு நன்மை தேடுமவரிறே! இப்படி இவர் பிரக்ருதி

அறியுமவனுகையாலே தன்னுடைய விஜயங்களைக்காட்டி இவருடைய இழவெல்லாம் தீரும்படி சமாதானம் பண்ண, அநுபவித்துத் தலைக்கட்டுகிருர்.

பூதகாலத்தில் உள்ளவை அடங்கலும் சமகாலத்திற்போலே ப்ரத்யக்ஷ விஷயமாம்படி பண்ணிக்கொடுத்தான்; அடியிலே இவர்தாம் சாக்ஷாத்கரிக்க வல்லராம்படி பண்ணிக்கொடுத்தானிறே. மயர்வற மதிநலம் அருளினபின்பும் இவ்வளவும் வர வாசனை பண்ணுவித்தானே; ஆகையால், இவர்க்கு ஒரு குறையும் இல்லையே. "அஹம்புந:", "என் பெண்மை தோற்றேன்" என்று இத்தலையில் தோல்விக்கு எதிர்த்தலையான அத்தலையில் விஜயங்களை அநுசந்திக்கிருர் என்று **பிள்ளை திருநறையூரரையர்.**

———o———

ஐந்தாந் திருவாய்மொழி (65)

— :: —

"கற்பார் இராமபிரானை"

பிரவேச சங்கி :—கீழ் எம்பெருமானுடைய விஜயங்களை அநுஸந்தித்தார். அவைதாம் ஆச்ரிதார்த்தமாயிறே யிருப்பது. "அவன் தன்னை இவர்களுக்கு ஆக்கிவைக்க, இவர்கள் பாஹ்யவிஷயங்களிலே அந்யபரராவதே" என்று ஆச்சர்யப்படுகிருர். "யஸ்ஸாஸ்மி" என்று இவன் சத்தையே பிடித்து அவனுக்காயிருக்க, அவன் தன் உத்பத்தியே பிடித்து இவனுக்கு ஆக்கிவைக்கிருனிறே.

ரக்ஷணத்துக்கு ஏகாந்தமான ஜன்மங்களிலே வந்து பிறந்தபடியையும் தன் ஸ்வரூபாதிகளைப் பிறர்க்கு ஆக்கினபடியையும் அதுக்கு அடியான கிருபாதி குணங்களைத் தனக்கு வடிவாகவுடையனு யிருக்கிறபடியையும் கிருபாகாரியமான செயல்களையும் அநுஸந்தித்து, 'அபவரகே ஹிரண்ய நிதிம் நிதாய உபரி ஸஞ்சரந்தோ யதா நத்ரக்ஷ்யந்தி" என்கிற படியே ஹிரண்யநிதி புதைத்துக் கிடக்க அத்தை அறியாதே புறங்கால் வீங்குவாரைப்போலே இச்சம்பத்துத் தங்களுக்காய் இருக்க இச் சம்சாரிகள் புறம்பே போது போக்குவதே! என்று ஆச்சர்யப்படுகிருர்.

ஆழ்வான் ஒருகால், இத்திருவாய்மொழி யடங்கலும் இராமாவதார விஷயமாக நிர்வஹித்தாராம். அதுக்கு அடி, ஆயிரத்தில் ஒன்றும், கடலில் குளப்படியும்போலே பெருமாளுடைய குணத்தில் ஏகதேசமிறே அல்லாத அவதாரங்கள் எல்லாவற்றிலும் என்று. "பேரெயில் சூழ்கடல் தென்னிலங்கை செற்றபிரான்" என்றும், மாறுநிறைத்திரைக்கும் சரங்கள்" என்றும் கீழ் பிரஸ்துதமான இராம விருத்தாந்தத்தை அநுசந்தித்து, அவ்வழியாலேயிறே அவதாரங்களை அநுசந்திக்கிறது. அல்லாத அவதாரங்களில் பிரவணரானவர்களும் இராமாவதாரம் பிராசங்கிகமாகப் பிரஸ்துதமானவாறே "மனத்துக்கினியானை" என்றிறே சொல்லுவது.

பட்டர் இராமாவதாரத்திலே போர பக்ஷபதித்திருப்பர் என்று, அவர் அருளிச்செய்யுமது கேட்கைக்காகச் **சிறியாத்தான்**, பெருமாளுக்கு எல்லா நன்மைகளும் உண்டேயாகிலும் கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோன நீர்மை இல்லையே? என்ன, அபிஷிக்த க்ஷத்திரிய குலத்திலே பிறக்கையாலே 'தூதுபோ' என்பார் இல்லாமை தவிர்ந்தாரத்தனைகாண்; நாடுடை மன்னர் வேறே சிலர் இல்லையே. முடியைத் தவிர்ந்து சடையைப் புனைந்து நாட்டைவிட்டுக் காடு ஏறப் போனவர் தூது போகாமை யில்லையிறே? என்ன, காடு ஏறப்போகவுமாம், துர்யோதன கோஷ்டியில்புகுகையிறேஅரிது."யத்ரஸுக்தம்துருக்தம்வா" விறே.பாண்டவர்கள் இருக்கைக்கு ஐந்தூர் தரவேணுமென்று இவன் சொன்ன வார்த்தைக்கும், பந்துக்களுக்கு ஓர் கோல் குத்தும் கொடேன் என்று அவன் சொன்ன வார்த்தைகளும் வாசியறியாத கோஷ்டியிலேயிறே போய்ப்புக்கது. இராமாவதாரத்தில் தூதுபோன திருவடியின் ஏற்றம் தம் திருவுள்ளத்திலே பட்டுக்கிடந்திறே அவனே "பின்னோர் தூது ஆதி மன்னர்க்காகிப் பெருநிலத்தார் இன்னார் தூதன்" என நின்றது.

———::———

ஆறாந் திருவாய்மொழி (66)

"பாமரு மூவுலகும்"

பிரவேச சங்கி:—இப்படித் தெளிந்தால் பின்னை கூப்பிடுகைபோல காணும். இல்லையாகில் 'சம்ஸாரம் நன்று'

என்று கலங்கினர் ஆவரிறே. **அம்மங்கியம்மாள்**, இத்திருவாய்மொழி பாடக்கேட்டு அனுபவித்துப் போருமிதுக்கு மேல் பட இதில் ஓடுகிற ஆர்த்திக்கு நம்மால் பாசுரமிட்டுச் சொல்லப் போகாது என்று பணிக்கும். கீழே, "ஆழிஎழச் சங்கி"லே சர்வேச்வரன் காட்டிக் கொடுத்த விஜயங்களை அநுபவிக்கைக்கு உறுப்பாக, அவனுடைய அபதானங்களை அநுசந்தித்தார்; அந்தப் பிரசங்கத்தாலே அவனுடைய அவதாரங்களையும் அதுக்கு அடியான கிருபாதி குணங்களையும் அநுசந்தித்து, 'இக்குணங்களும் நடையாடா நிற்க, இதிலே பிராப்தியுண்டாயிருக்க, தாங்கள் சேதனராயிருக்க, சம்சாரிகள் இத்தை இழப்பதே!' என்று விஸ்மிதரானர்.

'அவர்கள் அபேக்ஷை இல்லாமையாலே இழக்கிறூர்கள்; அபேக்ஷையுடைய நாம் இழப்போமல்லோம்; அவனுடைய அவதாரங்களையும் வடிவழகையும் அநுபவிப்போம்' என்று பார்த்த விடத்து, அவற்றை அப்போதே கிட்டி அநுபவிக்கப் பெறுமல் மிகவும் அவசந்நராய், சர்வேச்வரனுக்குப் பரமபதத்திலும் இருப்பு அரிதாம்படி ஆர்த்தியாலே நிரம்பிற்று ஒரு கடல் கையெடுத்துக் கூப்பிடுமாபோலே கூப்பீடுகிற கூப்பீடு கேட்டு அவ்விருப்புக் குலைந்து வந்து முகங்காட்டவேண்டும்படி, அவன் பிராப்யனுயிருக்கிறபடியையும் பிராபகனுயிருக்கிறபடியையும் விரோதி நிரசனசீலனுயிருக்கிறபடியையும் சொல்லி, கேட்டாரடைய நீராம்படி பெருமிடறு செய்து கூப்பிடுகிறூர் இத் திருவாய்மொழியில். "பஹவோ ந்ருப."

———:———

ஏழாந் திருவாய்மொழி (67)

"ஏழையர் ஆவி"

பிரவேச சங்கி :—கீழில் திருவாய்மொழியிலே, "மல்கு நீலச்சுடர்தழைப்பச் செஞ்சுடர்சோதிகள் பூத்து ஒரு மாணிக்கம் சேர்வதுபோல், அந்தர மேற் செம்பட்டோடு அடி உந்தி கை மார்பு கண் வாய், செஞ்சுடர்ச்சோதி விட உறை என் திருமார்பனையே" என்று அவன் வடிவழகை அநுசந்தித்தார்; அவ்வழகுதானே நெஞ்சிலே ஊற்றிருந்து அத்தையே பாவித்து, அந்த பாவநாபிரஹர்ஷத்தாலே பிரத்யக்ஷ சமாந

ஆகாரமாய், பின்னை 'பிரத்யக்ஷம்' என்றே புத்திபண்ணி அணைக்கக் கணிசித்துக் கையை நீட்டி, அப்போதே பெறாமை யாலே தமக்குப் பிறந்த ஆற்றாமையை, எம்பெருமானோடே கலந்து உருவெளிப்பாட்டாலே நோவுபடுகிறாள் ஒரு பிராட்டி பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

சர்வேஸ்வரனோடே கலந்து பிரிந்து தளர்ந்து நோவுபடு கிறாள் ஒரு பிராட்டி, சேதநர் சேதநரோடு கலக்கும்போது திருஷ்டி சம்பந்தம் முன்னாகப் பின்னையிறே அல்லாத பரி மாற்றங்கள் ஆசைப்படுவது; ஆகையாலே கண்ணழகையும் அவ்வழியாலே திருமுகத்தழகையும் அநுஸந்தித்து அவ் வருகே சில பரிமாற்றங்களை ஆசைப்பட்டு அப்போதே அது கிடையாமையாலே நோவுபட, இவள் தசையை அநுசந்தித்த தோழிமாரும் தாயாரும் உனக்கு ஓடுகிறது என்? என்று கேட்க, சிலர்க்குச் சொல்லிச் சிலர்க்கு மறைக்கும்படியா யன்றே ஆற்றாமை பிரசித்தமானபடி.

ஆகையாலே அவன் திருமுகத்தழகு தனித்தனியும் திரள வும் வந்து என்னை நலியாநின்றது என்ன, 'நீ இங்ஙனே சொல்லுமது உன்னுடைய ஸ்திரீத்வாதிகளுக்குப் போராது' என்று ஹிதம் சொல்லுவாரும் பொடிவாருமாக, உங்கள் ஹிதவசனத்துக்கு மீளுமளவன்று அது என்னை நலியும்படி; ஆனபின்பு நீங்கள் என்னை விட்டுப் பிடிக்க அமையும் என்று அவர்களுக்குத் தன்பக்கல் நசை அறும்படி தமக்குப் பிறந்த ஆற்றாமையை அறிவிக்கிறார்.

சர்வேச்வரனுடைய குணங்களை ஆசைப்படுகையும், அது தான் மானஸாநுபவமாகையும், அநுபூத குணங்கள் ஒழியக் குணாந்தரத்திலே அபேக்ஷை பண்ணுகையும், அது தன்னில் கிரமப்ராப்தி பற்றாமையும், அதுதான் கீழ்நின்ற நிலையை மறக்கும்படி பண்ணுகையும் ஆகிற இவை இவர்க்குத் திரு வாய்மொழி எங்கும் ஓடுகிற ஸ்வபாவம்தான். அவற்றைக் காட்டில் உருவு வெளிப்பாடாகச் சொல்லுகிற இதில் ஏறின அம்சம் என்? என்னில், கீழ்ப்பிறந்த வைசத்யமும் கிடக்கச் செய்தே, மேலே அபேக்ஷை பிறக்குமதாயிற்று உருவு வெளிப்பாடாகிறது. அல்லாதவிடத்தில் கீழ்ப்பிறந்த வைசத் யத்தை அழித்திறே மேலில் அபேக்ஷை பிறப்பது. "எங்ஙனே யோ"விலும் பிராயேண இதுவே அன்றோ ஓடுகிறது. அதில்

இதுக்கு வாசி என்? என்னில், அதில் ப்ரீதி அப்ரீதி சமமாக இருக்கும்; இங்கு அப்ரீதி மிக்கிருக்கும். திருக்கண்களில் அழகினை "இணைக்கூற்றம்" என்னும்படி இங்கு பாதகத்வத்தில் உறைப்பிருக்கிறபடி.

——(o)——

எட்டாந் திருவாய்மொழி (68)

"மாயா வாமனனே"

பிரவேச சங்கி :—கீழில் திருவாய்மொழி உருவு வெளிப்பாடாய்ச் சென்றது. கைக்கு எட்டாமையாலே உருவு வெளிப்பாடு என்று அறிவரிறே. இனி, சர்வேச்வரன் தான் நினைத்த காரியம் தலைக்கட்டிக் கொள்ளுமளவும் நம்மை இங்கே வைத்திருக்கிறான் என்னு மிடமும் அறிவரிறே. ஆகிலும், அவனை ஒழியத் தரிக்கமாட்டாதவர் ஆகையாலே இத்தை நினைத்து ஆறியிருக்கவும் மாட்டாரிறே. 'விரோதியைப் போக்கித் தரவேணும்' என்று இவர் அர்த்தித்தாலும் அவனும் இவரைக் கொண்டு தான் நினைத்த பிரபந்தங்கள் தலைக்கட்டிக் கொள்ளுமளவும் இவர் அபேக்ஷிதம் செய்யானே. இவர் அபேக்ஷிதம் செய்யாதிருக்கச் செய்தேயும் இங்கே வைத்து இவரை ஜீவிப்பிக்கைக் கீடான உபாயங்களும் அறிந்திருக்குமே. ஆகையாலே, சில பதார்த்தங்களை உயிர் போகாதபடி ஒன்றிலே கோத்திட்டு வைப்பாரைப் போலே, முடியவும் ஒட்டாதே ஜீவிக்கவும் ஒட்டாதே நடுவேயிருந்து நலிகிறபடியை அநுஸந்தித்து 'எனக்கு இதில் பொருந்தாமை உண்டாயிருக்கச் செய்தேயும், இச் சம்சாரத்திலே வைத்து என்னை நடத்திக் கொடு போருகிற இவ் வாச்சரியத்தை எனக்கு அருளிச்செய்ய வேணும்' என்ன,

ஒன்றைக் கேட்க வேறே சிலவற்றைச் சொல்லுவாரைப் போலே, 'இது ஒன்றும் கண்டோ நீர் ஆச்சரியப்படுகிறது? இவ்வளவல்லாத நம்முடைய விசித்திர ஜகதாகாரதையைப் பாரீர்!' என்று, அவன் தன்னுடைய ஜகதாகாரத்தைக் காட்ட விஸ்மிதராகிறார். அதுதான் நினைத்தது அன்றேயாகிலும் அவன் காட்டிக் கொடுத்த தொன்றாகையாலே அதுவும் இவர்க்குப் பிரிய ஹேதுவாயிருக்குமிறே.

அக்ரூரன் -

"ஜகதேதந் மஹாஸ்சர்யம் ரூபம் யஸ்ய மஹாத்மந:
தேநாஸ்சர்ய வரேணுஹம் பவதா க்ருஷ்ண ஸங்கத:"

என்று கொண்டு அவன் ஆச்சரியப் பட்டாற்போலே இவரும் அவனுடைய விசித்திர ஜகதாகாரதையை அநுசந்தித்து விஸ்மிதராகிறார்.

——(o)——

ஒன்பதாம் திருவாய்மொழி (69)

"என்றைக்கும்"

பிரவேச சங்கி:—இவரும், அப்போது அத்தனையும் அத்தை அநுசந்தித்து, அது தலைக்கட்டினவாறே அநந்தரம் பழையபடியே கேட்கத் தொடங்குமவரிறே. இச் சம்சாரத்தில் பொருந்தாதிருக்கிற என்னை இங்கு வைத்ததுக்கு ஹேது என்? என்ன, நம்மை இதுக்கு ஒரு ஹேது நிர்ப்பந்தித்துக் கேட்க வேணுமோ? கண்டதெல்லாவற்றிலும் நாக்கு நீட்டி அவற்றிலே ருசி பண்ணிப் போந்தீராகில், அதுக்கடியான கர்மம் கிடந்ததாகில், வாசநா ருசி கிடந்ததாகில், அவற்றால் இருந்தால் ஆகாதோ? என்ன, 'அவையும் கிடக்கச் செய்தே அவற்றையும் பாராதே எனக்கு மயர்வற மதிநலம் அருளிப் பாசங்கள் நீக்கி என்னை உனக்கே அறக் கொண்ட பின்பு என்னை இங்கு வைக்கிறது என்?' என்று வடிம்பிட்டுக் கேட்க, 'ஸ்ரீபீஷ்மரை சரதல்பத்திலே இட்டுவைத்து நாட்டுக்கு வெளிச் சிறப்பைப்பண்ணிக் கொடுத்தாற்போலே, உம்மைக் கொண்டு, நமக்கும் நம்முடையார்க்கும் போதுபோக்காகச் சில பிரபந்தங்களைப் பண்ணுவிக்கப் பார்த்தோம்; அத் தலைக்கட்டுந்தனையும் காணும் உம்மை வைப்பது' என்று நேரான பரிஹாரத்தை அருளிச்செய்ய,

இவரும் அத்தை அநுசந்தித்து, சர்வேச்வரனாய் அவாப்த சமஸ்தகாமனாய் சர்வப்பிரகார பரிபூர்ணனாயிருக்கிறவன் தனக்கு ஒரு குறை உண்டாய் அக்குறை பின்னைத் தம்மைக் கொண்டு தீர்ப்பதாகச் சொன்ன வார்த்தையைப் பொறுக்க மாட்டிற்றிலர்; 'தனக்குச் சில பிரபந்தங்கள் வேண்டினால் அதுக்கு ஈடான ஞான சக்தியாதிகளால் குறைவற்ற ஸ்ரீ

வேத வியாச பகவான், ஸ்ரீ வால்மீகி பகவான், ஸ்ரீ பராசர பகவான் தொடக்கமானர், 'செந்தமிழ் பாடுவார்' என்று சொல்லப்படுகிற முதலாழ்வார்கள், இவர்கள் எல்லாரும் உண்டாயிருக்க, அநாதிகாலம் சம்சாரத்திலே பழகி அசத் கல்பனய் உருமாய்ந்துபோன என்னைக் கொண்டு தனக்கு ஈடாகக் கவிபாடுவித்துக் கொள்ளுவதாகச்சொன்னவார்த்தை என்ன வார்த்தை! இது ஒரு நீர்மை இருக்கும்படியே! இது என்ன நீர்மை!' என்று, சர்வேச்வரன் தம் திறத்தில் பண்ணின உபகாரத்தை அநுசந்தித்து அதற்குப் பிரதியுபகாரம் காணாமையாலே தடுமாறிச் செல்லுகிறது.

——(o)——

பத்தாம் திருவாய்மொழி (70)

"இன்பம் பயக்க"

பிரவேச சங்கி :—இப்படி உபகாரகனானவனுக்கு நிரூபித்து + கிறார். இனி அடிமை செய்யுமிடத்தில் சம்ஸார சம்பந்தம் அற்று ஒரு தேச விசேஷத்திலே போனால் பின்பு செய்கிறோம் என்று அவ்வளவும் ஆறியிருக்கவல்லரல்லாமையாலும் அவன் தான் இங்கே கிட்டவிருக்கத் தேச விசேஷத்தே போய் அடிமை செய்ய இச்சை யில்லாமையாலும் திருவாறன் விளையிலே புக்கு அடிமை செய்யக் கடவ படிகளை மநோரதித்து இனியராகிறார். ஸ்ரீ வால்மீகி பகவானை யொழியவும் பிராட்டி யொழியவும் தனியே யிருந்து கேட்ட ஸ்ரீ ராமாயணத்தில் இதுக்கு வாசி யுண்டு.

——(o)——

எட்டாம் பத்து

முதல் திருவாய்மொழி (71)

"தேவிமாராவார்"

பிரவேச சங்கி :—பிராட்டிமாரோடே நித்தியபரிகரம் சேவிக்க, பரியங்க வித்யையிற் சொல்லுகிறபடியே சர்வேச்வரன் நாம் பாடின திருவாய்மொழி கேட்கத் திருவாறன் விளையிலே எழுந்தருளியிருக்க, இவரும் அங்கே போய் அநுகூல விருத்தி பண்ணவேணும் என்று பாரிக்க, அதுக்குக் கால் நடை தாராமையாலே அது மநோரத மாத்திரமாய், நினைத்தபடி தலைக்கட்டிற்றில்லை. 'பிராட்டிமாரும் நித்ய ஸூரிகளும் அருகே இருக்க, நினைத்த காரியம் செய்து தலைக் கட்டுகைக்கு ஈடான ஐச்வர்யம் குறைவற்றிருக்க, ஆச்ரிதர் உகந்தவற்றைத் திருமேனியாகக்கொண்டு உதவும் ஸ்வபாவனுமாயிருக்க, நமக்கு ருசியும் குறைவற்றிருக்க நினைத்த பரிமாற்றம் பெறு தொழிவோமே!' என்று வெறுத்து,

தாம் தஞ்சமாக நினைத்திருந்த ஆச்ரித பாரதந்த்ரயத்தையும், ஸ்வவ்யதிரிக்த சமஸ்த வஸ்துக்களும் தனக்குப் பிரகாரமாகத் தான் பிரகாரியாய் இவற்றுக்கு வந்த வியஸனம் தனக்கு வந்ததாக நினைத்திருக்கும் பிராப்தியும் தம் பக்கல் காரியகர மாகாமையாலே, 'நான் ஒருவன் தோற்றிச் சர்வேச்வரனுக்கு இவையும் பொய்யாகப் புகுகிறதோ?' என்று இவர் அறிவொன்றும் என்று அதிசங்கை பண்ணினர். அவனும் 'குணஜ்ஞானத்தாலே ஜீவிக்கும் இவர் குணங்களிலே அதிசங்கை பண்ணினல் ஜீவிக்கமாட்டாரே! இவர் தம்மை நாம் இழக்க ஒண்ணாது, இவரைச் சமாதானம் பண்ணும் விரகு ஏதோ?' என்று பார்த்து,

வாரீர்! நீர் கண்டவற்றிலெல்லாம் அதிசங்கை பண்ணுகிறது என்? உமக்கு ஒன்றும் செய்திலோமோ? இவ்வளவாக உபகரித்த நாம் மேலுள்ளதும் செய்வோங்காணும்; நீர் இங்ஙனே அதிசங்கை பண்ண வேண்டா என்று தன்னுடைய விஸ்ரம்பணீயத்வ பிரமுகமான கல்யாண குணங்களையும் தான் இவ்

வளவாகப்பண்ணின உபகாரங்களையும் காட்டி இவருடைய அதிசங்கையைத் தீர்த்து, இவரைச் சமாதானம் பண்ண, சமாஹிதராகிறார். "க்யாத:" "அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்" என்கிறார்.

---o---

இரண்டாந் திருவாய்மொழி (72)

— :: —

"நங்கள் வரிவளை"

பிரவேச சங்கி :—கீழில் திருவாய்மொழி பிராபக பிரதானம்; கீழே அவன் குணங்களிலும் ஸ்வரூபத்திலும் அதிசங்கை பண்ணித் தெளிந்து, "வணங்குமாறு அறியேன்" என்று தம் தலையில் சாதன யோக்யதையைத் தவிர்த்து, "யானும் நீ தானே யாவதோ மெய்யே" என்று அவன் பக்கல் நியஸ்த பரதையைச் சொல்லி, இப்படிப் பிராசங்கிகமாக அவனே பிராபகம் என்று அறுதியிட்டார். அவனே பிராபகனுமிடத்தில் பேற்றுக்கு விளம்ப ஹேது இல்லையாயிருக்க, அவன் முகங்காட்டா தொழிவதற்கு ஹேது, அவன் பக்கல் ஒன்றில்லை; "மமைவ" என்று நம் பக்கலிலேயாகவேணும். நெடுநாள் சம்சரித்துக் கண்டது எல்லாவற்றிலும் ருசி பண்ணிப் போந்த நம் பூர்வ விருத்தத்தையும், நமக்கு இப்போதுள்ள அளவையும் அவன் அறியாமையில்லை;

நாம் அறியாதிருக்க அவன் அறிய அவன் பக்கல் நமக்கு ருசியில் குறையுண்டாகவேணும் என்று பார்த்து, 'அது உண்டாகவுமாம், இல்லையாகவுமாம், புறம்பு உண்டானவற்றில் ருசி இல்லை என்னுமிடத்தை அவன் திருவுள்ளத்தில் படுத்துவோம் என்று நினைத்து, கிளி முதலான பிராப்ய விரோதிகளிலும் தாயார் முதலான பிராபக விரோதிகளிலும் தமக்கு ருசி இல்லாமையை, சர்வேச்வரனோடே கலந்து பிரிந்தாள் ஒரு பிராட்டி, அவன் தானே வரக் கண்டிருக்கை அன்றிக்கே, அபிசாரிகையாய் அவன் இருந்த தேசத்து ஏறப் போவதாக வொருப்பட்ட இத்தை அநுசந்தித்த தோழிமார் தொடக்கமானர் 'உனக்கு இது ஆகாது காண்' என்று ஹிதம் சொல்லி மீட்கப் பார்க்க, அவர்களைக் குறித்து, தோழிமார் தொடக்க

மானவர்களிலும் மற்றுமுள்ளவர்களிலும் நசை இல்லாமையை அவர்களுக்கு அறிவிக்கிற பாசுரத்தாலே தமக்கு நசைஇல்லாமையை அவன் திருவுள்ளத்திலே படுத்துகிருர்.

———(0)———

மூன்ரும் திருவாய்மொழி (73)

"அங்கும் இங்கும்"

பிரவேச சங்கி :—கீழில் திருவாய்மொழியில், பத்தாம் பாட்டிலே - "ஓர் கோல நீல நன்னெடும் குன்றம் வருவதொப்பான்" என்று வடிவழகை அநுசந்தித்தவாறே, தாம் பட்ட கிலேசத்தை மறந்து, 'இவ் வடிவோடே சம்சாரத்தில் தனியே வந்து அவதரித்து உலாவாநிற்கும்; சத்ருக்களும், மத்யஸ்தரும், பிரயோஜநாந்தரபரருமாய் இவனுக்குப் பரிவுடையார் ஒருவருமின்றிக்கே இருக்கிற சம்சாரத்திலே அர்த்திகளுடைய அபேக்ஷிதங்களைப் பூரிக்கைக்காகச் சம்சாரிசஜாதீயனுய், சிலர்க்குப் பரதந்திரனுயும், அவதாரத்துக்குப் பிற்பட்டார்க்குக் கோயில்களிலும் கிருஹங்களிலும் சந்நிஹிதனுயும் வர்த்திக்கிற இவனுடைய சௌகுமார்யம் அறிந்து பரியக்கடவார் ஒருவரும் இலர்; நானும் உதவப் பெறுகிறிலேன்' என்று அவன் தனிமைக்கு வெறுத்துப் பீதராக;

'நமக்குப் பரிவர் இலர்' என்று பயப்படவேண்டா, முமுக்ஷுக்களும் முக்தரும் நித்ய சித்தரும் நமக்குப் பரிகையே யாத்திரையாயிருக்குமவர்கள் அன்ரே? நமக்குத்தான் வேறே சிலர் பரியவேண்டியிருந்ததோ?" என்று சர்வேச்வரன் தன் சர்வ சக்தித்வத்தைக் காட்டிச் சமாதானம் பண்ண, சமாஹிதராய் ஹ்ருஷ்டராகிருர். சர்வேச்வரனுக்குப் பரிகைக்குத் தமக்குக் கூட்டு ஆவார் இலர் என்று தன் தனிமைக்கு வெறுக்கிருர் என்றும் சொல்லுவர்கள். நித்யசூரிகள் பகவத் அநுபவத்திலே அந்யபரர்; சம்சாரிகள் சப்தாதிகளிலே அந்யபரர்; பிரஹ்மேசாநாதிகள் தங்களுக்காக "நீணகர் நீள் எரிவைத்தருளாய்" என்று அவனை அம்புக்கு இலக்கு ஆக்குதல், ஏவித் தேவை கொள்ளுதல் செய்வர்கள்; ஆகையாலே, பரிகைக்குத் தமக்கு ஒரு துணை இலை என்று தம் தனிமைக்கு வெறுக்கிருர்.

சேஷ வஸ்துவுக்கு சேஷியே இரக்ஷகன் என்கை அறிவுக்கு முதலடி; சேஷவஸ்துவுக்கு சேஷிக்கு அதிசயத்தை விளைத்துத் தன் ஸ்வரூப ஸித்தி யாகையாலே, 'அவன் இரக்ஷ்யன், நாம் இரக்ஷகர்' என்னு மளவும் செல்ல அறிகை - தன்னை உள்ளபடி அறிகை.

———(o)———

நான்காந் திருவாய்மொழி (74)

—— :: ——

"வார்கடா அருவி"

பிரவேச சங்கி :—சர்வேச்ரன் சம்ஸாரிகளுடைய அபேக்ஷையே ஆலம்பனமாகச் சம்ஸாரத்திலே வந்து அவதரித்துத் தனியே உலாவா நிற்கும்; சம்ஸாரிகளும் தந்தாம் அபேக்ஷிதங்களைப் பற்றிக் கிட்டுமதொழிய இவன் வாசியறிந்து பரியக் கடவரில்லை; என் புகுகிறதோ? என்று அஞ்சின இவர்க்கு அந்த அச்சம் தீர, நமக்குப் பரிகரம் உண்டு, ஒருத்தர் பரிய வேண்டாதபடி மிடுக்கும் நமக்கு உண்டு என்று தன் படிகளைக் காட்டிச் சமாதானம் பண்ண, சமாஹிதரானார் கீழ்.

இதில், இவராகிறார் பிரேமஸ்வபாவராய் இருப்பர்; காதல் மையல் ஏறி, "முக்தரும் நித்தியரும் இங்கு இல்லையே, சநகாதி முமுக்ஷுக்கள் நல்ல தபசும் மனன தியானமும் விடமாட்டார்கள்: கடல் கடைந்தது தேவயோநியிலே அன்றோ" என்று கலங்குவர். இன்னம் இவர்க்கு இது மறுவலிடக் கூடும் என்று பார்த்து, மறுவல் இடாதபடி தன் சௌர்ய வீர்யாதி குணங்களையும், சிருஷ்ட்யாத்யத்பூதகர்மங்களையும், எதிரிட்ட விரோதி வர்க்கத்தை வேரோடே வாங்கிப் பொகடவல்ல சக்தியையும் காட்டிக்கொடுத்து, அதுக்கு மேலே, "அதிசயித ஞான சக்திகராய்த் தனக்குப் பரிவராயிருப்பார் மூவாயிரம் பிராஹ்மணர் உண்டு" என்று காட்டிக் கொடுக்கக் கண்டு கிருதார்த்தராய், அவன் வடிவழகிலேயும் நெஞ்சு சென்று அநுபவித்து இனியராகிறார்.

ஸ்ரீ விபீஷணாழ்வான் "ராகவம் சரணம் கத:" என்று வந்து விழுந்தபோது, மஹாராஜர் பெருமாள் பக்கல் பிரேமத்தாலே கலங்கித் துணுக்கு என்று இவன் சொன்ன

வார்த்தை பெருமாள் திருச்செவியிலே படில் செய்வது என்? என்று “நாயன்தே! ராவணப் பிராதா ராக்ஷச ஜாதி அவன் புகுரக்கடவன் அல்லன்” என்ன, “இவர் நம் பக்கல் பரிவாலே சொல்லுகிற வார்த்தை, நம்மிடுக்கைக் காட்டவே தெளிவர்” என்று ‘பிசாசாந் தானவான்’ என்று இத்யாதியாலே தம்மிடுக்கைக் காட்டக் கண்டு அவர் அச்சம் தீர்ந்து, “மித்ர சித்ரம்” என்று இனியரானுற் போலவும், “ந ஸமம் யுத்தமித்யாஹு:” என்கிற பார்ச்வஸ்த்தருடைய பயத்தை அவர்கள் சந்நிதியிலேயே கிருஷ்ணன் மல்லரை அழியச் செய்து தீர்த்தருளினுற் போலவும் தம்முடைய பயத்தைப் போக்கியருள, முன்பு அழகினைக் கண்டு பரிவாலே பீதரான வர் அழகிலே நெஞ்சு சென்று அநுபவித்துக் கிருதார்த்தராய்த் தலைக்கட்டுகிருர்.

ஐந்தாந் திருவாய்மொழி (75)

“மாயக் கூத்தா”

பிரவேச சங்கி:— அவ்வழகினை நினைத்தபோதே அவ்வழகு, நெஞ்சிலே, “திகழ என் சிந்தையுள் இருந்தான்” என்கிறபடியே ஊற்றிருந்து, பாஹ்ய சம்ஸ்லேஷாபேக்ஷை பிறந்து, அது பெருமையாலே “கீழே பட்ட கிலேசங்கள் எல்லாம் ஒன்றும் அல்ல, இதிலே ஒரு கலாமத்திரம்” என்னும்படி நொந்து, காட்டுத்தீ கதுவினுற்போலே தப்தராய், தம்மிற் காட்டிலும் ஆகுலமான கரணங்களையுடையராய், ‘என் விடாய் எல்லாம் தீரும்படி திவ்ய ஆயுதங்களோடே வரவேணும், அழகிய திரு அபிஷேகத்தோடே வரவேணும், மேகம்போலே வரவேணும், அழகிய வடிவோடே வரவேணும், உதயசமயத்தில் ஆதித்யனைப்போலே பெரிய புகரோடே வரவேணும் என்றுற்போலே கூப்பிட்டு, பின்னையும் அவன் வந்து முகம் காட்டக் காணுமையாலே, நாம் இந்தக் கிலேசத்தோடே முடிந்துபோமித்தனை ஆகாதே என்ற இழவோடே முடிக்கிருர்.

பகவத் தத்துவம் பிறராலே அழியப்புகுகிறதோ என்று அஞ்சினர்; இதில் தம்முடைய ஆர்த்தநாதத்தாலே அவனை அழிக்கப் பார்க்கிருர்.

ஆறாந் திருவாய்மொழி (76)

"எல்லியும் காலையும்"

ப்ரவேச ஸங்கி :—"மாயக்கூத்த"னில் இவர்க்கு ஓடின விடாய் பேச்சுக்கு நிலமாகையாலே பேசினார்; ஈச்வரனுக்கு ஓடின விடாய் பேச்சுக்கு நிலமல்லாமையாலே பேசிற்றில்லை. 'ஊர்த்தவம் மாஸாத் நஜீவிஷ்யே' என்று இத்தலையில் விடாய்; "ந ஜீவேயம் க்ஷணமபி" என்றிறே அத்தலையிருப்பது. மாயக் கூத்தனில் இவர்க்கு ஓடின விடாய்க்கு உதவப்பெற்றிலோம் என்னுமத்தாலே தப்தனாய், ஆகுலனாய், பிற்பாட்டுக்கு "ஹ்ரீ ரேஷாஹி மமாதுலா" என்று லஜ்ஜித்து, "இனி நாம் கடுக முகங்காட்டில் பிரீதியாலே உடைகுலைப்படுவர், பிரீதியை சாத்மிப்பித்து உளராக்கிப் பரிமாற வேணும்" என்று,

பதினாலாண்டு பிரிவாலே நொந்த ஸ்ரீ பரதாழ்வானைத் தரிப்பித்து முகங்காட்டுகைக்காகத் திருவடியைப் போகவிட்டு ஸ்ரீ பரத்வாஜபகவான் ஆச்ரமத்தில் இருந்தாற்போலவும், பாண்டவர்களுக்காகத் தூது போகிறபோது, பிரேம பரவசர் களான விதுராதிகள் பிரீதியை அகஞ்சுரிப்படுத்தி முகங்காட்டு கைக்காக "குஸஸ்த்தலே நிவஸதிஸச ப்ராதரிஹேஷ்யதி" என் கிறபடியே குசஸ்தலத்திலே விட்டுக்கொண்டிருந்து, பிற்றை நாள் அஸ்தினபுரத்திலே எழுந்தருளினாற் போலவும், தம் மோடே சம்ஸ்லேஷோந்முகனான சர்வேச்வரன் தம்முடைய பிரீதியைச் சாத்மிப்பித்துத் தம்மோடே கலக்கைக்காகத் திருக்கடித்தானத்திலே எழுந்தருளியிருந்து, தம் பக்கல் பண்ணுகிற வியாமோகத்தை அநுசந்தித்து இனியராய் அத்தைப் பேசி அநுபவிக்கிறார். கீழில் திருவாய்மொழி யில் வியசன ஹேதுவான நினைவுதானே இப்போது உஜ்ஜீ வன ஹேதுவாம்படி பண்ணினான். செறுவாரும் நட்பாகுவர் செங்கோன் அருள் பெற்றவாறே.

ஏழாந் திருவாய்மொழி (77)

"இருத்தும் வியந்து"

ப்ரவேச ஸங்கி :—இத் திருவாய்மொழியில் பேற்றுக்கு கிருஷிபண்ணினபடி கீழுடைய; மேல், இப் பேற்றுக்கு வேலி

யாயிருக்கிறது. இத்திருவாய்மொழிதன்னில் செய்கிறது என்? என்னில், தாம் அநாதிகாலம் புத்தி பூர்வகமாகப் பண்ணிப் போந்த பிராதிகூல்யங்களையடைய விஸ்மரித்து, ஆநுகூல்யம் பிறந்தபின்பு பிராமாதிகமாக உண்டானவற்றைக் காணக் கண்ணிட்டு, தம்முடைய பேற்றுக்குத் தானே யத்னித்து, தமக்குப் பிறந்த விடாய் தீரும்படி சம்ச்லேஷித்து, இதுதான் இவர்க்கு உபகரித்தானாய் இருக்கை யன்றிக்கே, தன் பேறாய் இருக்கிறபடியை அநுஸந்தித்து, "தானே அர்த்தியாய்த் தன் பேறாக வந்து கலந்தவனை நாம் இரப்பாளராய்க் கூப்பிட்ட இடம் என் செய்தோ மானோம்" என்று லஜ்ஜித்து, "ஒரு சம்ஸாரி சேதனன் பக்கலில் சர்வேச்வரன் பண்ணும் விஷயீ காரமிருக்கும்படியே இது!" என்று வித்தராய் ;

"ராகவேணாபயே தத்தே ஸந்நதோ ராவணாநுஜ:"என்று 'இராவணனுக்குப்பின் பிறந்த நாம் ரகுகுலத்தில் உள்ளார்க்கு ஆளாகப் புகா நின்றோமோ!' என்றிருந்தவன், பெருமாள்பாடு நின்றும் அருளப்பாடு இட்டு வந்தவாறே, 'என்னையே இப்படி கைக்கொண்டருள்வது! அவன் பின் பிறந்த தண்மை எங்கே போயிற்று?' என்று வேர்அற்ற மரம்போலே, கூட வந்த நால்வரோடும் திருவடிகளிலே விழுந்து தறைப்பட்டாற் போலவும், இராமகுணங்கள் நடையாடாத அசோக வனிகை யிலே திருவடி போய்ப்புக்கு "ஸம்ஸ்ரவே மதுரம் வாக்யம்" என்று பிராட்டி உளளாம்படி ராமநாம சங்கீர்த்தனத்தைப் பண்ண, "இந்நிலத்தில் இது பரிமாறுவது ஒன்றன்று : 'கிந்நுஸ்யாச்சித்த மோஹோயம் பவேத் வாதகதிஸ்த்வியம், உந்மாதஜோ விகாரோவா ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா' என்று பல படிகளைச் சங்கித்து, முன்னேநின்று வார்த்தை சொல்லா நின்றான் ; இது கேட்டு நாம் விக்ருதராகிறமையும் உண்டு; ஆனபின்பு, இதுமெய்யாமித்தனை " என்று ஸ்ரீ ஜநக ராஜன் திருமகள் தெளிந்து ஹ்ருஷ்டையானாற்போலவும் ;

இவரும், "இதுவும் பிரமஸ்வப்நாதிகளில் ஒன்று " என்று சங்கித்து, " அங்ஙனல்ல, மெய்" என்று தெளிந்து பிரீதராய், "நமக்கு அத்வேஷத்தைப் பிறப்பித்து, ஆபிமுக்யத்தை உண்டாக்கி, தன்னால் அல்லது செல்லாமையை உண்டாக்கி, தன் மேன்மை பாராதே இப்படித் தாழநின்று வந்து கலந்து பரிமாறுவதே! இது என்ன ஆஸ்ரித பாரதந்த்ர்யம்! இது

என்ன நீர்மை!" என்று அவன் படிகளை அநுசந்தித்து ஹ்ருஷ்டராகிறார்.

———0———

எட்டாந் திருவாய்மொழி (78)

———:———

"கண்கள் சிவந்து"

பிரவேச சங்கி:—"மாயக்கூத்த"னில் இவர்க்கு ஓடின விடாய் ஆறும்படி சம்ச்லேஷித்து, தன் விடாயும் தீர்ந்து, இவரைப் பெற்றபேற்றாலே பிரீதனாய், "நினைவின்றிக்கேயிருக்கச் செய்தே இங்ஙனே சேரவிழுந்தது; இனி, பிரவிருத்தமான சம்ச்லேஷம் சிதிலமாகவொண்ணாது; இவர்தாம் 'வளவேழுல'கில் ஆழ்வாராயிற்று; நம்மைக் கிட்டக்கொள்ள 'சிறியேனுடைச் சிந்தை' என்று தம் அயோக்யதையை அநுஸந்தித்தவர், இன்னம் அது பின்னாட்டி அகலப் பார்ப்பர்; ஏற்கவே பரிஹரிக்கவேணும்" என்று பார்த்து, "இனி, இவர்தாம் அகலப்பார்ப்பதும் 'அநாதிகாலம் சம்ஸரித்துப் போந்த ஆத்ம வஸ்து அங்குத்தைக்கு யோக்யம் அன்று என்று ஆயிற்று; இது அங்ஙன் அன்று, வந்தேறியான இத்தைப் பாராதே அடியைப் பாரீர்" என்று, "இவ் ஆத்ம வஸ்துவினுடைய வைலக்ஷண்யத்தை இவர்நெஞ்சிலே படுத்துவோம்"என்று பார்த்து,

"இது நித்யமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய் நமக்கு அத்யந்த சேஷமாய்க் காணும் இருப்பது. நீர் கிட்டுமது, நமக்கு அவத்யம் அன்று; கௌஸ்துபத்தோபாதியும் பிராட்டிமாரோபாதியும் நமக்கு நிறமாமித்தனை" என்று, இவர் ஸ்வரூபவைலக்ஷண்யத்தை இவர் நெஞ்சிலே படுத்துகிறானாய்; அது செய்யுடத்தில் 'உம்முடைய ஸ்வரூபம் இருக்கும்படி காட்ட வாரீர்' என்றால், மின்மினிபோல் இருக்கிற இதில் சரக்கு என்? என்று இவர் இசையார்; "அவ்வாயன்றி யானறியேன் மற்றருள்" என்று நம் வடிவழகிலே துவக்குண்டு இருப்பது ஒன்றுண்டு; நம்மை முன்னிட்டு நமக்குப் பிரகாரமாய் இருக்கிற ஆத்ம ஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுப்போம் என்று பார்த்து,

"வாரீர் நம்முடைய வடிவழகு இருக்கிறபடி கண்டீரே; நம்மைக் காணும் காட்சியிலே உம்மையுங் காணலாய்க்

காணும் இருப்பது" என்று தன்னுடைய வடிவழகை முற்பட அநுபவிப்பித்து, தன்னுடைய நூபுராதிகளோபாதி அத்யந்த யோக்யமாய் அத்யந்த சேஷமாயிருக்கிற ஆத்மஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுக்க அத்தை அனுபவித்து இனியராகிறார்.

இத் திருவாய்மொழியில் முதல் இரண்டரைப் பாட்டாலே தன்னை அநுபவிப்பித்து, அநந்தரம் ஆத்மஸ்வரூபத்தைக் காட்டிக் கொடுக்கிறான். அதுக்கு அடி என்? என்னில், ஸ்வாச்ரயமாயல்லது இராமையாலே ஆச்ரயமான தன்னைக் காட்டி, பின்னை ஸ்வரூபத்தைக் காட்டிக் கொடுக்கிறான் என்று சிலர். அன்றிக்கே,"ஸ்வரூபம் இருக்கும்படியைக் காட்டித் தர வாரும் என்றால் இசையார் என்று தன்னை முற்படக் காட்டிக் கொடுக்கிறான்" என்று சிலர். "இரண்டரைப் பாட்டாலும் 'இருத்தும் வியந்தி'ற் கலவி பின்னாட்டுகிறது" என்பாருமுண்டு.

——o o——

ஒன்பதாந் திருவாய்மொழி (79)

"கருமாணிக்க மலைமேல்"

பிரவேச சங்கி:—கீழ் அநுஸந்தித்த சேஷத்வ ரஸாநுபவத்தால் வந்த பிரீதி பாரவச்யத்தாலே பிராட்டிதசையைப் பிராப்தராய், திருப்புலியூர் எம்பெருமானோடே இயற்கையிலே புணர்ந்து பிரிந்தாள் ஒரு பிராட்டி, அவனாலே அபஹ்ருத சித்தையா யிருக்கிறபடியை, உயிர்த்தோழி கண்டு, இவள் வடிவில் வேறு பாட்டாலும் பேச்சில் வேறு பாட்டாலும் சம்ச்லேஷம் பிரவ்ருத்தமாயிற்று என்று அறிந்தாள்; இவை ஒன்றையும் அறியாதே, "பதிஸம்யோகஸுலபம் வய:" என்கிற படியே பிராப்த யௌவனையானாள் என்னும் இவ்வளவே கொண்டு, பித்ராதிகள் "ஸ்வயம்வரத்துக்கு ராஜபுத்ரர்கள் வருவது" என்று மணமுரசு அறைவிக்க,

அத்தைக் கேட்ட தோழி, ஸ்ரீபரதாழ்வானை "நீ ராஜா" என்று பண்ணின தூர்ய கோஷம் செவிப்பட்டபோது அவன் பட்டதெல்லாம் பட்டு, "இத் த்வனி பெண்பிள்ளை செவிப்படுமாகில் மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழாத தன்மையளாய் இருக்கிற இவளைக் கிடையாது; ஏற்கவே பரிஹரிக்கவேணும்; அது செய்யுமிடத்தில் திருப்புலியூர் நாயனு

ரோடே சம்ச்லேஷ மாயிற்று என்போமாகில் நம் காவற் சோர்வாலே வந்ததாம்; அறிவியாதொழியில் இவளை இழக்க வரும்; இனி இவ்வளவில் செய்யலாவது என்?" என்று பார்த்து, இவர்கள் தாங்களும் "இவளுக்கு வடிவிலே ஒரு வேறுபாடு உண்டு; இதுக்கு ஹேது ஏதோ?" என்று விசாரியா நின்றார்கள்; நாமும் இவர்களோடே நிருபணத்திலே இழிந்து அவ்வழியாலே அறிந்தோமாய் இத்தை விலக்க வேணும் என்று நிருபித்து;

"இவள் வடிவு இருந்தபடியால் இவளுக்குத் திருப்புலியூர் நாயனாரோடு சம்ச்லேஷம் பிரவ்ருத்தமாயிற்றுப்போலே யிருந்தது; அவன் குணங்களையே வாய்புலற்றாநின்றாள்; நீங்கள் செய்கிறவற்றைத் தவிருங்கோள்" என்று அறத்தொடு நிற்கிறாளாய், "இது தர்மம் அல்ல" என்ன, ஆனால் நீ சொல்லுகிற திருப்புலியூர் நாயனாருக்கு இவளுக்கீடான வைலக்ஷண்யமும், உண்டாக வேணும், ஒப்பனையும் ஆண் பிள்ளைத் தனமும் குணமும் ஐச்வர்யமும் ஔதார்யமும் பிரணயித்வமும் உண்டாக வேணும், சமாசாரனாகவேணும், வேதார்த்த ஜ்ஞானமுடையனாகவேணும், இவை யெல்லாம் உண்டோ? என்ன, நீங்கள் கேட்கிற அளவல்ல; இவை யெல்லாம் குறைவற்ற விஷயம்; இவை ஒன்று மில்லையேயாகிலும் இவள் அங்கே அநந்யார்ஹையானாள்; நீங்கள் செய்கிற இவற்றைத் தவிருங்கோள் என்று அத்தை விலக்குகிறதாயிருக்கிறது.

'மணவிலக்கு' என்பதொரு கிளவித்துறை இது. திருமந்த்ரத்தில் தனக்கும் பிறர்க்குமாய் இருக்கும் இருப்பைக் கழித்து அநந்யார்ஹ சேஷத்வத்தைச் சொல்லக் கடவதிறே; அது சொல்லுகிறது இங்கு. கீழில் திருவாய்மொழியில் அநந்யார்ஹ சேஷத்வம் சொல்லிற்று. இதில் அந்யசேஷத்வமும் ஸ்வஸ்வாதந்த்ரயமும் அபுருஷார்த்தம் என்கிறது. ஒரு கன்யகையாகில், ஒருவனுக்கேயா யிருக்கையும், ஒருவனுக்கேயானால் பிறர்க்கு உரியள் அல்லளாயிருக்கையுமிறே ஸ்வரூபம். ப்ரீதியில் அந்யாபதேசம் இத் திருவாய்மொழி ஒன்றுமே.

பத்தாந் திருவாய்மொழி (80)

"நெடுமாற் கடிமை"

பிரவேச சங்கி :—கீழ் இரண்டு திருவாய்மொழியாலும் பிரணவ நமஸ்ஸுக்களில் சொன்ன அநந்யார்ஹசேஷத்வம் சொல்லிற்று. அநந்யார்ஹ சேஷத்வத்துக்கு எல்லை, ததீய சேஷத்வ பர்யந்தமாகையிறே: ததீயர்க்குக் கிரய விக்ரயார்ஹ மானவன்றிறே தச்சேஷத்வம் நிலை நின்றதாவது? "எந் தம்மை விற்கவும் பெறுவர்களே" என்றிறே இருப்பது. **ஆம் முணியாழ்வான்** போசள ராஜ்யத்தினின்றும் வந்தநாளிலே, **பட்டர்** கண்டருளி "நீ ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குப் போர அடிமை செய்து போந்தாய் என்று கேட்டோம்; உன் பிரக்ருதிக்குச் சேர 'நெடுமாற்கடிமை'யைக் கேள்" என்று அருளிச் செய்தாராம். ஈச்வர சேஷனானவன்று பிரமித்து மீளவுமாம்; ததீய சேஷத்வபர்யந்தமாக உணர்ந்தால் மீளவேண்டாவிறே. "தத்பக்தி நிக்னமநஸாம்" என்னக் கடவதிறே.

ஐச்வர்யம் புருஷார்த்தம் என்றிருப்பார், ஆத்மலாபம் புருஷார்த்தம் என்றிருப்பார், பகவத்சேஷத்வம் புருஷார்த்தம் என்றிருப்பார், ஈச்வரனாய், "ஆனந்தமய:" என்றிருக்கும் இருப்பு புருஷார்த்தம் என்று இருப்பாராயிறே இருக்கிறது. இப்படிப் பட்ட புருஷார்த்தங்கள், தனித் தனியும் திரளவும் நான் பற்றின பாகவத சேஷத்வமாகிற புருஷார்த்தத்தோடு ஒவ்வாது என்று எடுத்துக் கழிக்கவும் போராது; இப்படியிருக்கிற இதுவே காலதத்வமுள்ளதனையும் எனக்கும் என்னோடு சம்பந்தமுடையார்க்கும் வாய்க்கவேணும் என்று பிரார்த்திக்கிறார். "பயிலும் சுடரொளி"யைக் காட்டிலும் இத் திருவாய்மொழிக்கு வாசி என்? என்னில், "எம்மை யாளும் பரமர்" என்றது அங்கு; "வியன் மூவுலகு பெறினுமே" என்று பாகவதர்கள் போக்யர் என்கிறது இங்கு. "கச்சதா"- ஸ்ரீ சத்ருக்னாழ்வானுக்காதல், இவ் வாழ்வார்க்காதலிறே இவ் வர்த்தங்களில் ருசி உள்ளது.

——(o)——

ஒன்பதாம் பத்து

முதல் திருவாய்மொழி (81)

"கொண்ட பெண்டிர்"

பிரவேச சங்கி:—"சயமே அடிமை தலைநின்றார்" என்றும், "நீக்கமில்லா வடியார்" என்றும், "கோதிலடியார்" என்றும் பாகவதரை விரும்பினாராய் நின்றார் கீழில் திருவாய்மொழியில். "இப்படிப் பாகவத சேஷத்வமாகிற புருஷார்த்தத்தில் எல்லையை நமக்குத் தந்த சர்வேச்வரனே நிருபாதிக பந்து; அல்லாதார் அடங்க ஸோபாதிக பந்துக்கள்; அவனே நிருபாதிக சுஹ்ருத்து, அல்லாதார் பக்கல் தோன்றுகிற ஸௌகார்த்தம் சோபாதிகம்" என்று பிராப்யாபாசங்களைத் தவிர்த்து அவனே பிராப்யம் என்றும், பிராபகாபாசங்களைக் கழித்து அவனே பிராபகன் என்றும் அறுதியிட்டுப் பிறந்த லாபத்தால் உண்டான ஹர்ஷத்தாலே சேதநரைக் குறித்து, "நீங்கள் சோபாதிக பந்துக்ளான அல்லாதாரை விட்டு, நிருபாதிக பந்துவான அவனையே பற்றி உஜ்ஜீவிக்கப் பாருங்கோள்" என்று பரோபதேசப் பிரவர்த்தகர் ஆகிறார்; "சர்வேஷாமேவ" இத்யாதி; "அவ்யய: பிதா"; அல்லாதார் தாய் தமப்பன் என்று பேராய் நாலுநாள் இருந்து மணற்கொட்டகம்போலே அழிவார்கள். ஒருநாளும் கண்ணீர் விழ வேண்டாத பிதாவிறே அவன். விபீஷண, மஹாராஜ, காக, த்ரௌபதி, அர்ஜுனாதிகள் பக்கலிலே காணலாம்.

—:—

இரண்டாந் திருவாய்மொழி (82)

"பண்டை நாளாலே"

பிரவேச் சங்கி :—கீழில் திருவாய்மொழியிலே, "அவனை ஒழிந்தாரடங்கலும் சோபாதிக பந்துக்கள்; அவன் ஒருவனுமே நிருபாதிக பந்து" என்றார்; நிருபாதிக பந்துவானால் பின்னை பந்து க்ருத்யம் பண்ணாதிருக்க வொண்ணாதிறே. இப்படி நிருபாதிக பந்துவானவன் கண் வளர்ந்தருளுகிற

திருப்புளிங்குடியில் எல்லாப் பரிமாற்றத்தையும் ஆசைப்பட்டு இவர் கிட்டினவிடத்தில், இவரை என்னென்னுதல், திருக் கண்களாலே குளிரநோக்குதல், ஒரு வார்த்தை சொல்லுதல் செய்யக் காணுமையாலே மிகவும் அவஸந்நரானுர்; அது அவன் உளனுகத் தீருமிறே. அதுக்குமேலேயும் ஒன்றுண் டாயிற்று, "திருமேனி யலசும்படி ஏகரூபனுகக் கண்வளர்ந் தருளா நின்ருன், என் வருகிறதோ?" என்று ஒரு பயம் ஓடிற்று. கீழே "ஆராவமு"தில் என்னுர்த்தியைத் தீர்க்கி றிலன் என்று இன்னுதானுர்; இங்குத் தன்னுர்த்தியையும் என்னுர்த்தியையும் தீர்க்கிறிலன் என்று இன்னுதாகிருர்.

ஆக, "கொடியார் மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும் மடியாதின்னே" என்றவதுவே தலையெடுத்து, பெரிய ஆற் ருமையோடே, 'என்னுர்த்தியெல்லாம் தீரும்படி திருக்கண்க ளாலே குளிர நோக்கவேணும், என் தலைமேலே திருவடிகளை வைத்தருளவேணும், தேவரீரும் பிராட்டிமாருங்கூட எழுந்த ருளியிருக்கும் இருப்பை எனக்குக் காட்டியருளவேணும், சஞ்ச யன் பெற்றபேற்றில் எனக்குக் குறைய ஒண்ணுது; சஞ்ஜயன் வர, "அநுகூலனுன இவனுக்கு விளைநீரடைத்தோமாகிருேம்; நாம் இருக்கிற இருப்பை இவன் சொல்லக் கேட்டு, உகவாதார் மண்ணுண்ணும்படி கார்யம் செய்தோமாகிருேம், புகுரவிடுங் கோள்" என்று "யத்ர க்ருஷ்ணௌச க்ருஷ்ணுச" என்கிற இருப்பைக் காட்டினுற்போலே, தேவரும் பிராட்டியுமாயெழுந் தருளியிருக்கிற இருப்பைக் காட்டவேணும், என்னைக் கண்ட காட்சிலே விக்ருதனுய் என் முன்னே நாலடி உலாவி அருள வேணும் என்று இங்ஙனே தாமும் அவனும் அறிந்ததாகத் திருவாசலைத் திருக்காப்புகொண்டு ஏகாந்தத்திலே தம்முடைய மனோரதங்களை விண்ணப்பம் செய்து இவற்றை இப்போதே பெறவேணும் என்று த்வரிக்கிருர்.

பிராப்தியை அநுபவித்தார் கீழில் திருவாய்மொழியிலே; பிராப்திபலத்தை ஆசைப்பட்டு அபேக்ஷிக்கிருர் இதில்.

———: :———

மூன்றுந் திருவாய்மொழி (83)

— (௦) —

" ஓராயிரமாய் "

பிரவேச சங்கி :—" கூவுதல் வருதல் செய்யாய்" என்று பிரார்த்தித்தார் கீழ்; யார் பிரார்திக்கக் கடவவற்றை யார்

பிரார்த்திக்கிருர்? உம்முடைய லாபத்துக்கு நாம் பிரார்த்திக்க வேண்டும்படியன்ரே உம்மோடு நமக்குண்டான ரக்தஸ்பர்சம்? ஆனபின்பு உம்முடைய சர்வாபேக்ஷிதங்களையும் செய்கிரேம்; நீர் வெறுக்கவேண்டா என்று நாராயணத்வத்தைக் காட்டிச் சமாதானம் பண்ண, கௌஸல்யாரைப் போலே சமாஹிதராய், நாராயண பதத்தின் அர்த்தத்திற்கு எல்லையான சீலகுணநுஸந்தானம் பண்ணி, அவனைக் காணவேணும் என்று அபேக்ஷை பிறந்து, அவன் இருந்தவிடத்தளவும் கால்நடை தாராதபடி சீலகுணத்தில் ஈடுபட்டு, ஒன்று செய்கை மிகையாம்படி இருப்பான் ஒருவன் அவனுகையாலும் தாம் ஒன்று செய்து அநுபவிக்க வல்லரல்லாமையாலும் சீலகுண பிராசுர்யத்தைப் பேசுகிருர் இத்திருவாய்மொழியில்.

அன்றிக்கே, "கண்கள் சிவந்"தில் பிரணவார்த்தத்தை அநுசந்தித்தார்; அதில் இரண்டரைப்பாட்டாலே அகாரார்த்தத்தையும், மேல் ஒன்றரைப்பாட்டாலே சதுர்த்தி உகாரார்த்தத்தையும், மேல் நாலுபாட்டாலே மகாரார்த்த வைலக்ஷண்யத்தையும், மேலிரண்டுபாட்டாலே பிரணவார்த்தாநுஸந்தானம் பண்ணுத பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸித்து, ஆக, பிரணவார்த்தத்தை அருளிச்செய்து, மேல் "கருமாணிக்க மலை"யிலே நமச்சப்தார்த்தத்தையும், ஆர்த்தமான அர்த்தத்தை "நெடுமாற்கடிமை"யிலும், "கொண்ட பெண்டி"ரில் நாராயண சப்தார்த்தத்தையும், "பண்டைநாளி"ல் சதுர்த்யர்த்தத்தையும் அருளிச்செய்து, அதில் தாம் ஆதரித்தது திருவஷ்டாக்ஷரம் என்னுமிடத்தை "ஓராயிர"த்திலும் அருளிச்செய்தார் என்று நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் அருளிச்செய்யும்படி.

—(०)—

நான்காந் திருவாய்மொழி (84)

"மையார் கருங்கண்ணி"

பிரவேச சங்கி:—ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்துக்கு அடி அவன் தானுயிருக்கும். சீலத்துக்கடி பிராட்டியாயிருக்கும். இதிலே வந்தவாறே ஸ்வாதீனமன்றிக்கே ஒழிகிறதோ? என்னில், அங்ஙனுமாயிராது; நிரூபித்துப் பார்த்தால், அந்த ஸ்வாதந்த்ர்யத்தோபாதி சீலகுணமும் நித்யமாயிருக்கும். அதுக்கடி

பிராட்டியினுடைய சேர்த்தி நித்யமாகையாலே. பாஷ்யகாரர் "ஸ்ரீவல்லப:" என்று நினைத்து, ஸ்வரூபத்தை நிரூபிக்கிற இடத்தில், ஜ்ஞாநாநந்தங்களுக்கு முன்னே "ஸ்ரீய:பதி:" என்றாரிறே. இப்படியிருக்கிறவனுடைய சீலகுணத்தையும் அதுக்கடியான ஸ்ரீய:பதித்வத்தையும் அநுஸந்தித்தார் கீழ். கடுகப்பெற வேண்டும்படி குறைநிகனுமாய், பெறுவிப்பாரும் அருகே உண்டாயிருக்கையாலே அப்போதே பெறவேண்டும் படியான சாபலம் பிறந்தது; அப்போதே பெறக் காணாமை யாலே சேதன ஸமாதியாலே தனித்தனியே கரணங்களும் விடாய்த்துத் தாமும் விடாய்த்தார் "முடியானே"யில் வாசனை யாலே.

இதுதான் எல்லாத் திருவாய்மொழியோடும் கூடி யிருப்ப தொன்றாயிற்று. ஒரு "வீற்றிருந்து", "என்றைக்குமென்னை", "செஞ்சொற் கவி", "முடியானே" இவை யித்தனையிலும் ஓடுகிற பாவ விருத்தியை உடையராய், ஸ்ரீ கஜேந்த்ராழ்வா னுக்குத் தோற்றின இதுதான் கிரமத்திலே வந்தான்என்னும் படி, ஆற்றாமைக்குக் கிரமத்திலே தோற்றப் பற்றாதே தூணிலே வந்து தோன்றினாற்போலே தோற்ற வேண்டும்படி யான தமக்குப் பிறந்த விடாயையும், அதுக்குதவ வந்து முகங் காட்டினபடியையும் அநுஸந்தித்து ஹ்ருஷ்டராய், "நான் கிருதக்கிருத்யனானேன்: அடிமை செய்யப்பெற்றேன்; வாழ்ந் தேன்; ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு எல்லாம் நான் உபகாரகன் ஆனேன்; இது ஒருவன் பெறும் பேறு இருந்தபடியே!" என்று தமக்குப் பிறந்த லாபத்தை அநுஸந்தித்து இனிய ராகிறார்.

ஐந்தாந் திருவாய்மொழி (85)

— :: —

"இன்னுயிர்ச் சேவல்"

பிரவேச சங்கதி :—"தொண்டர்க் கமுதுண்ணச் சொன் மாலைகள் சொன்னேன்" என்று களித்தவர், தம்முடைய பிராண ரக்ஷணத்துக்குத் திரியக்கின் காலிலே விழும்படி யாயிற்று. "தேவர்கட்கெல்லாம் கருவாகிய கண்ணனைக் கண்டு கொண்டேனே" என்னும்படி வைசத்யம் பிறந்து, அப்போதே பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து, அது பெறாமையாலே தளர்ந்து, லௌகிக பதார்த்தாநுஸந்தானத்

தாலே ஹ்ருதயத்தை அந்யபரமாக்கித் தரிப்போம் என்றும், அவனோடு போலியான பதார்த்தங்களைக் கண்டாகிலும் தரிப்போம் என்றும் லௌகிக பதார்த்தங்களிலே கண் வைக்க, ஏதேனும் ஒரு பதார்த்தம் தோற்றினாலும் அதனுடைய சத்பாவம் அவனை யொழிய இல்லாமையாலே அவனைக் காட்டியல்லது நில்லாமையாலே அவை ஆச்வாஸ ஹேதுவன்றிக்கே ஸ்மாரகமாய் நலிய,

அவற்றால் நோவுபடுகிறபடியை எம்பெருமானோடே கலந்து பிரிந்த பிராட்டி, உத்யானத்திலே போலி கண்டு தரிக்கப்போய், அவை அவனுடைய பேச்சுக்கும் வடிவுக்கும் ஸ்மாரகமாய் நலிய, இவை நலிகைக்கு இவற்றோடு நமக்கு ஒரு பகையில்லை; இவை நலிகைக்கு ஓரடி உண்டாக வேணும்; அவன் நம்மை முடிக்க வேணுமென்று பார்த்து, அதுக்கு உபாயம் விச்லேஷம்; பிரிவு கலவியொழியக் கூடாமையாலே கலந்தான், பிரிந்தான், பிரிந்தவிடத்திலும் நாம் முடியக் காணாமையாலே தன்னோடு போலியான பதார்த்தங்களைக் காட்டி முடிப்போம் என்று வரவிட்டானித்தனை என்று நினைத்து, "உங்களுக்கு நினைவு இதுவாகில் இப் பாரிப்பெல்லாம் வேணுமோ" என்று அவற்றுக்குச் சொல்லி, "நம்மைப் பார்த்தாலிறே இப்படி நோவுபட வேண்டுவது? அவனைப் பார்த்தால் அது வேண்டாவிறே" என்று அவன் குணஜ்ஞானத்தாலே தரித்தபடியை அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

———o———

ஆறாந் திருவாய்மொழி (86)

" உருகுமால் நெஞ்சம் "

பிரவேச சங்கி :—' " எழ நண்ணி நாமும் நம் வானநாடனோடு ஒன்றினோம் ' " என்று தம் ஜீவனத்தில் நசையற்றுச் சொன்னார் கீழ்; இவ்வளவில் வந்து முகங்காட்டி இவரைப் பெறுதல், இல்லையாகில் இழத்தல் செய்ய வேண்டும்படியான இவ் அவஸ்தையிலே, திருவடி கிட்டினபோது முன்பு நெடுநாள் பட்ட வியஸனம் கிடக்கச்செய்தே, பெருமாளும் வாராதிருக்க, 'ஸமா த்வாதச' என்கிறபடியே பன்னிரண்டு ஆண்டு பெருமாளும் தானும் ஒரு படிப்படக் கலந்த கலவி பிராட்டிக்கு

ஸ்ம்ருதி விஷயமானாற் போலே "இருத்தும் வியந்தி"ல் தலை தடுமாறாகப் பிறந்த கலவி ஸ்ம்ருதி விஷயமாயிற்று. அதுக்கடி இவர் அதிகரித்த கைங்கர்யத்தை முடியச் செய்து தலைக் கட்டு கைக் கீடான இவருடைய ஜீவநாத்ருஷ்டமாவது; இவர் சொல்லக் கேட்கையில் பாரித்துக் கொண்டிருக்கிற ஈச்வர னுடைய பாக்யமாவது, பகவதநுபவ ப்ரீதி உள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட இவர் சொல்லுக் கேட்டு, பகவத்விஷயத்தில் ருசி பிறக்க விருக்கிற சேதநருடைய பாக்யமாவது. அம் மேன்மையும் கிடக்கச்செய்தே தாழநின்று பரிமாறின குணத் தையும் வடிவழகையும் சொல்லி, இதில் ததாசீந்தன புத்தி பிறந்து அவனுடைய சீலகுணாநுஸந்தானத்தாலே சிதில ராகிறார்.

கடலைத் தறை காண்பாரைப் போலே, "இருத்தும் வியந்தில்" அநுபவத்தை இதில் கொடுவந்து சேர்ப்பதே நம் முதலிகள் என்று வித்தராய் அருளிச் செய்வர் நஞ்சீயர். "அப்ராப்தியும் கிடக்கச் செய்தே, சீல குணாநுஸந்தானத் தாலே சிதிலராகையாலே அப்ரீதி கர்ப்ப குணாநுஸந்தானம்" என்று ஆளவந்தார். "பஹவஃ".

——(o)——

ஏழாந் திருவாய்மொழி (87)

"எங்கானல்"

ப்ரவேச சங்கி:—கீழ் அப்ரீதி கர்ப்ப குணாநுஸந்தானத் தாலே மிகவும் பிரீதரானவர், பாக்யஹாநியாலே அப்ரீதி அம்சமே தலையெடுத்து, அவனைப் பெற்றுப் பிழைத்தல், அவனைப் பெறுவிடில் முடியும்படியான தசையை யுடையராய், இயற்கையிலே புணர்ந்து பிரிந்தாள் ஒரு பிராட்டி, அவன் வடிவழகிலே ஈடுபட்டு அவசந்நையாய்,சிலபக்ஷிகளைக் குறித்து, "பின்னானார் வணங்கும் சோதி திரு மூழிக் களம்" என்கிற படியே, தூது போவார்க்கு அருமைப்பட வேண்டாதபடி திரு மூழிக்களத்திலே வந்து நின்றருளினான். தனக்கு நல்லாரை விடமாட்டாதவனாகையாலே நம் தசையை மறந்தான். க்ருபா வானாகையாலே அறிவிக்க வரும் என்று பார்த்து "உம்மைப் பிரிந்தார் தரிப்பரோ" என்று அறிவிக்க வேணும் என்று சௌந்தர்யம் பற்றாசாக அவற்றை சவிநயமாக இரக்கிறார்.

"அஞ்சிறைய மடநாரை"யில், 'நம்பக்கல் அபராதத்தாலே வாராதொழிந்தானத்தனை: அவனுடைய அபராத ஸஹத்வத்தை அறிவிக்கவரும்' என்று அபராத ஸஹத்வம் பற்றாசாகத் தூதுவிட்டாள்; "வைகல் பூங்கழி"வாயில், 'நல்லது கண்டால் கால்தாழுமவனுகையாலே திருவண்வண்டூரில் சம்ருத்தியைக் கண்டு கால் தாழ்ந்தானத்தனை: நம் ஆர்த்தியை அறிவித்தால் தன் இனிமையில் நெஞ்சு வைப்பான் ஒருவனல்லன்' என்று அது பற்றாசாகத் தூது விட்டாள்; "பொன்னுலகாளி"யில், 'திருக்கோளூர் ஏறப் போக' என்று தன்னுடைய நகர உபவனத்தளவும் சென்று பலஹானியாலே போக மாட்டாதே இருக்கிற பிராட்டி, பின்னையும், அவன் வரக் காணுமையாலே 'வாரா தொழிகைக்கு நிபந்தனம் - தன் ஐஶ்வர்யப் பரப்பாலே; தான் ஆஶ்ரதரோடு ஏகரசன் ஆகையாலே வரும்' என்று ஐகரஸ்யம் பற்றாசாகத் தூது விட்டாள்; இதில், 'தனக்கு நல்லராயிருப்பாரை விட மாட்டாமையாலே வாராதிருந்தானுமித்தனை; தன் வடிவழகிது; குணங்கள் அவை; பிரிந்தார்க்கு ஜீவித்திருக்கப் போமோ?' என்று அவன் வடிவழகும் குணங்களும் பற்றாசாகத் தூது விடுகிறாள்.

——(o)——

எட்டாந் திருவாய்மொழி (88)

"அறுக்கும் வினையாயின"

பிரவேச சங்கி:—இப்படித் தம்முடைய ஆர்த்தி அறிவிக்கச் செய்தேயும் அப்போதே வரக் காணுமையாலே அவசந்நரானவர், தூதப்பிரேஷணத்தாலும் அவன் குண அநுசந்தானத்தாலும் மந:பிரசாதத்தாலும் 'அவன் வந்து நம்மை விஷயீகரித்து அமர்ந்த நிலமான திருநாவாயிலே கொடு போகை நிஶ்சிதம்' என்று அத்யவசித்து, கிரமத்தால் போகப் பற்றாமையாலே பதறி 'அங்கே புகவல்லேனே? புகும்நாள் என்றோ? அங்கே புக்கு என் கண்ணாரக் கண்டு அடிமை செய்யவல்லேனே?' என்று இப்படி அநேக மனோரதங்களைப் பண்ணுகிறார். 'உபாய உபேயங்கள் இரண்டும் ஈஶ்வரனே என்று அத்யவசித்தார்க்கு, பிராப்யருசி கண்ணழிவற்றால் விளம்பஹேது இல்லாமையாலே, பிராப்ய சித்தியளவும் தவிராததுமாய், அதுதான் இனியதுமாய், இவனுடைய ஸ்வ

ரூபத்தோடு சேர்ந்திருப்பதுமாய் இருப்பது ஒன்றிறே. இது பிராப்ய சித்தியளவுமுண்டு.

பெரிய முதலியார் பிராப்யசித்தியில் துவரையாலே எப்போதும் இத்திருவாய்மொழியை அநுஸந்திப்பர். ஆகையாலே இத்தைப் '**பெரிய முதலியார் திருவாய்மொழி**' என்றுயிற்றுச் சொல்லுவது.

—0—

ஒன்பதாந் திருவாய்மொழி (89)

"மல்லிகை கமழ்தென்றல்"

பிரவேச சங்கி:—படைவீட்டில் இருந்தால் மாமனார் மாமியாருக்குக் கூசிப் பெருமாளுடன் நினைத்தபடி பரிமாறப் போகாது என்று காட்டிலே ஏகாந்தமாக அநுபவிப்பதாக மநோரதித்துப் போந்த பிராட்டியை, "காந்தார மத்யே விஜநே விஸ்ருஷ்டா பாலேவ கந்யா விலலாப ஸீதா" என்று கூப்பிடப் பண்ணினாற்போலே, திருநாவாயிலே புக்கு அநுபவிப்பதாக மநோரதித்த இவர்க்கு, பாதகவர்க்கத்துக்கு அஞ்சிக் கூப்பிடும்படியாய் விளைந்தது.

மநோரத சமநந்தரம் போகக் காணாமையாலே திருவாய்ப்பாடியிலுள்ளார் கிருஷ்ணனைப் பிரிந்து ஒரு இராத்திரிபட்ட வியசநத்தை இவர் ஒருவரும் படுகிறார் என்று **ஆளவந்தார்** அருளிச்செய்ததாகத் **திருமாலையாண்டான்** பணிக்க, அத்தை **எம்பெருமானார்** கேட்டருளி, முன்பே ஆற்றாமையாலே தற்பு அற்றிருக்கிறவர் ஆகையாலே இத்தனை ஆடல் கொடுக்கைக்கு வேண்டும் ஆச்ரயம் போராது; ஆனபின்பு, அவனைப் பிரிந்து ஒரு சந்தியையில் பட்ட நோவு படுகிறார் என்று அருளிச்செய்வர்.

திருவாய்ப்பாடியிலுள்ளார் கிருஷ்ணன் பசுக்களின் பின்னேபோனால் பகல் எல்லாம் வருந்தி ஒருபடி யாற்றி அவன் வருங்காலமான சந்தியையும் வந்து, அவர்கள் படும் அலமாப்புக் காண்கைக்காக அவன் பிற்கூழையிலே வர, பசுக்களும் வந்து அவன் வரக் காணாமையாலே அக்காலத்தில் மல்லிகையின் பரிமளம் துடக்கமான அநுகூல பதார்த்தங்கள், காலாந்தரத்தில் அநுகூலமான தென்றல் நிலா கட

லோசை முதலானவை பாதகமாய், ஏகாக்ஷி முதலான எல்லாரும் பிராட்டியைத் தனித்தனியே நலிந்து, பின்பு எல்லாரும் ஒக்க மேல்விழுந்து, அதுக்குமேலே சில நலிவுகளைப் பண்ணினாற்போலே, பாதகவர்க்கம் தனித்தனியும் திரளவும் நலிய, அவர்களெல்லாரும் கூப்பிட்ட கூப்பீட்டை இவர் ஒருத்தருமே கூப்பிடுகிறார்.

"முடியானே"யில் தம்முடைய கரணங்களுக்கு உண்டான சைதில்யம் சொன்னார்; இங்கு ஜ்ஞாநேந்த்ரியங்களோடு கர்மேந்த்ரியங்களோடு வாசியற அவற்றுக்கு ஆச்ரயமான அவயவிதான் ஒன்றாக அழிகிறபடி சொல்லுகிறது. இராமாவதாரத்தில் பதினாலாண்டு போலேயாயிற்று, திருவாய்ப்பாடியில் பெண்களுக்குக் கிருஷ்ணவிரகத்தால் ஒரு சந்தியை. குணாதிக விஷயத்தைப் பிரிகையாலே அங்குப் பதினாலாண்டாயே கழியவும் கூடும்; இங்கு இவள் நீர்மையிலே ஈடுபட்டிருக்கையாலே, ஒரு பகல் அநேக கல்பமாய்த் தோற்றுமிறே. குணங்கள் தாம் கால்கட்டுகிறது குணமாய் அல்லவிறே; அவ்வாச்ரயத்திலே கிடந்தவையாயிறே. இங்குத் தர்மி குணாதிகவிஷயமாய் அதுக்குமேலே தீம்பானல் பாடு ஆற்றப் போகாதிறே. நாட்டார் போக்யதாபுத்தி பண்ணுகிற சப்தாதி விஷயங்களையப் பாதகமாக, ப்ராப்யவஸ்துவைப் பெறாதே, நடுவே ஆண்புலியான ஸ்ரீ பீஷ்மன் அர்ஜுனன் கையில் அம்புகளாலே உளைய ஏவுண்டு கிடந்து துடித்தாற்போலே கிடந்து துடிக்கிறார். 'தஸ்ய தாவதேவ சிரம்' என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது.

———0———

பத்தாந் திருவாய்மொழி (90)

"மாலை நண்ணித் தொழுது"

பிரவேச சங்கதி :—அவனைப் பெறவேணும் என்று மநோரதித்தார் "அறுக்கும் வினை"யிலே. மனோரதசமயத்தில் அபேக்ஷிதம் கிடையாமையாலே கிலேசித்தபடி சொல்லிற்று "மல்லிகை கமழ் தென்ற"லில். அதுதான் இராத்திரி வியசநமாய் நோவுபட்டபடியிறே. இப்படி மநோரதித்துப் பெறாமையாலே நோவுபடுகிற இவருடைய அவஸாதத்தை அநுஸந்

தித்து ஈச்வரன் 'நீரோ இப்படி மநோரதிப்பீரும் அது கிடையா மையாலே நோவுபடுவீரும்? உம்மைப் பெறவேணும் என்று மநோரதிப்போமும், கிடையாமையால் இழவுபட்டோமும் நாமன்றோ? உமக்கு ஒரு குறையுண்டோ? கலங்காப் பெரு நகரம் கலவிருக்கையாக இருக்க அவற்றைவிட்டுத் திருக் கண்ணபுரத்தே நாம் வந்து ஸந்நிதிபண்ணிற்றும் உமக்காக வன்றோ? இச்சரீராவஸாநத்திலே உம்முடைய அபேக்ஷிதம் செய்யக்கடவோம்' என்று சமாதானம்பண்ண, சமாஹிதராய், இவரும் ஹ்ருஷ்டராகிறார்.

அவன் படி இதுவானபின்பு, சர்வேச்வரன் சர்வ சமாஸ்ர யணீயனாய்க் கொண்டு திருக்கண்ணபுரத்திலே சந்நிதிபண்ணி னான்; எல்லாருமொக்க அவனை ஆச்ரயித்து அவன் திருவடி களிலே பக்தியைப் பண்ணுங்கோள்; பக்திக்குப் பரிகரமில் லாதார் பிரபத்தியைப் பண்ணுங்கோள்; அதுக் கீடான அத்ய வஸாயமில்லாதார் உக்திமாத்ரத்தை யாகிலும் பண்ணுங் கோள்; அவ்வளவே கொண்டு அவன்தான் கைவிடான்; ஆனபின்பு எல்லாருமொக்க அவனை ஆச்ரயியுங்கோள் என்று பரோபதேசத்திலே பிரவ்ருத்தராகிறார்.

மோஹித்துக் கிடந்தாராகில் கிடக்குமித்தனை போக்கி, உணர்ந்தாராகில் பிறர்க்கு ஹிதம் சொல்லியல்லது நிற்க மாட்டார்.

சரீராவஸானத்திலே உம்முடைய அபேக்ஷிதம் செய் கிறோம் என்று ஈச்வரன் சொன்ன இடமும், அதுகேட்டு இவர் ஹ்ருஷ்டரான இடமும் கூடாது; பிராரப்த கர்மாவஸா நத்திலேயன்றோ மோக்ஷம் என்று வேதாந்தங்களில் வாசனை? என்னில், இத் திருவாய்மொழிதன்னிலே, 'பக்தியைப் பண் ணுங்கோள்' என்றும், 'அது மாட்டாதார் பிரபத்தியைப் பண்ணுங்கோள்' என்றும், சொல்லிற்றிறே. அதில் உபாச கனைப் பற்றச் சொல்லுகிறது. இதில் பிரபந்நனைப் பற்றச் சொல்லுகிறது. ஆனால் 'தஸ்ய தாவதேவ சிரம் யாவந் நவி மோக்ஷயே' என்கிற வாக்யமன்றோ இவ்வர்த்தத்தைச் சொல்லுகிறது. இதுதான் சரீராவஸானத்தைப்பற்றச் சொல் லுகிறதோ, கர்மாவஸானத்தைப் பற்றச் சொல்லுகிறதோ? என்று சங்கித்து, கர்மாவஸாநத்தைப் பற்றச் சொல்லுகிற தென்று சித்தாந்தித்ததில்லையோ? அத்தோடு விரோதி யாதோ? என்னில்,

நியாயாநுக்ருஹீதமாயிறே வாக்யம் அர்த்தம் பிரத்யாயக மாவது. உபாஸகனுக்குத் தான் பற்றின உபாயம் முற்றிப் பலிக்கவேண்டுகையாலே அவ்வளவும் நியாயம் நடக்கும். இவன் முதலடியிலே 'என்னுடைய சர்வபரத்துக்கும் கடவாய் நீ' என்று அவன்பக்கல் பரந்யாஸம் பண்ணினவனிறே. 'இவன்தான் செய்கிறது ஒன்று உண்டாய் அது பக்வமாய்ப் பெறவேணும்' என்னும் விளம்ப ஹேதுவுமில்லை; இவன்தான் பரந்யாஸம் பண்ணின ஈச்வரனுக்கு அசக்தியுண்டாய் அது விளம்ப ஹேதுவாகிறதுமன்று. ஆக, இப்படி நியாயங்கள் காட்டினவாறே இவனுக்கு சரீராவஸாநத்திலே பேறுகத் தட்டு இல்லையிறே. இனி "பகவந்தம் ப்ரபந்நா ஸா பகவந்த மவாப ஸா" என்று மாதவி பிரபத்தி பண்ணின அனந்தரம் பெற்றாள் என்று சொல்லாநின்றதிறே. முத்கலோபாக்யானத் திலே நரகானுபவம் பண்ணுகிறவர்கள் பகவந்நாம சிரவணத் தாலே அநந்தரம் முக்தரானார்கள் என்றதிறே; அவதார ரஹஸ்ய ஜ்ஞானமுடையவன் இச்சரீராவஸானத்திலே பெறக் கடவன் என்று சொல்லாநின்றதிறே; "த்யக்த்வாதேஹம்", "ஸர்வபாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி" என்றும் சொல்லிற் றிறே.

ஆனால், பிரபத்திபண்ணின அனந்தரத்திலே பகவத் பிராப்தியாக வேண்டாவோ? 'விரோதியைப் போக்கி உன் திருவடிகளைத் தரவேணும்' என்று இவன் அபேக்ஷித்த அநந் தரம் விரோதி போகாதேயிருக்கிற இருப்பு, கர்மசேஷத்தா லேயோ, ஈச்வரன் வைக்கிறானவதாலேயோ? என்னில், ஈச்வ ரன் வைக்கிறானாகில் சில தோஷம் பிரஸங்கிக்கும்; அவன் தான், 'நம் விரோதியை நடுவே துண்டித்து அவ்வருகே கொடு போகிறேன்' என்று சொன்னத்தோடும் விரோதிக்கும். ஆன பின்பு, கர்மவச்யரோபாதி இவனும் துக்காத்யனுபவம் பண்ணி யிருக்கையாலே கர்மத்தாலேயாமித்தனையன்றோ? இனி, கர்மம் நடையாடக் கடவதானால் அவ்வளவும் போகத் தட்டு என்? என்னில், இவன் பிரபத்தி பண்ணின அனந்தரம் முக்தனுமாகில் இது தன்னை நச்சுப்பொய்கையாக நினைத்து அஞ்சி ஆள் பற்றாது; இனி இவனை சிலநாள் இங்கே இருத்தவே பீஷ்மரையிட்டு நாட்டுக்கு வெளிச்சிறப்புப் பண்ணிக்கொடுத் தாற்போலே, இவன் சிலர்க்கு உபதேசித்தும், இவன் விருத்தம் கண்டு திருந்துவாருமாய் இங்ஙனே சில நன்மைகளுக்கும் உடலாயிருக்கும்;

இனித்தான், 'இவன் தன்னைத் தந்த சரீரம் அன்றோ' என்று இச் சரமசரீரத்தை ஈச்வரன் தானாக உபேக்ஷிக்கவும் மாட்டான்; இவன் தான் பிரபத்திபண்ணுகிற ஸமயத்திலே 'இப்போதே விரோதி போய் உன் திருவடிகளைப் பெற வேணும்' என்னும் துவரையும் இவனுக்கு உண்டாகச் சம்பாவனை இல்லை; முகம் பழகினது ஆகையாலே இத்தை விட என்றால் கடுக இசையான்; இனி ஒரு சரீரபரிக்ரஹம் பண்ணுதல், கர்ப்பவாஸம் பண்ணுதல் செய்யாதொழியவேணும் என்னுமளவாய்த்து இவனுக்குண்டாகில் உள்ளது. ஆகையாலே தத்க்ரது நியாயத்தாலே அப்படியே பேறாயிருக்கும்.

இவனுடைய நினைவையும் பற்ற 'இவன்தான் இதிலே சாபலம் பண்ணியிருந்தானாகில் நாலுநாள் இருந்திடுவானுக்கு' என்றிருக்கும் ஈச்வரன். ஆனால், இங்கிருக்கும் நாலுநாளும் ஆதி வியாதிகளுக்கு இடங்கொடாதபடி அல்லாதாரில் வியாவ்ருத்தி தோற்ற இவனை சுகோத்தரனாக வையாதொழிவான் என்? நாட்டாரோபாதி ஒன்றை இழந்தபோதாகச் சோகித்தும், ஒன்றினுடைய லாபம் உண்டானபோது ஹ்ருஷ்டனானாற்போலே இருந்தும் போரும்படிக்கு ஈடாக வைக்கிறது என்? என்னில், இவன்தான் இவ்விரோதியைப் போக்கி உன்னைத் தரவேணும் என்றே அபேக்ஷிக்கிறது; இது தண்ணிது என்று அறியாநிற்கச் செய்தேயும் விடமாட்டா திருக்கிறவன் இதில் சுகோத்தரனாக்கி வைக்குமன்று இது தானே நன்றாயிருந்ததாகில் இன்னம் சிலநாள் இதுதானே அநுவர்த்தித்திடுக என்றிருக்குமிறே. இவனுடைய இச்சைக் கீடாக வைக்குமன்று இன்னம் ஒரு சரீரத்தில் இவனுக்கு ருசியுண்டாகவுங்கூடுமே; ஆகையால் இவனுடைய ஹித பரனாய் இவன் இருந்தபடியிருக்கிறான் என்றிருக்கும்.

ஆகையால் முகம் பழகின இச்சரீரம் தன்னடையே கழிந்து, இனி ஒரு சரீரத்திலே ருசி பிறப்பதற்கு முன்னே ஈச்ரவனுக்குக் காரியம் செய்து கலைக்கட்டலாயிருக்கும்; முகம் பழகினது தன்னடையே கழிந்துகொடு நிற்கும்; மேல்வரப் புகுகிறது அறியாமையாலே இதில் ருசியில்லை; இதுதான் பொல்லாது என்று போலியாக அறிந்தும் வைக்குமே. இவன் முதலிலே இத்தைத் தவிர்த்துத் தரவேணும் என்று ஒரு வார்த்தை சொல்லிவைக்கையாலே அவனுக்கு அபுருஷார்த்தம் செய்தானாகவும் வேண்டாவிறே. இனி, சரம தசையிலே

காஷ்டபாஷாண ஸந்நிபமாய் இருக்குமிறே. ஆகையாலே முதற்சொன்ன வார்த்தைகொண்டு இவன் விலக்கமாட்டாத வளவிலே ஈச்வரன் கார்யம் செய்து தலைக்கட்டும். 'அசித் கல்பனாய்க் கிடக்கிறவன் தலையிலே ஒரு தேவை இடேன், நானே நினைக்கக் கடவன்' என்று சொல்லிவைத்தானிறே.

இச் சுலோகத்வயமும் எம்பெருமானுடைய சர்வஸ்வம் என்று சொல்லக்கடவது. "ஸ்திதேமநஸி."

———0———

பத்தாம் பத்து

முதல் திருவாய்மொழி (91)

"தாள தாமரை"

பிரவேச சங்கி:—"நாளேல் அறியேன் எனக்கு உள்ளன" என்றார்; "மரணமானால்" என்று அறுதியிட்டுக் கொடுத்தான் ஈச்வரன். அவன் செய்கிறோம் என்று தலைதுலுக்கினால் அது பெற்றதாய் மேல் நடக்கலாம் படியாயிருக்குமிறே காரியம். ஆகையாலே, காலாவதி பெற்றாராய்ப் போக்கிலே ஒருப்பட்டார்; ஒருப்பட்டுப் போமிடத்தில் முகம் பழகின தேஹத்தை யும் நெடுநாள் வாசனைபண்ணின பந்துக்களையும் விட்டுத் தனியேயாய், போகிற இடந்தான் கண்டறியாத நிலமாய், நெடுங்கை நீட்டாய், அவித்யா கர்மவாஸநா ருசி பிரக்ருதி சம்பந்தங்களாகிற பிரதிபந்தகங்கள் குவாலாய், இவற்றை யடையப் போக்கி வழித்துணையாய்க் கொடுபோம்போது, பிராப்யபூமியளவும் செல்ல, நடுவுண்டான விரோதிகளைப் போக்கிக் கொடுபோகைக்கீடான விரகறியுமவனாய் விரோதியை இருதுண்டமாக்கவல்ல சக்திமானாய் உள்ள சர்வேஶ்வரன் தன்னையே பற்றவேணும்.

"மாதா பிதா ப்ராதா" இத்யாதியாலே, அவனே சர்வவித பந்துவுமாகச் சொல்லா நின்றதிறே: "எம்மானும் எம் மனையும்" இத்யாதி. ராகாந்தராய் பிரஜையைப் பெற்று யௌவந விரோதி என்று மாதாபிதாக்கள் பொகட்டுப்போக, இவன் வாசனை பண்ணின முகத்தாலே, 'அம்மே!' என்ற போதாகப் பெண்குரலாலே ஏன் என்றும், 'அப்பா!' என்ற போது ஆண் குரலாலே ஏன் என்றும் இப்படி முகங்கொடுத்துத் "தஞ்சமாகிய தந்தை" என்கிறபடியே ஆப்தனாய், சேஷியாயிருக்கையாலே பிராப்தனுமாய், காளமேகமே வழித்துணையென்று அத்யவஸித்து, அருநிலங்களிலே வழிபோவார் மிடுக்கராயிருப்பாரைக் கூட்டிக்கொண்டு தம் கைப்பொருள்களை அவர்கள் கையிலே கொடுத்து அமர்ந்த நிலத்திலே சென்றவாறே வாங்கிக்கொள்ளுமாப்போலே, சரீர விச்லேஷ சமயத்தில் இவன்பக்கல் ஆத்மநிக்ஷேபத்தைப் பண்ணி

பிராப்யபூமியிலே புக்கால் நமக்கு ஆக்கிக்கொள்ளுகிறோம் என்று அவனை வழித்துணையாகப் பற்றுகிறார்.

இவன் சரீரத்தோடேயிருக்கும் நாளிலே ஹிதசிந்தை பண்ணினானேயாகிலும் இவனுடைய பூர்வவிருத்தத்தைப் பார்த்தால் இவன் தான் தனக்குத் துணையாக மாட்டேனே.

———(0)———

இரண்டாந் திருவாய்மொழி (92)

— :: —

" கெடுமிடராயவெல்லாம் "

பிரவேச சங்கி :—" ஒரு நல் சுற்றம் " என்கிற திருமொழியிலே பல திருப்பதிகளையும் அருளிச்செய்ததுக்குக் கருத்து என்? என்று **சீயர் பட்டரைக்** கேட்க, பிறந்தகத்தினின்றும் புக்ககத்துக்குப் போம் பெண்பிள்ளை பந்துக்கள் இருந்த இடமெங்கும் புக்குக் கண்டு வினவிப் போமாப் போலே பிராப்ய பூமி அணித்தானவாறே திருப்பதிகள் தோறும் புகுகிறார் என்று அருளிச்செய்தார். இவரும் அப்படியே திருப்புளிங்குடியிலே புகுவது, திருக்காட்கரையிலே புகுவது, திருமூழிக்களத்திலே புகுவது, திருநாவாயிலே புகுவது, திருக்கண்ணபுரத்திலே புகுவது, திருமோகூரிலே புகுவது, திருவனந்தபுரத்திலே புகுவது ஆகிறார். பிராப்ய பூமிக்குப் போவதாக ஒருப்பட்டு நடுவே உள்ள பிரதிபந்தங்களைப் போக்கி வழி கொடுபோய் விடுகைக்குக் காளமேகத்தைத் துணையாகப் பற்றினார் கீழ்;

அவ்வளவு தான் நமக்குப் போகவேணுமோ, நமக்கு இங்கே திருவனந்தபுரம் பிராப்யமாயிருக்க என்று திருவனந்தபுரத்தைப் பிராப்யமாக அத்யவஸித்து, அத்தேசம் தான் வாசமே கமழும் சோலை வயலணி அனந்தபுரம் ஆகையாலே அவன் தனக்கும் விரும்பி வர்த்திக்க வேண்டும்படி நிரதிசய போக்யமுமாய், அவன் வர்த்திக்கையாலே சம்சார துரிதம் தட்டாத இடமுமாய், இச் சரீர ஸம்பந்தமற்று அவ்வருகே போனால் செய்யும் அடிமையை ருசி பிறந்தபோதே இங்கே செய்யும்படியுமாய், " அமரர்கோன் அர்ச்சிக்கின்று அங்கு அகப்பணிசெய்வர் விண்ணோர்"என்கிறபடியே நித்யசூரிகளும்

வந்து அடிமை செய்கிற தேசமாகையாலே, "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ" என்று ஆசைப் பட்டபடியே அவர்களோடே கூடவுமாய், அவ்வருகே போக வேண்டிற்றாகிலும், '"பெரியோரை ஒருகாலும் பிரிகிலேன்" என்கிறபடியே அவர்களோடே போகவுமாய் இருக்கிற திரு வனந்தபுரத்துக்கு நம்மோடு சம்பந்தமுடைய அநுகூலஜநங்க ளடையப் போய்த் திரளுங்கோள் என்கிறார்.

———o———

மூன்றாந் திருவாய்மொழி (93)

"வேய்மரு தோளிணை"

பிரவேச ச்ங்கி:—ஸ்ரீ வைஷ்ணவர்களும் தாமும் திரு வனந்தபுரத்திலே புக்குப் பாரித்தபடியே அப்பொழுதே போய்ப் புகப் பெறாமையாலும், பாரித்தபடி அடிமை செய்யப் பெறாமையாலும், தமப்பன் பகையாக அவனிலும் இவன் அண்ணியன் என்று வர நின்ற பிரஹ்லாதனிறே முடிவிலே வந்து எதிரிட்டான்; பிராந்தனுக்குப் பிறந்த தெளிவு போலே அசித்ஸம்ஸ்ருஷ்டனுக்குப் பிறக்கும் ஜ்ஞானத்தை விச்வ ஸிக்க ஒண்ணாது என்று பிரகிருதி சம்பந்தத்தை நினைத்து, "தேறேல் என்னை" என்று அஞ்சின அச்சத்தாலும், சிசு பாலனுக்குத் தன்னைக் கொடுத்து ஸ்ரீ பரதாழ்வானுக்கு மறுத்துப் போந்த ஸ்வாதந்த்ரயத்தாலும், ஈச்வரன் தானே வந்து விஷயீகரிக்கைக் கீடான பக்தி தமக்கு இல்லையென் றிருக்கையாலும், பயநிவ்ருத்திக்கு உடலானவை தானே பயஹேதுவாய் இன்னமும் பிரக்ருதியிலே வைக்கில் செய்வது என்? என்று அவஸந்நராக,

அவனும் இப்போதே அத் தேசத்திலே போய்ப் புகப் பெற்றிலோம் என்று அஞ்ச வேண்டா, பக்தி பாரவச்யத் தாலே இப்போது அடியிடமாட்டா தொழிகிறீர்; அடிமை செய்யப் பெற்றிலோம் என்று அஞ்சவேண்டா, "புகழு நல் லொருவ"னிற்படியே ஒன்றையே எல்லா அடிமையாகக்கொள் ளும் ஸ்வபாவனுகையாலே நீர் நினைத்தவற்றையும் சொன்ன வற்றையும் எனக்கு அடிமையாகக் கொள்வன்; அசித் ஸம் ஸர்க்கத்தை அநுஸந்தித்து அஞ்சவேண்டா, நீர் "முடி

யானே''யிற் கரணங்களையுடைய ராகையாலே; அவன் ஸ்வா தந்த்ரயத்தை நினைத்து அஞ்ச வேண்டா, 'ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று விரோதியைத் துண்டித்துக் கொடு போகைக் கூடலாயிருக்கையாலே; பத்தி இல்லை யென்று அஞ்சவேண்டா - பிரபந்ந ராகையாலே.

பிரத்யக்ஷமும் அகிஞ்சித்கரமாய், கூடவிருக்கச் செய்தே பிரிந்தான் என்று பிரமிக்கும்படி பிரிவால் வந்த வாஸனை மேல் கொண்டுவந்த அச்சத்தைப் பரிஹரித்தபடியை, கலந்து நெடுநாள் பிரிந்து போந்தாள் ஒரு பிராட்டி, அவ்வாஸனை யாலே கிருஷ்ணன் கூட இருக்கச் செய்தேயும் இவன் பண்டு பிரிந்து போந்த பிரபாத காலமும் வந்து, அக் காலத்துக்கு அடைத்த காற்றுக்கள் அடிக்கையாலும், குயில் கூவுகை யாலும், மயில் ஆலுகையாலும், காடு எங்கும் பசுக்களும் கன்று களும் பரம்புகையாலும், "இக் காலத்தில் இவன் போகை தவிரான், பசுக்களினுடைய ரக்ஷணம் ஒரு தலையானால் அவற்றை விட்டு நம்மோடு இருப்பான் ஒருவன் அல்லன்; ஆனபின்பு அவன் போனான்" என்று, கூட இருக்கச் செய் தேயும் இவன் பிரிவை நிச்சயித்து ஒரு "இன்னுயிர்ச் சேவல்", "மல்லிகை கமழ் தென்றல்" தொடக்கமானவற்றில் அவன் அஸந்நிதியில் பட்ட கிலேசத்தை அவன் கண் முகப்பே பட்டு, சர்வ சக்தியான அவன் தனக்கும் பரிஹரிக்க வொண்ணாத படி ஆயிற்று இவ் ஆபத்து. அதாவது-போனானைய் வருகிறான் அல்லன், போக நினைத்தானைய்த் தவிருகிறான் அல்லனே.

இப்படி நோவுபட்டு நீ சர்வசதா பசுமேய்க்கப் போகைத் தவிராய்; உன் போக்கு எனக்கு அநபிமதம்; ஆகையாலே நீ போகா தொழியவேணும்; காட்டில் அஸுர ராக்ஷஸர் களாலே என் புகுகிறதோ என்று அஞ்சாநின்றேன்; ஆன பின்பு உன் போக்கில் நான் உளனாகமாட்டேன் என்று யசோதாதிகளைப் போலே நோவுபட, அவனும் தன் போகா மையை இவள் நெஞ்சிலே படுத்தித் தரிப்பித்தபடியை அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

அவன் சர்வவித பந்துவாய் இருக்குமா போலே இத் தலைக்கும் ஸம்பந்த ஜ்ஞானம் பிறந்தால் எல்லாப் பிரிவுகளும் உண்டாயிருக்குமிறே. 'யதா யதாஹி' இத்யாதி. இதில் தாதர்த்யத்தினுடைய எல்லை இருக்கிறபடி சொல்லுகிறது. "எம்மாவீட்"டிலே 'தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே'

என்று நிஷ்கரித்தது ஒன்று உண்டிறே; அத்தை அழிக்கிற தாயிற்று இங்கு. என்னைக் கொள்ளவேண்டும் என்றிறே அங்குச் சொல்லிற்று. என்னோடு கலக்கவுமாம், வேறு சிலரோடு கலக்கவுமாம்; அங்குத்தைக் குறை தீருமத்தனையே வேண்டுவது என்கிறது இங்கு. இனி அந்தத் தத்வம்தானே பிராப்யமாயிருக்குமிறே.

———(o)———

நான்காந் திருவாய்மொழி (94)

"சார்வே தவநெறிக்கு"

பிரவேச சங்கி :—தம்மைப் பிரிய நினைவின்றிக்கே இருக்க அதிசங்கையாலே பிரிந்தார் படும் வியசனத்தைப்பட்டு, அத்தாலே அவஸந்நரான இவரை, 'உம்மை ஒருநாளும் பிரியோம்' என்று அவன் ஆச்வஸிப்பிக்க அத்தாலே தரித்து மிகவும் பிரீதரானார் கீழ். முதல் திருவாய்மொழியில், தத்துவ விஷயமாகச் சொல்ல வேண்டுவதெல்லாம் சொல்லியற்றது; இனி அந்தத் தத்துவந்தான் பிராப்யமாயிறே இருப்பது; "அமரர்கள் அதிபதி-தொழுதுஎழு"என்றுஅதில்சொன்ன பிராப்ய வேஷத்தையும் பிராப்திபலமான கைங்கர்யத்தையும் "படமுடையரவில் பள்ளி பயின்றவன்" என்றும், "கடைத்தலை சீய்க்கப் பெற்றால்"என்றும் அநுஸந்தித்தார். "கெடுமிட"ரிலே, அந்தப் பிராப்யம் அப்போதே கைபுகுரப் பெறாமையாலும் நெடுநாள்படப் பிரிந்துபோந்த வாசனையாலும் வெருவி இவர் அவசந்நராக, இவர்க்குப் பிராசங்கிகமாகப் பிறந்த அவஸாதத்தை அநுசந்தித்து அவனும் அதனைப் போக்கித் தரிப்பிக்க ஆச்வஸ்தராய் நின்றார்"வேய்மருதோளிணை"யிலே. ஆக முதல் திருவாய்மொழியில் தத்துவ விஷயமாகச் சொல்லவேண்டுவதெல்லாம் சொல்லி, அதுதானே பிராப்யமாயிருக்கையாலே அத்தைப் பெறுகைக்குப் பிரபத்தி த்வாரா உபாயமாக சாத்யபக்தி யோகத்தை "வீடுமின் முற்ற"த்திலே சொல்லி, அந்தப் பக்திமான்களுக்கு அவன் சுலபனாயிருக்கும் என்று அவன் சௌலப்யத்தைப்"பத்துடையடியவ"ரில் சொல்லி,ஆக, வீடுமின் முற்றத்திலும் பத்துடை யடியவரிலும் சொன்ன பக்தியானது ஸ்வஸாத்யத்தோடே (பலம்) பொருந்தினபடியையும், அத்திருவாய்மொழிகளில் பக்தி வர்த்தகமாகச்

சொன்ன "உரலினேடிணைந்திருந்து, புயல் கருநிறத்தனன், பிறர்கட்கரிய வித்தகன்"என்று சௌலப்யாதி குணத்தையும், "தாமோதரன்" "கார்மேகவண்ணன்" "காண்டற் கருமையன்" என்று பராமர்சியாநின்றுகொண்டு தம்பேற்றுக்கு உபாயமாக முதல் திருவாய்மொழியிலே சொன்ன (அருளினன்) பிரபத்தியோடே தலைக்கட்டுகிறுர் இதில்.

இவ்விரண்டுகோடியும் இவர்க்கு உண்டாயிருக்கச் செய்தேயும் தம்முடைய பேற்றுக்கு உடலாக இவர்நினைத்திருப்பது பிரபத்தியையிறே. இனித்தான் இவருடைய பக்தி வேதாந்த விஹிதையான பக்தியல்ல. அதுவாகில் அபசூத்ராதிகரண நியாயம் பிரஸங்கிக்கும். அதுதான் இவ்வாழ்வாருடைய பிரபாவத்தாலே கூடாதோ? எனில், "அருளினன்" என்கிற இவருடைய உக்திகளோடு விரோதிக்கும். "உபயபரிகர்மித ஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திக பக்தி யோகைகலப்ய:" என்று கர்மஜ்ஞானங்களாலே சம்ஸ்க்ருதாந்த: கரணனுக்குப் பிறக்குமதிறே பக்தியாகிறது. அந்த கர்மஜ்ஞானங்களினுடைய ஸ்தானே பகவத் பிரஸாதமாய், அதுக்கு அனந்தரமான பரபக்தி தொடங்கிப் பிறந்ததாயிருக்கும் இவர்க்கு.

இனித்தான் இவர் வழியே போய் இவர் பேறே பேருக நினைத்திருந்த ஸ்ரீ பாஷ்யகாரரும், பிரபத்தியைப் பண்ணி, பின்னை பக்தி தொடங்கிப் பிரார்த்தித்தாரிறே. அவன் உபாயமானாலும் இவனுக்கு ருசி இல்லாதபோது புருஷார்த்தமாகாதிறே. பிராப்யம் இன்னதென்று நிஷ்கர்ஷித்து, அந்தப் பிராப்ய ருசி கண்ணழிவற உடையவனுக்கிறே அவன் பிராபகனுவது. ஆகையாலே இவருடைய பக்தி பிரபத்திகள் விகல்பிக்கலாம் படியிறே இருப்பது. க்ருபையே உபாயம் என்கையாலே பிரபத்தியே இவர்க்குள்ளதென்றும், ஆர்த்தியின் மிகுதியாலே பிரபத்தி பண்ணுகிற வித்தைப் பார்த்தால் பக்தியென்று விபஜித்துச் சொல்லலாம்.

இங்ஙன் அன்றிக்கே ஒருருவிலே 'நீ பசுமேய்க்கப் போகவேண்டா' என்ருள், 'ஆகில் தவிர்ந்தேன்' என்ருன்; இவன் தனை சுலபன் இல்லைகிடீர், இவன் பக்தி லப்யன் என்னுமிடம் நிச்சிதம் என்கிருள் என்று **பிள்ளான்**. வீடுமின் முற்றத்திலும், பத்துடையவரிலும் பிறர்க்கு உபதேசித்த பக்தி, தம்முடைய பேற்றுக்கு உடலாயிருந்தபடியைச் சொல்லி, இதுதான் ஸ்வ

சாத்தியத்தோடே சேர்ந்தபடியைச் சொல்லி நிகமிக்கிருர் இதில். சாத்யத்தோடே சேர்ந்திருப்பது பிராப்தியுண்டானலன்றோ என்னில், சாக்ஷாத்கார ரூபமான அனுஸந்தானமுண்டாக அமையுமிறே இப்போது; கீழும் இது உண்டேயாகிலும் "முனியே நான் முகனே" அணித்தாகையாலே அவற்றைப் பற்ற மாநஸாநுபவத்துக்குப் பிறந்த வைசத்யமுண்டு இங்கு என்று **எம்பெருமானர்.**

முதல் திருவாய்மொழியில் சொன்ன பிராப்யத்துக்குப் பிராபகமாக வேதாந்தங்களில் பக்தியென்றும் பிரபத்தியென்றும் இரண்டு உபாயங்களை விதித்தது; அவை இரண்டிலும் த்ரைவர்ணிகாதிகாரம் பக்தி; பிரபத்தி சர்வாதிகாரம். த்ரைவர்ணிகாதிகாரமான பக்தியைப் பத்துடையடியவரிலும், சர்வாதிகாரமாய்த் தம் திருவுள்ளத்தாலே தமக்கு உபாயமாக அங்கீகரித்த பிரபத்தியை வீடுமின் முற்றத்திலும் அருளிச்செய்தார். இரண்டு திருவாய்மொழியாலும் அருளிச்செய்த பக்தி பிரபத்திகள் ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியைச் சொல்லுகிருர் "சார்வே தவநெறி", "கண்ணன் கழலிணை" இரண்டாலும். "சார்வே தவநெறி" என்று தபஸ்சப்தத்தாலே பிரதிபத்தியைச் சொல்லுகிறது. "பண்டே பரமன் பணித்த பணிவகையே கண்டேன் கமல மலர்ப்பாதம் காண்டலுமே விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்", "இருமை வினை கடிந்து இங்கென்னை யாள்கின்ருன்" என்றும் "மாமேகம் ஶரணம் வ்ரஜ, ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்ற அர்த்தத்தை அருளிச்செய்தார் என்று **ஆளவந்தார்.**

இன்னமும், முதல் திருவாய்மொழியில் சொன்ன பிராப்ய ஸ்வரூபத்தையும் பிராப்தி பலமான கைங்கர்யத்தையும் "கெடுமிட"ரிலே "படமுடையரவிற் பள்ளி பயின்றவன்" என்றும் "கடைத்தலை சீய்க்கப்பெற்ருல்" என்றும் அருளிச்செய்து, அக்கைங்கர்யத்தில் களைபறித்து, "உன்தன் திருவுள்ளம் இடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும்" என்று உத்தரகண்டத்தில் நமஸ்ஶப்தார்த்தத்தை அருளிச்செய்து, "கெடுமிடரா"லும், "வேய்மருதோளிணை"யாலும் முதல் திருவாய்மொழியை நிகமித்து, "சார்வே தவநெறி"யாலும், "கண்ணன் கழலிணை"யாலும், வீடுமின் முற்றத்திலும் பத்துடையடியவரிலும் சொன்ன பிரபத்தி பக்திகள்

ஸ்வஸாத்யத்தோடே பொருந்தின்படியை அருளிச்செய்கிறார் என்று **ஆளவந்தார்.**

முதல் திருவாய்மொழியின் நிகமனம் "கெடுமிடர்"; "வீடுமின் முற்றவும்", "பத்துடை அடியவர்" இரண்டும் சாத்ய பக்தி பரம்: ஏதந்நிகமனம்; "சார்வே தவநெறி"; "வேய்மரு தோளிணை" பிராஸங்கிகம் என்று எம்பெருமானார். முதல் திருவாய்மொழியின் நிகமனம் "கெடுமிடர்", "வேய்மருதோளிணை" இரண்டும்; "வீடுமின் முற்றவும்" பிரபத்திபரம்; "பத்துடையடியவர்" ஸாதன பக்திபரம்; ஏதந்நிகமனம் "சார்வே தவநெறி", "கண்ணன் கழலிணை" இரண்டும் என்று **ஆளவந்தார்.** "வேய்மருதோளிணை"யோடே நேரே சங்கதி **பிள்ளான்.**

———0———

ஐந்தாந் திருவாய்மொழி (95)

———:———

"கண்ணன் கழலிணை"

பிரவேச சங்கி :—"நாளேல் அறியேன்" என்ன, இவர்க்கு "மரணமானல்" என்றிறே நாளிட்டுக்கொடுத்தது; அத்தனை கிரமம் பொறுக்க மாட்டாதே ஈச்வரன் தம்மைக் கொடு போகையிலே த்வரிக்கிறபடியைக் கண்டு, நமக்குப் போக்குத் தவிராது ஆனபின்பு, இவர்களுக்கு பக்திமான்களுடைய பரிமாற்றமிருக்கும்படியும் அறியவேண்டுவ தொன்றுகையாலே அத்தை உபதேசிப்போம் என்று பார்த்து அவன் த்வரிக்கையாலும், கேட்கிறவர்களுடைய பிரதிபத்திக்கு விஷயமாக வேணும்என்னுமத்தாலும்,பாசுரப் பரப்பு அறும்படி சுருங்கக் கொண்டு பத்திக்கு ஆலம்பனமான திருநாமத்தைச் சொல்லி, இதில் இழிவார்க்கு அநுஸந்திக்கப்படும் மந்திரம் இன்னதென்றும், அதில் அர்த்தாநுஸந்தானமே மோக்ஷ சாதனமென்றும், அவ் வழியாலே பக்தியைப் பண்ணுங்கோள் என்றும், கரணத்திரயத்தாலும் அவனை ஆஶ்ரயியுங்கோள் என்றும், இப்படி ஆஶ்ரயிப்பார்க்கு அவன்தான் சுலபன் என்றும், அதில் இழியவே விரோதிகளடையப் போம் என்றும் இப் புடைகளிலே சொல்லி, நாம் இன்னமும் சிலநாள் இங்கே இருக்கிறோ மன்றிக்கே போக்கு அணித்தான பின்பு, எல்லாரும் இத்தைக் கொள்ளுங்கோள் என்று உபதேசித்து, அத்தோடே தடங்கின பரோபதேசத்தைத் தலைக் கட்டுகிறார்.

———0———

ஆறுந் திருவாய்மொழி (96)

—— :: ——

"அருள்பெறுவார் அடியார்"

பிரவேச சங்கி:—"பொய்ந்நின்ற ஞானம்" தொடங்கி இவ்வளவும் வர, ஈச்வரனை ஆழ்வார் தொடர்ந்தபடி சொல்லிற்று. இது தொடங்கி ஆழ்வாரை ஈச்வரன் பின் தொடர்ந்த படி சொல்லுகிறது. இப்படிப் பக்தி ஸ்வரூபத்தை உபதேசித்துக் கையொழிந்த அனந்தரம் தன் பக்கல் இவர்க்கு விடாய் பெருகி வருகிறபடியைக் கண்டு இவர்க்கு முன்பே விடாய்த்துத் திருவாட்டாற்றிலே தங்கு வேட்டையாக வந்து நிற்கிறவனாகையாலே இவரைக் கொடுபோகையிலே அவனுக்குத் த்வரை மிக்கது; இவர் அளவல்லவிறே அவனுடைய விடாய். 'நஜீவேயம் க்ஷணமபி' என்னும் ஏற்றமுண்டிறே.

ஆழ்வாரும் நாமுமாய் அனுபவிக்க வேணும் என்று பாரித்து, அது செய்யுமிடத்தில், அவ் வநுபவத்துக்கு ஒரு விச்சேதம் வாராதபடி ஏகாந்தமாய் இருப்பதொரு தேச விசேஷத்திலே கொடுபோய் வைத்து அநுபவிக்க வேணும் என்று பாரித்து, அது செய்யுமிடத்தில் இவர்க்குப் பரதந்த்ரனாய் இவர் நியமித்தபடி செய்தோமாகவேணும் என்று இவர் அநுமதி யொழியச் செய்யமாட்டானாய் நின்றான்; சர்வேச்வரனைத் தாம் நியமிக்கமாட்டாரே, தம்முடைய பாரதந்த்ரியத்தாலே;

இப்படித் தம் பக்கல் அபிநிவேசாதிசயத்தைப் பண்ணுகிற அவனுடைய மேன்மையையும், தம் பக்கல் பரதந்திரனாய்த் தாழ நிற்கிறபடியையும் அநுஸந்தித்துத் தனக்கு உசாத் துணையாகச் சம்ஸாரிகளைப் பார்த்த விடத்தில் அவர்கள் சப்தாதி விஷயங்களிலே அநந்யபரராய் அவற்றோடே பணி போந்திருந்தார்கள்; அவன் தன்னைப் பார்த்தவிடத்தில் அபிநிவேசத்தாலே முன்னடி தோற்றாதே யிருக்கிறவனாகையாலே அவன் இதுக்கு ஆளாக மாட்டிற்றிலன்; இனி, இவ்விஷயீகாரத்துக்கு இலக்கான தாமும் தம்மோடு உடன் கேடான நெஞ்சுமேயாயிருந்தது. அந் நெஞ்சைக் குறித்து, அவன் மேன்மையையும், அம் மேன்மையுடையவன் நம் பக்கல் தாழ நின்ற நிலையையும், நாம் பெற்ற பேற்றின் கனமிருந்தபடியெல்

லாம் கண்டாயே! நம் காரியம் விழுந்தபடி கண்டாயே!! என்று திருவுள்ளத்தோடே கூட்டி இனியராகிறார்.

இதுக்கு முன்பெல்லாம் சர்வேச்வரனாகின்றான் - சர்வநியந்தாவாய் ஸ்வதந்த்ரனாயிருப்பான் ஒருவன் என்றிருந்தார்; இப்போது அங்ஙன் அல்ல-ஆச்ரித பாரதந்த்ர்யமே அவனுக்கு ஸ்வரூபம் என்கிறார். முன்பெல்லாம் தம்மாலே பாரதந்த்ர்யத்தை இழந்தார். இப்போது அவனாலே இழக்கிறார். அது தான் "இருத்தும் வியந்தில்" சொல்லிற்றில்லையோ என்னில், அதில் இதுக்கு வாசி உண்டு, "அடியார் தம் அடியனே" என்று ஹேதுவோடே அநுஸந்தித்தார் அங்கு.

ஏழாந் திருவாய்மொழி (97)

"செஞ்சொற் கவிகாள்"

பிரவேச சங்கி:—"விதிவகையே" என்கிறபடியே ஆழ்வார் விதித்தபடியே செய்வானும்படி இவர்க்குப் பரதந்த்ரனாய் வைத்துத் தன்னுடைய சாபலாதிசயத்தாலே "தலைமேல தாளிணைகள்" என்றும், "நறுந்துளவம் மெய்நின்று கமழும்" என்றும் சொல்லுகிறபடியே இவருடைய திருமேனியை மிகவும் விரும்பி, இத் தேஹத்தோடே பரமபதத் தேறக் கூடக் கொண்டுபோகையிலே அபிநிவேசித்திருக்கிறபடியைக் கண்டு, நாம் "பொய்ந்நின்ற ஞான"த்தை க்கழித்துத் தரவேணும் என்று அபேக்ஷித்த போதே செய்யாதொழிந்தது, நம்மைக் கொண்டு பிரபந்தம் தலைக் கட்டுகைக்காக என்றிருந்தோம்; அது வியாஜமாய்ச் சரீரத்தை விரும்புகிறானாயிருந்தது; இதுக்கு அடி நம்முடைய சரீரம் என்றும் த்வதநுபவ விரோதி யாகையாலே எனக்கு அநபிமதம் என்று அறிவித்து, இத்தைக் கழித்துத் தரவேணு மென்று பிரார்த்திக்க,

உம்முடைய உத்தேச்யத்தை நீர் விடாதே நின்றீரோ என்று அவன் நிர்ப்பந்திக்க, நீ என் பக்கல் உண்டான விருப்பமிறே நீ என் சரீரத்தை விரும்புகிறது. இது எனக்கு அத்யந்தாநபிமதம்; எனக்காக இதிலே நசையை விட்டருள வேணும் என்று சரணம்புக்கு இரக்க, தனக்கு இதை விடுகை பிரியமன்றிக்கே யிருக்கச்செய்தேயும், இவரைக் குறித்துப்

பரதந்திரனுகையாலே அப்படிச் செய்கிறேம் என்று இசைய, தனக்கு அபிமதமாயிருக்க நான் சொன்னபடி செய்வதே! இதொரு சீல குணமிருக்கும்படியே! என்று அவனுடைய சீலாதி குணங்களிலே அழுந்தி, இவ் விஷயத்தை அநுபவிக்க இழிவார் ஐச்வர்யத்திலே இழியப் பாருங்கோள், தந்தாமை வேண்டி யிருப்பார் அவனுடைய சீலாதி குணங்களிலே இழியாதே கொள்ளுங்கோள்; இழிந்து நான் பட்டதுவே அமையும் என்று ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே பிறர்க்குச் சொல்லித் தலைக் கட்டுகிறுர்.

—:—

எட்டாந் திருவாய்மொழி (98)

—:—

" திருமாலிருஞ்சோலை "

ப்ரவேச சங்கி:—தம்மைக் குறித்துச் சர்வேச்வானுக்குண்டான பாரதந்த்ர்யத்தைப் பேசினுர் " அருள்பெறுவார் அடியா"ரில். அத்தை முடிய நடத்தினபடி சொன்னுர் "செஞ்சொற் கவி"யில். இவரைத் திருமேனியோடே கொடுபோவதாகத் தேங்கின தேக்கமிறே நடுவுள்ளது; அதொழியக் கொடுபோவதாக அற்ற அன்றே பதறி, "செழும் பறவை தானேறித் திரிவான்" என்று இவரை விஷயீகரித்தபடியே ஆதிவாஹிகரை வரக் காட்டாதே 'அஹம் ஸ்மராமி' என்கிறபடியே " கள்வன் கொல்"விற் பிராட்டியைப் போலே பெரிய திருவடி தோளிலே, " நானிலம்" இத்யாதிப்படியே சம்ஸாரமாகிற பாலை நிலத்தைக் கழித்துப் போந்தோம். "நச புநராவர்த்ததே" என்கிற தேசத்திலே புகுந்தோம் என்று தேற்றிக் கொண்டு தானே கொடுபோகையிலே பதறுகிறபடியைக் கண்டு, முதலிலே அத்வேஷத்தையும் பிறப்பித்து, அதுக்கு அடியாக விசேஷ கடாக்ஷம்பண்ணி இச்சையையும் பிறப்பித்து,தானே உபாயம் என்னும் புத்தியையும் பிறப்பித்து, அஸஹ்யாபசார பஹுளராயிருக்கிற தம்முடைய அபசாரங்களையும் பொறுத்து,விஷயங்களிலே ப்ரவணராய்ப் போந்த தம்மை "பல நீ காட்டிப் படுப்பாயோ" என்று தாமே சொல்லும்படி பண்ணி, தன்னுல் அல்லது செல்லாமையைப் பிறப்பித்துத் தானே வந்து அவ்வருகே கொடுபோவானுகத் துவரிக்கிறபடியை அநுசந்

தித்து, "இன்று இப்படி நம்மை ஆதரிக்கிற இவன் அநாதி காலம் நம்மைவிட்டு ஆறியிருந்தபடி எங்ஙனே? இன்று இப்படி ஆதரிக்கைக்கு ஹேது என்?" என்று பார்த்தார். தம் பக்கல் ஒரு ஹேதுவும் கண்டிலர். இப்பேறு தாம் அடியாக வந்ததொன்றல்லாமையாலே தம்பக்கல் ஒருவாசி கண்டிலர்; "இனி சர்வஜ்ஞனை அவனுகிலும் இதற்கு ஒரு போக்குச் சொல்லுமாகில் அவனைக் கேட்போம்" என்று பார்த்து,

"இன்று இப்படி சிரஸா வஹிக்கிற தேவர் முன்பு அநாதி காலம் இத்தைக் கைவிட்டிருப்பான் என்? இப்போது இத்தை ஆதரிப்பான் என்? என்று கேட்க, உம்முடைய பக்கல் அத் வேஷம் அடியாகச் செய்தோம் என்னமாட்டானே; தான் அறிய அதுவும் தன்னாலே வந்ததாகையாலும், அதுதான் பேற்றுக்கு ஈடான சாதனமாகப் போராமையாலும். இனி, ரக்ஷகனுக்கு நெடுநாள் ரக்ஷ்யவர்க்கத்தை விட்டிருந்த இதுக்கு லஜ்ஜித்திருக்குமதொழியச் சொல்லலாவது ஒரு மறுமாற்றம் காணுமையாலே கவிழ்ந்து நின்று காலாலே தறையைக் கீறி நிற்க, இவரும் "பொய்ந்நின்ற ஞானம்" தொடங்கி இவ்வள வாகத் தன்பக்கல் பண்ணின விஷயீகாரத்தையும் அதுக்கு அடியான கிருபாதி குணங்களையும் அநுஸந்தித்து, இதொரு நிர்ஹேதுக கிருபா விஷயீகாரம் இருக்கும்படி என்? என்று அதிலே ஆழங்காற்பட்டு விஸ்மிதராய் ஹ்ருஷ்டராய்க் களிக் கிறார்.

ஒன்பதாந் திருவாய்மொழி (99)

"சூழ்விசும்பணி முகில்"

பிரவேச சங்கி:—பரமயோகிகளுக்குப் பிறக்கக் கடவதான பரபக்தி இவர்க்குப் பிறந்து, தத்பிரகாரங்களை இத் திருவாய்மொழியளவும்வர அநுபவித்து, இனி இங்கிருந்து அநுபவிக்குமது ஒன்றில்லாமையாலே 'பரமபதத்துக்கு ஏறப் போகவேணும்' என்று மநோரதிக்கிற இவரைத் தம்மைக் காட்டிலும் சடக்கெனக் கொடுபோகவேணும் என்று விரைகிற ஈஸ்வரன், அங்குத்தை அநுபவத்துக்கு ஈடாம்படி மிகவும் விடாய் பிறக்கைக்காக, தன்னுடைய ஸ்வரூப ரூப குண விபூதி

களைக் கண்ணாலே கண்டாற்போலே விசதமாகப் பிரகாசிக்கும்படி பண்ணியருளினான்.

அதாவது, வேதாந்தங்களில் பிரசித்தமான அர்ச்சிராதி மார்க்கத்தையும், சரீரவிஸ்லேஷ சமயத்தில் வரும் கிலேசம் எல்லாம் ஆறும்படி தான் வந்து முகங்காட்டும் படியையும், மார்க்கஸ்தரான புருஷர்களுடைய சத்காரங்களையும் அம் மார்க்கத்தாலே போய்ப் புகக்கடவ பரமபதத்தையும், நித்ய சூரிகள் வந்து ஆதரிக்கும்படியையும், பிராட்டிமாரும் ஸ்ரீ வைகுண்டநாதனும் எதிரேவந்து ஆதரிக்கும்படியையும், நித்ய சூரிகள் சேவிக்கப் பிராட்டிமாரோடே வீற்றிருந்தருளுகிற படியையும், பரமப் பிராப்யரான நித்ய சூரிகள் நடுவே தாம் ஆனந்த நிர்ப்பரராய் இருக்கும்படியையும் காட்டியருளக் கண்டு பிரீதராய், அத்தை அந்யாபதேசத்தாலே பேசி அநுபவிக்கிறார்.

தமக்கு அவன் பண்ணிக் கொடுத்த பேற்றை வைஷ்ணவர்கள் எல்லாரும் பெற்றாராகப் பேசின இது, அந்யாபதேசமாவது. அது தனக்குப் பிரயோஜனம், இங்குள்ளார் 'நமக்கும் ஆழ்வார்பேறு தப்பாது' என்றிருக்கைக்காக.

———0———

பத்தாந் திருவாய்மொழி (100)

— (௦) —

"முனியே நான்முகனே"

பிரவேச சங்கதி:—பரமபதத்திலே புக்கு "அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்தமை" என்று நிரதிஶய ஆநந்தயுக்தராய் அத்திரளிலே இருந்த இருப்பு ஞாநாநுசந்தான மாத்திரமாய் பாஹ்ய சம்ஸ்லேஷத்துக்கு யோக்யமன்றிக்கே இருக்கிற இதற்கு மேலே, "இல்லை கண்டீர் இன்பம்" என்றும், "பிறப்பாம் பொல்லா அருவினை மாயவன் சேற்றள்ளல் பொய்ந்நிலம்" என்றும் தாம் பிறர்க்கு உபதேசிக்கிற சம்சாரத்திலே பிரகிருதி பத்தராயிருக்கிறபடியைக் கண்டு, மேருசிகரத்திலே நிர்த்துக்கனாய் சுகோத்தரனாய் இருக்கிறான் ஒருவன், துக்கபஹுளமாய் துஸ்தரமாய் பேராழமாய் ஓரிடத்திலும் ஸ்திதி இன்றிக்கே இருக்கும்படியான பாதாளத்திலே விழுந்து நோவுபடுமாபோலே அவசந்நராய்,

அதற்குமேலே, தமக்கு அவன் பண்டு கைவந்தபடியை யும் தன்னைப் பெறுகைக்கு உபாயம் தானே அல்லது இன் றிக்கே இருக்கிறபடியையும் தன் தலையிலே ஒரு சாதனத்தை ஏறிட்டுக்கொண்டு அநுஷ்டிக்குமவனுக்கும் தன் கைபார்த் திருக்கும்படி சர்வ ரக்ஷகனுயிருக்கிற இருப்பையும் அநுசந் தித்து, அந்தக்ஷணத்திலே பெருமையாலே 'இப்படியிருக்கிற வன் நம்மை இங்ஙனே நோவுபட விட்டுவைப்பதே!' என்று மிகவும் அவசந்நராய், மாதா பிதாக்கள் சந்நிதியுண்டாயிருக் கப் பசியாலும் தாகத்தாலும் நோவுபடுகிற சிறு குழந்தை ஆர்த்தியின் மிகுதியாலே தாயின் பேரைச் சொல்லிக் கூப் பிடுமாபோலே, அவன் தன் எதிரே நின்று பிராட்டி ஆணை யிட்டுத் தலக்கற்றுச் சொல்லும்படியான ஆற்றாமையோடே காட்டுத்தீயில் அகப் பட்டாரைப்போலே ஆர்த்தத் துவனி யோடே பெறுமிடறு செய்து கூப்பிட்டு அவன் திருவடி களிலே சரணம்புக,

பரம தயாளுவாகையாலே "இவரை இப்படியே நோவு படவிட்டு வைத்தோமாகாதே!" என்று இவரைக் காட்டிலும் தான் நொந்து, பிராட்டியோடேகூடத் திருவடி மேலே வந்து தோற்றி, இவருடைய பிரகிருதி சம்பந்தத்தை அறுத்து, "என்னவாவறச் சூழ்ந்தாயே" என்றும், "அவா வற்று வீடு பெற்ற" என்றும் இவர் தாமே சொல்லும்படி இவர் விடாயும் தீர்ந்து இவருக்கும் அவ்வருகான தன் விடாயும் தீரும்படி சம்ஶ்லேஷித் தருளினன் என்கிறர்.

இப் பிரபந்தத்துக்குப் பிரமேயம் சர்வேச்வரன்; இப்பிர பந்தம் அவாவில் அந்தாதி; மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர் கவி பாடினர். இனி இவருடைய அவதாரந்தான் சர்வேச்வரனுடைய அவதாரத்தோபாதி சாதுக்களுடைய சுக்ருத பலம்.

ஈட்டின் பிரவேச சங்கிரகம் முற்றிற்று.

மாறன் மலரடி வாழ்க.

———::———

திருவாய். 5-3-1

மாசறு சோதி என்செய்யவாய் மணிக்குன்றத்தை
ஆசறுசீலனை ஆதிமூர்த்தியை நாடியே
பாசறவெய்தி அறிவிழந்து எனைநாளையம்
ஏசறும் ஊரவர் கவ்வை தோழீ ! என்செய்யுமே ?

வியாக்:— ‘ஸௌந்தர்யத்தாலும் சீலத்தாலும் மதிப்பாலும் பழிப்பற்றதொரு விஷயத்துக்கு நீ செய்யப் புகுகிற வித்தால் பழிப்பை விளைக்கப்புகுகிறாய்கிடாய்’ என்று தோழி சொல்ல, நான் அவ் விஷயத்துக்குப் பழிப்பு உண்டாக்கப் புகுகிறேனல்லேன், பழிப்பறுக்கப் புகுகிறேன் காண் என்கிறாள்.

மாசறுசோதி - கலந்து பிரிந்தவள் ஆற்றாமையின்றிக்கே மர்யாதைகளை நோக்கிக் கொண்டிருக்கை அத் தலைக்கு அவத்யம். பிரிந்தால் இப்படி பண்ணாதவன்று மாசிறே ஸௌந்தர்யத்துக்கு. ஸௌந்தர்யம் இதுவாயிருக்க நான் எங்ஙனே மடலெடா தொழிகிறது. கெடுவாய்! அவ்வடிவு ஹேயப்ரத்யநீகங்காண்; நான் மடலெடாதிருக்கை அவ் வடிவுக்கு ஹேயத்தை உண்டாக்குங்காண். அவன் வடிவை உகந்தார்க்குக் கொடான் என்று பழியைத் துடைக்கைக்காக நான் பார்த்திருக்கிறது; ‘பக்தாநாம்’ என்கிற உடம்பு தனக்கு என்றிருக்கையாகிற இது வடிவுக்கு மாசிறே. மடலெடுக்கை மாசு என்றிருக்கிறாள் தோழி; மடலெடாதொழிகை மாசு என்றிருக்கிறாள் மகள். வியதிரேகத்தில் இப்படி ஆற்றாமை விளையாதாகில் நாம் காண்கிற விஷயத்தோபாதியாமே.

மாசறு-நான் மடலெடுக்க நினைத்தவளவிலே மாசற்று வரும்படி பாராய். மேல் ‘ஆசறுசீலனை’ என்னாநிற்கச் செய்தே முற்பட வடிவைச் சொல்லுகிறது, குணங்களிலும் வடிவு ஆகர்ஷகமாயிருக்கையாலும், வடிவிலே அணைந்தவளாகையாலும். என் செய்ய வாய் - வார்த்தை சொல்லுகைக்குத் தன்னோடு ஒப்பதொரு தத்துவாந்தரம் இல்லாமையாலே அநாதரித்து ‘அவாக்யநாதரঃ’ என்று அவிக்ருதமாய் இருக்கக் கடவ தத்துவம் என்னோடே கலந்தத்தாலே வந்த ப்ரீதிக்குப் போக்கு விட்டு ஸ்மிதம்பண்ணி விகாரித்ரவ்யம் போலே விக்ருதனாகா

நிற்க, நான் அவனைப் பிரிந்து அவிக்ருகையாயிருக்கவோ? கர்மநிபந்தனமான விகாரமில்லை என்ற இத்தனை போக்கி ஆச்ரிதஸம்ச்லேஷ விச்லேஷங்களால் விகாரமில்லை யென்னில், ஒரு சேதனனோடு கலந்த தன்றிக்கே யொழியுமிறே. அவன் கலந்தபோது பண்ணின ஸ்மிதமன்றோ என்னை அவ்யவஹிதமான உபாயத்திலே மூட்டிற்று. ஸம்ஸாரி முக்தனால் அவனுக்குப் பிறக்கும் ஹர்ஷம் போலே காணும் இத்தலையைப் பெற்று அவன் ஸ்மிதம் பண்ணி நின்ற நிலை.

என் செய்ய வாய் இத்யாதி - இவளுடனே கலந்தத்தால் உண்டான ப்ரீதியாலே ஸ்மிதம் பண்ணி வடிவிலே வேறுபாடு தோற்ற நின்ற நிலையாயிற்று இவளைக் கையும் மடலுமாம்படி ஈடுபடுத்திற்று. பண்டும் ஒரு ஸ்மிதமிறே ஊர்ப்பூசலை விளைத்தது. வாய்க்கரையிலே நின்று மடலெடுக்கிறாள். கழுத்துக்கு மேலேயிறே இவள் மடலெடுக்கப் பார்க்கிறது. மணிக்குன்றத்தை-கழுத்துக்குமேலன்றிக்கே மெய்யே மடலெடுக்கப் பண்ணிற்று என்கிறாள். என்னோடே வந்து கலந்தத்தாலே வடிவில் வைவர்ண்யம் போய்ப் புகர்த்துக் குளிர்ந்து வளர்ந்து நிலைபெற்றபடியும், பிரிவைப் ப்ரஸங்கித்துக் கால் வாங்க மாட்டாதே நின்றநிலையும் காண் என்னை மடலிலே துணியப் பண்ணிற்று. ஆசறு சீலனை - அவன் கலக்கிறபோது என்பேறாகக் கலந்தானாகிலன்றோ பிரிவில் என் ஸ்த்ரீத்வத்து பேற்றுக்கு வேண்டுமத்தைச் செய்திருக்கலாவது. அம்மேன்மையை யுடையவன் இப்படித் தாழநின்று என்னைப் பெற்ற இது பெறுப்பேறாக நினைத்திருக்க, நான் அவனைப் பிரிந்து வைத்து 'வரில்பொகடேன், கெடில்தேடேன்' என்று இருக்கலாமோ? அவன் தன் குணத்தைப் பரிஹரித்துப் போக நான் என் குணத்தைப் பரிஹரித்திருக்கச் சொல்லுகிறாயோ?

ஆதிமூர்த்தியை - ஒரு குடியிலே பிரிந்த உனக்கு, அவன் தானே வரவிருக்குமதொழியப் பதறுகிற இது உன் மதிப்பை அறுத்துக் கொள்ளப் பார்க்கிறாய் என்ன, மதிப்பை அறுத்துக் கொள்ளப் பார்க்கிறேனல்லேன், மதிப்பை யுண்டாக்கிக் கொள்ளப் பார்க்கிறேன். ஆதி-'காரணந்து த்யேய:' என்று சாஸ்த்ரங்கள் ஒருமிடறு செய்த விஷயத்தையன்றோ நான் ஆசைப் பட்டது. இவ் விஷயத்தை ஆசைப் பட்டுப் பெறாதே முடிந்தாலும் அது தானே மதிப்பாம்படியான விஷயமன்றோ.

'பூர்வஜ' என்று நம்மோடு கலவிக்கு அவன் முற்பாடனு யிருக்கப் பிரிவாற்ருமைக்கு நான் பிற்பாடையாகவோ? ஆனுலும் அபிமத விஷயத்தைப் பிரிந்தாள், அநந்தரம் மட லூர்ந்தாள் என்னுமே, சில நாள் ஆற்ருமையோடே பாடாற் றிக்கிடந்தாள்; பின்பு தன்னுலே பொறுக்க வொண்ணுத வளவானவாறே மடலெடுத்தாள் என்னும் வார்த்தை படைக்க வேணுங்காண் என்ன, நாடியே பாசறவெய்தி - எத்தனை கால முண்டு இப்படிக் கிலேசப்பட்டது. அவன் இத்தலையைப் பெறு கைக்குப் பட்டதெல்லாம் போராதோ நான் அவனைப் பெறு கைக்கு. சிறைக் கூடத்திலே பிறந்து அங்கே வளருமாப் போலே. விச்லேஷத்தால் ஊகிக்கப்படுமத்தனை காணும் ஸம்ச் லேஷம். பகவத் தத்துவமுள்ள விடமெங்கும் தேடிக் காணப் பெருதே நசையற்று பின்பாகாதே மடலெடுத்தது.

பாசறவெய்தி - துக்கத்தை யடைந்து. வைவர்ண்யமாதல், ஸ்நேஹமாதல்; ஸ்நேஹமடைய அவன் பக்கலிலே யெய்தி என்னுதல். எல்லாம் செய்தாலும் அறிவுடையார் செய்வது ஒன்றல்ல என்ன, அறிவிழந்து எனை நாளையம் - அறிவு குடி போய் எத்தனை காலத்தோம். மயர்வற மதிநல மருளின வன்றே போயிற்றில்லையோ. குரங்கின் காலிலே விழுந்து தூதுவிட்டவன்று, அது ஜ்ஞானகார்யம் என்றிருந்தாயோ? அன்றே மதியெல்லாமுள் கலங்கிற்றில்லையோ? தன் பக்கலிலே கைவைத்தால் மற்ருென்றை யறியாதபடி பண்ணும் விஷய மிறே! "மணப்பால்" இத்யாதி. 'நோபஜநம் ஸ்மரந்' என்று ப்ராப்தி ஸமயத்தில் இவ்வருகுள்ளவற்வற நினையாதபடி பண் ணும் விஷயமன்ருே. தன்னையுமநுஸந்தித்து லோகயாத்ரை யையும் அநுஸந்திக்கும்படியோ அவன்படி.

ஆனுலும் பழிக்கு அஞ்ச வேணுமென்ன,ஏசறும்-நமக்கு மடலெடுக்கை குற்றமாகிலன்ருே அவர்களுக்குப் பழி சொல் லுகை குற்றமாவது. இவனை ஒரு பழி சொன்னேமாய் விட வல்லோமே என்று ஏசிலே துணிந்திருக்கிற என்னுதல்; பக வத் விஷயத்தில் கைவைத்திருக்கிறவர்களுக்கு ஒரு பழி சொன்னேமாய் விடவல்லோமே என்று துக்கப் பட்டிருக்கிற என்னுதல்; ஏசுமெல்லை கடந்த என்னுதல். ஊரவர் கவ்வை - பகவத் விஷயத்திலே கைவைத்தார் இது பழி என்றில் அன்ருே பழியாவது. தோழி - சமான துக்கையான உனக் குப் பழியென்று தோன்றில் அன்ருே எனக்கு மீள வேண்டு

வது. என் செய்யுமே - ஏசறும் எல்லையிலே நிற்கிற எனக்கு இது ஏசாம்படியிருப்பார் சொல்லும் வார்த்தை கொடு கார்யம் என்? ஊரார் பழி புகழாம் எல்லையிலேயன்றோ நாம் நிற்கிறது. அவர்கள் சொல்லுகிற பழி .நமக்கு அவத்யமோ? தாரகமாமித்தனை யன்றோ! "அலர் எழ ஆருயிர் நிற்கும்". "அலர்தூற்றிற்றது முதலாக் கொண்ட வென் காத"லிறே.

———(o)———

திருவாய். 5-5-1

எங்ஙனேயோ அன்னைமீர்காள்! என்னை முனிவது நீர்?
நங்கள் கோலத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்
சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும்
செங்கனிவாய் ஒன்றினோடும் செல்கின்றது என்நெஞ்சமே.

வியாக்:—எங்ஙனேயோ அன்னைமீர்காள் - ஹிதம் சொல்லத்தொடங்கினவாறே தந்தாமை மறக்குமித்தனையோ! என்னை - ஒன்றைப் பரிஹரிக்கப் பார்த்தால் அதினுடைய நிதானமறிந்து பரிஹரிக்க வேண்டாவோ, என்னுடைய ப்ராவண்யத்தைப் பரிஹரிக்கப் பார்த்தால் எனக்கு இவ்வளவான ப்ராவண்யத்தை விளைத்த நம்பியுடைய அழகை யறிந்து அநுபவிக்கிற நீங்கள் அத்தையன்றோ பொடிவது. என்னுடைய நிலைக்கும் உங்கள் ஹிதவசனத்துக்கும் என்ன சேர்த்தியுண்டு. நம்பியுடைய அழகை அநுபவித்திருக்கிற நீங்கள் அதிலே துவக்குண்டிருக்கிற என்னை மீட்கப் பார்க்கிறபடி எங்ஙனேயோ? அன்னைமீர்காள் - இக் குலதர்மத்தில் ஏதேனும் தப்பியதுண்டோ. "பேராளன் பேரோதும் பெரியோரை" என்றும், "எவரேலு" மென்றும் நீங்கள் சொல்லும் வார்த்தை கேட்டு வளர்ந்தவள் அன்றோ நான். தந்தாம் செய்யுமதனை வயிற்றில் பிறந்தார் செய்தால் குற்றமோ! புத்திரர்களாகவுமாம், சிஷ்யர்களாகவுமாம், பகவத் விஷயத்திலே ஓரடிவர நின்றவர்கள் ஸ்லாகனீய ராமத்தனையன்றோ.

கூரத்தாழ்வான், நங்கையார் திருவடி சார்ந்தவாறே இன்னமொன்று விவாஹம் பண்ணுவோமென்று விசாரித்து, இது க்ரமத்திலே ஆழ்வானுக்கு விரோதமாய்த் தலைக்கட்டும். 'அநாஸ்ரமீ நதிஷ்டேத்' என்று ஶாஸ்த்ரம் சொல்லாநின்றது. இத்தை அநுஷ்டிப்போமோ, பாகவத பரிசர்யை பண்ணு

வோமோ, என்று விமர்சியா, அச் சாமாந்ய தர்மத்தில் விசேஷ தர்மமே பிரபல மென்று தவிர்ந்தார். என்னை முனிவது நீர்-என்னை உங்கள் சொல் கேளாதபடி பண்ணின நம்பியழகை யன்றே முனிவது. நம்பியுடைய அழகிலே துவக்குண்டிருக்கிற என்னை இதுவே யாத்ரையாயிருக்கிற நீங்கள் விலக்குகிற படி எங்ஙனேயோ?

நங்கள் இத்யாதி - உங்களையும் எங்களையும் அறியாவிட்டால் அவ் விஷயத்தை அறியாதொழிய வேணுமோ. நங்கள் - இக் குடிக்காக முற்றூட்டுப் போலே காணும் நம்பி யழகு. சர்வேச்வரனை நோக்கி அநந்த விரதம் நோற்றுப் பெற்றவர்கள் போலன்றிக்கே நம்பியை ஆச்ரயித்தாயிற்று இவரைப் பெற்றது. "நெடுங்காலம் கண்ணன் நீள்மலர்ப்பாதம் பரவி" யிறே பெற்றது. நம்பியை நான் - அவன் அகப்படுத்திக் கொள்ளுகைக்கு சௌந்தர்ய சீலாதிகளால் குறைவற்றிருக்கிறாப்போலே அகப்படுகைக்கு இவள் சாபலத்தால் குறைவற்றிருக்கிறபடி. கண்ட பின் - கதேஜலே ஸேது பந்தமன்றே நீங்கள் செய்கிறது. காண்பதற்கு முன்னே மீட்டிகோள் அல்லிகோள், இனிமீட்கப் போமோ? மீட்கப் போகாமைக்குப் போந்தது என்? என்ன, கைமேலே ஒரு முகத்தாலே தான் அகப்பட்டபடி சொல்லுகிறாள் :

சங்கு இத்யாதி-நீங்கள் ஹிதம் சொல்வதுதான் நெஞ்சுடையார்க்கன்றே. சங்கினோடும் - 'செங்கமல நாள்மலர்மேல் தேன் நுகரு மன்னம் போ'லே பரபாகமான செங்கனிவாய் நான் உன் சரக்கன்றே? 'தவாஸ்மி' என்கிற முறுவல். ஒன்றினோடும் - முத்தனைபாதி எல்லாவற்றையும் மறக்கப் பண்ணுகிற. அன்றிக்கே, ஆகாசம் போலன்றிக்கே ஜாதி, வியக்தி தோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாப் போலே, ஸர்வேச்வரனோடு ஸாம்யம் பெற்றதோ தெரிகிறதில்லை. செல்கின்றது - இன்னம் தறை கண்டதில்லை. நாங்களுமெல்லாம் நம்பியழகை அநுபவித்திருக்கிறோம் அன்றோ என்ன, என்னெஞ்சமே - அவன்தானே காட்டப் பெறுகையாலே முழுக்க அநுபவித்த என் னெஞ்சு.

———:———

திருவாய். 6-5-1

துவளில் மா மணி மாடம் ஓங்கு
தொலைவில்லி மங்கலம் தொழும்
இவளை நீர் இனி அன்னைமீர்! உமக்கு
ஆசை யில்லை விடுமினோ
தவள ஒண் சங்கு சக்கரம் என்றும்
தாமரைத் தடங்கண்கள் என்றும்
குவளைஒண் மலர்க்கண்கள் நீர்மல்க
நின்று நின்று குமுறுமே.

வியாக்:- துவளில்-உனக்கு இப்போது உதவாதபடி தூரஸ்தன் என்னுதல்; பூதகாலத்திலே அவதாரங்கள் என்னுதல்; பரத்வத்திலே யாதல், அவதாரத்திலே யாதல், உள்ளுநிற்கிறவனளவிலே பிரவணையாதல் செய்தாளாய் மீட்க நினைக்கிறிகோளோ? சரமாவதியிலே நிற்கிறவளைப் பிரதமாவதியிலே நிற்பார் மீட்கவோ. அவ் வூர்ச் சரக்கிலே குற்றமுண்டாயோ மீட்கலாவது. ஹேய ஸங்காநர்ஹனான பரமாத்மாவோடு ஒக்கும் அவ்வூரில் இரத்னங்கள். மா-ஒளியே யல்ல, பெருவிலையுமை யிருக்கும். ஓங்கு - அவ்வூரில் மாடங்களின் நிழலீடு திருநகரி யளவும் வந்து காணுமிருப்பது. 'இடமணித்து' என்று நாயகன் பிரிந்தான்; அவன் பிரிந்த போது துடங்கி அவ்வூரையும் அவ்வூரில் மாடங்களையும் அவற்றில் மாணிக்கங்களையும் பார்த்து, வைத்த கண் வாங்கமாட்டாதே யிருந்தாள்.

தொலை வில்லிமங்கலம் - துருப்புக் கூடாக அவ்வூரை யன்றோ இவள் உகந்தது. தொழும் இவளை-தொழுகையே நிருபகமாயிருக்கும் இவளை. 'ப்ராஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீனம்', 'கணபுரம் கைதொழும் பிள்ளை' என்னுமாப் போலே. இவளை நீர் - இவள்படி கைமேலே காணா நிற்கச் செய்தே மீட்கத் தேடுவதே. பழி சொல்லப் பழிக்கிற இவளை. இனி-தொழுகை தேஹ யாத்ரை யாவதற்கு முன்னே யன்றோ மீட்கப் பார்ப்பது. அன்னைமீர் - பகவத் விஷயத்திலே அவகாஹிக்கை என்று ஒன்று இல்லையோ? நியந்த்ரு நியாம்ய பாவமேயோ வேண்டுவது. பெற்றவர்களென்ன, அசக்யங்களிலே இழியக் கடவதோ. உமக்கு ஆசையில்லை-பிராப்த யௌவனைகளானார் பக்கல் பெற்றவர்களுக்குப் பிராப்தியுண்டோ? புக்கவிடத்தே பிரவணையாகா நிற்க பெற்ற பிராப்தி கொண்டு மீட்கவோ?

விடுமினோ - இவ்வளவில் நீங்கள் கைவாங்க வமையும். பெற்ற தாயார் விடுமினோ என்னும் காட்டில் விட்டார்களிறே. பின்னையும் நிர்ப்பந்திக்க வேண்டா, இவளுக்கு ஓடுகிற ரஸத்தைக் கண்டுகொண்டுநிற்கப் பாருங்கோள்; இவள் அநுபவத்துக்குத் தண்ணீர்த் துரும்பாகாதே. விடுங்கோள் என்கிறதென்? என்னில், இவள் இத்யாதி-இவள் பேச்சிலும் நினைவிலும் நீங்களாதல் நானுதல் உண்டோ. 'த்யக்த்வா புத்ராம்ச தாராம்ஸ்ச' என்னும் நிலையன்றோ இவளது. சியாமளமான திருமேனிக்குப் பரபாகமான வெண்மையுடைத்தாய், 'உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்' என்கிற அழகையுடைத்தான சங்கு. சக்கரம் - அங்ஙன் ஒரு விசேஷணமிட்டுச் சொல்லவொண்ணாத சக்கரம். என்னும் - இவற்றைக் காணவேணு மென்னுதல், இவற்றோடே வரவேணு மென்னுதல் சொல்லமாட்டிற்றிலள் பலஹானியாலே. தாமரைத் தடங்கண்-அந்த ஆழ்வார்களளவும் வந்து அலையெறிகிறதாய், தாமரையை ஒருவகைக்கு ஒப்பாகச் சொல்லலாய், போக்தாக்கள் அளவன்றிக்கே இருக்கிற திருக் கண்கள். என்னும் - ஒரு மலையெடுத்தாற்போலே சொல்லுக்குச் சொல்லு தளர்ந்து நடுவே விச்சேதித்தாயிற்றுச் சொல்லுவது. திவ்யாயுதங்களையும் கண்ணழகையும் காட்டி இவளைத் தோற்பித்தான்,

குவளை இத்யாதி-இக் கண்களைக் கண்டால் தாமரைக் கண்ணனன்றோ நீர்மல்க இருப்பது. கண்ணும் கண்ணநீருமாயிருக்கிற இருப்பைக் கண்டு கொண்டிருக்க வன்றோ அடுப்பது? 'ஆஹ்லாத' இத்யாதி. ஸதா தர்சனத்துக்கு ஒரு தேசம் தேடிப் போக வேணுமோ. அவளுடைய ஸ்த்ரீத்வத்தைக் காற்கடைக் கொள்ள, நீங்கள் எங்ஙனே மீட்கப் பார்ப்பது. கண்ணநீர் பாய்கையாவது ஸ்த்ரீத்வம் அழிகை. நின்று நின்று குழறுமே - பேச்சுப் போய்க் கண்ணநீராய், கண்ண நீர் போய்த் தடுமாறுகிற அவஸ்தையிலே மீட்கப் போமோ?

ராஜ கோஷ்டியிலே 'உகும் இறும்' என்று சிலர் பொருள் சொல்ல, விக்கிரமசிங்கன் அங்ஙனல்ல, கன்றைக் கடக்கக் கட்டிவைத்தால் முலைக் கண் கடுத்துப் பசு அலமந்து படுமா போலே உள்ளோடுகிற கிலேசம் வாய்விடமாட்டாதே நோவுபடுகிற இவளுக்கு இது வார்த்தையோ என்றான். பெரு வெள்ளத்தில் சுழிக்குமாபோலே அகவாயிலுள்ளது

வெளியிடமாட்டாதே உள்ளே நின்று சுழிக்கிறபடி. மநோ வாக் காயங்கள் மூன்றும் ப்ரவணமானபடி சொல்லுகிறது.

——(o)——

திருவாய். 6-7-1

உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர்மல்கி
மண்ணினுள் அவன்சீர் வளமிக்கவன் ஊர்வினவி
திண்ணம் என் இளமான் புகும்ஊர் திருக்கோளூரே.

வியாக் :— உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன் - இவள் அவ்வருகே ஒருவாய் புகுநீர் தேடிப்போனளோ, இங்கிருந்த நாள் அந்நபாநாதிகளாலே தரித்து அங்கேபுக்கு அவனாலே தரிக்கப்போனளோ; 'அஹமந்நாத:' என்றிருப்பார்க்கும் அவ்வருகு போக வேணுமோ? சோறு தண்ணீர் என்னுதது, "வேட்டபொழுதின்"படியே அபிமதஸமயத்தில் இவைதான் யாதொருபடியிருக்கும்படி, அப்படியேயாயிற்று இவர்க்கு எப்போதும் பகவத் விஷயமென்கைக்காக. 'வாஸுதேவ: ஸர்வமி'றே. உண்ணுஞ் சோறு என்கையாலே அல்லாதது உண்டு சமையும் சோறு என்கையும், இது மாறாதே புஜிக்கும் சோறு என்னுமதுவும் தோற்றுகிறது. மாறாதே புஜிக்குமதுவும் மாளாததும் இதிறே. "கணைநாணில்", "அப்பொழுதைக்கப்பொழுது", "கொள்ள மாளாவின்ப வெள்ளம்" இறே. எம்பெருமான் - இவற்றிலாகாதது ஒன்றில்லை கிடீர். இவையெல்லாம் வகுத்த அவனேயாயிருக்கை. இவள் சந்நிதியே அமையுங் கிடீர் எங்களுக்கு.

என்றென்றே - இதொழிய வேறொன்று தாரகம் என்றிருக்கிலிறே மற்றொன்றைச் சொல்லுவது. ஒருக்கால் இத்தைச் சொல்லி மற்றைப்போது ஊண்உறக்கத்தாலே பொழுது போக்கலாம் விஷயமன்றே. கண்கள் நீர்மல்கி - இவளுடைய உண்ணுஞ் சோறு இருக்கிறபடி. இவள் முகத்தாலே காணும் இவர்களுக்கு ஜீவனம். தன் ஜீவனத்துக்குப் போகிறவள் எங்கள் ஜீவனத்தைக் கொண்டு போகவேணுமோ? ஒருவன் பகவத்குணவித்தனாய் இருக்க, அவனைக் கண்டு கொண்டிருக்க ஆகாதே யடுப்பது. 'அழுநீர் துளும்ப அலமருகின்ற வாழியரோ' என்று சேதனராகில் மங்களாசாஸனம் பண்ணக்கடவது.

நஞ்சீயர், பிள்ளை திருநறையூரரையரோடே மூன்று திருவாய்மொழி கேட்டேன்; அதில் எனக்கு ஒரு வார்த்தைகளும் போகாது; ஒரு திருவாய்மொழியை பிரஸ்தாவியா அவர் சிதிலராய்க் கண்ணும் கண்ணநீருமாயிருக்கிற இருப்பை நினைத்திருப்பன் என்று அருளிச்செய்வர். "ஆஹ்லாதசீத நேத்ராம்பு:". ஜீவநார்த்தம், அநந்தாழ்வான் திருக்கோளூரினின்று போந்தானொருவனை அவ்வூரில் கழுதை மேய்த்து ஜீவிக்க மாட்டிற்றிலையோ? நிலைநின்ற ஜீவனத்தை விட்டுப் போந்தாயாகாதே என்றார். பாவனையால் பெற்றாதல் ஆநந்தாஸ்ரு புறப்படுகிற படியாகவுமாம். மண்ணினுள் புகுமூர் திருக்கோளூரே-விண்ணினுள் ஒரு ஊர் விசேஷிக்கவேண்டா; எல்லாம் பரதந்த்ரமாகையாலே. அவன் இத்யாதி-அவனுடைய கல்யாணகுணங்களையும் நிரவதிக ஸம்பத்தையுமுடையவனுடைய ஊரையும். 'ஸோஸ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரம்ஹணா விபஸ்சிதா' என்று அவன் குணங்களோடு அவனோடு வாசியற பிராப்மாகிறவோபாதி அவன் விரும்பின தேசமும் பிராப்யாந்தர்க்கதமாகக் கடவது.

வளம் மிக்கவன் ஊர் - பரமபதம் கலவிருக்கையோபாதி உகந்த விஷயத்தைப் பெறுமதிறே ஊராகிறது; அவன் திருவுள்ளத்துக்குப் பொருந்தி யிருப்பதும்; 'கிம் கார்யம் ஸீதயா மம'விறே. பிரணயதாரையில் விதத்தன் என்னவுமாம். தான் இருந்தவிடத்தே இவள் வரும்படி இத்தலையை அழித்தபடி. வினவி - திருக்கோளூர் எத்தனையிடம் போருமென்ன, எதிரேவந்தார் இத்தனையிடம் போரும் என்ன, அதுதானே வழிக்குப் பாதேயமாகப் போகை; 'பாதேயம் புண்டரீகாக்ஷ' இத்தியாதி. பூ அலரும் போதைச் செவ்வி போலே, திருக்கோளூர் எத்தனையிடம் போரும் என்று கேட்கும்போதைத் திருப்பவளத்தில் செவ்வி காணப்பெற்றிலேன் என்று காணும் திருத்தாயார் நோவுபடுகிறது. என் இளமான் புகுமூர் திருக்கோளூரே - என் வயிற்றில் பிறப்பாலும் இவள் பிரக்ருதியாலும் அவ்வூரில்அல்லது புகாள் என்கிறாள். தாய் வழிகொண்டே ஸ்வபாவங்கள் அறுதியிடலாமாகாதே.

பெருமாளைக் கண்டல்லது தரிக்கமாட்டாதானாய் வருகிற ஸ்ரீ பரதாழ்வானைக் கண்டு வைத்தேயும் திரிகாலஜ்ஞனை ரிஷியுங்கூட 'கச்சிந்நதஸ்ய' என்று தாயாரையிட்டு வழக்குப்

பேசுவித்துக் கொண்டு இவரைக் காடேறப் போகவிட்டா யாகில் கீழ்வயிற்றில் கழலையாகிறது என்று அங்குப்போய் நலியத்தேடுகிறு யல்லையிறே என்றுன். பதார்த்த ஸ்வபாவங் களைக் கொண்டு பத்தும் பத்தாக நிமித்தங்களை யறியக்கடவ குகனும், தம் எல்லையிலே இவன் வந்து புகுந்ததுக்கு ஹ்ருஷ்டனுய் அடிச்சேரியிலே வந்து புகுருவது என்பது ஆனாலும் ராஜாக்கள் வன்னியர் பற்றிலே புகுரும்போது கேள்வி கொண்டன்றே புகுருவது என்றாற்போலே வெளிறும் காழ்ப்புமாகச் சொல்லி, தாய்வழியை நினைத்து அசிர்த்தானிறே.

இவளும் இராமாஸ்த்ரம் இலக்குத் தப்புமோ? என் மகள் புகுமூர் அதுவே. இப்பருவத்தில் இவளைத் தலக்கறுக்கும் போது அவ்வூரில் அவனேயாக வேண்டாவோ. இளமான் - கிரமப்ராப்தி பற்றுதவள் தன் மார்த்வம் பாராதே பதறிக் கொண்டுபோகிருளே. புகுமூர் - காட்டுத்தீயில் அகப்பட்டவன் பொய்கையும் பொழிலும் தேடிப் புகுமாப்போலே, ஸம்ஸாரமாகிற பாலைநிலத்திலே அகப்பட்டவனுக்கு உகந்தருளின நிலங்களானவை பொய்கையும் பொழிலும் போலேயிறே. புகுமூர் என்கையாலே புக்கார் போகும் ஊர் அன்று என்கை. எம்பெருமானுர் தெற்கே எழுந்தருளாநிற்க, எதிரே வருகிருள் ஒரு பெண்பிள்ளையைக் கண்டு எங்கு நின்றும் என்ன, திருக்கோளூரில் நின்றும் என்ன, அவ்வூரில் புக்க பெண்களும் போகக்கடவர்களோ என்றுர். இவ்வூரில் பெண் பிள்ளைகளைக் காணுவிட்டால் கோயிலுக்குள்ளே தேடுமித்தனையிறே.

—(o)—

திருவாய். 6-8-1

பொன்னுலகாளீரோ புவனிமுழுது ஆளீரோ ?
நன்னலப் புள்ளினங்காள் வினையாட்டியேன் நான் இரந்தேன்
முன்னுலகங்கள் எல்லாம் படைத்த முகில்வண்ணன் கண்ணன்
என்னலம் கொண்டபிரான் தனக்கு என்நிலைமை உரைத்தே.

வியாக் :—புள்ளினங்களைக் குறித்து, எம்பெருமானுக்கு என் ஸ்திதியை அறிவித்து உபயவிபூதியையும் நான் தர நீங்கள் ஆளவேணும் என்று இரக்கிருள்.

பொன்னுலகு இத்யாதி - ஈச்வர விபூதியானது விச்லேஷ தசையில் அவனையும் தன்னையும் சேர்ப்பார்க்குப் பரிசிலாகக் கண்டது என்றிருக்கிறாள். உபயவிபூதியும் மிதுனத்துக்குச் சேஷமிறே. அவ்வவஸ்தை பிறந்தால் சொல்லலாமிறே. ஸர்வேச்வரன் இருக்க இவ்விடம் அராஜகமாய் கிடக்கிற தென்றிருக்கிறாள். பிரக்ருதி ஸம்பந்தம் அற்று ஒரு தேச விசேஷத்தே போய் அனுபவிக்கும் அநுபவத்தை இங்கே இருக்கச் செய்தேயும் கொடுக்கிறாள். பிரக்ருதியோடே கொடுப் பாரும், பிரக்ருதி ஸம்பந்தத்தை அறுத்துக் கொடுப்பாருமாய் இருக்கிறபடி. ஒருவரை ஒருவர் பிரிந்து துழாவுகிற சமயத் திலே கொடுக்கை இருவர்க்கும் ஒக்கும். சேர்க்கைக்காக உடம்பை இழப்பாரும் உடம்போடேகூட நின்று சேரவிடு வாருமாய் ஆகாதே இருவரும்.

பொன்னுலகு ஆளீரோ-உங்கள் விபூதியும் நான்பட்டது படவேணுமோ? அபிமதனைப் பிரிந்து கடகரைத் தேடித் திரிகிற இவள் கடிப்பிப்பார்க்கு உபய விபூதியையும் கொடுக் கிறாளிறே, அவனை நினைத்திருந்த கனம். கலந்தபோது தன்னையும் தன்னுடைமையையும் இவளுக்காக்கி, பிரிந்த போது மாறுவான் ஒரு புல்லியனோடன்றே இவள் கலந்தது. தன் அஸந்நிதியிலும் யதேஷ்ட விநியோக மாக்கும்படியிறே; தன்னையும் தன்னுடைமையையும் இவளுக்காக்கி வைத்தபடி. அருளாளப்பெருமாள் எம்பெருமானர் நோவிலே, பிள்ளை யுறங்கா வில்லிதாஸரைக் கொண்டு ஆழ்வான் புக, ஆழ்வான் பண்ணின நெஞ்சாறல் ஆறுவது ஆளவந்தார் ஸ்ரீபாதத் தேறப் போனலிறே என்றார். ஒருவில் எருதுகளோபாதி உபயவிபூதியும் தன்னைச் சேர்ப்பார்க்கு என்றிருக்கிறாள்.

ஆளீரோ - ஸ்வத்வம் ஒருவர் பண்ணித்தர வேண்டா, 'தத் தமஸ்யாபயம் மயா' என்கிறபடியே தூது போக என்று முகங்காட்டின போதே கொடுத்தற்றது. அவன் காரியம் செய்கிற இவற்றுக்கு அவனுக்கு அறிவித்துக் கொடுக்கவேண்டா. இவை தூதுபோகவே தான் உளளாம்; தான் உளளாகவே எம்பெருமான் உளனும். இனி இவள் தன் படுக்கைப்பற்றிறே கொடுப்பது. ஆளீரோ - உங்கள் காரியம் செய்யவொண்ணாது, என் காரியமும் செய்யவேணும். உபய விபூதியையும் கொடுத்தாளாகில் அவன் வந்தால் தானும் அவனும் எங்கே இருப்பது என்ன, இக் குருவி காட்டின்

விடத்தே என்று ஆழ்வான். பொன்னுலகு ஆளீரோ புவனி முழுதாளீரோ-கைப்பட்டதைக் கொடுத்திறே மற்றொன்றைக் கொடுப்பது. தனக்குஆக்கின அடைவே கொடுக்கிறாள்."அயர் வறுமமரர்கள் அதிபதி" என்றபின்பிறே "இலனது உடைய னிது"என்று லீலாவிபூதியோகம் சொல்லிற்று. இங்கே இருந் தாலும் ஜ்ஞானம் பிறந்தால் அணித்தாய்த் தோற்றுவது அவ்விடமிறே.

'அக்கரையென்னும்', 'மாகவைகுந்தம் காண்பதற்கென் மனமேக மெண்ணும்' என்று, பிராப்தி தசையிலும் மூறப்பட் டிருப்பது அவ்விடம். ததீயத்வாகாரத்தாலே ஒருக்கால் உத் தேச்யமாமிறே அவ்விடம். 'நோபஜநம் ஸ்மரந் இதம் ஶரீரம்' என்று நிற்கச்செய்தேயும் அவனுடைய ஐச்வர்யத்தில் குறைய அநுபவிக்க வொண்ணாதென்று ஒருக்கால் உபாதேய பிரதி பத்தி உண்டித்தனையிறே. ஆகாராந்தர பிரதிபத்தி யுண்டா கில் 'மூழுதெ'ன்று கட்டடங்க உத்தேச்யமாகாது. இனித் தான், அடிமைக்கு அடைத்தேற்றலாயிறே இவ்விடமிருப்பது. அடிமையல்லது செல்லாதவிடம் அவ்விடம். உத்தேச்யமான நித்யவிபூதியைக் கொடுத்தவள் தியாஜ்யமான லீலாவிபூதியைக் கொடுத்தது இவை பண்ணுகிற உபகாரத்தை நினைத்து இன்னது கொடுப்போமென்று அறியாமல் கலங்கி. "அபராவர்த் திநாம் யாச பூமிப்ரதாயிநாம்' என்றும், "ஹிரண்யம் வா ஸுவர்ணம் வா ரத்நாநி விவிதாநிச, ராஜ்யம் வா த்ரிஷு லோகேஷு நைத தர்ஹதி பாஷிதும்" என்று இருவரும் கலங்கினார்களிறே. இருவரும் கொடுக்கலாம்படி ஒரு மிதுனத் துக்குச் சேஷமாயிறே உபயவிபூதியுமிருப்பது.

நன்னலப் புள்ளினங்காள் - அவனிலும் உங்களுக்கு நீர் மையில் ஏற்றம் இருந்தபடிஎன் ? இவ்வளவில் ஆளிட்டழைக் கும்படி கடக்கவிராதே, நீங்கள் முன்னம் கிட்டநின்று முகங் காட்டப்பெறுவதே ! ஸர்வஸ்வத்தை எனக்குத் தந்து நீங்கள் தூது போம்படி யிருந்ததீ. அவனுக்கு குணங்களிலேற்றம் ஆச்ரயத்தாலே என்றிருந்தோம்; அது உங்கள் பக்கலிலே யாகாதே. உங்கள் நீர்மை யறியாதே 'அத்தைக்கொள், இத் தைக்கொள்' என்று நலிந்தேனிறே. 'குண: த்வய் யேவ சோபநா:' என்றவனும் உங்களுக்குப் புறம்பானான். 'உங்கள் தரத்துக்கு இதொரு அறுகும் தாளிப்பூவுமிறே' என்பராம் பிள்ளையமுதனார். உங்களுக்கு நான் சில செய்தேனோ, வெறும்

உங்கள் நீர்மையாலே செய்தது அத்தனையிறே. பாண்டவர்க்குத் தூதுபோன கிருஷ்ணனையும், ஆளவந்தார்க்குப் பச்சையிட்ட மணக்கால் நம்பியையும் போலே இருந்தது உங்கள்படி.

இருவருமான சேர்த்தியொழிய வேறுமொன்றைத் தரவோ என்று சிரித்திருந்தன. "அர்த்ததஃச மயா ப்ராப்தா தேவ ராஜ்யாதயோகுண: ஹதஶத்ரும் விஜயிநம் ராமம் பச்யாமி ஸுஸ்த்திதம்". நன்னலம் - அஹம்ச ரகு வம்ச:ச' இத்யாதி. 'வைதேஹ்யா:' - இவையெல்லாம் தரும் என்கைக்காக. 'தர்மத:' - நீ வெறும் அறவனுகையாலே செய்தாய். உனக்கு என்செய்கேன் என்று காலதத்வமுள்ளதனையும் உழைக்கும் படியிறே நீ செய்தது. புள் - இந்நீர்மையில் ஏற்றமுடைய உங்களுக்கே கமநஸாதநமான பக்ஷபாத முண்டாகப்பெறுவதே. பிரிந்தாரைச் சேர்க்கை திர்யக்குகளின் கார்யம் என்றிருக்கிருள், இராமாவதாரத்தில் வாஸனையாலே. இனங்காள் - 'ந கஶ்சித் நாபராத்யதி' என்பாரும்கூட இருக்கிறபடி. உடலும் உயிருங் கூடக் கிடக்கப்பெறுவதே. 'அக்ரதஸ்தே கமிஷ்யாமி' என்று முன்னே நடப்பாருங்கூட இருக்கிறபடி. 'திக்ஷு ஸர்வாஸு மார்கந்தே' என்று எல்லாத் திக்கிலும் போகவிடலாம்படி திரளவிருக்கிறது.

வினையாட்டியேன் - கைப்புகுந்தவனைக் கைகழியவிட்டு உங்கள் காலிலே விழும்படியான பாபத்தைப் பண்ணினேன். உங்களுக்குக் குணம் ஸ்வரூபமானுப்போலே எனக்கு பாக்ய ஹாநி ஸ்வரூபமானபடி. நான் - 'தர்மத: பரிரக்ஷிதா:' என்றிருப்பான் அவன் கிடீர். ஸ்ரீ ஜனகராஜன் திருமகளான வேண்டற்பாட்டோடே யாகாதே தான் தூதுவிடுகிறது. இரந்தேன் - நாலு பிரயோகம் சரணம் புக்கார். இப்போது ததீயர் பக்கலிலே பிரபத்தி பண்ணுகிருர். அது தப்பிலும் இது தப்பாது. இனங்காள் - இரந்தேன் - மிதுனமாயிருப்பார்க்கு இரந்தார் வாசி தெரியுமிறே. புள்ளினங்காள் இரந்தேன் - சரணுகதர்க்குத் தன்னுயிரைக் கொடுக்குமவையிறே. புள்ளினங்காள் இரந்தேன் - படுகொலைக்காரர்க்கும் இரங்கவேண்டும்படியிறே என்னுடைய தசை. நன்னலப் புள்ளினங்காள் இரந்தேன் - சரண்யதை குறைவற்றிருக்கிறபடி.

நானிரந்தேன் - 'சுக்ரீவம் சரணம் கத:' என்றவனிறே திர்யக்கின் காலிலே முற்படவிழுந்தான். பின்பிறே இவள்

'ததா குரு தயாம் மயி' என்றது. விளையாட்டியேன் இரந்தேன் - எல்லாம் கொடுத்தாலும் அவற்றுக்கு ஒன்றும் செய்ததாகத் தோற்றுமையாலே பல் காட்டுகிறாள். அவர்கள் பண்ணுகிற உபகாரம் அளவுபட்டிருக்கிலிறே ஸத்ருசமாக ஒன்றுதேடிக் கொடுக்கலாவது. "க்ருத்ஸ்நாம் வா ப்ருதிவீம் தத்யாத் நதத்துல்யம் கதஞ்சன" என்று செய்தது போராது என்னு மிதுவேயிறே நெஞ்சில் பட்டுக் கிடப்பது. 'தஸ்மை நத்ருஹ்யேத்' என்னுமளவிலே நிற்குமதன்றே. 'க்ருதமஸ்ய ஜாநந்' இறே. இதெல்லாம் சொல்லவேணுமோ? அவன் தான் வரும் ஸ்வபாவனே என்ன, என்பாக்யஹாநியாலே இழந்தேனத்தனை போக்கி, அவன் படியைப் பார்த்தால் இழக்கவேணுமோ! மூன்னுலகங்களெல்லாம் படைத்த - அழிந்தவற்றை அடியே பிடித்து உண்டாக்குமவன். ஆர் பிரிவுக்குச் சளைத்துத் தூதுவிட இவற்றையுண்டாக்கிற்று? வெறும் தன் கிருபையாலே. ஜலஸ்தல விபாகம் பாராதே 'பஹுஸ்யாம்' என்கிற ஸங்கல்பத்தாலே ஏற்கவே இவற்றை உண்டாக்கினவன்.

முகில்வண்ணன் - தரமிட்டாலும் விடவொண்ணாத வடிவு. முகில்வண்ணன் கண்ணன் - ஜகத்காரணத்வத்துக்கும் அவதாரத்துக்கு மடியான ஔதார்யாதிகுணங்களைச் சொல்லுதல், அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தானத்தோடே அவதரித்த படியைச் சொல்லுதல். என்னலங்கொண்ட பிரான்-இதொரு பழங்கிணறு கண்வாருகிறது என், என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணின உபகாரகன்; உங்கள் காலிலே விழும்படி பண்ணினவன். இப்போது அகலவிருந்த தொழியப் பண்டு செய்தவையெல்லாம் சாலநன்று, என்னோடே கலப்பதற்கு முன்பு சால நீர்மையுடையவர்; இப்போது வடிவழகே கிடீர் உள்ளது. முகில்வண்ணன் என்னலங்கொண்ட - அம்மேகம் வர்ஷிக்குமிடமாகாதே, முகக்குமிடமானேன்.

அவன் வருவானானாலும் நாங்கள் சொல்லுவதே தென்ன, என்னிலைமை - 'ஏஹி பச்ய', 'நிவேதயத' என்று தன் வடிவைக் காட்டுகைக்கடி, என்னைக்கண்ட நீங்களே பாசுரமிட்டுச் சொல்லுமித்தனை. ஜகத்காரணத்வம், அவதாரம், தம் பக்கல் பண்ணின விசேஷ கடாக்ஷம் இவையெல்லாம் கண்ணழிவறச் சொன்னாள்; தன்படி தன்னாலும் பேசப்போகிறதில்லை; தனக்கும் தன் தன்மை யறிவரியானிறே. உரைத்து-

தனக்கும்கூட நிலமல்லாதத்தை இவை பாசுரமிட்டுச் சொல்ல வற்றாகக் கொண்டிருக்கிறாள். இவள் பிரதிபத்தி யிருக்கிறபடி. கரைமேலே நிற்கையாலே அவற்றுக்குச் சொல்லலாமிறே. உரைத்துக்கொடு வாருங்கோள் என்றதது ஈச்வரக்ருத்யம் நமக்குப் பரமோ என்றிருக்கையாலே. இவனுக்குப் பணி குறை அறிவிக்கையிறே. மேலுள்ளதெல்லாம் அவன்பணி.

என்னிலைமை யுரைத்து - பொன்னுலகாளீரோ - ஆர்த்த நாதம் கேளாதபடி பண்ணி ஜீவிக்கப் பாருங்கோள். சக்ர வர்த்தி பெருமாளை முடிசூட்டப் பாரித்தபோது ரிஷிகள் ராக்ஷஸராலே நோவுபடுகையாலே ராஜ்யம் திருவுள்ளத்திலே பொருந்தாமை புறப்பட்டுப் போனாரிறே பெருமாள். அப் படியே இதுவும் ஆர்த்தத் துவனி கேட்டால் ஆளமாட்டா தென்றிருக்கிறாள்.

——(o)——

திருவாய். 6-8-2

மையமர்வாள் நெடுங்கண் மங்கைமார் முன்பு என்கையிருந்து
நெய்யமர் இன்னடிசில் நிச்சல் பாலொடு மேவிரோ
கையமர் சக்கரத்து என்கனிவாய்ப் பெருமானைக் கண்டு
மெய்யமர் காதல்சொல்லிக் கிளிகாள்! விரைந்து ஓடிவந்தே.

வியாக்:—சில கிளிகளைக் குறித்து என் ஆற்றாமையை அவனுக்கு அறிவித்து வந்து, நானும் என் தோழிமாரும் கொண்டாட அத்தை அங்கீகரிக்க வேணுமென்கிறாள்.

மையமர் இத்யாதி-முதற்பாட்டில் அவன் பதங்கொடுத்தாள். இதில் அதுக்கு மேலே அவனாலே விரும்பப்படுமொரு பதம் தேடிக்கொடுக்கிறாள். 'பின்னை முன்னே' என்றதே எல்லாரும் காணக் கைமேலே கொடுக்கிறாள். மையமர் இத்யாதி - அவன் பாடு தரம் பெற்றாரைக் கொண்டாடுவாரைப் போலேயோ, என்பாடு தரம் பெற்றாரைக் கொண்டாடுவார் இருப்பது. அந்தஃ புரத்தில் வர்த்திப்பாரெல்லாரும் - அஸிதேக்ஷணை - ஒரு கண் பார்வையாய்இருக்கிறபடி. "தம்மையே ஒக்க அருள்செய்வர்" என்கிறபடியே இவளும் தன்னோடு 'அஸிதேக்ஷணை', 'கருந் தடங் கண்ணி' என்கிற தன்னோடு ஸாம்யம் கொடுத்திருக்கிற படி. மங்களார்த்தமாதல்; இவள் அலாபத்தில் இவர்கள் மை யெழுதி இருக்கக்கூடா தாகையாலே உங்கள் வரவால் வந்த

பிரீதியாலே அவன் வரவு தப்பாதென்று நான் அலங்கரிக்க, அத்தாலே அலங்கரித்து ஒளியை யுடைத்தாய்ப் பெருத்திருந் துள்ள கண்களை யுடையவர்கள் என்னுதல்.

நெடுங் கண் - கண்ணில் பரப்படங்கலும் ஸப்ரயோஜனமாவது அப்போதாகாதே. இல்லையாகில் தலைச் சுமை யாமிறே. "காணுதார் கண் ணென்றும் கண்ணல்ல"விறே. மங்கைமார் - அவனுக்குத் தன்னேராயிரம் பிள்ளைகளைப் போலே இவளுக்கும் தன் பருவத்தில் தோழிமார் உண்டு. மூத்தர் பஞ்சவிம்சதி வார்ஷிகரா யிருக்குமாப் போலே இங்கும். முன்பு - எல்லாரும் தனித்தனியே என் முன்னே என் முன்னே என்பர். "ஹநூமந்தம் மஹாத்மாநம் பரிவார் யோபதஸ்த்திரே". மஹாத்மாநம் - நாலுபேர் சூழ்ந்து கொண்டாடினுர் என்கிற இதுதான் தரமோ இவனுக்கு. "உபாயநாங்யுபாதாய மூலாநிச பலாநிச" என்று பல மூலாதிகளைக் கொடுத்து ஸம்ப்ரமித்தார்களிறே முதலிகள். அப்படியே நெய்யமரின்னடிசில் இங்கும் உண்டு. "பேஜிரே விபுலாநநா:" அங்கு. இங்கு மையமர்வாள் நெடுங்கண். என்கையிருந்து - 'ஏகம் துக்கம் ஸுகம் ச நௌ' என்றிருந் தார்களேயாகிலும் பசித்தார்களே உண்ணவேணும். அப்படி அவர்கள் ஓலக்கமிருக்குமத்தனை. இருப்பிடம் என்கையிலே ஆகவேணும். அவன் திருமுடிக்கு ஆபரணமான என்னுடைய கையை உங்களுக்குப் பாதபீடமாக்குகிறேன். 'தநௌ பாஹுலதாம் ஸ்கந்தே' என்று அவனுக்கு ஸர்வஸ்வதானம் பண்ணும் கை. இவள் அணிமிகு தாமரைக் கை என்னுமது அவனுக்கு முண்டிறே,

மெய்யமர் காதல் சொல்லி நெய்யமரின்னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ என்பான்என் ? போகிறபோது லாலனம் பண்ணிவிடலாகாதோ என்ன, அதுக்குக் கைம்முதலுண்டாக வேணுமே ? "காத்ரை: சோகாபிகர்சிதை:", "இட்டகால் இட்ட கைய"ளிறே இவள். "எம்மின் முன்னவனுக்குமாய்வ"ரிறே தோழிமார். நெய்யமரின்னடிசில் - 'ஏஷ ஸர்வஸ்வ பூத:' என்று கொடுக்கைக்கு உடலில்லையிறே இவளுக்கு. 'உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்' என்றிருக்கிற இவள் இவை உகப்பது தேடிக் கொடுக்கிறுள். இத்தால் 'யதந்ந:' என்பது அவன் பக்கல்; பகவத் விஷயத்தில் உபகரிப்பார்க்கு உண்பதில் ஒருகை

பருந்திட்டோமாகில் செய்யலாவதுண்டோ வென்று கைவாங்குமதல்ல, அவர்கள் விரும்பினவை தேடியிடவேணு மென்கிறது.

நிச்சல் பாலொடு மேவீரோ - சேர்ப்பதொரு நாள், பின்பு அநுபவம் நித்யம். 'அத்ர பரத்ரசாபி'. கையமர் சக்கரத்து இத்யாதி - உண்டாரை உண்ணப் பண்ணுவிக்கிறாள். . இவரைப் பற்றினர்க்கு அபிமதம் இவரிலும் முற்பட்டிருக்கும். "வேறாக" இத்யாதி. கையமர் சக்கரம் - எப்போதும் கைகழலா நேமியான். என் கனிவாய்ப் பெருமானை - பிரிந்துபோகிற போது இவள் ஸத்தை கிடக்க வேணுமென்று பண்ணின ஸ்மிதத்துக்கு ஆயிற்றுத்தோற்றது. திருவாழிக்கு முற்றூட்டுத் திருக்கை, தமக்கு முற்றூட்டு திருப் பவளம். அவன் ஜீவனத்தை நித்யமாக்கினான். என் ஜீவனத்தை காதாசித்கமாக்கினான். கண்டு - எனக்குப் போலே ஸ்ம்ருதிவிஷயமாமளவன்று உங்களுக்கு; இவற்றைக் கண்ணாலே காணுகையிறே இவளுக்கு. 'தாம் ஸ்ப்ருஷ்ட்வா வாதல், 'சந்த்ரே த்ருஷ்டி ஸமாகம:" ஆதல்; தொட்டாரைத் தொடுதல் கண்டாரைக் காணுகையிறே இவளுக்கு.

மெய்யமர் காதல் - திருமேனியிலே அமரவேண்டுங் காதல் என்னுதல், என்னுடம்போடே என்னுதல். உடம்பிலே அணைந்து பிரிந்தார்க்கு உடம்பையணைந்தல்லது நிற்கவொண்ணாதிறே. "காத்ரை: சோகாபிகர்ஸிதை: ஸம்ஸ்ப்ருசேயம்"- நம் ஸத்தை கிடக்கக் கிடக்கு மென்றாதல், குணஜ்ஞானத்தாலே தரித்திருக்கிறாளென்றாதல் நினைக்க வேண்டா. பிராட்டி, மாயா சிரஸ்ஸைக் காட்டினவன்று அவர் உளராகிலல்லது நம் ஸத்தை கிடவாதென்று தரித்திருந்தாள். " அநந்யா "விறே. தம்மைப் போலே பொய்யுமாய் நிலை நில்லாததுமான காதலன்றென்று பிள்ளான். ஆத்மாநுபந்தியான காதலென்றுமாம். சொல்லி - தந்தாமுக்கு இல்லாதவை பிறர் வாயாலே கேழ்க்கவேணும். காட்சிக்கு மேலே ஓர் ஏற்றம் தன் தசையை அவனுக்கு அறிவிக்கை.

கிளிகாள் விரைந்தோடி வந்தே - அறிவித்துக் கூட வர விராதே, திருவடி முன்னே வந்து ஸ்ரீ பரதாழ்வானை உகப்பித்தாப் போலவும், திருவடி பிராட்டியைக் கண்டவநந்தரம் இக் காட்சியால் பிரயோஜனமுள்ளது, அவ்வாஶ்ரய

மூள்ளபோதே சென்றறிவிக்கிலிறே என்று ஒரு நாளே வந்தாப் போலவும். பெருமாளும், பிள்ளாய் நீ இருக்கிற பேர்தைத் தரிப்புக் கொண்டு நீ போனாலும் இப்படியே யிருப்பதென்றிராதே என்னளவறிந்து கார்யம் செய் என்ருரிறே. நீங்கள் முற்படவந்து பிரீதி சாத்மித்தால் பின்பு அவன் வரவாக வேணும். அவனோடே கூடவரில் வர்ய் புகுநீராய் உங்களைக் கொண்டாட ஒண்ணாது; ஆன பின்பு நான் முறைகெடாமே உபகாரகரான உங்கள் கால்லிலே விழுந்து பின்பு அவன் காலிலே விழும்படி பண்ணுங்கோள்.

ஆகையிறே நம் முதலிகள் குருபரம்பரை முன்னாக த்வயாநுஸந்தானம் பண்ணுகிறது. சிஷ்யனுக்கு ஆசார்யாநுவர்த்தனம் பண்ணலாவது அவன் தேஹபரிக்ரஹம் பண்ணி யிருக்கும் நாளிலேயிறே. பின்புள்ளதெல்லாம் பகவதநுபவத்திலே அந்வயிக்கும் இருவர்க்கும். அவன் எனக்கு என்னும் நாளிலேயிறே இவன் உனக்கென்று கொடுக்கவாவது.

———— :: ————

திருவாய். 6-10-1

உலகம் உண்ட பெருவாயா !
        உலப்பில் கீர்த்தி அம்மானே !
நிலவும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி !
        நெடியாய் ! அடியேன் ஆருயிரே !
திலதம் உலகுக்காய் நின்ற
        திருவேங்கடத் தெம்பெருமானே !
குலதொல் அடியேன் உனபாதம்
        கூடுமாறு கூருயே.

வியாக்:-உன்னையொழிய வேறுகதி இன்றிக்கே இருக்கிற என்னை உன் திருவடிகளே சேரும்படி பண்ணியருள வேணும் என்கிறார்.

உலகமுண்ட பெருவாயா - தேவர் திருவடிகளைக் கிட்டாதவன்று எனக்குண்டான தளர்த்தி பத்துப் பிரளயாபத்தோபாதி. இரக்ஷ்யத்தினளவன்றிக்கே யிருக்கும் பாரிப்பை யுடையவனே. உன் பாரிப்புக்கும் என் ஆர்த்திக்கும் என்ன சேர்த்தியுண்டு?. நீ அறிந்த ஸம்பந்தமும் ஆபத்துமேகைம் முதலாக ரக்ஷிக்குமவனன்றோ. ஒரு விபூதியாக ஆபத்து

வரிலோ நோக்கலாவது. பிரளயார்ணவத்திலே அழுந்து வாரையோ, அபேக்ஷிபாதாரையோ, சரீரத்துக்கு வரும் ஆபத்தையோ, பிரளயார்ணவத்திலே அகப்படிலோ, பிறரால் வரும் ஆபத்தோ நோக்கலாவது. சரணம் புகாதாரையே ரக்ஷிக்கவேணுமென்கிற நியதியுண்டோ? சரணம் புக்காரை இரக்ஷிக்கலாகாதோ?

பெருவாயா - இரக்ஷித்துச் சமைந்து பின்னையும் இவற்றுக்குச் செய்ததொன்று உண்டோ வென்று, உடன்கிடந்தாரை மடிதடவி, பின்னை என் செய்தோமானேம் என்று அநுதபிப்பாரைப் போலே, இழவுபட்டிருக்குமவனன்றே. திரௌபதி சரணம் என்ற உக்தி இத்தனையும் திருவுள்ளத்தே கிடந்து, அவள் பரிபவத்தையும் பரிஹரித்து, துர்யோதநாதிகளையும் நிரஸித்து, தர்மபுத்திரர் தலையிலே முடியையும் வைத்து, இவள் குழலையும் முடிப்பித்து, பின்பு "ருணம் ப்ரவ்ருத்தமிவ மே" என்று குறைவாளனாய், பரமபதத்திற்கு எழுந்தருளுகிறபோது 'நாதிஸ்வத்தமநா:' என்று திருவுள்ளத்தில் புண்ணோடேயிறே எழுந்தருளிற்று.

உலப்பில் கீர்த்தி அம்மானே - இவனுடைய ரக்ஷகத்வம் வந்தேறியாய், பழையது கொண்டு வளைப்பிடுகிறேனல்லேன்; லோகத்தை ரக்ஷித்து ஆர்ஜித்த புகழுக்கு எல்லையில்லை. "பொழிலேழும் காவல்பூண்ட புகழ்"றே. "தஸ்ய நாம மஹத்யச:", "யஶஸ்ச ஏகபாஜனம்" என்று உபதேசகம்ய மன்றிக்கே 'விதித:' என்று சத்ருகோஷ்டியிலும் பிரஸித்தமாயன்றோ உன் புகழிருப்பது. பாதகந்தானே பாத்யத்துக்குப் பாலூட்டி வளர்க்கும்படியன்றோ அவன் புகழ். 'குணாகர:', 'ததாகுணஹ்யநந்தஸ்ய', 'வர்ஷாயுதை: யஸ்ய குண:', 'பஹவோந்ருப கல்யாணகுண:' என்று குணங்களுக்கு முடிவின்றிக்கே இவற்றை எல்லைகாண நினைத்தால் தரைகண்டு மீளவொண்ணாதே, மதிக்ஷயத்தாலே மீளுமத்தனை.

நிலவும் சுடர் சூழொளி மூர்த்தி - ரக்ஷகனன்றிக்கே காதுகனானாலும் விடவொண்ணாத வடிவழகு. நிலவும் - ஒரு கர்மமடியாக வந்து அது வற்ற வற்றுகிறதன்றே. சுடர்சூழ் ஒளி மூர்த்தி - உள் மண்பற்றாய்ப் புறம்பு ஒளியூட்டியிருக்கை யன்றிக்கே, 'தேஜஸாம் ராசி மூர்ஜிதம்' என்கிறபடியே தேஜ: பதார்த்தத்தைத் திரட்டிப் பிடித்தாற்போலே யிருக்கை.

"உயர்வினையே தரும் ஒண்சுடர்க்கற்றை"யிறே. திருமேனியைப் பஞ்சசக்திமயமென்றும் ஷாட்குண்யவிக்ரஹமென்றும் சொல்லாநின்றார்கள்; ஆராய்ந்தால் அர்த்தஸ்திதி பஞ்சசக்திமயம். ஷாட்குண்ய விக்ரஹம் என்கிறது திருமேனி குணங்களுக்குத் திரோதாயகமன்றிக்கே பிரகாசகமாயிருக்கையாலே; "ரூபவாந் ஸு॰பக: ஸ்ரீமாந் கந்தர்ப இவமூர்த்திமாந்", "ஸாக்ஷாத் மந்மத மந்மத:" இறே.

நெடியாய் - கீழ்ச்சொன்ன குணங்களுக்கு எல்லையுண்டானாலும் ஸௌந்தர்யாதிகளுக்கு எல்லை காண ஒண்ணாது. 'மஹாந்' என்னுமத்தனை. அடியேன் ஆருயிரே-வடிவழகையும் குணங்களையும் காட்டி என்னை வியதிரேகத்தில் ஜீவியாதபடி பண்ணினவனே. திலதமுலகுக்காய் நின்ற - பூர்ணாபரணம் போலே. திருவேங்கடத்து எம்பெருமானே - அடியேன் ஆருயிரே - திருமலையிலே நின்று உன்னுடைய சேஷித்வமுறையை அறிவித்து உன்னையல்லது செல்லாதபடி பண்ணினவனே. இவ்வளவும் அவன்....குலதொல் அடியேன்-குலமாகப் பழைய தான அடியேன். தமக்கு ஆதிக்யம் சொல்லுகிறாரல்லர்; தம்முடைய அநந்யகதித்வம் சொல்லுகிறார்; ஒருவற்கேயாயிருப்பாரைச் சிலர் நோக்குவாரில்லையே. உனபாதம் கூடுமாறு கூறாயே - ஸ்வரூபம் இதுவானபின்பு ஸ்வரூபாநுரூபமான பேற்றைப் பண்ணியருளாயே. இவர் சாயுஜ்யமிருக்கிறபடி. ஒருசொல் உனக்கு; எனக்கு ஸ்வரூபலாபம். அவன் ஒரு வார்த்தையருளிச்செய்ய தளப்பம் தீருமே. மாஶு॰ச: என்னவேணும்.

---o---

திருவாய். 6-10-10

அகலகில்லேன் இறையும் என்று
அலர்மேல் மங்கை உறை மார்பா!
நிகரில் புகழாய்! உலக மூன்று
உடையாய்! என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக் கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல் ஒன்றில்லா அடியேன் உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே

வியாக்:—ஸகல சாஸ்த்ரங்களிலும் வியாப்ரிப்பதொன்ருய், இச்சாஸ்த்ரங்களுக்கெல்லாம் கிழங்காய், மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார் பரிக்ரஹிக்கையால் வந்த ஏற்ற முடையதாய், உபாயாந்தரங்கள் போலன்றிக்கே ஒன்ருய், ஸுசகமாய், ப்ராப்தமாய், தனக்கு அவ்வருகு ஒன்றின்றிக்கே இருக்கிற ப்ரபத்தியைச் சொல்லுகிறது இப்பாட்டால். கீழ் ஒன்பது பாட்டாலும் 'அருவினையேன்' என்றும், 'அடியேன்' என்றும் ஆகிஞ்சந்யத்தையும் சேஷத்வத்தையும் அவனுடைய சரண்யதைக் குறுப்பாகச் சொல்லி, இதில் ஆகிஞ்சந்ய பூர்வகமாய்ப் பெரிய பிராட்டியார் புருஷகாரமாக ஸர்வஸுலபனை திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஸப்ரகாரமாகச் சரணம் புகுகிருர்.

இப்பாட்டை துவயத்தில் பதங்களோடே யோஜிக்கக் கடவது. அகலகில்லேன் - அகல ஸம்பாவனை இன்றிக்கே இருக்கச்செய்தேயும் அங்குத்தை போக்யதையை அநுஸந்தித்து, மஹார்க்கமான ரத்னம் லபித்தால் இது நமக்குத் தொங்குமோ வென்று துணுக்குத் துணுக்கென்பாரைப் போலே, மார்விலே இருந்துவைத்தே அகலில் செய்வதென் என்று அஸ்த்தானே பயசங்கை பண்ணுகிருள். நாட்டார் அகலகில்லேன் போலன்று இது; அது கர்மநிபந்தனம்; இது அவன்தானே மேல்விழும் ஸ்வபாவனுகையாலும் அவனுல் வரும் பிரிவும் இவளால் வரும் பிரிவும் இல்லாமையாலே விஷயாதீனமாய் விளையுமது; "அநந்யா", "அநபாயிநி"யிறே இப்படிச் சொல்லுகிருள். இறையும் - ஸம்ச்லேஷாங்கமான விச்லேஷமும் பொருத மார்த்தவம். அவன் உபாயமாமிடத்தில் அங்கத்தை ஸஹியாத சுணையுடைமை போலே, அவன் மார்விலே இருந்து அவன் முகத்தை நோக்கி, 'உன்னை அகலசத்தையாகிறிலேன்' என்று, அவன் வைலக்ஷண்யத்தை அவனுக்குச் சொல்லுகிருள். ஸ்வத:ஸர்வஜ்ஞனும் இவள் சொல்ல அறிந்திலனுகில் ப்ரணயித்வத்துக்குக் கொத்தையாமிறே. தனக்கும் தன் தன்மை அறிவரியான்; ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளிறே ஜ்ஞானத்துக்கு விஷயம்.

அகலகில்லேன் என்கிற பாசுரமும் சொல்லமாட்டாத தசையிறே அவன் தசை. அவளிலும் இவனுக்கு ஏற்றம் விச்லேஷதசையில் இவன் பாசுரத்தே காணுமித்தனை. "மாஸா

தூர்த்தம்'' என்றாள். "நஜீவேயம் க்ஷணமபி" என்றான். பரதந்த்ரனுக்கு உடையவன் வருந்தனையும் பொறுக்க வேணும், ஸ்வதந்த்ரனுக்கு அதுவேண்டா. இப்படி விலக்ஷண மான மிதுனம் உத்தேச்யமான நமக்கு ஒரு குறையுண்டோ. இவர்களைத் தனித்தனியே பற்றினார்க்கு ஸ்வரூபநாஶம். இப் படிச் சொல்லுகிறது மாத்ருத்வத்தாலே. திரிவிதசேதனர்க்கும் நியாமகையாய் "பும்ப்ரதாநேச்வரேச்வரீம்'' என்று நித்யோ பாதிகமான பிரணயித்வத்தாலே ஈச்வரனுக்கும் நியாமகை யாய், பூவில் ருஜீஷமான தாது சுண்ணங்களைக் கழித்து பரிம ளமே வடிவானாப்போலே இருந்துள்ள ஸௌகுமார்யமும், நித்யானு பாவ்யமான பருவமும் உடையவளாய், அவனையும் "நஜீவேயம் க்ஷணமபி" என்னப் பண்ணுமவள் என்கிறார்.

அலர்மேல் மங்கையுறைமார்பா - அவன் மார்வில் சுவடு அறிந்த பின்பு பிறந்தகமான பூவும் நெருஞ்சி முள்ளோபாதி யாயிற்று. ஜநகராஜன் திருமகள் பெருமாளைக் கைப்பிடித்த பின்பு ஸ்ரீ மிதிலையை நினையாதாப்போலவும், முத்தன் ஸம் ஸாரத்தை நினையாதாப்போலவும் பூவை நினையாள்; பூவைக் காணுதவோபாதி திருமார்வுக்கு அவ்வருகு அவயவங்களைக் காணாள். அவை குமரிருந்துபோமித்தனை. இத்தால் ஸ்ரீ சப்த மும் நித்யயோகமும் சொல்லுகிறது. இத்தலையில் அபராதத் தையும் ஈச்வர ஸ்வாதந்த்ர்யத்தையும் அநுஸந்தித்து அஞ்ச வேண்டா. காலம் பார்க்கவேண்டா.

பிராட்டி பக்கல் அபராதம் இராவணனுக்கும் காகத் துக்கும் ஒத்திருக்கச் செய்தேயும் இராவணன் சாபத்தாலே கிட்டமாட்டாது இருப்பதொன்று உண்டிறே. அங்ஙனன் அன்றிக்கே காகன் அபராதத்தில் கைதொடனாயிருக்க அவனை நோக்கிவிட்ட பிரஹ்மாஸ்த்ரத்துக்கு ஒரு கண்ணழிவு சொல்லி விட்டாளிறே இவள் சந்நிதியாலே. அத்தனை அப ராதமின்றியிலே இருக்க, இராவணன் தலையறுப்புண்டான் இவள் அஸந்நிதியாலே. "தமேவ சரணம் கத:", "நநமேயம்'' என்றிரண்டும் அப்ரயோஜகம். காகத்துக்கும் வருகிறபோது அகவாயில் நினைவு இதுவேயிறே. அங்ஙனன்றாகில் "ஸ்வக மாலயம் ஜகாம'' என்று போகப் பாரானே. செயல் மாட்சி யாலே விழுந்தானித்தனை. பிதாவைப் போலன்றிறே பிரஜை கள் விஷயத்தில் மாதா இருக்கும்படி. ஆகையிறே உத்தரார்த்

தத்தில் அவனேடு ஒக்கச் சொல்லி, பூர்வார்த்தத்தில் புருஷகாரமாகிற நீர்மையிலேற்றம் சொல்லுகிறது.

, தொட்டாரைத் தொட்டு 'நகஶ்சிந் நாபராத்யதி; என்னுமிவள் நம்மை ஒரு கார்யத்திலே ஏவுவதுகாண் என்று அவஸரப்ரதீக்ஷனு யிருக்குமவனைப் பெற்றால் விடாளிறே. தன் வார்த்தை கேளாதார்க்கும் "மித்ரமௌபயிகம் கர்த்தும்" என்னுமவளிறே. "தாஸீநாம்" இத்யாதி.

அநந்தரம் நாராயண பதார்த்தம் சொல்லுகிருர்: நிகரில் புகழாய் - இவள்தானே சிதகு உரைக்குமன்று அவளுடனே மன்ருடும் குணுதிக்யம் சொல்லுகிறது. 'என்னடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்'. 'குற்றம் செய்யக் கண்டேன்' என்ன - ஆனல் என் தர்மங்களும் பரலோகமும் இல்லையென்று செய்தார்களோ? பிராமாதிகத்துக்கு நாம் உளோம் என்றன்றே செய்தது என்கை. இவள் அவன் ஸ்வாதந்த்ர்யத்தை அநுஸந்தித்து என்னை விடுகிறதோ என்றும், அவன் இவள் மார்த்தவத்தையும் மௌக்த்யத்தையும் அநுஸந்தித்து இவற்றின் பக்கல் எவ்வளவாயிருக்கிருளோ என்றும் ஒருவரை ஒருவர் அதிசங்கைபண்ணி நோக்கும் இருவர் நிழலிலே உபய விபூதியும் கிடக்கிறது. இத்தால் வாத்ஸல்யம் சொல்லுகிறது. "அபார காருண்ய சௌசீல்ய வாத்ஸல்ய" என்று ஒக்க எடுத்து 'ஆச்ரித வாத்ஸல்யைகஜலதே' என்று விசேஷிக்கையாலே.

உலகம் மூன்றுடையாய் - வாத்ஸல்யத்துக்கு அடியான குடல் துடக்கு. நிர்க்குணனுனுலும் விடவொண்ணுத பிராப்தி. அவன் அல்லேனென்று கைவிடுமன்றும் செங்கற்சீரை கட்டி வளைக்கலாம்படியாயும், இவன் தான் காதாசித்கமாகப் பிரணமம்பண்ணி, பின்பு கை கழியப் போகப் பார்த்தால் காலிலே விலங்கு தைத்து கார்யம் கொள்ளலாம்படியிறே இருவர்க்குமுண்டான ஸம்பந்தம்.

என்னையாள்வானே - பிராப்தியைக் கிரயம் செலுத்திக் கொடுத்தபடி. மயர்வற மதிநல மருளி இவ்வளவாக நிறுத்திப் பொகடப்போமோ? இத்தால் சீலம். நிகரில் இத்யாதி - இங்கும் "வைகுந்தத் தமரரும் முனிவரும்" என்றும், "பக்தை: பாகவதை: ஸஹ" என்றும் குணநிஷ்டரும் விருத்தி நிஷ்டரு

மான இரண்டு கோடியிறே. இத்தால் ஸௌலப்யம். 'மாம்' என்கிறவிடத்தில் ஸாரத்ய வேஷத்தையிறே காட்டிற்று. அங்கு ஸௌலப்யம் முன்பு மில்லை பின்புமில்லை. இங்கு ஸதா ஸந்நிதி பண்ணுகையாலும் 'மய்யாஸக்தமநா:' என்றொரு தேவையிடாமையாலும் இங்கே கிடக்கும்.

புகலொன்றில்லா வடியேன் - ஆகிஞ்சந்யமும் அநந்யக தித்வமும் ஸ்வரூப ப்ரகாசகமான அநந்யார்ஹ சேஷத்வமும். அதில் அர்த்தப்ராப்தமான 'அஹம்' சப்தத்தை இங்குஅடியே னென்கிறது. உன்னடிக்கீழ் - "சரணௌ" என்கிற விக்ர ஹத்தை. விக்ரஹம் சுபாச்ரயமாய் விஷயாந்தரங்களில் அருசி பூர்வகமாகத் தன் பக்கல் ருசியை யுண்டாக்கி, பிறந்த ருசி யையும் வளர்த்து, ப்ராப்தி விரோதியையும் தவிர்த்து, ஒரு தேச விசேஷத்தே போனால் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியுமாய் ஸதாபச்யந்திக்கு விஷயம் விக்ரஹமிறே. அடியிலே "துயரறு சுடரடி" யென்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்து, தாம் பற்றுகிற விடத்தில் 'உன்பாதம் கூடுமாறு, உன்னடி சேர் வண்ணம், உன்னடிசேரவடியேற் காவா, பூவார் கழல் கள், உனபாதம், மண்ணளந்த இணைத் தாமரைகள், உன் னடிக்களடியேன், அடியேன் உனபாதம், உன்னடிக் கீழ மர்ந்து புகுந்தேன்" என்றும் அடிவிடாரிறே.

அமர்ந்து - அவனுக்கொரு ஸஹகாரி வேண்டுதல், தந் தலையிலே உபாயபாவம் கிடத்தலிறே நடுவொரு வியவதான விளம்பங்களுக்கு ஹேது. ஏகபதார்த்தம் - கொக்குவாயும் படுகண்ணியும் போலே நிர்விவரமாகப் பொருந்தினபடி. புகுந் தேனே - சரீரவத் சேஷமான தமக்கு அந்தர்யாமியாய் நிற் கிறபடியை அறிந்த இவர் 'புகுந்தேன்' என்கிற இது ஒரு போக்கு வரத்து உண்டாயன்று. போன எல்லையளவு மிறே புகுருவது; முன்பும் அர்த்த ஸ்திதியில் இழவில்லை. இவனுடைய விப்ரதிபத்தியேயிறே உள்ளது. அது போமித் தனையே வேண்டுவது. அத்யவஸித்தேனென்றபடி. 'ப்ரபத்யே' என்கிற வர்த்தமானம் ருசிகார்யமாய் வருகையாலே ப்ராப்தி யளவும் வரும். இதுவே...... இவ்வத்யவஸாயம் உபாய பாவத் தில் அந்வயியாமையாலும் உபகார ஸ்ம்ருதி ரூபமாகையாலும் சைதந்ய ப்ரயுக்த மாகையாலும் இவையெல்லாம் அதிகாரி விசேஷண மாக்கிற்றிறே.

திருவாய். 7-5-1

கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ
புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசர முற்றவும்
நற்பாலுக் குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே.

வியாக்:—பிரிய ஹிதங்களை அநுஸந்திப்பார், திருவயோத்யையிலுள்ள ஸகல பதார்த்தங்களையும் நிர்ஹேதுகமாக ஸ்வஸம்ச்லேஷ விச்லேஷைக ஸுக துக்கராம்படி பண்ணின சக்ரவர்த்தித் திருமகனையல்லது கற்பரோ என்கிறார்.

கற்பார்இத்யாதி - இவ்விஷயத்தை யொழியப் புறம்பு கற்குமது கல்விக்கு உடலல்ல; "தத் ஜ்ஞாநம்". இராமபிரானையல்லால் - ஒருவன் ஒன்றைக் கற்பது அப்போதைக் கினிது என்றுதல், பின்பு நன்மை விளைக்கு மென்றுதலாயிற்று. அவையிரண்டும் இவ்விஷய மென்கை. ராமன் என்று, புறம்பு போகாமல் காற்கட்டு மழகையும், பிரானென்று அழகாலே அநந்யார்ஹமாக்கும்படியும்; நிலா தென்றல் சந்தனம் தண்ணீர் போல தன்னுடைய ரமணீயத்வமும் பிறர்க்கேயாயிருக்கும் உபகாரத்வமும் சொல்லுகிறது, "ப்ரியவாதீச", "ராமோ ராமோ ராம இதி", பிரியஹிதங்களை வேண்டுவார் அவனை யொழியக் கற்பரோ. "ஸாக்ஷாத் ராமாத் விநிர்வ்ருத்தோ தர்மச்சாபி ச்ரியாஸஹ"ஸாதந ஸாத்யங்களிரண்டும் இவ்வியே.

கற்பார் இராமபிரானை-கற்பார் என்கையன்று இவர்க்கு உத்தேச்யம். ராகப்ராப்தமாகில் ஸ்வயமேவ ப்ரவர்த்ததே. வேறொன்றில் போகாமையே வேண்டுவது. பஜநீய வஸ்துவிலே கூறிடுகிறார். பதர்கூட்டிக் கழிக்குமவரல்லரிறே. மற்றும் என்று பரத்வத்தையும், அவதாரங்களையும் கழிக்கிறார். 'பாவோ நாந்யத்ர'. கற்பரோ - நாடடங்கலும் தம்படியாக நினைவு. 'தொழில் எனக்கு'. இவ்வூரில் பிள்ளைகள் கண்ட சர்க்கரை யொழிய உண்ணும்படி எங்ஙனே என்பாரைப் போலே. புல்பா முதலா - புல்லாகிற பதார்த்த மென்னுதல். பசுவின் வாய்க் கெட்டாமை படருகிற புல்லென்னுதல். தூர்வாதி ஸ்தாவராந்தமாக வென்றபடி. புல்லெறும்பாதி - ஜந்மங்களில் கடையான எறும்பு தொடக்கமாக. ராம விஷயீகாரத்துக்கு முற்பட்டன இவை. வெள்ளம், தாழ்ந்த

விடத்தே ஏறுமாபோலே. ஜங்கமங்களில் தண்ணியது எறும்பு; ஸ்தாவரங்களில் தண்ணியது புல்லு. இவை இரண்டையும் ஒக்க எடுக்கையாலே ஜ்ஞானபலம் மோக்ஷம் என்கிறதைத் தவிர்க்கிறது. சைதந்யம் உண்டாகையும் இல்லையாகையும் அப்ரயோஜகம். அப்ரதிஷேதமே பேற்றுக்கு வேண்டுவது, "அபிவ்ருக்ஷா:". ஒன்றின்றியே - பேற்றுக்கு ஈடாய் இருப்பது ஒரு ஸாதநமின்றிக்கே யிருக்கச்செய்தே. பெறுகிற தன் சிறுமையையும் பேற்றின் கனத்தையும் பார்த்தால், தன்பக்கல் ஒன்றுமின்றிக்கே யிருக்குமிறே. பரம பக்தியோடு அவன் தானே உபாயமானத்தோடு வாசியில்லை, பேற்றைப் பார்த்தால் இத்தலையில் ஒன்றும் சொல்ல வொண்ணாமைக்கு. இனி அங்கீகார ஹேதுவாயிருப்பதொரு ஸாதனமின்றிக்கேயிருக்க; யாதொன்றால் பலமுண்டாயிற்று அதிறே ஸாதனம். அதாகிறது - திருவயோத்யையினின்றும் குடிபோக நினைவில்லாமை.

நற்பால் அயோத்தியில் - நிலமிதி தானே ராமபக்தியை விளைக்கும். "தேசோயம் ஸர்வகாமதுக்", "ஜ்ஞாதிதாஸீ யதோஜாதா", "யத:குதஸ்சித் ஜாதா". இவ்வூரிலவர்கள் அல்லாதாரோபாதி உண்டு உடுத்துத் திரிந்து, பெருமாளுக்கு வருவதொரு பிரயோஜனத்தோடு விரோதித்தவாறே சத்ரு சரீரம்போலே தாங்கள் சரீரத்தைப் பொகடுவார்கள். "ராகவார்த்தே" - பிராணன்கள் பழமையாலே பல்காட்ட, உடையவரும் நீங்களும் ஒரு தலையானால் உங்களைக் கைக்கொள்ளப் போமோ; அவன் தானும் இவனைப் பற்ற, 'ப்ராணாந் பரித்யஜ்ய' என்னாநிற்க. அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் - பிராப்ய தேசத்தில் வர்த்தனமும் வாழ்ச்சியும் என்று இரண்டில்லை. "வேங்கடத்தை", "நல்லார்கள் வாழும்". நித்ய ப்ராப்யமான வஸ்துவிறே இங்கு ஸந்நிதி பண்ணுகிறது. நமக்கு அநுபவம் காதாசித்கமாகிறது அசித்ஸம்ஸர்கத்தாலே.

நற்பாலுக்கு உய்த்தனன் - நல்ல ஸ்பாவத்தை யுடைத்தாம்படி செலுத்தினான், ஸ்வஸம்ச்லேஷ விச்லேஷைக சுக துக்கராம்படி. இவற்றின் கர்மதாரதம்யத்தாலே வரிலிறே அளவுபட்டிருப்பது. "கச்ச லோகாந் அநுத்தமாந்" என்று இங்குண்டான பற்று அறுத்து ஒரு தேச விசேஷத்தேறப் போக்குமவனுக்கு இது பணியன்று. நான்முகனார் பெற்ற

நாட்டுளே - நற்பாலுக்குய்த்தனன் - ராஜா ஒருவனுக்கு நாட்டைக் கொடுத்தால் அவனுடைய ஸ்வாதந்திரியமே நடக்கும்படி பண்ணிக்கொடுக்குமாப்போலே, சதுர்முகனுக்குக் கையடைப்பான நாட்டிலே அவன் ஸ்வாதந்திரியத்தைத் தவிர்த்து இவன் கர்மபாரதந்திரியத்தையும் தன் குணத்தாலே பதஞ் செய்து தன்னைப் பெற்றபோது ஜீவித்தும் பெறுதபோது முடியும்படி பண்ணினன்.

—— :: ——

திருவாய். 8-10-1

நெடுமாற் கடிமை செய்வேன் போல்
அவனைக் கருத வஞ்சித்து
தடுமாற்றற்ற தீக்கதிகள் முற்றும்
தவிர்ந்த சதிர் நினைந்தால்
கொடுமா வினையேன் அவன் அடியார்
அடியே கூடும் இது வல்லால்
விடுமாறு என்பது என் அந்தோ !
வியன் மூவுலகு பெறினுமே.

வியாக்:—நாட்டார் விரும்புகிற ஐச்வர்யமும் நான் பற்றின புருஷார்த்தத்தோடு ஒவ்வாது என்று எடுத்துக் கழிக்கவும் போராது என்கிறார்.

நெடுமாற்கு - நெடுமாலுக்கு; அறப்பெரியோன்; தாம் சேஷத்வத்தின் எல்லையைக் கணிசித்து அவனுடைய சேஷித்வத்தின் எல்லையைப் பிடிக்கிறார். தன்னளவன்றியே தன்னடியாரளவிலே நிறுத்தும்படியான வியாமோஹத்தின் மிகுதியாதல்; "அடியார்க்கென்னை ஆட்படுத்த விமலன்". அடிமை செய்வேன்போல் அவனைக் கருத - மித்ரபாவமே. தடுமாற்றற்ற தீக்கதிகள் முற்றும் வஞ்சித்தும் தவிர்ந்த - ஒரு ஸத்கர்மத்தை அநுஷ்டித்துத் தடுக்குமது இல்லாத அவித்யாதிகள் அடங்கத் தவிர்ந்தன. வஞ்சித்துத் தவிர்ந்தவென்னுதல்; சும்மெனதே" முற்றும் தவிர்ந்த. தாம் போக்கும்போதிறே கிரமம்; அவன் போக்கும்போது "சர்வபாபேப்ய:", "ஸர்வே பாப்மாந:". சதிர்நினைந்தால்-உறுவது பார்க்கில், அவனுடைய திருவடிகளிலே குனிந்தமாத்திரத்திலே துஷ்கர்மங்களடைய போனபடியை அநுஸந்தித்தால்,

கொடுமாவினையேன் - பிரீதி தலைமண்டையிட்டுச் சொல்லு கிறார். பாட்டுக் கேட்டு ஈடுபட்டார் பாவியேன் என்னுமாப் போலே. பிரதமாவதியிலே சரமாவதியைப் பற்றப் பெற்றி லேன் என்கிறாராகவுமாம். அவனடியாரடியே கூடுமிதுவல் லால் - அவன் ஆச்ரித வியாமுக்தனானால் அவனுக்குப் பிரிய விஷயத்தையன்றோ பற்ற அடுப்பது. அவதாரணத்தால் அங்கு ஸாம்யாபத்தியல்ல; அவர்கள் காலைப் பற்றுகிறார். விடுமாறு என்பதென் - புறம்புண்டான விஷயத்திலே விடுவது பற்றுவ தானத்தை இங்கும் செய்யவோ? அந்தோ நான் பற்றின புருஷார்த்தத்துக்கு நாலு மூன்றுபடி கீழான ஐச்வர்யம் இத்தோடொவ்வாதென்ன வேண்டுவதே! வியன் மூவுலகு பெறினுமே - காடும் மலையுமான அம்சத்தைத் திருத்தி, அநுபவ யோக்யமாம்படி பண்ணி, திரைலோக்யத்தையும் எனக்குக் கையடைப்பாக்கினாலும் விடுமாறு என்பதென்! ஐச்வர்யத்துக்கு லோகபரிக்ரஹ முண்டாகையிறே இப்படிச் சொல்லவேண்டிற்று.

———o———

திருவாய். 9-1-1

கொண்டபெண்டிர் மக்கள்உற்றார் சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டதல்லால் காதல்மற்றி யாதுமில்லை
எண்டிசையும் கீழும் மேலும் முற்றவும் உண்டபிரான்
தொண்டரோமாய் உய்யலல்லால் இல்லைகண்டீர் துணையே.

வியாக்:—கொண்ட பெண்டிர் - திரவ்யாதிகளாலேயாதல், மாதா பிதாக்களைச் செங்கற்சீரையிட்டு ஆர்ஜித்த தனத்தைக் கொடுக்கும்படி நெஞ்சிலே கொள்ளப்பட்ட வென்னுதல். ஆசார்ய பரதேவதாதிகள் இவளே என்னும்படி கொண்ட என்னுதல். சந்தௌ த்ருஷ்டம். மக்கள் - அப்படிப்பட்டவ ளுடைய யௌவநத்தையும் அழிய மாறும் பிரஜைகள். உற்றார் - தனக்கு ஸத்ருச விஷயமென்று ஆதரித்த ஸம்பந்தி கள். சுற்றத்தவர் - ஜ்ஞாதிகள். பிறரும் - மித்ராதிகள். முன் சொன்னவரிலும் இவர்களுக்கு வாசியில்லை. கண்டதோடு பட்டதல்லால் - ஸந்நிதியிலே ஸ்நேஹிக்குமதொழிய வென் னுதல், திரவ்யம் கண்டபோது என்னுதல்.

காதல் மற்று யாதுமில்லை - காணாதபோது மெய்யான ஸ்நேஹமொன்றுமில்லையென்னுதல், காதலுக்கு எதிர்த்தலையான த்வேஷமுமில்லையென்னுதல், ஸ்நேஹமும் அதுக்கடியான பந்தமும் இல்லையென்னுதல். எண்டிசையும் இத்யாதி - பத்துத் திக்கிலுமுண்டான ஸகல சேதனரையும் பிரிகதிர்ப் படாமே திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தவன். இவற்றின் பக்கல் ஒன்றுமில்லாத அன்று ரக்ஷிக்குமவன்; தான் அறிந்த ஸம்பந்தமும் ஆபத்துமே வேண்டுவது; அப்போது விலக்குகைக்குப் பரிகரமில்லையிறே. தொண்டரோமாய் - அவனுக்கு நம்மதாய் இருப்பதொன்று கொடுக்கவேண்டுவதில்லை. உய்யலல்லால் - சேஷத்வம் ஸ்வரூபமானபின்பு அத்தை இழக்கை நாசமிறே. வ்யதிரேகேநதிருஷ்டீகரிக்கிறார்: இல்லை கண்டீர் துணையே - வேறு அபாச்ரய முண்டாய்ச் சொல்லுகிறதல்ல; அவனைப்பற்றி ஸ்வரூபம் பெறுதல்; இல்லையாகில் இழக்குமித்தனை.

———:———

வியாக்கியானம் முற்றிற்று.

———:———